POPE'S THIRD

# TAMIL GRAMMAR.

PART II. NATIVE AUTHORITIES.

## I. NANNÛL.

இலக்கண நூல்,

இரண்டாம் பங்கு.

ஆசிரிய வசனங்கள்.

I. பவணந்தி முனிவர் செய்த

# நன்னூல்

மூலமும் பொழிப்புரையும்.

இஃது

ஜி. யூ. போப்பையரால்

பார்வையிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது.

"கூற பழஞ்சூத்திரத்தின கோள்" [நன 9]

Madras:

PRINTED AT THE AMERICAN MISSION PRESS.

1858.

# TO THE STUDENT.

1. The learner may imagine that the assistance afforded to the student in this Edition of the Nannûl is less than that given in other Editions. It is not really so. The Vocabulary at the end, the prose rendering, the summaries, and the references to the foregoing catechism afford all the help any real student ought to require. The shortest road to Tamil Scholarship is to work independently of verbal commentaries.

2. There are many native works on Grammar. But the Nannûl supersedes them all. The *Tolkâppiyam* and others will not repay the labour of perusal. The student of Tamil Grammar may safely end his studies here.

3. The metre is that called *நிலைமண்டிலம்*. See *யாப்பருங்*. 71. The lines are equal, and consist of four feet each. These feet must correspond in the several lines.

## இலக்கண நூல்,

## II. பங்கு.

## ஆசிரிய வசனங்கள்.

# II. NATIVE AUTHORITIES.

# I. நன்னூல்.

## PREFACE.

### க. சிறப்புப்பாயிரம்.

மலர்தலை உலகின் மல்கிருள் அகல [வி. 153. 152.]
இலகொளி பரப்பி, யாவையும் விளக்கும்
பரிதியின் ஒருதான் ஆகி, முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்,
மன இருள் இரிய, மாண்பொருண் முழுவதும்
முனிவற அருளிய மூவறு மொழியுளுங்,
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்

அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்,
தொகை வகை விரியிற் றருகெனத், துன்னார்
இகல் அற நூறி, இருநில முழுவதுந்
தனதெனக் கோலித், தன் மத வாரணந்
திசை தொறு நிறுவிய திறல் உறு தொல்சீர்க்
கருங் கழல் வெண் குடைக் கார் நிகர் வண் கைத்
திருந்திய செங் கோற் சீயகங்கன்,
அருங் கலை விநோதன், அமர் ஆபரணன்,
மொழிந்தனன்; ஆக, முன்னோர் நூலின் [சூ. 7.]
வழியே, நன்னூற் பெயரின் வகுத்தனன்,
பொன் மதிற் சனகைச் சன்மதி முனி அருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந் தவத் தோனே.

[இது நூல் செய்தோன் பெயர் முதலிய பதினொன்றையும் விளக்கிநின்றது. (சூ. 47. 48. காண்க.)]

அவையாவன:

| | | |
|---|---|---|
| க. | நூல்செய்தோன் | பவணந்தி; |
| உ. | நூலின் வழி | முனனோர் நூலின் வழி; |
| ௩. | எல்லை | சொல்லிய நாடெல்லை; |
| ௪. | நூலின பெயர் | நன்னூல்; |
| ௫. | யாப்பு | தொகை, வகை, விரி; |
| ௬. | நூல் குறித்த பொருள் | அரும்பொருள ஐந்தும்; |
| எ. | கேட்போன் | சீயகங்கன் என்னும அரசன்; |
| அ. | நூற்பயன் | மாண்பொருள் முழுவதும்; |
| ௯. | காலம் | சீயகங்கன அரசாண்டகாலம்; |
| க0. | காரணம் | யாவரும் உணரும்படி; |
| கக. | அவைக்களம் | சீயகங்கன் அவைக்களம்.] |

# INTRODUCTION: GENERAL PREFACES.

## நன்னூல்.

### உ. பொதுப்பாயிரம்.

**1.** NAMES OF A PREFACE.

[பாயிரத்தின் பெயர்கள்.]

க. முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம்,
புறவுரை, தந்துரை, புனைந்துரை, பாயிரம்.

[பாயிரத்திற்கு வரும் காரணக் குறிகளை உணர்த்திற்று.]

**2.** KINDS OF PREFACES.

[பாயிரம் இத்தனைவகை என்பது.]

உ. பாயிரம் பொது சிறப் பென இரு பாற்றே.

[மேல், பாயிரம் என்றது பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் என இரு வகையினை உடைத்து.]

**3.** A GENERAL PREFACE.

[பொதுப்பாயிரம் இன்னதென்பது.]

௩. நூலே, நுவல்வோ னுவலுந் திறனே,
கொள்வோன், கோடற், கூற்றும் ஐந்தும்
எல்லா நூற்கும்; இவை பொதுப் பாயிரம்.

[நூலினது வரலாறும், ஆசிரியனது வரலாறும், அவ்வாசிரியன் நூலை மாணாக்கனுக்குச் சொல்லுதலின் வரலாறும், மாணாக்கனது வரலாறும்,

அவன் கேட்டலின் வரலாறும், என்னும் ஐந்தும் எல்லா நூற்கும் ஆம்; ஆதலின் இவ்வைந்து வரலாற்றையும் விளங்க உணர்த்துவது பொதுப்பாயிரம் ஆம்.]

### 4. A CLASSICAL WORK.

[நூலின் வரலாறு.]

ச. நூலின் இயல்பே நுவலின், ஓர் இரு
பாயிரந் தோற்றி, மும்மையின் ஒன்றாய்,
நாற் பொருட் பயத்தோ டெழு மதந் தழுவி,
ஐ இரு குற்றமும் அகற்றி, அம் மாட்சியோ
டெண்ணான் குத்தியின் ஓத்துப் படலம்,
என்னும் உறுப்பினிற் சூத்திரங், காண்டிகை,
விருத்தி, ஆகும் விகற்பநடை பெறுமே.

[மேற் கூறிய ஐந்தனுள் நூலினது வரலாற்றைச் சொல்லின், இருவகைப் பாயிரத்தையும் முன்னுடைத்தாதல், முதலாக இங்ஙனம் விகற்பித்த பதின்மூன்று விகற்ப நடைகளைப் பெற்று வரும்.]

### 5. THREE KINDS OF CLASSICAL WORKS.

[நூல் இத்தனைவகை என்பது.]

ரு. முதல், வழி, சார்பென நூன் மூன் றாகும்.

[முதனூல், வழிநூல், சார்புநூல் என மூன்று கூற்றதாம் நூல்.]

### 6. ORIGINAL CLASSICS.

[முதனூல் இன்னதென்பது.]

சா. வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூல் ஆகும்.

[வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முதல்வன், ஆதிக்கண்ணே செய்தது யாது அது முதனூல் ஆம்.]

**7. SUPPLEMENTAL CLASSICS.**

[வழிநூல் இத்தன்மைத்து என்பது.]

எ. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி,
அழியா மரபினது வழிநூல் ஆகும்.

[தொல்லாசிரியர் நூல்களின் பொருண்முடிவு முழுவதும் ஒத்து, வழி நூல் செய்வோன் முதனூலுளதாகவுந், தான் வழிநூற் செய்தற்குக் காரணமாக வேண்டிய விகற்பங்களையும் உடன்கூறி, அவ்விகற்பங்கள் உணர்வுடையோர் பலர்க்கும் ஒப்ப முடிந்தமையின், அழியாது உலகத்து நின்று நிலவு மரபினையுடையது (சூ. 429.) வழிநூல் ஆம்.]

**8. DERIVATIVE WORKS.**

[சார்புநூல் இத்தன்மைத்தென்பது.]

அ. இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித்
திரிபு வேறுடையது புடைநூல் ஆகும்.

[முதனூல், வழிநூல் என்னும் இருதிறத்து நூல்கட்கும் பொருண் முடிபு ஒருபுடை ஒத்து, ஒழிந்தன எல்லாம் ஒவ்வாமையை உடையது சார்புநூல் ஆம்.]

**9. A SPECIAL RULE REGARDING THE TWO LAST: QUOTE THE VERY WORDS OF ANCIENT AUTHORS.**

[வழிநூலுக்குஞ் சார்புநூலுக்கும் பொதுவிதி.]

கூ. முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும்
பொன்னேபோற் போற்றுவம் என்பதற்கு—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் என்பதற்கும்
கூறு பழஞ் சூத்திரத்தின் கோள். [வெண்பா.]

[முன்னோர் மொழிந்த பொருளே அன்றி, அவர் மொழியினையும் பொன்போலப் போற்றிக்கொள்வோம் என்பதற்கு இலச்சினையாகவும்; முன்னோர் நூலையே கூறாது அந்நூலினின்றும் வழிநூல் சார்பு நூல்செய்தோம் ஆயினும், ஆசிரியவசனங்களை ஒரோவழி எடுத்து உடன் கூறுதல்

மெ சாரபுநூற்கும் இலக்கணம்; ஆதலின், இந்நூலகத்து வசனம் இல்லை எனக்கூறுவர்; ஆதலின், அக்குற்றம் ஒழிவதற்காகவும் பழஞ் சூத்திரத்தின் கோவைக்கூறு.]

## 10. THE BENEFITS TO BE DERIVED FROM ANY CLASSICAL WORK.

[நூலினது பொருட்பயன்.]

கo. அறம், பொருள், இன்பம், வீ டடைத னூற்பயனே.
[வி. 215.]

["அறமும், பொருளும், இன்பமும், வீடடைதலும்" ஆகிய இந்நான்கும் நூல் தழுவப்படும் பயன் ஆம்.]

## 11. THE SEVEN OBJECTS CONTEMPLATED BY AN AUTHOR.

[நூல் செய்பவனது மனத்தின் கொள்கைகள்.]

கக. எழு வகை மதமே: 1உடன்படன், 2மறுத்தல்,
3பிறர் தம் மதமேற் கொண்டு களைவே,
4தா அ ஞட்டித் தனாது நிறுப்பே,
5இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே,
6பிறர் நூற் குற்றங் காட்டல், ஏனைப்,
7பிறிதொடு படா அன் றன் மதங் கொளலே.

["மேல் எழு வகை மதம் என்று சொல்லப்பட்டன: இங்ஙனம் "பிறர் மதத்தை உடன்படல்" முதலியவாக விதந்தன ஆம்.]

## 12. THE TEN FAULTS.

[நூலுக்கு உண்டாகும் பத்துவகைக் குற்றங்கள்.]

கஉ. 1குன்றக் கூறன், 2மிகைபடக் கூறல்,
3கூறியது கூறன், 4மாறுகொளக் கூறல்,
5வழூஉச் சொற் புணர்த்தன், 6மயங்க வைத்தல்,
7வெற்றெனத் தொடுத்தன், 8மற்றொன்று விரித்தல்,
9சென்று தேய்ந் திறுத 10னின்று பய னின்மை,
என்றிவை ஈரைங் குற்ற நூற்கே.

[நூற்குப் பத்துக் குற்றங்கள் ஆவன: "குன்றக்கூறன்" முதலியவைக ளாம்.]

**13.** THE TEN BEAUTIES OF STYLE.

[நூற்கு உண்டாகும் பத்துவகையான அழகு.]

கந. [1]சுருங்கச் சொல்லல், [2]விளங்க வைத்தல்,
[3]நவின்றோர்க் கினிமை, [4]நன்மொழி புணர்த்தல்,
[5]ஓசை உடைமை, [6]ஆழம் உடைத் தாதல்,
[7]முறையின் வைப்பே, [8]உலக'மலே யாமை,
[9]விழுமியது பயத்தல், [10]விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே.

[நூலிற்கு அழகு என்று சொல்லப்படும் பத்தாவன: "சுருங்கச்சொல்லல்," முதலியவாம். இலக். அகராதி காண்க.].

**14.** THE THIRTY-TWO METHODS.

[முப்பத்திரண்டு தந்திர உத்திகள்.]

கச. [1]நுதலிப் புகுதல், [2]ஓத்துமுறை வைப்பே,
[3]தொகுத்துச் சுட்டல், [4]வகுத்துக் காட்டல்,
[5]முடித்துக் காட்டல், [5]முடிவிடங் கூறல்,
[6]தான் எடுத்து மொழிதல், [7]பிறன்கோட் கூறல்,
[8]சொற்பொருள் விரித்த [9]றொடர்சொற் புணர்த்தல்,
[10]இரட்டுற மொழிதல், [11]ஏதுவின் முடித்தல்,
[12]ஒப்பின் முடித்தல், [13]மாட்டெட்றிக் தொழுகல்,
[14]இறந்தது விலக்கல், [15]எதிரது போற்றல்,
[16]முன்மொழிந்து கோடல், [17]பின்னது நிறுத்தல்,
[18]விகற்பத்தின் முடித்தல், [19]முடிந்தது முடித்தல்,
[20]உரைத்தும் என்றல், [21]உரைத்தாம் என்றல்,
[22]ஒருதலே துணிதல், [23]எடுத்துக் காட்டல்,
[24]எடுத்த மொழியின் எய்த வைத்தல்,
[25]இன்ன தல்ல திதுஎன மொழிதல்,
[26]எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்,

27 பிறர்நூல் முடிந்தது தான்உடன் படுதல்,
28 தன்குறி வழக்கம் மிகஎடுத் துரைத்தல்,
29 சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்,
30 ஒன்றின முடித்தல், 31 தன்னின முடித்தல்,
32 உய்த்துணர வைப்பென உத்திஎண் ணான்கே.

[முப்பத்திரண்டு உத்தி ஆவன: "நுதலிப்புகுதல்," முதலியவாம். இலக் அகராதி காண்க.]

## 15. CRITICAL ACUMEN.

[நூலுக்குரிய மேற்சொல்லிய உத்தி இன்னதென்பது.]

நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி,
ஏற்புழி அறிந்திதற் கிவ்வகை ஆமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர உத்தி.

[ஓர் இலக்கணநூலால் உணர்த்தப்படும் பொருளை நூல்வழக்கோடும் உலக வழக்கோடும் பொருந்த உணர்த்தி, அப்பொருளை மற்றோர் இலக்கிய நூற்கண்ணும் ஏற்கும் இடம் அறிந்து, அவ்விடத்திற்கு இஃதாம் எனக் கருதித், தக்கவையாகச் செலுத்துவது தந்திர உத்தி ஆம்.]

## 16. CHAPTER: ஓத்து.

[ஓத்து என்கிற நூலின் உறுப்பு இன்னதென்பது.]

கசு. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோர்இனப் பொருளை ஒருவழி வைப்ப
தோத்தென மொழிப, உயர்மொழிப் புலவர்.

[ஒரு சாதியாய் உள்ள மணிகளை முறையே பதித்தாற்போல, ஒருசாதியாய் உள்ளபொருள்களை ஒருவழிப்படக் கூறுவது ஓத்துறுப்பாம் எனச் சொல்லுவர், உயிர்க்கு உறுதிபயக்கும் மெய்ம்மொழிகளை உடையபுலவர்.]

**17.** SECTION: படலம்.

[படலம் என்னும் நூலுறுப்பின் இலக்கணம்.]

கஎ. ஒருநெறி இன்றி, விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

[ஒரு வழிப் படாது, விராய பொருளோடு பொருந்திப், பலபொருளை உணர்த்தும் பொதுச்சொற்கள் ஒரோவழி அன்றித் தொடர்ந்துவரின் அது படல உறுப்பாம்.]

**18.** VERSE: சூத்திரம்.

[சூத்திரத்துக்கு இலக்கணம்.]

கஅ. சில்வகை எழுத்தில், பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியின் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்.

[ய கண்ணாடியில் பெரிய சரீரமுதலியவற்றின் சாயை செவ்வாகச் செறிந்து, இனிதாக விளங்கினாற்போலச், சில்வகை எழுத்துகளான் இயன்ற யாப்பின்கண், பல்வகைப்பட்ட பொருள்களைச் செவ்வாகச் செறித்து, இனிதாக விளக்கி, அப்பலபொருள் திண்மையும் நுண்மையுஞ் சிறந்து வருவன சூத்திரங்கள் ஆம்.]

**19.** THE ORDER AND CONNEXION OF VERSES.

[சூத்திரம் ஆம் ஆறு உவமையால் உணர்த்துகின்றது.]

கக. ஆற்றொழுக் கரிமா நோக்கந், தவளைப்
பாய்த்துப், பருந்தின் வீழ் வன்ன சூத்திரநிலை.

[மேற்கூறிய சூத்திரங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கும் நிலைகள் ஆற்றொழுக்கு, சிங்கத்தின் பார்வை, தவளையின்பாய்ச்சல், பருந்தின் வீழ்ச்சி, என்னும், நான்கினையும் போலும்.]

## 20. DIFFERENT KINDS OF VERSES.

[சூத்திரங்களுக்குக் காரண வகையால் வரும் பெயர் வேறுபாடு.]

உ0. பிண்டந், தொகை, வகை, குறியே, செய்கை,
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

[பிண்டம் எனவுந், தொகை எனவும், வகை எனவுங், குறி எனவுஞ், செய்கை எனவும், இவற்றை அலைவறக்கொண்டு இவற்றின்புறத்து அடையாய் வருப் புறனடை எனவுங், கூறுங் கூற்றினை உடையவாம் மேற்கூறிய சூத்திரங்கள்.]

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | பிண்டம். ... ... ... | 56-சூத்திரம். |
| | தொகை... ... ... ... | 57-சூத். |
| | வகை... ... ... ... | 58--முதலியசூத். |
| | குறி... .. ... ... ... | 63-சூத். |
| | செய்கை. ... ... ... | 293-சூத். |
| | புறனடை... ... ... ... | கடைசிசூத்திரம். |

## 21. THE FOURTEEN REQUISITES OF A COMMENTARY.

[உரையினது பொது இலக்கணம்.]

உக. [1]பாடங், [2]கருத்தே, [3]சொல்வகை, [4]சொற்பொருள்,
[5]தொகுத்துரை, [6]உதாரணம், [7]வினா, [8]விடை, [9]விசேடம்,
[10]விரி[11]வதி காரந், [12]துணிவு, [13]பயனோ
[14]டாசிரிய வசனம், என்றீரேழ் உரையே.

[இப்பதினான்கு வகையான் உரைக்கப்படும் நூற்குரை.]

## 22. BRIEF COMMENTARY: காண்டிகை.

[காண்டிகை உரையினது இலக்கணம்.]

உஉ. கருத்துப், பதப்பொருள், காட்டு, மூன்றினும்;
அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்;
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை.

[மேற் கூறிய பதினான்கினுள் கருத்துரையும், பதப்பொருளும், உதாரணமும் ஆகிய மூன்றனையும் உரைத்தலானும், அம்மூன்றனோடு வினாவிடை என்னும் இரண்டனையுங் கூட்டி உரைத்தலானுஞ், சூத்திரத்துட்பொருளை விளக்குவன காண்டிகை உரைகள் ஆம்.]

### 23. DIFFUSE COMMENTARY: விருத்தி.

[விருத்திஉரை இலக்கணம்.]

உரு. சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்
கின்றி அமையாதி யாவையும் விளங்கத்
தன் உரை யானும், பிறர் நூ லானும்,
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி.

[காண்டிகை உரைபோற் சூத்திரத்துட்பொருள் விளக்குதன் மாத்திரை யில் நில்லாது, அவ்விடங்கட்கு இன்றியமையாத பொருள்கள் யாவையும் விளங்கத், தான் உரைக்கும் உரையானும், ஆசிரியவசனங்களானும், மேற் கூறிய காண்டிகை உறுப்பு ஐந்தனுனும், ஐயந்தீரச் சுருங்காது, மெய்ம் மைப்பொருளை விரித்துரைப்பது விருத்தி உரை ஆம்.]

### 24. EXPLANATION OF THE FIGURATIVE EXPRESSION நூல் = *thread.*

[நூல் என்னும் பெயர் வந்த ஆறு.]

உச. பஞ்சிதன் சொல்லாப், பனுவல் இழை ஆகச்,
செஞ்சொற் புலவனே சேயிழையா,
எஞ்சாத
கையே வாய் ஆகக், கதிரே மதி ஆக,
மை இலா நூல்முடியும் ஆறு. [வெண்பா.]

[இந்த நூல்முடியும் ஆறு இதுவாதலின் நூல் என்றது உவமை ஆகுபெ யர் ஆம்.]

**25.** A நூல் USED TO MEASURE TIMBER.

[நூல் என்னும் பெயர்.]

உரு. உரத்தின் வளம்பெருக்கி, உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா
மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூல் மாண்பு. [வெண்பா.]

[அந்நூல்போற் செப்பஞ் செய்தலானும், நூல் என்றது உவமை ஆகு பெயர் ஆம்.]

**26.** THE QUALITIES OF A TEACHER.

[ஆசிரியனது வரலாறு.]

உசு. [1]குலன்; [2]அருள்; [3]தெய்வங் கொள்கை; [4]மேன்மை;
[5]கலைபயில் தெளிவு; [6]கட்டுரை வன்மை;
[7]நில' மலை, நிறைகோல், மலர், நிகர் மாட்சியும், (27-30. காண்க.)
[8]உலகியல் அறிவோ [9]டுயர் குணம்; இனையவும்;
அமைபவ னூல்உரை ஆசிரி யன்னே.

[இவ்வியல்பினை உடையார் கற்பிக்கும் ஆசிரியர்ஆவார்.]

**27.** HOW A TEACHER MUST RESEMBLE THE EARTH. GREATNESS, POWER, PATIENCE, PRODUCTIVENESS.

[மேற்கூறிய உவமையை விர்த்துக் காட்டியது.]

உஎ. [1]தெரிவரும் பெருமையுந், [2]திண்மையும், [3]பொறையும்,
[4]பருவ' முயற்சி அளவில் பயத்தலும்,
மருவிய நன்னில மாண்பா கும்மே.

[நிலத்தினது மாட்சிமை இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. தெரிவருங் கல்வியின் பெருமையும், தெரியவரிய கல்வியின் உள்வலியும், தெரிவரிய கல்வியின் கனமும், மாணுக்கர் செய்கின்ற கல்வி முயற்சிக்குத்தக்கபடி அவர்க்கு நூற்பயன் அளித்தலும் ஆசிரியனது மாட்சி.]

**28.** HOW THE TEACHER MUST RESEMBLE A MOUNTAIN. GREATNESS, RESOURCES, FIRMNESS, REPUTATION, DISINTERESTEDNESS.

[இதுவும் அது.]

உஅ. [1]அளக்கல் ஆகா அளவும், [2]பொருளும்;
[3]துளக்கல் ஆகா நிலையுந் [4]தோற்றமும்;
[5]வறப்பினும் வளந் தரூஉம் வண்மையு' மலைக்கே.

[மலையினது மாட்சிமைஇது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. மதிக்கக்கூடாத கல்வி அளவும், மதிக்கக் கூடாத பல நூற்பொருளுடைமையும், பிறரால் தள்ளி உரைக்கக் கூடாத கல்வியின் உறுதிநிலையும், நெடுந்தூரத்திலும் விளங்குகின்ற கல்வியின் உயர்புகழும், பொருள் வருவாய் சுருங்கினும் மனங்கோணுமலே மாணுக்கர்க்கு நூற்பொருள் அளித்தலும் ஆசிரியனுக்குப் பொருந்தின மாட்சி.]

**29.** HOW A TEACHER MUST RESEMBLE A BALANCE. RESOLVES DOUBTS, IMPARTIALITY.

[இதுவும் அது.]

உகூ. ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்,
மெய்ந்நடு நிலையு' மிகு' நிறை கோற்கே.

[பயனி: மிகும்.]

[நிறைகோலினது மாட்சிமை இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. மாணுக்கர்க்குத் தான் கற்ற கல்விப்பொருளைச் சந்தேகம் நீங்கும்படி அறிவித்தலும், அவ்வாறு அறிவிக்கும்போது மனக்கோட்டம்இன்றி மெய்மையோடுகூடி, நடுவுநிலையின் பாற்படுதலும், ஆசிரியனுக்கு மிகமாட்சி.]

**30.** HOW A TEACHER MUST RESEMBLE A FLOWER. AUSPICIOUS, NECESSARY, HONOURED BUT GENTLE, CHEERFUL.

[இதுவும் அது.]

௩0. மங்கலம் ஆகி, இன்றி அமையா
தியாவரு' மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்,
பொழுதில் முக' மலர் வுடையது பூவே.

[மலரினது மாட்சிமை இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. கல்வியின் நற்கருமத்திற்கு இன்னுன் என்று யாவராலும் எடுக்கப்பட்டவனுகி, அக்கருமம் அவனின்றி முடியாததாகி, அவனைக் கண்டமாத்திர

மே யாவருந் தலைமேற்கொண்டு வணங்க, அதனாற் செருக்கிக் கனங்காட்டாதவன் ஆகித் தான்கற்ற நூற்பொருளை மாணாக்கர்க்காயினும் பிறர்க்காயினும் உணர்த்த வருங்காலத்தில் முகமலர்ச்சி உடையவன் ஆதல் ஆசிரியன் மாட்சி.]

---

**31.** WHO ARE DISQUALIFIED FOR THE OFFICE OF TEACHER.

[இவர் ஆசிரியர் ஆகார் என்பது.]

௩௧. [1]மொழி குணம் இன்மையும்; [2]இழி குண இயல்பும்;
[3][a]அழுக்கா [b]றவா,[c]வஞ்சம், அச்சம் [d]ஆடலும்;
[4][a]கழற் குட' [b]மடற் பனை, [c]பருத்திக் குண்டிகை,
[d]முடத் தெங் கொப்பன முரண் கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே.

[எழு: உடையோர் பயனி: இலர்.]

[இக்குற்றங்களை உடையோர் கற்பிக்கும் ஆசிரியர் ஆகார்.]

**32.** THE IMMETHODICAL TEACHER. A JAR OF MARBLES. NO SETTLED PLAN.

[மேற்கூறிய உவமையை விரித்தது.]

௩௨. பெய்த முறை அன்றிப் பிறழ உடன்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

[எழு: செய்தி. பயனி; சீர்.]

[கழற்பெய்த குடத்தின் குற்றம் இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. தாங் கற்கும்போது கற்றநூல் வரிசைப்படி தம்மாணாக்கரைக் கற்பிக்கப் புகாமல், பின்முன்னாகவும் முன்பின்னாகவும் விரைந்து கற்பிக்கப் புகுதல் ஆசிரியர் ஆகாதவருடைய மாறுபாடு கொண்ட கருத்து.]

---

**33.** THE INACCESSIBLE TEACHER. THE TREE WHOSE FRUIT CANNOT BE OBTAINED TILL IT DROPS OF ITSELF.

[இதுவும் அது.]

௩௩. தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.

[மடற்பனையின் குற்றம் இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. தாமாகவே சொல்லக் கொள்வதல்லது மாணாக்கர் விரும்பிப்போய்

கேட்கச் சொல்லாமைக்கு ஏதுவாகிய இடத்தில் இருப்பது ஆசிரியர் ஆகாதவருடைய மாறுபாடுகொண்ட கருத்து.]

**34. THE HALF-INSTRUCTED TEACHER. THE TINDER BOX WITH SMALL MOUTH: HARD TO PUT IN AND HARD TO GET OUT.**

[இதுவும் அது.]

௩௪. அரிதிற் பெயக்கொண் டப்பொருள் தான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

[பருத்தி பெய்த குண்டிகையின் குற்றம் இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. தம்முணர்வு சிறிதாதலால் சிறிது சிறிதாகத் தாங் கற்ற வாறே, மாணாக்கன் உணர்வு பெரிதாயினும் ஈயப்புகுதல் ஆசிரியர் ஆகாதவரது மாறுபாடுகொண்ட கருத்து.]

**35. THE TEACHER WHO NEGLECTS HIS OWN PUPILS TO ATTEND TO OTHERS. THE COCOANUT TREE THAT LEANS OVER AND DROPS ITS FRUIT INTO _ STRANGER'S GROUNDS.**

[இதுவும் அது.]

௩௫. பல்வகை உதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே.

[முடத்தெங்கினது குற்றம் இது; ஆதலின், இஃது உவமை ஆயிற்று. பல்வகை உதவி வழிபாடு செய்யும் மாணாக்கர்க்கின்றிப் பிறர்க்கு நூற்பொருள் அளிப்பது ஆசிரியர் ஆகாதவரது மாறுபாடுகொண்ட கருத்து.]

**36. THE METHOD OF TEACHING.**

[ஆசிரியன் கற்பிக்கும் ஆறு.]

௩௬. ஈதல் இயல்பே இயம்புங் காலைக்:
காலமும், இடனும் வாலிதி னோக்கிச்;
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி;
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து;
விரையான், வெகுளான், விரும்பி, முகமலர்ந்து;

கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்,
கோட்டமில் மனத்தி னூல் கொடுத்தல் என்ப.
[எழு: இயல்பு, புலவர். பயனி: கொடுத்தல், என்ப.]

[கற்பிக்கும் ஆறு இவ்வாறு எனச் சொல்லுவர் புலவர்.]

**37.** WHO ARE TO BE TAUGHT: SIX CLASSES OF PERSONS.
[மாணாக்கனது வரலாறு.]

௩௭. தன்மகன், ஆசான் மகனே, மன்மகன்,
பொருணனி கொடுப்போன், வழிபடு வோனே,
உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

[இவ்வறுவர்க்குஞ் சொல்லப்படுவது நூல்.]

**38.** GOOD, MIDDLING AND BAD SCHOLARS EIGHT COMPARISONS.
[மாணாக்கர் குணத்தை உவமையாகக் காட்டியது.]

௩௮. அன்னம், ஆவே; மண்ணொடு, கிளியே;
இல்லிக் குடம், ஆ டெருமை, நெய்யரி,
அன்னார் [illegible], இடை, கடை மா[illegible]க்கர்.
[சூ. 455 காண்க.]

[மேற்கூறிய அறுவருள் அன்னமும் பசுவும் போல்வார் தலைமாணாக்கர்; மண்ணுங் கிளியும் போல்வார் இடைமாணாக்கர்; இல்லிக்குடமும் ஆடும் எருமையும் நெய்யரியும் போல்வார் கடைமாணாக்கர்.]

**39.** WHO MUST NOT BE TAUGHT: FIFTEEN FAULTS.
[கற்பிக்கப்படார் இவர்.]

௩௯. களி, மடி, மானி, காமி, கள்வன்,
பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன்,
துயில்வோன், மந்தன், தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன், தறுகணன், பாவி,
படிறன், இன்னோர்க்குப் பகரார் நூலே.

[இக்குற்றங்களை உடையார்க்கு நூலைச் சொல்லார் ஆசிரியர்.]

**40.** THE WAY TO LEARN.

[மாணாக்கன் நூலைக் கற்றுக்கொள்ளும் வரலாறு.]

௪௦. கோடன் மரபே கூறுங் காலைப்:
பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
குணத்தொடு பழகி, அவன் குறிப் பிற் சார்ந்
திரு என இருந்து, சொல் எனச் சொல்லிப்,
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்,
சித்திரப் பாவையின் அத்தக வடங்கிச்
செவி வாய் ஆக நெஞ்சு களன் ஆகக்,
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்,
போ எனப் போதல், என்மனார் புலவர்.

[கற்கும் ஆறு இவ்வாறு எனச் சொல்லுவர் புலவர்.]

**41.** METHODS OF STUDY.

[மாணாக்கன் நூலைக் கற்கும் ஆறு.]

௪௧. நூல் பயில் இயல்பே நுவலின்: வழக்கறிதல்,
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்,
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்,
வினாதல், வினாயவை விடுத்தல், என்றிவை
கடனாக் கொளினே மடநனி இகக்கும்.

[இவ்வாறு நூலைப் பயின்றவரது அறியாமை மிகுதியும்போம்.]

**42.** LEARN A SECOND TIME.

[இரண்டுவிசை பிழை அறக் கேட்கவேண்டும்.]

௪௨. ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

[ஒருகால் கேட்ட துணையானே அமையாது, இருகால் கேட்பானாயில் அந்நூலின்கண் பிழைபாடு மிகுதியும் இலன்]

**43.** MASTER IT BY A THIRD HEARING.

[மூன்றுதரங் கேட்டால் மற்றவர்க்குச் சொல்லத் தெரியும்.]

சஙு. முக்காற் கேட்பின் முறைஅறிந் துரைக்கும்.

[முக்காற் கேட்டானாகில் ஆசிரியன் கற்பித்த முறைஅறிந்து உரைப்பன்.]

**44.** THUS TO LEARN THE OPINIONS OF OTHERS IS ONE FOURTH PART OF SCHOLARSHIP.

சச. ஆசான் உரைத்த தமைவரக் கொளினும்,
காற்கூ றல்லது பற்றலன் ஆகும்.

யன் கற்பித்தனவற்றைத் தன் அறிவின்கண் அமையக்கற்றான் ஆகிலும் புலமைத்திறத்தில் காற்கூறல்லது பற்றான்.]

**45.** ONE FOURTH MORE IS GAINED BY ASSOCIATION WITH THE LEARNED. THE OTHER HALF BY *teaching* WHAT HAS BEEN LEARNT.

சரு. அவ்வினை யாளரொடு 'பயில்வகை ஒருகால்,
செவ்வினின் உரைப்ப அவ்விரு காலும்,
மைஅறு புலமை மாண்புடைத் தாகும்.

[தன்போலியரோடு பயிலும் வகையாற் காற்கூறும்; அக்கல்வியைத் தன் மாணாக்கர்க்கும் அவைக்களத்தோர்க்கும் உணரவிரித்துரைத்தலான் அரைக்கூறும்; ஆகக்குற்றம் அற்றபுலமை நிரம்பும்.]

**46.** THE RESPECT DUE TO A MASTER.

[ஆசிரியனை மாணாக்கன் வழிபடும் வழிபாடு.]

சசா. அழலி னீங்கான் அணுகான் அஞ்சி,
நிழலி னீங்கான், நிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே.

[இவ்வாறு ஒழுகுதல் வழிபாடாம்.]

பொதுப்பாயிரம் முற்றிற்று.

# நன்னூல்.

## ௩. சிறப்புப்பாயிரத்து இலக்கணம்.

### 47. WHAT A SPECIAL PREFACE SHOULD CONTAIN.

[சிறப்புப் பாயிரத்தின் பொது இலக்கணம்.]

௪௭. ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற் பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ டாய்,எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

[தெய்வ வணக்கமுஞ் செய்பொருட் டொகையுஞ்
செப்புவ தாகுஞ் சிறப்புப் பாயிரம். (தொன்னூல்.)]

[இவ்வெட்டுப் பொருளையும் விளங்க உணர்த்துவது சிறப்புப்பாயிரத் திலக்கணம் ஆம்.]

### 48. THREE ADDITIONAL MATTERS.

[இதுவும் அது.]

௪௮. காலங், களனே, காரணம், என்றிம்
மூவகை யேற்றி, மொழிநரும் உளரே.

[அவ்வெட்டனோடு இம்மூன்றனையும் கூட்டிப் பதினொன்றாகக் கூறு வாரும் உளர்.]

**49.** HOW A BOOK IS TO BE NAMED.

[நூற்பெயர்க்குச் சிறப்புவிதி.]

சக. முதனூல், கருத்தன், அளவு,
பொருள், செய் வித்தோன், தன்மை முத ம,
இடுகுறி யானு நூற் கெய்தும் பெயரே.

[“முதனூல்” முதல் “தன்மை” ஈறாகக் கூறிய எழும் பிறவும் ஆகிய காரணங்களானும் இடுகுறியானும் நூற்குப் பெயர்வரும்.]

(உ-ம்.) பாரதம், அகத்தியம், நாலடிநானூறு, களவியல், அகப்பொருள், சதனாகனம, சிந்தாமணி, நிகண்டு. [பிறவும் அன்ன.]

**50.** FOUR WAYS IN WHICH A BOOK MAY BE COMPOSED.

[நூல் யாப்பினுக்குச் சிறப்புவிதி.]

ருo. தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீர்இரண் டென்ப.

[நூல்யாப்பு இந்நான்கு கூற்றதாம் என்று சொல்லுவர் புலவர்.]

**51.** WHO MUST WRITE THE PREFACE.

[சிறப்புப்பாயிரங் கூறுதற்கு உரியார் இவர்.]

ருக. தன் ஆசிரியன், தன்னொடு கற்றோன்,
தன் மாணாக்கன், தகும் உரை காரன், என்
றின்னோர் பாயிரம் இயம்புதற் கடனே.

[ஒருவன் கூறிய நூற்கு இந்நால்வருள் ஒருவர் சிறப்புப்பாயிரம் கூறு தல் முறைமை ஆம்.]

### 52. AN AUTHOR MUST NOT PRAISE HIMSELF.

[சிறப்புப்பாயிரம் பிறர் கூறவேண்டிய முகாந்திரம்.]

௫௨. தோன்று தோற்றித், துறைபல முடிப்பினுந்
தான்தற் புகழ்தல் தகுதி அன்றே.

[தோன்றாத நுட்பங்களை எல்லாந் தோற்றிப் பலதுறைப்பட்டு விரிந்த நூலைச் செய்து முடித்தான் ஆயினுந் தன்னைத்தான் புகழ்தல் தகுதி அன்றாம். ஆதலின் நூல் செய்தானது புகழாகிய சிறப்புப்பாயிரத்தைப் பிறர் கூறவேண்டும்.]

### 53. WHEN A MAN MAY PRAISE HIMSELF.

[தற்புகழ்ச்சியும் ஒரோ வழி குற்றம் அன்று.]

௫௩. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினுந்,
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்,
மன்னிய அவை இடை வெல்லுறு பொழுதினுந்,
தன்னை மறுதலை பழித்த காலையுந்,
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோர்க்கே.

[இவ்விடங்கள் ஆயின் தன்னைப்புகழ்தலுந் தகுதிஆம் புலவோர்க்கு.]

### 54. NO CLASSIC WITHOUT A PREFACE.

[இருவகைப்பாயிரங்களும் நூற்கு இன்றி அமையாதன.]

௫௪. ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

[ஆயிரம் உறுப்புக்களான் விரிந்தநூலாயினும் பாயிரம் இல்லாதது நூல் அன்று.]

**55.** A PREFACE IS AN ORNAMENT.

[பாயிரம்இல்லது பனுவல் அன்று என்பதற்கு உதாரணம்.]

1. மாடக்குச் சித்திரமு' மாநகர்க்குக் கோபுரமும்,
ஆட'மைத்தோ 'ணல்லார்க் 'கணியும்போ
'லுடி, முன்
ஐ'துரையா நின்ற அணிந்'துரையை என்றூற்கும்
பெய்'துரையா வைத்தார் பெரிது. [வெண்பா.]

[அறிவுடையோர் மாடமுதலிய மூன்றற்குஞ் சித்திரமுதலிய மூன்றும் போலக்கருதி, அழகிதாகியபொருளை உணர்த்தாநின்ற இருவகைப்பாயிரங் களையும் உரைத்து, எவ்வகைப்பட்ட பெரியநூல்கட்கும் முன்னர்ப் பெய்து வைத்தார் பெரும்பாலும்; ஆதலில், பாயிரம் இல்லது பனுவல் அன்றும்.]

சிறப்புப் பாயிரத்திலக்கணம் முற்றும்.

# நன்னூல்.

## I. எழுத்ததிகாரத்தில்

### (I.) எழுத்தியல்.

[அகத்திலக்கணத்தை உணர்த்திய இயல்.]

**56.** AN INVOCATION.

[ருசு. பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம்புவன் எழுத்தே.]

**57.** DIVISIONS OF ORTHOGRAPHY: 12.

[எழுத்திலக்கணம் இத்துணைத்தென்பது.]

ருஎ. எண், பெயர், முறை, பிறப் புருவ மாத்திரை,
முதல், ஈ றிடைநிலை, போலி, என்றா;
பதம், புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

[இப்பன்னிரு பகுதியினையும் உடைத்து அவ்வெழுத்திலக்கணம்.]

☞ [இச்சூத்திரந் தொகுத்துச்சுட்டல். சூ. 14 காண்க.]

### § க. எழுத்துகளின் எண்.

**58.** A LETTER DEFINED: OF TWO KINDS, PRIMARY AND DEPENDANT.

[எழுத்து இன்னதென்பது.]

ருஅ. மொழிமுதற் காரணம் ஆம் அணுத் திரள் ஒலி
எழுத்தது முதல்சார் பென இரு வகைத்தே.

[வி. 11.]

[மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாகி வரும் ஒலி யாவது எழுத்து; அது முதல்எழுத்து என்றும், சார்பெழுத்து என்றும், இரு வகையினை உடைத்து.]

☞ [வருவன எல்லாம் வகுத்துக் காட்டல்.]

**59.** 30 PRIMARY LETTERS: VOWELS (SOUL) AND CONSONANTS (BODY.)

[முதலெழுத்தின் விரி.]

௫௯. உயிரும் உடம்பு மா முப்பது முதலே.

[வி. 11.]

[உயிரும் உடம்பும் ஆகும் முப்பதெழுத்தும் முதல்எழுத்துகள் ஆம்.]

**60.** 10 KINDS OF SECONDARY OR DEPENDANT LETTERS.

[சார்பெழுத்தின் விரி.]

௬௦. உயிர்மெய், ஆய்தம், உயிர்அள பொற்றள
பஃகிய இ, உ, ஐ, ஔ, மஃகான்,
தனிநிலை, பத்துஞ் சார்பெழுத் தாகும்.

[இப்பத்தும் சார்பெழுத்துகள் ஆம்.]

**61.** 369 SECONDARY, DEPENDANT LETTERS. THEIR CLASSES AND NUMBERS.

௬௧. உயிர்மெய் இரட்டுநூற் றெட்டுயர் ஆய்தம்
எட்டுயிர் அளபெழு மூன்றொற் றளபெடை
ஆறேழ்; அஃகும் இம்முப் பானேழ்;
உகரம் ஆறு றைகான் மூன்றே;
ஔகான் ஒன்றே; மஃகான் மூன்றே;
ஆய்தம் இரண்டொடு: சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப.

[உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு [12 X 18], குறுகாத ஆய்தம் எட்டு [சூ. 90.], உயிர்அளபெடை இருபத்தொன்று [சூ. 91.], ஒற்றளபெடை நாற்பத்திரண்டு [சூ. 92.], குற்றியல் இகரம் முப்பத்தேழு [சூ. 93.], குற்றியல் உகரம் முப்பத்தாறு [சூ. 94.], ஐகாரக்குறுக்கம் மூன்று [சூ. 95.], ஔகாரக் குறுக்கம் ஒன்று [சூ. 95.], மகரக்குறுக்கம் மூன்று [சூ. 96.], ஆய்தக்குறுக்கம் இரண்டுடனே [சூ. 97.]: சார்பெழுத்தினது மிகுந்த விரி முந்நூற்றறுபத்தோன்பதாம் [370—1.] என்று சொல்லுவர் புலவர்.]

## § உ. எழுத்துகளின் பெயர்.

**62.** NAMES OR NOUNS: ARBITRARY AND APPELLATIVE: COMMON AND PROPER.

[பெயர்க்கெல்லாம் பொது இலக்கணம்.]

சூஉ. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

[வி. 48.]

[இடுகுறிப் பெயரும், காரணப் பெயரும் ஆகிய இரண்டும் பலபொருட்குப் பொதுப்பெயர்ஆயும், ஒருபொருட்குச் சிறப்புப்பெயர்ஆயும், வருவனஆம்.]

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | மரம் ... ... ... | இடுகுறிப் பொதுப்பெயர். | [ARBITRARY GENERIC NOUNS.] |
| | பனை ... ... ... | இடுகுறிச் சிறப்புப்பெயர். | [ARBITRARY SPECIFIC NOUNS.] |
| | அணி ... ... ... | காரணப் பொதுப்பெயர். | [APPELLATIVE GENERIC NOUNS.] |
| | முடி ... ... ... | காரணச் சிறப்புப்பெயர். | [APPELLATIVE SPECIFIC NOUNS.] |
| | மறவன், பங்கயம், முள்ளி, ... ... | காரண இடுகுறிப்பெயர். | [BOTH APPEL. and ARBITRARY.] |

**63.** VOWELS—12. CONSONANTS—18.

[ஒருசார் எழுத்தினது பெயர்.]

சூ௩. அம்முதல் ஈராறு ஆவி; கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

[வி. 11.]

[அகரமுதல் ஔகாரம் ஈறுகக் கிடந்த பன்னிரண்டனையும் ஆவி என்றும்; ககரமுதல் னகரம் ஈறுகக் கிடந்த பதினெட்டனையும் மெய் என்றும் நூல்களாற் சொன்னார் அறிவுடையோர்.]

**64.** SHORT VOWELS—5.

[குறுகிய ஓசையையுடைய உயிர் எழுத்துகள்.]

சூ௪. அவற்றுள்,—
அ, இ, உ, எ, ஒ குறில் ஐந்தே.

[வி. 3.]

[ஆவி, மெய், என்றவற்றுள் இவ்வைந்தும் குற்றெழுத்துகள் ஆம்.]

**65.** LONG VOWELS—7.

[நீடித்த ஓசையையுடைய உயிர் எழுத்துகள்.]

௬௫. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, நெடில்.

[வி. 4.]

[இவ்வேழும் நெட்டெழுத்துகள் ஆம்.]

**66.** DEMONSTRATIVE LETTERS—3.

[சுட்டிக்காட்டும் உயிர் எழுத்துகள்.]

௬௬. அ, , உம் முதல் தனிவரிற், சுட்டே.

[வி. 5.]

[இம்மூன்றெழுத்தும் (மொழிக்குப் புறத்தும், அகத்தும்,) முதற்கண் தனித்து(ச் சுட்டுப்பொருள் உணர்த்த)வரிற் சுட்டெழுத்து ஆம்.]

(உ-ம்.) அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், } DEM. LETTERS. புறத்தும்; { அவன், இவன், உவன், } DEM. WORDS. அகத்தும் வந்தன.

☞ அவன் என்பதன்கண் அகரம், அறம் என்பதின்கண் அகரம்போலப், பின் எழுத்துகளோடு தொடர்ந்துநின்று ஒரு பொருளை உணர்த்தாது, வேறுநின்று, சுட்டுப்பொருளை உணர்த்தலின் அகத்து வரும்; இதனையுந் "தனிவரின்" என்றார்.

**67.** INTERROGATIVE LETTERS—5.

[வினா எழுத்துகள்.]

௬௭. எய், யா முதலும்; ஆ, ஓ, ஈற்றும்;
ஏ, இரு வழியும் வினா ஆகும்மே.

[வி. 6.]

[(புறத்தும், அகத்தும், மொழி)முதற்கண் எகரமும், யாவும்; ஈற்றின்கண் ஆகாரமும், ஓகாரமும்; இவ்விரண்டிடத்திலும் ஏகாரமுந் வினாப்பொருள் உணர்த்தவரின்) வினா எழுத்து ஆம்.]

(உ-ம்.) எக்கொற்றன்? யாவன்? } ... ... முதற்கண் வந்தன. INITIAL.
கொற்றனா? கொற்றனோ? ... ஈற்றின்கண் வந்தன. FINAL.
ஏவன்? கொற்றனே? ... ... ஈரிடத்தும் வந்தன. BOTH.
} இவையும் அகத்தும், புறத்தும் வருவது காண்க.

**68.** STRONG OF HARD CONSONANTS—6. [TENUES OR SURDS.]

[வல்லின மெய்எழுத்துகள்.]

கூஅ. வல்லினம் க, ச, ட, த, ப, ற, என

[வி. 8.]

ம் வல்லினம் ஆம்.]

**69.** WEAK CONSONANTS—6. [NASALS.]

[மெல்லின மெய்எழுத்துகள்.]

கூகூ. மெல்லினம் ங, ஞ, ண, ந, ம, ன, எனஆறே.

[வி. 9.]

[இவ்வாறும் மெல்லினம் ஆம்.]

**70.** MIDDLE CONSONANTS. [LIQUIDS.]

[இடையின மெய்எழுத்துகள்.]

எO. இடையினம் ய, ர, ல, வ, ழ, ள, என

[வி. 10.]

[இவ்வாறும் இடையினம் ஆம்.]

**71.** RELATIONSHIPS OF LETTERS. PRIMARY LETTERS TAKEN IN PAIRS.

[எழுத்துகளின் இனபேதங்கள்.]

எக. ஐ, ஔ, இ, உச் செறிய, முதல் எழுத்
திவ்விரண் டோர் இனம் ஆய் வரல் முறையே.

[வி. 11. F.]

[(இனம்இல்லாத) ஐகார ஔகாரங்கள் (ஈகார ஊகாரங்கட்கினம் ஆகிய) இகர உகரங்களைத் தமக்கும் இனம்ஆகப்பொருந்த, முதல் எழுத்துகள் இரண்டிரண்டு ஓரினமாய்வருதல் முறை; ஆதலால், அவை இனஎழுத்தென்றும் பெயரவாம்.]

(உ-ம்.) அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ, இ; ஒ, ஓ; ஔ, உ;
க, ங; ச, ஞ; ட, ண; த, ந; ப, ம; ய, ர; ல, வ; ழ, ள; ற, ன;
என, இரண்டிரண்டு ஓர் இனமாய் வந்தது காண்க.

**72.** THE GROUND OF THIS ARRANGEMENT IN PAIRS—5.

[இனம் என்றதற்குக் காரணம்.]

௭௨. தான' முயற்சி, அளவு, பொருள், வடி
வான ஒன் றாதி ஓர் புடை ஒப் பினமே.

[தானம் முதலிய இவற்றுள் ஒன்று முதலாக ஒருபுடை ஒத்தலால் இனம் ஆம்.]

(உ-ம்.) அ, ஆ என்பன இரண்டிற்குந் தானங் கண்டம் [சூ. 75.]
முயற்சி, அங்காத்தல் [சூ. 76.]
குறிலினது விகாரமே நெடில் ஆதலால் பொருள் ஒன்று;
வடிவு அ, ஆ.
☞ இவை மாத்திரையில் மாத்திரம் ஒத்திரா.

## § ௩. எழுத்தின் முறை.

**73.** WHY THE ALPHABET IS ARRANGED AS IT IS.

[எழுத்தினது முறை.]

௭௩. சிறப்பினும், இனத்தினுஞ், செறிந்தீண் டம்முதல்
நடத்தல் தானே முறை ஆ கும்மே.

[சிறப்பினானும், இனத்தினானும் பொருந்தி, இவ்வுலகத்து அகரமுதலாக வழங்குதல் தானே (எழுத்தினது) முறை ஆம்.]

(உ-ம்.) குறிலினது விகாரம் நெடில், ஆதலால் குறில்முன் நிற்பது சிறப்பினால்.
வலியோர் மெலியோர்க்கு முன்னிற்றல்போல வல்லெழுத்து முன் நிற்பது சிறப்பினால்.
நெடிலும் மெல்லெழுத்தும் இனமாய்ப் பின்னிற்பது இனத்தினால்.

## § ௪. எழுத்தின் பிறப்பு.

**74.** THE PRODUCTION OF LETTER-SOUNDS.

[எழுத்துகளின் பிறப்பைப் பற்றிய பொதுவிதி.]

௭௪. நிறை உயிர் முயற்சியின் உள் வளி துரப்ப,
எழும் அணுத் திரள் உரம், கண்டம், உச்சி,
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்,
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

[வி. 18. J.]

[(ஒலிஎழுத்தாகிய காரியத்திற்கு வேண்டுங்காரணங்களின், ஒரு ஆற்றானுங் குறைவின்றி) நிறைந்த உயிரினது முயற்சியால் உண்ணின்ற வளி

எழுப்ப, எழுஞ்செவிப்புலன் ஆம் அணுத்திரள் ஆனது உரம் முதலிய நான் கிடத்தையும் பொருந்தி, இதழ் முதலிய நான்கின்தொழில்களால் வெவ் வேறு எழுத்தாகிய ஒலிகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம்.]

**75.** VOWELS AND LIQUIDS FROM THE THROAT; NASALS, THE NOSE; TENUES, THE CHEST.

[முதலெழுத்துகளுக்கு பிறப்பிடம்.]

எரு. அவ்வழி,—

ஆவி இடைமை இட' மிட' றாகும்;
மேவு' மென்மைமூக் குரம்பெறும் வன்மை:

[மேற்கூறிய நெறியாற் பிறக்குங்கால்: ஆவி, இடையினம், என்னும் இருவகை எழுத்தினது இடம் மிடறாம்; மெல்லினம்மூக்கை இடம்ஆகப் பொருந்தும்; வல்லினம் நெஞ்சை இடம்ஆகப் பெறும்.]

---

**76.** அ, ஆ BY THE MERE OPENING OF THE MOUTH.

[சில எழுத்திற்கு முயற்சிவகையால் பிறப்பு.]

எசு. அவற்றுள்,—

முயற்சியுள் அ, ஆ அங்காப் புடைய.

[மேல் இடம் வகுக்கப்பட்ட முதல் எழுத்துகளுள், அகர ஆகாரங்கள் நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலை உடைய வாய்ப் பிறக்கும்.]

**77.** இ, ஈ, எ, ஏ, ஐ HOW PRONOUNCED.

[சில உயிர் எழுத்துகளை உச்சரிக்கும் முயற்சி.]

எஎ. இ, ஈ, எ, ஏ, ஐ, அங் காப்போ
டண்பல் முத'னா' விளிம்புற' வருமே.

[இவ்வைந்தெழுத்தும் அங்காப்புடனே முன்னம்பல்லை அடிநாவிளிம்பு பொருந்தப் பிறக்கும்.]

**78.** உ, ஊ, ஒ, ஓ, ஔ BY THE LIPS.

[சில உயிர்எழுத்து உதடுகளின் முயற்சியால் பிறத்தல்.]

எஅ. உ, ஊ, ஒ, ஓ, ஔ, இதழ் குவிவே.

[இவ்வைந்தெழுத்தும் பிறத்தற்கேதுவாகிய முயற்சி இதழ்குவிவாம்.]

---

**79.** க, ங; ச, ஞ; ட, ண HOW PRONOUNCED.

[சில மெய்யெழுத்துகள் உச்சரிக்கும் முயற்சி.]

எகூ. க, ங, வும், ச, ஞ, வும், ட, ண, வு முதல் இடை
நா அண்ணம் உற முறை வருமே.

[455 சூத்திரங்காண்க.]

[கவ்வும், ஙவ்வும், முதல்நா முதல்அண்ணத்தையும்; சவ்வும், ஞவ்வும், இடைநா இடைஅண்ணத்தையும்; டவ்வும், ணவ்வும், நுனிநா நுனிஅண்ணத்தையும்; பொருந்த இம்முறையே பிறக்கும்.]

**80.** த, ந DENTALS.

[முன்னம்பல் அடியாகிய இடத்தில் பிறக்கும் எழுத்துகள்.]

அ0. அண்பல் அடி, நா முடி உறத் த, ந, வரும்.

[அண்பல்அடியை நாநுனிபொருந்தத் தவ்வும் நவ்வும் பிறக்கும்.]

**81.** ப, ம LABIALS.

[ப, ம பிறக்கும் முயற்சி.]

அக. மீகீழ் இதழ் உறப் பம்மப் பிறக்கும்.

[மேல்இதழுங் கீழ்இதழும் பொருந்தப் பவ்வும், மவ்வும் பிறக்கும்.]

**82.** ய HOW FORMED.

[ய பிறக்கும் முயற்சி.]

அ௨. அடி நா அடி அணம் உற யத் தோன்றும்.

[அடிநா அடிஅண்ணத்தைப் பொருந்த யகரம் பிறக்கும்.]

### 83. ர, ழ LINGUALS.

[ ர், ழ் பிறக்கும் முயற்சி. ]

௮௩. அண்ண நுனிநா வருட ர, ழ, வரும்.

[ அண்ணத்தை நுனிநாத்தடவ ரவ்வும், ழவ்வும், பிறக்கும்.]

### 84. ல, ள HOW PRONOUNCED.

[ ல், ள் பிறக்கும் முயற்சி. ]

௮௪. அண்பல் முதலும் அண்ணமு’ முறையின்
நாவிளிம்பு வீங்கி, ஒற்றவும், வருடவும்,
லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்.

வும் நிரன்நிறைப்பொருள். சூ. 455 காண்க.]

---

[ அண்பல்முதலை நாவிளிம்பு வீங்கி ஒற்ற லகாரம் ஆகியும், அண்ணத்தை நாவிளிம்புவீங்கி வருட ளகாரம்ஆகியும், இவ்விரண்டெழுத்தும் பிறக்கும்.]

### 85. வ HOW PRONOUNCED.

[ வ் பிறக்கும் முயற்சி. ]

௮௫. மேற்பல் இதழ் உற மேவிடும் வவ்வே.

[ மேல்வாய்ப்பல்லைக் கீழ்வாய்உதடு பொருந்த வகரம் பிறக்கும்.]

### 86. ற, ன HOW PRONOUNCED. ROUGH PALATALS.

[ற், ன் பிறக்கும் முயற்சி.]

௮௬. அண்ண நுனிநா நனி உறில் ற, ன, வரும்.

[ அண்ணத்தை நுனிநா மிகப்பொருந்தில் றவ்வும், னவ்வும், பிறக்கும். ]

**87.** THE PRONUNCIATION OF ஃ AND OF SECONDARY LETTERS.

[சார்பு எழுத்திற்கு இடம் முயற்சி.]

அஎ. ஆய்தக் கிடந் தலை; அங்கா முயற்சி.
சார்பெழுத் தேனவுந் தம்முதல் அனைய.

[ஆய்தம் பிறத்தற்கு இடந்தலை, முயற்சிஅங்காத்தலாம்; ஒழிந்தசார் பெழுத்துகளும் இடமுயற்சிகள் தம்முதலெழுத்துகளோடு ஒப்பனவாய்ப் பிறக்கும்.]

**88.** THOUGH GENERAL RULES ARE GIVEN EACH LETTER HAS ITS OWN PRONUNCIATION.

[எழுத்துகளின் பிறப்பிலக்கணத்திற்குப் புறனடை.]

அஅ. எடுத்தல், படுத்தல், நலிதல், உழப்பின்
திரிபுந் தத்தமில் சிறிதுள ஆகும்.
[வி. 18. J.]

[(பலஎழுத்திற்குப் பிறப்பொன்றுகச் சொல்லப்பட்டனவேனும்,) எடு த்தல் படுத்தல் நலிதல் (என்னும் எழுத்திற்குரிய ஒலி) முயற்சியான் ஒன் றற்கொன்று பிறப்புவேறுபாடுகளும் அவ்வவற்றின்கண் சிறிது சிறிது உள வாம்.]

**89.** VOWEL CONSONANTS.

[உயிர்மெய் சார்ந்துவரும் ஆறு.]

அகூ. புள்ளிவிட் டவ்வொடு முன் உரு வாகியும்,
ஏனை உயிரோ டுருபு திரிந்தும்,
உயிர் அள வாய்,அதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் ஞய்வரும் உயிர்மெய்.
[வி. 13.]

[மெய் புள்ளியை விட்டு அகரத்தோடுகூடியவழி விட்ட உருவே உரு வாகியும், ஒழிந்த உயிர்களோடு கூடியவழி உருவுவேறுபட்டுந், தன்மாத் திரை தோன்றுது உயிர்மாத்திரையே மாத்திரையாய்த், தன்வரிவடிவினது

விகாரவடிவே வடிவாய், உயிர்வடிவை ஒழித்து, மெய் உயிர் என்னும் பெயர் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே, ஒற்றொலிமுன்னும், உயிர் ஒலிபின்னும், ஆகிவரும் உயிர்மெய்யெழுத்து.]

**90.** ÂYTHAM BETWEEN A SHORT VOWEL AND A HARD VOWEL CONSONANT.

[முற்றாய்தம் வரும் ஆறு.]

௯0. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்தே.

[வி. 12.]

[புள்ளிவடிவினதாய் ஆய்தங் குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறன் மேலதாய் வரும்.]

(உ-ம்.) எஃகு, கஃசு, கஃடு, இருபஃது. அஃபு, சுஃது
[வல்லினவகையால் ஒருமொழிக் கண்வந்தது.]
அஃகடிய, அஃறிணை. [புணர்ச்சி விகாரத்தால் வந்தது.]

"விலஃஃகி வீங்கிருள் ஓட்டுமே, மாதர்
இலஃஃகு முத்தின் இனம்."
[செய்யுள் விகாரத்தால்வந்தது.]

} முற்றாய்தம் எட்டு. [சூ. 61.]

**91.** POETICAL PROLONGATION OF THE SOUND OF VOWELS.

[செய்யுளில் உயிர் அளபெடை வரும் ஆறு.]

௯௧. இசைகெடில் மொழி முதல், இடை, கடை நிலை நெடில்
அளபெழும்; அவற்றவற் றினக் குறில் குறியே.

[வி. 14.]

[(செய்யுட்கண்) இசைகுன்றில் மொழிமுதலினும், இடையினும், கடையினும்; நின்ற நெட்டெழுத்து ஏழும் அவ்விசை நிறைக்கத் தத்த மாத்திரையின் மிக்கொலிக்கும்; அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு அவற்றின்பின் அவற்றிற்கினம் ஆகிய குற்றெழுத்துகள் வரிவடிவின்கண் அறிகுறியாய் வரும்.]

(உ-ம்.) 1. வாஅகை, ஈஇகை, ஊஉகம், பேஎகன், தைஇயல், தோஒரை, மௌஉவல்.

[இவை முதனிலை அளபெடை.]

2. படாஅகை, பரீஇகம், கழூஉமணி, பரேஎரம், வலைஇயம், பரோஒரம், மனௌஉகம்.

[இவை இடைநிலை அளபெடை.]

3. கடாஅ, குரீஇ, குழூஉ, மிலேஎ, கடைஇ, அரோஓ, அளெஔ.

[இவை **கடைநிலை** அளபெடை; ஆக, இடவகையால் உயிரளபெடை இருபத்தொன்று.] [சூ. 61.]

4. குரீஇ, ஆடூஉ, மகடூஉ.

[இவை **இயற்கை**அளபெடை; மற்றவை **செய்கை**அளபெடை.]

## 92. THE POETICAL PROLONGATION OF THE SOUND OF CERTAIN CONSONANTS.

[செய்யுளில் ஒற்றளபெடை வரும் ஆறு.]

கூஉ. ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தம்,
அளபாம் குறில் இணை, குறிற் கீழ், இடை கடை;
மிகலே அவற்றின் குறி ஆம், வேறே.
[வி. 11.]

[(செய்யுட்கண் இசைகுன்றின்,) குறில் இணைக்கீழும், குறிற்கீழுமாய், மொழிஇடையினும் ஈற்றினும் நின்ற இப்பத்தொற்றும், ஆய்தமும், (அவ்வோசை நிறைக்கத்,) தம் மாத்திரையின் மிக்கொலிக்கும்; அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துகளே வரிவடிவின்கண் வேறு அறிகுறியாய் வரும்.]

(உ-ம்.) 1. அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரல்ல்கள், திரள்ள்கள், விரஃஃகு.

[இவை **குறிலிணைக்கீழ்**, மொழி இடையில் அளபெடுத்தன.]

2. மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்டு, பந்ந்து, எஃஃகு.

[இவை **குறிற்கீழ்**, மொழி இடையில் அளபெடுத்தன.]

3. பரண்ண், மரம்ம், கலன்ன், குரல்ல், திரள்ள்.

[இவை **குறிலிணைக்கீழ்**, மொழியீற்றில் அளபெடுத்தன.]

4. மண்ண், அம்ம், பொன்ன், கல்ல், கொள்ள்.

[இவை **குறிற்கீழ்**, மொழியீற்றில் அளபெடுத்தன.]

ஆய்தம் மொழியின் இறுதியில் குறிலிணைக்கீழுங் குறிற்கீழும்வாரா; அவ்விரண்டையும் விலக்கி (4 × 11=44—2=42) ஒற்றளபெடை நாற்பத்திரண்டாம். [சூ. 61.]

### 93. SHORTENED இ.

[குற்றியல் இகரம் வரும் ஆறு.]

௯௩. யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்,
அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய.

[வி. 24.]

[யகரம் வருமொழிக்கு முதல் ஆகி வர, நிலைமொழிக்கு ஈறாகிநின்ற குற்றியல் உகரம் திரிந்த இகரமும், மியா என்னும் அசைச்சொல்லின் கண் இகரமுங் குற்றியல்இகரங்கள் ஆம்.]

(உ-ம்.) நாகு + யாது = நாகியாது. [முதலியவும் அவ்வாறு. சூ. 94 காண்க.]
கேண்மியா, சென்மியா.

☞ [குற்றியல் உகரம் முப்பத்தாறினும், அசைச்சொல் மியாவினும் குற்றியல் இகரம் முப்பத்தேழாம். சூ. 61 காண்க.]

### 94. SHORTENED உ. [SEE 164.]

[குற்றியல் உகரம் வரும் ஆறு.]

௯௪. நெடிலோ டாய்தம் உயிர், வலி, மெலி, இடை,
தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம்
அஃகும்; பிற மேல் தொடரவும் பெறுமே.

[வி. 15.]

[தனிநெடில் எழுடனே, ஆய்தம் ஒன்றும், (மொழிஇடை ஈறுகளின் வரப்பெறாத ஔகாரம் ஒழித்து ஒழிந்த) உயிர்பதினொன்றும், வல்லெழுத்தாறும், மெல்லெழுத்தாறும், (வல்லெழுத்துகளோடு தொடராத வகரம் ஒழித்து ஒழிந்த) இடை எழுத்தைந்தும், ஆகிய முப்பத்தாறு எழுத்தினுள் யாதானும் ஒன்று ஈற்றுக்கு அயல் எழுத்தாய்த்தொடரப்பட்டு, மொழிஇறுதிக்கண் வல்எழுத்துகளுள் யாதானும் ஒன்று பற்றுக்கோடாக அதனை ஊர்ந்து வரின், அவ்வுகரம் தன்மாத்திரையிற் குறுகும்; அது தன்மாத்திரையில் குறுகுதற்கும் மொழி நிரம்புதற்கும் காரணம்; இவ்வோரெழுத்துத் தொடர் தன்மாத்திரையின் அமையாது பிற எழுத்துகளுள் ஒன்றும் பலவு மேலே தொடரவும் பெறும்.]

(உ-ம்.) நாகு, காசு, காடு, காது, காபு, காறு.................... நெடிற்றொடர்...... (௬.)
எஃகு, கஃசு, கஃடு, இருபஃது, அஃபு, சஃறு......... ஆய்தத்தொடர்...... (௬.)
வரகு, பலாசு, முருடு, எருது, ஞாபு, கயிறு............ உயிர்த்தொடர்...... (௬.)
சுக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று................ வன்றொடர்......... (௬.)
கங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று........... மென்றொடர்........ (௬.)
ஆய்கு, ஆய்சு, ஆய்து, ஆய்பு......................... இடைத்தொடர்..... (௪.)

ஆக, குற்றியல் உகரம் முப்பத்துநான்காகும். முப்பத்தாறு என்பது பொதுப்படக்கூறினர். [சூ. 61 காண்க.]

**95.** SHORTENED ஐ AND

[ஐகார ஔகாரக் குறுக்கங்கள் வரும் ஆறு.]

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும்; ஔவு முதல் அற் றுகும்.
[வி. 15. I.]

[ஐகாரம் தன்னைக் கருதித் தன்பெயர் கூறும் அளவில் குறுகாது; ஒழிந்த மொழிமுதல், இடை, கடை என்னும் மூன்றிடத்து முன்னும் பின்னும் இரு மருங்கும் ஆய எழுத்தின் தொடர்பால் தன்மாத்திரையிற் குறுகும். ஔகார மும் தன்பெயர்கூறும் அளவிற் குறுகாது; ஒழிந்தமொழிமுதற்கண் பின் வரும் எழுத்தின் தொடர்பால் தன்மாத்திரையிற் குறுகும்.]

(உ-ம்.) 1. ஐப்பசி, மைப்புறம். ... ...மொழிமுதலில்.
2. இறைவன், பொறையன். ... மொழியிடையில்.
3. குவளை, திணை. ... ... ...மொழியீற்றில்.

4. மௌவல்

**96.** SHORTENED ம்.

[மகரக்குறுக்கம் வரும் ஆறு.]

கூகூ. ண, ன, முன்னும் வஃகான் மிசையு மக் குறுகும்.
[வி. 15. I.]

[ணகார னகாரங்களின் ஒன்று நின்று தொடர்ந்திட, அதன்முன் வரி னும்; வகாரம் வந்து தொடர்ந்திட, அதன்மேல் நிற்பினும் மகரம் (தன் அரைமாத்திரையிற்) குறுகும்.]

(உ-ம்.) 1. மருளினும் எல்லாம் மருண்ம்.
2. திசைஅறி மீகாமனும் போன்ம். } 120, 341 சூத்திரங்கள் காண்க.
3. தரும் வளவன்.

**97.** SHORTENED ஃ.

[ஆய்தக்குறுக்கம் வரும்ஆறு.]

கூஎ. ல, ள, ஈற் றியைபின் ஆம் ஆய்தம் அஃகும்.
[வி. 15. I.]

[லகார ளகார ஈற்றுப்புணர்ச்சியினால் வரும் "குறில் வழி ல, ள, த்தவ் வணையின் ஆய்தம் ஆகவும் பெறூஉம்," என்ற ஆய்தம் இருமருங்கும் ஆய எழுத்தின் தொடர்பால் தன்அரைமாத்திரையில் குறுகும்.]

(உ-ம்.) கல் + தீது = கஃறீது.
முள் + தீது = முஃடீது.
[228 சூத்திரங்காண்க.].

## § ரு. எழுத்துகளின் உருவம்.

**98.** எ AND ஒ, AS WELL AS MUTE CONSONANTS, SOMETIMES HAVE A DOT.

[புள்ளி வழங்கும் ஆறு.]

கூ அ. தொல்லை வடிவின எல்லா எழுத்தும்; ஆண்
டெய்தும் எகாரம் ஒ காரமெய் புள்ளி.

[எல்லா எழுத்தும் பலவேறுவகைப்பட வளைந்து வழங்கும் பழைய வடிவினை உடையவாம். அவ்வடிவினவாய் வழங்கும் இடத்துத் தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும், ஒகரமும், தனிமெய்களும், இயல்பாய புள்ளியைப் பிற்காலத்தொழித்து வளைந்து, ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்படவழங்கும் வழக்கினை உடைய அன்றித், துணியப்படும் தொல்லைவடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும்.]

(உ-ம்.) எ,ஏ; ஒ,ஓ; கெ,கே; கொ,கோ; க,க்; ங,ங்.

## § சா. எழுத்துகளின் மாத்திரை.

**99.** QUANTITY.

[அந்தந்த எழுத்துகளுக்கு மாத்திரை இவ்வளவென்பது.]

கூகூ. மூன்றுயிர் அளபிரண் டாநெடில்; ஒன்றே
குறிலோ டைஔக் குறுக்கம், ஒற்றள
பளை ஒற் றி,உக் குறுக்கம், ஆய்தம்;
கால் குறள் மஃகான் ஆய்த மாத்திரை. [எழு: மாத்திரை.]

[வி. 16.]

[உயிர்அளபெடைக்கு மாத்திரை மூன்றும்; நெடிலுக்கு மாத்திரை இரண்டாம்; குறிலுக்கும், ஐகாரக்குறுக்கத்திற்கும், ஔகாரக்குறுக்கத்திற்கும், ஒற்றளபெடைக்கும், தனித்தனி மாத்திரை ஒன்றும்; ஒற்றிற்கும், குற்றியல் இகரத்திற்கும், குற்றியல் உகரத்திற்கும், ஆய்தத்திற்கும், தனித்தனி மாத்திரை அரையும்; மகரக்குறுக்கத்திற்கும், ஆய்தக்குறுக்கத்திற்கும், தனித்தனி மாத்திரை காலும்.]

### 100. A MEASURE.

[மேற்சொல்லிய மாத்திரைக்கு அளவு.]

௧௦௦. இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.

[மாந்தருடைய இயல்பாகவே எழும் இமைப்பொழுதும், நொடிப்பொழுதும், ஒருமாத்திரை என்னும் வரையறைப்பொழுதாம்.]

### 101. LETTERS LENGTHENED INDEFINITELY.

[மாத்திரை வரைஅறுத்துச் சொன்ன எழுத்துகளுக்குப் புறனடை.]

௧௦௧. ஆவியும் ஒற்றும் அளபிறந் திசைத்தலும்
மேவும், இசை விளி பண்டமாற் றாதியின்.

[(முதல், சார்பனைத்தும் ஆய) ஆவியும், ஒற்றும், (மேற்கூறிய) அளவிறந்து மிக்கொலித்தலையும் பொருந்தும், இசை விளி பண்டமாற்று முதலியவற்றின்கண்.]

(உ-ம்.) காவல் உழவர் கடுங்களத்துப் போரேறி
நாவலோ ஓஒஒவென் றிசைக்கு நாளோதை—
மாவலவன்
கொல்யானை மேல்இருந்து கூற்றிசைந்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

## § எ. மொழிக்கு முதலாகும் எழுத்துகள்.

### 102. INITIAL LETTERS: GENERAL RULE.

[மொழிக்கு முதலாகநிற்கும் எழுத்தைப்பற்றிய பொதுவிதி.]

௧௦௨. பன்னீர் உயிருங், க, ச, த, ந, ப, ம, வ, ய,
ஞ, ங, சுர், ஐந்துயிர் மெய்யு மொழி முதல்.
[வி. 18. J.]

[பன்னிரண்டு உயிரும், உயிர்ஊர்ந்த இப்பத்துமெய்யும், மொழிக்கு முதல் ஆகும்.]

**103.** WHEN வ் IS INITIAL: SPECIAL RULE.

[மேற்கூறிய பொதுவிதிக்குச் சிறப்புவிதி.]

௧௦௩. உ, ஊ, ஒ, ஓ, அலவொடு வம் முதல்.

[ இந்நான்கும் அல்லாத எட்டுயிரோடும் வகரம் மொழிக்கு முதல் ஆகும். ]

(உ-ம்.) வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேளை, வைக்கோல், வௌவால்.

**104.** WHEN ய் IS INITIAL: SPECIAL RULE.

[இதுவும் அது.]

௧௦௪. அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ, யம் முதல்.

[ இவ்வாறுயிரோடும் யகரம் மொழிக்கு முதல் ஆம். ]

(உ-ம்.) யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம.

**105.** WHEN ஞ் IS INITIAL: SPECIAL RULE.

[இதுவும் அது.]

௧௦௫. அ, ஆ, எ, ஒவ்வோ டாகு ஞம் முதல்.

[ இந்நான்கு உயிரோடும் ஞகரம் மொழிக்கு முதல்ஆம். ]

(உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

**106.** WHEN ங் IS INITIAL: SPECIAL RULE.

[ இதுவும் அது. ]

௧௦௬. சுட்டியா, எகர வினவழி அவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.

[ மூன்றுசுட்டும், யாவினவும் எகரவினவும், ஆய இடைச்சொற்களின் பின் அகரத்தை ஒட்டி ஙவ்வும் மொழிக்கு முதலாம். ]

(உ-ம்.) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம.

## § ௪. மொழிக்கீறாகும் எழுத்துகள்.

**107.** FINAL LETTERS: [24.] GENERAL RULE.

[எழுத்துகள் மொழிக்கு இறும் இலக்கணத்தைப் பற்றிய பொதுவிதி.]

கO௭.        ; ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, மெய்;
சாயும் உகர' நால் ஆறும் ஈறே.

[வி. 18. J.]

[(தனித்தும் ஒற்றோடும் வரும்) ஆவிமுதல்ஆக இங்ஙனம் கூறிய இருபத்துநான்கெழுத்தும் மொழிக்கு ஈறாம்.]

(உ-ம.) 1 ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ  சுட்டும் அ, இ, உ; வினவும் எ; உவம உருபடியாகிய ஒ; விள, பலா, கரி, கடு, சே, தை, கோ, கௌ

2. உரிஞ, மண, பொருந், மரம, பொன, வேய, வோ, வேல், தெவ், வீழ், வாள், அஃகு.

---

**108.** WHEN SHORT LETTERS AND ஔ ARE FINAL: SPECIAL RULE.

[மேறகூறியதிற்குச் சிறப்புவிதி.]

கO௮. குற்றுயிர் அளபின் ஈறாம்; எகர' மெய்
யோ' டே லா' தொ ந் நவ்வோ' டாம்; ஔ
ககர வகரமோ' டாகும் என்ப.

[குற்றுயிர்ஆனது அளபெடையின்கண், வரிவடிவின் அறிகுறியாய்த், தனித்து ஈறாம்; எகரம் மெய்யோடு ஈறாகாது; ஒகரம் நகரம் ஒன்றுடன் ஈறாம்; ஔகாரம் ககரவகரங்கள் இரண்டுடனும் ஈறாம் என்றுசொல்லுவர் புலவர்.]

(உ-ம்.) ஆஅ, ஆேஎ; நொ; கௌ, வௌ.

---

**109.** IN VOWEL CONSONANTS, THE CONSONANT IS FIRST ACCORDING TO THE PRONUNCIATION

[எழுத்தினது முதலும் இறும் ஆம் ஆறு.]

கO௯. நின்ற நெறி யே உயிர் மெய்ம் முதல் ஈறே.

[உயிர்மெய்யினது முதல்யாது, அதன் ஈறுயாது எனின்,—ஒற்றுமுன்னும் உயிர்பின்னுமாய் ஒலித்து நின்றநெறியே, மெய்அதன்முதல்ஆம், உயிர் அதன் ஈறாம்.]

## § ௯. மொழிக்கு இடையாகும் எழுத்துகள்.

**110.** LETTERS COMING TOGETHER IN WORDS. க, ச, த, ப DO NOT COALESCE WITH OTHER CONSONANTS, BUT OCCUR DOUBLED. OF THE OTHER 14, ர, ழ ARE NEVER DOUBLED. THE OTHER CONSONANTS OCCUR DOUBLED AND IN COMBINATION WITH OTHERS. FOR VOWEL-CONSONANTS THERE IS NO RULE.

௧௧௦. க,ச,த,ப, ஒழித்தஈ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ர,ழ,ஒழித் தீரெட்
டாகும்; இவ்விருபான் மயக்கு மொழி இடை
மேவும்; உயிர்மெய் மயக்கள வின்றே.

[வி. 18. J.]

[(மெய்பதினெட்டனுள்) க, ச, த, ப, என்னும் நான்கையும் ஒழித்த பதினான்குமெய்யும், பிறமெய்களோடு கூடுங்கூட்டம் (வேற்றுநிலை) மெய்ம்மயக்கம்ஆம். ரகார ழகாரம் என்னும் இரண்டனையும் ஒழித்து ஒழிந்த பதினாறுமெய்யுந் தம்மோடு கூடுங்கூட்டம் உடனிலை (மெய்ம்மயக்கம்) ஆம். இவ்விரண்டுபகுதிமயக்கமும் மொழிக்கு இடையேவரும். இவ்வாறு மெய்யுடன் மெய்ம்மயங்குதல் அன்றி உயிருடன்மெய்யும், மெய்யுடன்உயிரும் மாறி, உயிருமெய்யுமயங்கும் மயக்கத்திற்கு வரையறை இன்று, வேண்டிய ஆறே மயங்கும்.]

(உ-ம்.) 1. சக்கு, கச்ச, பத்து, செப்பு. [தம்மோடுதாமே மயங்கின.]
2. சேர்தல், வாழ்தல். [தம்மோடு பிறவே மயங்கின.]
3. அங்ஙனம், அங்கு; மஞ்ஞை, மஞ்ச; வட்டம், வட்கல்; வண்ணம், வண்டு; வெநநீர, வேநது; அம்மை, அம்பு; வெய்யர், வெயது; வெல்லம், வெல்க; தெவ்வர், தெவ்யாது; கொள்ளல், கொள்க; கற்றல், கறபு; அன்னை, அனபு. [தம்மோடு தாமும் பிறவும மயங்கின.]

**111.** ங் MAY PRECEDE க், AND வ் MAY PRECEDE ய்.

[வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தைப்பற்றிய சிறப்புவிதி.]

௧௧௧. ஙம்முன் கவ்வாம்; வம்முன் யவ்வே.

[ஙகரம் முன்னர்க் ககரமும்; வகரம் முன்னர் யகரமும் மயங்கும்.]

(உ-ம்.) சங்கன்; தெவ்யாது.

**112.** AFTER ஞ் AND ந் MAY COME ச், த் RESPECTIVELY; AND ய் AFTER BOTH.

[இதுவும் அது.]

கக௨ ஞ, ந, முன் தம் இனம், யகரமோ டாகும்.

மெய் முன்னருந் தமக்கினமாகிய சகர தகரங்களும், யகரமும் மயங்கும்.]

(உ-ம்.) கஞ்சன், உரிஞ்யாது; கந்தன், பொருந்யாது.

**113.** க், ச், ப் MAY COME AFTER ட் AND ற்.

[இதுவும் அது.]

கக௩. ட, ற, முன் க, ச, ப, மெய்யுடன் மயங்கும்.

[இவ்விரண்டு மெய்முன்னருங் க, ச, ப என்னும் மூன்றுமெய்யும் இணங்கி மயங்கும்.]

(உ-ம்.) கட்கம், கட்சி, நுட்பம்; கற்க, கற்சிறார், கற்ப.

**114.** AFTER ண் AND ன் MAY COME ட், ற், க், ச், ஞ், ப், ம், ய் AND வ்.

[இதுவும் அது.]

கக௪. ண, ன, முன் இனங், க, ச, ஞ, ப, ம, ய, வவ்வரும்.

ய்முன்னருந் தமக்கு இனமாகிய ட, றக்களுங், க, ச, ஞ, ப, ம, ய, வ, என்னும் ஏழுமெய்யும் மயங்கும்.]

(உ-ம்.) 1. விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது.

2. புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது.

**115.** AFTER ம் MAY COME ப், ய், வ்.

[இதுவும் அது.]

மம்முன் ப, ய, வ, மயங்கும் என்ப.

[மகரமெய் முன்னர்ப் பகர யகர வகரங்கள் மயங்கும் என்றுசொல்லுவர் புலவர்.]

(உ-ம்.) கலம் பெரிது. கலம் யாது. கலம் வலிது.

**116.** AFTER ய், ர் AND ழ் THE 10 INITIAL CONSONANTS MAY COME. [சூ. 102.]

[இதுவும் அது.]

**கக௬. ய, ர, ழ, முன்னர் மொழிமுதல் மெய் வரும்.**

[இம்மூன்று மெய்முன்னரும் மொழிக்குமுதற்கு விதந்து கொண்ட பத்து மெய்யும் மயங்கும்.]

(உ-ம்.) வேய் / வேர் / வீழ் } கடிது, சிறிது, தீது, பெரிது, நீண்டது, மாண்டது, ஞானறது, யாது, வலிது.

வேய்க்குழல், ஆர்க்கோடு, பாழ்க்கிணறு. [சூ. 224.]

**117.** AFTER ல் AND ள் ARE FOUND க், ச், ப், வ், ய்.

[இதுவும் அது.]

**கக௭. ல, ள, முன் க, ச, ப, வ, ய ஒன் றும்மே.**

[இவ்விரண்டு மெய்முன்னருங் க, ச, ப, வ, ய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும்.

(உ-ம்.) வேல் / வாள் } கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது.

**118.** ALL EXCEPT ர் AND ழ் MAY BE FOUND DOUBLED. [COMP. சூ. 110.]

[உடனிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி.]

**கக௮. ர, ழ அல்லன தம்முன் தாம்உட னிலையும்.**

[ரகார ழகாரம் அல்லன (ஆகிய வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் கூறிய பன்னிரண்டுமெய்யும், உடனிலைக்கே உரிய க, ச, த, ப, நான்கும்,) தம் முன் தாம் உடனின்று மயங்கும்.]

(உ-ம்.) அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டை, அண்ணு, அத்தை, அந்நிலம், அப்பம், அம்மை, அய்யன், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னே.

**119.** WHAT DOUBLE LETTERS MAY FOLLOW ய், ர், ழ்.

[தனிமெய்யுடன் தனிமெய்யாய் மயங்குவன இவை. மொழிக்கு உறுப்பாக மயங்காதன இவை.]

கககூ. ய, ர, ழ ஒற்றின்முன் க, ச, த, ப, ங, ஞ, ந, ம,
ஈரொற் றாம்; ர, ழத் தனிக்குறில் அணையா.

[ய, ர, ழ என்னுமூன்றொற்றும் இவற்றின்முன் மயங்கும் என விதித்த பத்தொற்றுள் இங்ஙனம் கூறிய எட்டொற்றுந் தனிமெய்யும் உயிர் ஊர்ந்த மெய்யுமாய், மயங்குவன அன்றி, ஈரொற்றாயும் மயங்குவனஆம். ரகார ழகார ஒற்றுந் தனிக்குறிலும் மயங்குந் தன்மையஆயினும் மொழிக்குறுப் பாக வருவதும் நிற்பதுமாய் மயங்கா.]

(உ-ம்.) வேய் / வேர் / வீழ் } க்குறை, ச்சிறை, த்தலை, ப்புறம். [க, ச, த, ப ஈர் ஒற்றாய்நின்றன.]

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு. [சூ. 224.]
தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை.
காய்ந்தனம், சேர்ந்தனம், வாழ்ந்தனம். [வி. 79.]
வேய்ம்புரம், ஈர்ம்பணை, பாழ்ம்பதி.
} [ங், ஞ், ந், ம் ஈரொற்றாய் நின்றன.]

---

**120.** ல், ள் WHEN CHANGED IN POETRY INTO ன் AND ண் MAY BE FOLLOWED BY ம்.

[செய்யுளில் இர் ஒற்றாய் நிற்பன இவை.]

கஉ0. ல, ள மெய் திரிந்த ன, ண முன் மகாரம்
நைந்தீர் ஒற்றாம், செய்யுள் உள்ளே.

[லகார ளகார ஒற்றுத் திரிந்த னகார ணகாரங்களின் முன்வரும் மகர ஒற்று, முன்னர்க்கூறிய ஆறே, குறுகி, அவற்றுடன் ஈரொற்றுடனிலை ஆம், செய்யுள் அகத்து.]

(உ-ம்.) திசை யறி மீகானும் போன்ம். [போலும்.]
மயிலியன் மாதர் மருண்ம். [மருளும்.]

[சூ. 96 காண்க.]

**121.** WHEN LETTERS EXPRESS THEIR OWN NAMES THEY ARE NOT BOUND BY THESE RULES.

[மொழியின் முதல் இடை இறு ஆகிய மூன்று நிலைகளுக்கும் ஆவதோர் புறனடை.]

கஉக. தம்பெயர் மொழியில், முதலு' மயக்கமும்,
இம்முறை மாறியும் இயலும் என்ப.

[எழுத்துகள் தம்பெயர்களை மொழிந்து, நிலைமொழி வருமொழி ஆகப் புணர்க்கும் இடத்தெல்லாம் மொழிமுதற்கும் இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவும் ஆகிய எல்லா எழுத்தும் முதல் ஆம்; மயக்கத்திற்கு இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவும் ஆகிய எல்லா எழுத்தும் மயங்கும் என்று சொல்லுவர் புலவர்.]

(உ-ம்.) "அவற்றுள், லளஃகான் முன்னர் யவ்வுந்தோன்றும்,"
[என்றதில், லகரம், மொழிக்கு முதலாகியும், அவற்றுள் என்ற கடன் இறுதியிலே நின்ற ளகர ஒற்றேடு மயங்கியும் நின்றது.]

## § கo. எழுத்துகளின் போலி.

**122.** FINAL ம் SOMETIMES BECOMES ன்.

[மொழியின் கடையில் உண்டாகும் போலி.]

கஉஉ. மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன உளவே.

[வி. 17.]

[பால் பகா அஃறிணைப் பெயர்களினிடத்து இறுதி மகரம் னகரத்தோடு ஒத்து நடப்பன உள ஆம்.]

(உ-ம்.) அகம்—அகன். (இது மொழிஇறுதிப்போலி.)

**123.** அ AND ஐ INTERCHANGED IN THE BEGINNING AND MIDDLE OF WORDS.

[மொழிமுதற் போலியும், மொழி இடைப்போலியும்.]

கஉ௩. அ,ஐ முதல் இடை ஒக்குஞ் ச, ஞ,ய முன்.

[வி. 17.]

[மொழி முதலினும், இடையினும், அகர ஐகாரங்கள் வேற்றுமை ன்றி ஒத்து நடப்பன ஆம், சகர ஞகர யகரங்கட்கு முன்னர் வரும் ஆயின்.]

(உ-ம்.) பசல்... ... ... பைசல். அமச்சு .. ... ... அமைச்சு.
மஞ்சு ... ... ...மைஞ்சு.
மயல்... .. ... மையல். அரயர் ... ... ... அரையர்.
(மொழிமுதற்போலி.) (மொழிஇடைப்போலி)

**124.** ந CHANGED INTO ஞ.

[மொழிஇடைப் போலி.]

கஉச. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும், என்மரும் உளரே.

[வி. 17.]

[(மொழியிடைக்கண்) சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும், யகர ஒற்றின் பின்னும் (இயல்பாய் வரும்) நகரத்தோடு ஞகரம் உறழும், என்றுசொல்லு வாரும் உளர்.]

(உ-ம்.) ஐந்நூறு ... ... ...ஐஞ்ஞூறு.
செய்ந்நின்ற ... ... செய்ஞ்ஞின்ற.

☞ [இப்போலி அருகி வரும்.]

நண்டு-ஞண்டு, நாயிறு-ஞாயிறு, ஆறு-யாறு, என மொழி முதலினும் போலி வரும்.

**125.** அ+இ=ஐ; அ+ய்=ஐ; அ+உ=ஔ; அ+வ்=ஔ.

[எழுத்துப் போலி.]

கஉரு. அம் முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐ, ஒத் திசைக்கும்; அவ்வோ
டுவ் வும், வவ் வும் ஔ ஓர் அன்ன.
[வி. 17.]

[அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் (தம்முள்ஒத்து) எய்தின் ஐ என்னு நெட்டெழுத்தொலிக்கும்; அகரத்தோடு உகரமும் வகரமுந் (தம் முள் ஒத்து ஒருதன்மையஆக எய்தின்) ஔ என்னும் நெட்டெழுத்தொலிக் கும்.]

(உ-ம்.) அஇ = ஐ.

"கய் வேல் களிற்றெடு போக்கி வருபவன
மெய வேல பறியா நகும்." [கை.]

"அவ்விய நெஞ்சத்தான ஆக்கமுஞ் [ஔவியம்.]
செவ்வியான கேடு' நினைக்கப்படும்."

§ கக. எழுத்துகளின் சாரியைகள்.

**126.** THE PARTICLES ASSUMED BY LETTERS IN NAMING THEM.

கஉசு. மெய்கள் அகரமு' நெட்டுயிர் காரமும்,
ஐ, ஔக் கானும், இருமைக் குறில் இவ்
விரண்டொடு கரமும் ஆஞ் சாரியை பெறும் பிற.

[மெய்கள் அகரச்சாரியையும், நெட்டுயிர்கள் காரச்சாரியையும், அவற் றுள் ஐகார ஔகாரங்கள் காரச்சாரியையுடனே கான்சாரியையும், உயிர்க் குறிலும் உயிர்மெய்க்குறிலுங் காரம், கான், என்னும் இவ்விரண்டுடனே கரச்சாரியையும் பெறும்.]

(உ-ம்.) ககரம், ஆகாரம், ஐகான், ஔகான்.
அகாரம், அஃகான, அகரம்.

**127.** LETTERS WHEN TAKEN TOGETHER IN WORDS ARE STILL SUBJECT TO THE ABOVE RULES.

[இந்த இயலுக்குப் புறனடை.]

கஉஎ. மொழி ஆய்த் தொடரினு முன் அனைத் தெழுத்தே.

[இவ்வெழுத்துகள் பதமாயினும், அப்பதந் தம்மோடும் உருபோடும் புணரினும் அவற்றுற்பிறழாது, முன்னர்க்கூறிய அப்பத்திலக்கணத்தையும் உடைய ஆம்.]

எழுத்தியல் முற்றிற்று.

# நன்னூல்.

## I. எழுத்ததிகாரத்தில்

## (II.) பதவியல்.

[புறத்திலக்கணத்தை உணர்த்திய இயல்.]

### [க.] தமிழ் மொழி ஆக்கம்.

### § க. பதம்.

**128.** WORDS.

[எழுத்தினால் பதம் ஆவதும் அதன் வகையும்.]

கஉ௮. எழுத்தே தனித்துந், தொடர்ந்தும் பொருட்டரில்
பதம் ஆம்; அது பகாப் பதம், பகு பதம் என
இருபால் ஆகி, இயலும் என்ப.

[எழுத்துகள் தாமே ஒவ்வொன்று தனித்தும், இரண்டுமுதலாகத் தொடர்ந்தும், பிறபொருளைத் தரும் ஆயின், அது பதம்ஆம்; அப்பதம் பகாப் பதம் எனவும், பகுபதம் எனவும் இரண்டு பகுதியஆகி நடக்கும் என்று சொல்லுவர் புலவர்.]

**129.** WORDS OF ONE LETTER: (42.)

[ஓர் எழுத்தொரு மொழி இந்த நாற்பத்திரண்டும்.]

கஉகூ. உயிர், மவில் ஆறும்; த, ப நவில் ஐந்தும்;
க, வ, ச, வி ன்னாலும்; யவ்வில் ஒன்றும்;
ஆகு நெடி னொ, நு, வாங்குறில் இரண்டோ
டோர் எழுத் தியல் பதம் ஆறேழ் சிறப்பின.

[உயிர்வருக்கத்தும் (6), மவ்வருக்கத்தும் (6), அவ்வாறும்; தவ்வருக்கத்தும் (5), பவ்வருக்கத்தும் (5), நவ்வருக்கத்தும் (5), ஐவ்வைந்தும்; கவ்வருக்கத்தும் (4), வவ்வருக்கத்தும் (4), சவ்வருக்கத்தும் (4), நந்நான்கும்; யவ்வருக்கத்தொன்றும் (1); ஆகும் நெட்டெழுத்தான் ஆகியமொழி நாற்பதும், நொவ்வும், துவ்வும் (2), ஆகுங் குற்றெழுத்தான் ஆகிய மொழி இரண்டுடனே ஓரெழுத்தான் ஆகிய மொழி இந்நாற்பத்திரண்டும் சிறப்பினவாம்.]

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (உ-ம்.) | (1.) | ஆ. | ஈ. | ஊ. | ஏ. | ஐ. | ஓ. | =6 |
| | (2.) | மா. | மீ. | மூ. | மே. | மை. | மோ. | =6 |
| | (3.) | தா. | தீ. | தூ. | தே. | தை........ | | =5 |
| | (4.) | பா. | பூ. | பே. | பை. | போ....... | | =5 |
| | (5.) | நா. | நீ. | நே. | நை. | நோ ...... | | =5 |
| | (6.) | கா. | கூ. | கை. | கோ............. | | | =4 |
| | (7.) | வா. | வீ. | வே. | வை............ | | | =4 |
| | (8.) | சா. | சீ. | சே. | சோ............. | | | =4 |
| | (9.) | யா.. ......................... | | | | | | =1 |
| | (10.) | நொ. து......................... | | | | | | =2 |
| | | | | | | | | 42 |

## 130. UNCOMPOUNDED WORDS, FROM 2 TO 7 LETTERS; COMPOUNDED WORDS, FROM 2 TO 9 LETTERS.

[தொடர் எழுத்தொரு மொழி.]

கஙo. பகாப்பதம் ஏழும், பகுபதம் ஒன்பதும்,
எழுத்தீ றாகத் தொடரும் என்ப.

[வி. 122.]

[பகாப்பதம் இரண்டெழுத்துமுதல் ஏழெழுத்தீறாகவும்; பகுபதம் இரண்டெழுத்துமுதல் ஒன்பதெழுத்தீறாகவுந், தொடரும் என்று சொல்லுவர் புலவர்.]

(உ-ம்.) அணி (2), அறம் (3), அகலம் (4), அருப்பம் (5), தருப்பணம் (6), உத்திரட்டாதி (7). [பகாப்பதம்.]

கூனி (2), கூனன் (3), குழையன் (4), பொருப்பன் (5), அம்பலவன் (6), அரங்கத்தான் (7), உத்திராடத்தான் (8), உத்திரட்டாதியான் (9)......... [பகுபதம்.]

## § உ. பகாப்பதம்.

### 131. UNCOMPOUNDED WORDS.

[பகாப்பதம் இன்ன என்பதும், இவ்வளவின என்பதும்.]

க௱க. பகுப்பால் பயன்அற் றிடுகுறி ஆகி,
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர், வினை, இடை, உரி, நான்கும் பகாப்பதம்.

[பகுபதம் போல் இதனைப் பகுத்துப்பார்க்கின், அப்பகுப்பால் பகுதி விகுதி முதலிய உறுப்பின் பயன் விளைவதின்றிக், காரணத்தால் வரும் அப்பதம்போலாது, இடுகுறியாய்ப், பகுதிவிகுதிமுதலிய ஆறுறுப்பானும் பின்பு முடிக்கப்படும் அப்பதம் போலாது; படைப்புக்காலந் தொட்டு ஒன்றாய் முடிந்து நடக்கின்ற பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், என்னும் நான்கும் பகாப்பதம் ஆம்.]

(உ-ம்.) பனை, நீர்.................................. பெயர்ப்பகாப்பதம்.
நட, வா.................................. வினைப்பகாப்பதம்.
மன், மற்று.................................. இடைப்பகாப்பதம்.
உறு, கழி,நனி.................................. உரிப்பகாப்பதம்.

## § ௩. பகுபதம்.

### 132. COMPOUNDED WORDS.

[பகுபதம் இன்ன என்பதும், இவ்வளவின என்பதும்.]

க௱௨. பொருள், இடங், காலஞ், சினை, குணந், தொழிலின்,
வருபெயர், பொழுதுகொள் வினைபகு பதமே.

[இங்ஙனங் கூறிய பொருள் ஆதி ஆறுங் காரணம் ஆக வரும் பெயர்ச்சொற்களுந், தெரிநிலையாயுங் குறிப்பாயுங் காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களும் ஆகிய இரண்டும் பகுபதம் ஆம்.]

(உ-ம்.) (1.) பெயர்ப்பகுபதம்:

| | | | | |
|---|---|---|---|---|
| பொன்னன....... | (பொன் | + அன்) | ... பொருள். | பெயர்ப்பகுபதம். |
| அகத்தன்.......... | (அகம் | + அன்) | இடம். | |
| ஆதிரையான...... | (ஆதிரை | + ஆன) | காலம். | |
| கண்ணன்.......... | (கண் | + அன்) | சினை. | |
| கரியன்............. | (கரு | + அன) | குணம். | |
| ஊணன்.......... | (ஊண் | + அன்) | தொழில். | |

(2.) நடந்தான்.
நடக்கின்றான்.
நடப்பான்.
} இவை முக்கால வினைமுற்றுப்பகுபதம்.

[முதலியவும் அன்ன.]

**133.** THE ELEMENTS OF COMPOUNDED WORDS.

[பகுபத உறுப்புகள் இவ்வளவின என்பது.]

௧௩௩. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை,
சந்தி, 'விகாரம், ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப். பதங்களும்.

மாட்டெறிந்தொழுகல் எனும் உத்தி. சூ. 14.]

[வி. 123.]

[இங்ஙனங் கூறிய "பகுதி" முதலிய ஆறு உறுப்பினுள்ளும், இப்பதப் பொருள் அமைதிக் கேற்பனவற்றைக் கருதி, அறிவுடையோராற் கூட்டி முடிப்ப, எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடியும்.]

## § ௪. பகுதி.

**134.** THE ROOT: GENERAL RULE.

[பகுதிகள் இவை.]

௧௩௪. தத்தம் பகாப்பதங் களே பகுதி ஆகும்.

[வி. 76.]

[பெயர்ப்பகுபதங்களுள்ளும், வினைப்பகுபதங்களுள்ளுந், தத்தம் முதனிலை ஆய பகாப்பதங்களே அவற்றின் பகுதி ஆம்.]

**135.** ABSTRACT NOUNS (USED AS ROOTS) DENOTING QUALITY: SPECIAL RULE.

[பண்புப்பகுதிகளுக்குச் சிறப்புவிதி.]

௧௩௫. செம்மை, சிறுமை, சேய்மை, தீமை,
வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை,
திண்மை, உண்மை, நுண்மை, இவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகா நிலைப் பதமே.

[வி. 94.]

[இங்ஙனங் கூறிய பதினொன்றும்; இவற்றிற்கெதிரான வெண்மை, கருமை, பொன்மை, பசுமைகளும்; (பெருமை, அணிமை, நன்மை, தண்மை, பழமை, வன்மை, கீழ்மை, நொய்மை, இன்மை, பருமையும்,)

இவை போல்வன பிறவுஞ்; (சொல் நிலையால் பகுபதங்கள் ஆயினும், பகுதிஆய) பண்புப் பொருளினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலைப்பதம் ஆம்.]

**136.** VARIOUS CHANGES OF THESE WORDS WHEN USED AS ADJECTIVES.
[இப்பண்புப் பகுதிகளுக்கு உண்டாகும் விகாரங்கள்.]

கங௬. ஈறுபோ தல் இடை உகரம் இய் யாதல்,
ஆதிநீ டல், அடி அகரம் ஐ ஆதல்,
தன் ஒற் றிரட்டல், முன் நின்ற மெய் திரிதல்,
இன மிகல், இனையவும், பண்பிற் கியல்பே.
[வி. 121.]

[மேற்செம்மை, சிறுமை, முதலாகத் தெரித்த வாய்பாடுகளின் இறுதி விகுதி போதலும்; இடையில் நின்ற உகரம் இகரம் ஆதலும்; முதல் நின்ற குறில் நெடில் ஆதலும்; முதல் நின்ற அகரம் ஐகாரம் ஆதலும்; இடையே தன் ஒற்று மிகுதலும்; முன்பு நின்ற மெய்திரிதலும்; வரும் எழுத்திற்கு இன எழுத்து மிகுதலும்; இவைபோல்வன பிறவும்; அப்பண்பினுக்கு இயல்பாம்.]

(உ-ம்.) (1.) நன்மை நல்லன். [ஈறு கெட்டது.]
(2.) சிறுமை சிறியன். [ஈறுகெட்டு, உகரம் இகரமாகத் திரிந்தது.]
(3.) பசுமை பாசி. [ஈறுகெட்டு, ஆதி நீண்டது.]
(4.) பசுமை பைங்கண். [இடைநின்ற உயிர்மெய்யும் மைவிகுதியுங் கெட்டு, அகரம் ஐகாரமாகி, வரும் எழுத்திற்கு இனம் மிகுந்தது.]
(5.) வெறுமை ... வெற்றிலை. [மைவிகுதிபோய், இடையிலே ஒற்று இரட்டித்தது.]
(6.) செம்மை ... சேதாம்பல். [ஈறுகெட்டு, முதல் நீண்டு, மகர ஒற்று தகரமாய்த் திரிந்தது.]
(7.) நெடுமை ... நெடுங்காலம். [மைகெட்டு இனம் மிகுந்தது.]

**137.** SIMPLE ROOTS AND IMPERATIVES. SPECIAL RULE.
[தெரிநிலைவினைப்பகுதிகள் சிறப்புவிதி.]

கங௭. நட, வா மடி, சீ, விடு, கூ, வே, வை,
நொப், போ, வெள, உரிஞ், உண், பொருந் திரும், தின்,
தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகென்
றெய்திய இருபான் மூன்றும் ஈற்றவும்,
செய் என் ஏவல் வினைப்பகாப் பதமே.

[நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று

முதனிலையாய் எய்திக் கிடந்த இவ்விருபத்து மூன்றுகும் உயிரும் ஒற்றுங் குற்றுகரமும் ஆகிய ஈற்றினை உடைய இத்தொடக்கத்து வாய்பாடுகள் எல்லாஞ், செய் என்னும் ஏவலினது பகாப்பதம் ஆகிய பகுதியும், ஏனை வினையினது பகாப்பதம் ஆகிய பகுதியும் ஆம்.]

**138.** CAUSAL IMPERATIVES: SPECIAL RULE.

[ஏவல்வினை, பிறவினை, சிறப்புவிதி.]

கஙஅ. செய் என் வினை வழி விப், பி, தனி வரில்

செய்வி என் ஏவல் இணையின் ஈர் ஏவல்.

[வி. 103.]

[மேற்கூறிய செய் என்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின் பின் வி, பி என்னும் இவ்விரண்டு விகுதியினுள் ஒன்று வரும் ஆயின் செய் என்னும் ஏவல்மேல் ஓர் ஏவலாய்ச், செய்வி என்னும் வாய்பாட்டு ஏவற் பகுதி ஆம்; அவற்றின் பின் இவ்விகுதிகள் தன்னோடும் பிறிதோடும் இணைந்து வருமாயிற் செய்விப்பி என்னும் வாய்பாட்டேவற் பகுதி ஆம்.]

(உ-ம்.) நடப்பி, வருவி.
நடப்பிப்பி, வருவிப்பி.

போக்கு, பாய்ச்சு, ஊட்டு, நடத்து, எழுப்பு, பயிற்று. } பிறவிகுதிகளும் வந்தன.

**139.** ROOTS MAY UNDERGO ALTERATIONS: SPECIAL RULE.

[வினைப்பகுதிக்கு ஆவதோர் புறனடை.]

கஙகூ. விளம்பிய பகுதிவே றுதலும் விதியே.

[ஏவற்பகுதி வேறுதல் போல, அதன் பின்னே விளம்பிய வினைப் பகுதி வேறுதலும் விதி ஆம், விலக்கு அன்று.]

(உ-ம்.) நடந்தினன், நடப்பித்தான், நடப்பிப்பித்தான், நடத்துவிப்பித்தான்.

## § ரு. விகுதி.

**140.** THE PERSONAL TERMINATIONS OF VERBS, AND OF A FEW VERBAL DERIVATIVES.

[விகுதிகள் இனைய என்பது.]

கசo. அன்,ஆன்; அள்,ஆள்; அர்,ஆர், பம்,மார்;
அ,ஆ; கு,டு,து,று, என்,ஏன், அல்,அன்;
அம்,ஆம்; எம்,ஏம், ஓமொ டும்மூர்
க,ட,த,ற; ஐ,ஆய், இ;மின், இர்,ஈர்;
ஈயர், க,ய;உம்; என்பவும், பிறவும்,
வினையின் விகுதி; பெயரினுஞ் சிலவே.
[வி. 77.]

[இங்ஙனம் அன், ஆன், முதல் முப்பத்தேழாகச் சொல்லப்படுவனவும், இவைபோல்வன பிறவுந், தெரிநிலை வினையின் விகுதிகள் ஆம்; பெயர் இடத்தும் இவற்றுள் சில விகுதி ஆம்.]

## § சா. இடைநிலை.

**141.** THE MEDIAL FORMATIVE PARTICLES OF NOUNS NOT PARTICIPIAL.

[பெயர்க்கு இடைநிலை.]

கசக. இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலில்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க் கிடைநிலை எனலே.
[வி. 95.]

[(அறிவுடையோரான் நியமிக்கப்படும்) இலக்கியங் கண்டு, அதனுக்கு (அவ்விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாகக் கூறலின், மேற்கூறிய பகுதியையும் விகுதியையும் பகுத்து, இடையே நின்றது யாது, அதனை, வினையால் அணையும் பெயர் அல்லாத பெயர்கட்கு, இடைநிலை என்று சொல்லுக.]

(உ-ம்.) அறிஞன்.................................. ஞ் இடைநிலை.
புலைச்சி.................................. ச இடைநிலை.
பாடுவான்.................................. வ் இடைநிலை.

**142.** THE MEDIAL PARTICLES OR SIGNS OF THE PAST TENSE.

[இறந்தகால வினைக்கு இடைநிலைகள்.]

கசஉ. த, ட, ற, ஒற் றின்னே ஐம்பால் மூவிடத்
திறந்த காலந், தருந் தொழில் இடைநிலை.

[வி. 79.]

[தகர டகர றகர மெய்களும், இன், என்னுங் குற்றொற்றும், ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகள் ஆம்.]

(உ-ம்.) நடந்தான், கண்டான, சென்றான், அனுப்பினை.

**143.** THE MEDIAL PARTICLES OR SIGNS OF THE PRESENT TENSE.

[நிகழ்கால வினைக்கு இடைநிலைகள்.]

கசஙு. ஆநின்று, கின்று, கிறு, மூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை இடைநிலை

[வி. 80.]

[ஆநின்று என்பதூஉங், கின்று என்பதூஉங், கிறு என்பதூஉம், ஐம்பால் மூவிடத்தினும் நிகழ்காலத்தைத்தரும் வினைப்பகுபத இடைநிலைகள் ஆம்.]

(உ-ம்.) நடவாநின்றான், நடக்கின்றான, நடக்கிறான.

**144.** MIDDLE PARTICLES OR SIGNS OF THE FUTURE TENSE

[வருங்கால வினைக்கு உரிய இடைநிலைகள்.]

கசச. பவ்வ மூவிடத் தைம்பால் எதிர்பொழு
திசை வினை இடைநிலை ஆம், இவை சில இல.

[வி. 81.]

[பகர ஒற்றும், வகர ஒற்றும், ஐம்பால் மூவிடத்தும் எதிர்காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகள் ஆம்; (இம்முக்காலமும் முறையே காட்டுந் தகர ஒற்றுமுதல் வகர ஒற்றீறாய இடைநிலைகள்) சில முற்றுவினை எச்ச வினைகட்கு இல ஆம்.]

(உ-ம்.) நடப்பான், வருவான்.

**145.** DIFFERENT VERBAL FORMS IN WHICH TIME IS INDICATED WITHOUT THE ABOVE MIDDLE PARTICLES.

[மேலே "சில, இல" என்றவை இவை என்பது.]

௧௪௫. றவ்வோ டுகர உம்மை நிகழ் பல்லவும்,
தவ்வோ டிறப்பும், எதிர்வும், டவ்வொடு
கழிவுங், கவ்வோ டெதிர்வும்; மின் ஏவல்,
வியங்கோள், இம், மார், எதிர்வும்; பாந்தஞ்
செலவொடு, வரவும்; செய்யு நிகழ் பெதிர்வும்;
எதிர்மறை மும்மையும்; ஏற்கும் ஈங்கே.

[வி. 83.]

[றகரத்தோடு கூடிய உகர ஈறும், உம்ஈறும், இறந்தகாலமும், எதிர்காலமும்; தகரத்தோடு கூடிய அவ்விரண்டீறும் அவ்விருகாலமும்; டகரத்தோடு கூடிய அவ்விரண்டீறும் இறந்தகாலமும்; ககரத்தோடு கூடிய அவ்விரண்டீறும் எதிர்காலமும்; மின்ஈறும், ஏனை ஏவலின்வரும் அனைத்தீறும், வியங்கோள் ஈறும், இகரஈறும், மார்ஈறும், எதிர்காலமும்; பகரஈறு இறந்தகாலமும், எதிர்காலமும்; செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றீறு நிகழ்காலமும், எதிர்காலமும்; முற்றுவிகுதி எச்சவிகுதிகளோடு புணர்தற்குரிய எதிர்மறை ஆகாரஈறு மூன்றுகாலமும்; ஏற்கும் மேலைச்சூத்திரத்து "இவை சிலஇல" என்றவற்றுள்.]

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | சென்று, சென்றும்............ | போனகாலம். | சேறு, சேறும்.................. | எதிர்காலம். |
| | வந்து, வந்தும். .............. | போனகாலம். | வருது, வருதும்.................. | எதிர்காலம். |
| | உண்டு, உண்டும்............ | போனகாலம். | உண்கு, உண்கும்............... | எதிர்காலம். |
| | உண்மின், உண், உண்ணாய்... | எதிர்காலம். | உண்க, வாழிய, வாழியர்......... | எதிர்காலம். |
| | சேறி, உண்மார்...... ........ | எதிர்காலம. | உண்ணும்................. ... | நிகழ்காலமும் எதிர்காலமும். |
| | உண்ப .......................... | எதிர்காலமும் இறநதகாலமும். | | |
| | உண்ணான்.................. | முக்காலம். | | |

கவனிப்பு:—வருதி, பெயர்தி. [நிகழ்காலம்]; வருகிற [நிகழ்]; வந்த [போன]; வரும் [எதிர்]. இவை போல்வன வருவனவாம.

## [௨.] வடமொழி ஆக்கம்.

**146.** LETTERS COMMON TO TAMIL AND SANSCRIT, AND THOSE PECULIAR TO THE LATTER.

[ஆரிய மொழி திரிந்து, தமிழ்மொழியாந்தன்மை. பொதுவிதி.]

௧௪௬. இடையி னான்கும், ஈற்றில் இரண்டும்,
அல்லா அச்சை வருக்க முதலீ

றியவ்வாதி நான்மை, ளவ்வாகும், ஐயைம்
பொது எழுத் தொழிந்த நால் ஏழுந் திரியும்.
[வி. 18.]

[வடமொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும், இடையில் நின்ற ஏழாம் உயிர்முதல் நான்கும், ஈற்றில் நின்ற இரண்டும், ஆன ஆறும் ஒழிந்துநின்ற அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஔ, என்னும் பத்தும், அல் என வழங்கு முப்பத்தேழு மெய்யுள்ளும், க, ச, ட, த, ப என்னும் ஐந்து வருக்கத்தின் இடையில் உரப்பியும், எடுத்தும், கனைத்தும், சொல்லப்பட்டு நிற்கு மூன்றும் ஒழிந்த க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம என்னும் பத்தும், ய, ர, ல, வ என்னும் நான்கும், ள வ்வும், ஆகும் இருபத்தைந்தும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது எழுத்தாம். இவை அன்றி மேல் உயிருள் ஒழிந்த ஆறும், ஐந்து வருக்கங்களினும் இடைக ளின் ஒழிந்த பதினைந்தும், முப்பதாம் மெய் முதலான எட்டனுள் ளகரம் ஒழிந்த ஏழும் ஆன இருபத்தெட்டும், ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாய்த் தமக்கேற்ற பொது எழுத்தாகத்திரிந்து வடமொழி ஆம்.]

**147.** LETTERS PECULIAR TO SANSCRIT HOW EXPRESSED IN TAMIL.
[மேற்கூறியதற்குச் சிறப்புவிதி.]

கசஎ. அவற்றுள்,
ஏழாம் உயிர் இய்யும், இருவும்; ஐவருக்கத்
திடையில் மூன்றும் அவ்வம் முதலும்;
எட்டே யவ்வு முப்பது சயவும்;
மேல் ஒன்று சடவும்; இரண்டு சதவும்;
மூன்றே அகவும்; ஐந்திரு கவ்வும்,
ஆவீ றையும்; ஈயீ றிகரமும்.
[வி. 18.]

[மேல் "திரியும்" என்றவற்றுள், சிறப்பெழுத்தாகிய ஏழாம் உயிர் இக ரமும், இருவும் ஆம்; ஐந்து வருக்கங்களினும் இடையினின்ற மூன்றும் அவ்வவ்வருக்கங்களின் முதல் எழுத்தாம்; எட்டாமெய் ஆன சவ்வருக் கத்துள் எடுத்துச் சொல்லுமெய் ஒரோஇடத்து யகரமும் ஆம்; முப்பத் தொன்றுமெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண்டகரமும் ஆம்;

முப்பத்திரண்டாமெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண் தகரமும் ஆம்; முப்பத்துமூன்றாமெய் மொழிமுதற்கண் அகரமும், இடைக்கண் ககரமும் ஆம்; முப்பத்தைந்தாமெய் இரண்டு ககரம் ஆம்; பொது எழுத்துள் மொழிஇறுதி ஆகாரம் ஐகாரம் ஆம்; மொழிஇறுதி ஈகாரம் இகரம் ஆம்.]

(உ-ம்.) (1) இடபம், மிருகம்;
(2) நகம், நாகம், மேகம்;
(3) சலவாதி, விசயம், சர்ச்சரை;
(4) பீடம், பீடை, திடம்;
(5) தலம், தினம், தரை;
(6) பலம், பந்தம், பாரம்;
(7) பங்கயம்;
(8) சாலை, சூலை, மயானம்;
(9) சட்டி, இடபம்;
(10) சித்தி, சுத்திரம், சேனை; ஆதனம், வாதனை;
(11) அரன், அரி, சிங்கம், மோகம்;
(12) பக்கம், தக்கணம்;
(13) மாலை = மாலா.
புரி = புரீ.
சபை = சபா.
சுயம்பு = சுயம்பூ.

**148.** WORDS WHICH IN SANSCRIT BEGIN WITH ர், ல் OR ய் TAKE அ, இ, உ.

[இதுவும் அது.]

கசஅ. ரவ்விற் கம்முதல் ஆமுக் குறிலும்,
லவ்விற் கிம்முதல் இரண்டும், யவ்விற்
கிய்யு மொழிமுதல் ஆகிமுன் வருமே.

[ரகர லகர யகரங்களை முதல் ஆக உடைய ஆரிய மொழிகள் வடமொழி ஆங்கால் அகர இகர உகரம் என்னும் இம்மூன்று குற்றுயிரும் இங்ஙனஞ் சொன்ன ஆறே அவ்வடமொழிகட்கு முதலாய் அம்மூன்றெழுத்திற்கு முன்னர் வரும்.]

(உ-ம்.) அரங்கம், [*Ranga.*] இராமன், [*Râma.*] உரோமம், [*Rôma.*]
இலாபம், [*Lâb'ha.*] உலோபம், [*Lôb'ha.*]
இயக்கன், [*Yaksha.*] இலங்கை, [*Lankâ.*]

**149.** SANSCRIT WORDS IN WHICH ய், ர், ல், ம், வ், ந் FOLLOW A MUTE CONSONANT.

[இதுவும் அது.]

கசரு. இணைந்தியல் காலை ய, ர, லக் கிகரமும்;
மவ்வக் குகரமு நகரக் ககரமும்,
மிசை வரும்; ரவ்வழி உவ்வும் ஆம்பிற.

[ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஓரெழுத்து நீர்மையாய் நடக்குங்கால், பின்னிற்கும் ய, ர, ல க்கள்மீதே இகரமும்; மகர வகரங்

கள் மீதே உகரமும்; நகரமீதே அகரமும் வந்து வடமொழி ஆம். இணைந் துமுன்னிற்கும் ரகரத்திற்குப் பின்னர் உகரமும் வரும்.]

(உ-ம்.) வாக்கியம், [*Vâkya.*] வக்கிரம், [*Vakra.*] சுக்கிலம், [*Sukla.*]
பதுமம், [*Padma.*] பக்குவம், [*Pakva.*]
அரதனம், [*Ratna.*]

**150.** LETTERS PECULIAR TO TAMIL, AND THOSE COMMON TO SANSCRIT AND TAMIL.

[தமிழிற்குச் சிறப்பெழுத்துகள் இவை என்றும், தமிழிற்கும், ஆரியத்திற்கும் பொது எழுத்துகள் இவை என்றும்.]

கரு௦. ற, ன, ழ, எ ஒவ்வும், உயிர்மெய்யும் உயிர்அள
பல்லாச் சார்புந் தமிழ்; பிற பொதுவே.

ந் சார்பும் ஆன நாற்பதெழுத்துள்ளும் றகர, னகர, ழகர, எகர, ஒகரம் ஆனமுதல் எழுத்தைந்தும், உயிர்மெய்யும் உயிர் அளபெடையும் அல்லாத சார்பெழுத்தெட்டும், தமிழிற்கே சிறப்பெழுத்தாம்; ஒழிந்த இரு பத்தேழும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுஎழுத்தாம்.]

பதவியல் முற்றிற்று.

# நன்னூல்.

## I. எழுத்ததிகாரத்தில்

### (III.) உயிரீற்றுப்புணரியல்.

[உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப்புணர்ச்சியின் ஆறு உணர்த்துவது.]

### § க. புணர்ப்பு.

**151.** COMBINATION OF LETTERS.

[புணர்ச்சி இன்னது என்பது.]

கருக. மெய்உயிர் முதலீ றாம்இரு பதங்களுந்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

[வி. 19—40.]

[மெய்யையும் உயிரையும், முதலும் ஈறுமாக உடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களுந், தன்னொடுதானும், பிறிதொடு பிறிதுமாய், அல்வழிப்பொருளினான் ஆதல், வேற்றுமைப் பொருளினான் ஆதல், பொருந்தும் இடத்து, நிலைமொழியும் வருமொழியும் இயல்போடும், விகாரத்தோடும், பொருந்துவது மேற்கூறிய புணர்ச்சி ஆம்.]

(உ-ம்.) (1.) மொழிக் காரணம். ... ... வேற்றுமைப்பொருளில் விகாரம். [சூ. 165]
(2.) பாலொடு தேன். ... ... ... வேற்றுமைப்பொருளில் இயல்பு. [சூ. 179.]
(3.) அறுந்துபோயிற்று. ... ... அல்வழிபபொருளில் இயல்பு. [சூ. 184.]
(4.) கட்டிக்கொண்டான். ... ... அல்வழிப்பொருளில் விகாரம். [சூ. 165.]

**152.** INFLECTED AND UNINFLECTED COMBINATIONS OF WORDS

[அல்வழி வேற்றுமை என்பன இவை என்பது.]

௧௫௨. வேற்றுமை ஐமுதல் ஆறாம்; அல்வழி
தொழில், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி
எழுவாய், விளி, ஈரெச்சம், முற்று, இடை, உரி,
தழுவு தொடர் அடுக்கென ஈரேழே.

[வி. 21, 22.]

[வேற்றுமைப் புணர்ச்சி: பெயரே, ஐ, ஆல், என்னுஞ் சூத்திரத்து (சூ. 292.) ஐமுதலிய ஆறு உருபுந் தொக்கும், விரிந்தும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி ஆம். அல்வழிப் புணர்ச்சி: வினைத்தொகை முதலிய ஐந்துதொகை நிலையும் (சூ. 402.), எழுவாய்முதல் ஒன்பது தொகா நிலையும் (சூ. 415), எனப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்காம்.]

[I. வேற்றுமை.]

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) (1) பொன்னுடையான் [இரண்டாம்.] | வேற்றுமைத் தொகை நிலை | (2) பொன்னையுடையான். | வேற்றுமைத் தொகா நிலை. [வி. 152.] |
| கல்லெறிந்தான் [மூன்றாம்] | | கல்லால் எறிந்தான் | |
| சாத்தன் மகன் [நாலாம்] | | சாத்தனுக்கு மகன். | |
| மலைவீழ் அருவி [ஐந்தாம்] | | மலையினின்று வீழ் அருவி | |
| மலையுச்சி [ஆறாம்] | | மலையினது உச்சி. | |
| மலைமுழை [ஏழாம்.] | | மலையின்கண்முழை | |

[II. அல்வழி.]

தொகைநிலை.

(3) கொல்யானை. [வினைத்தொகை] — கொன்ற யானை / கொல்கின்ற யானை / கொல்லும் யானை. [வி 153.]
(4.) கருங் குவளை. ...................... கருமையாகிய குவளை. [பண்புத்தொகை. வி 154]
ஆயன் சாத்தன் ...................... ஆயனாகிய சாத்தன். [இருபெயரொட்டுப் பண்புத்தொகை]
(5.) மதிமுகம். ...................... மதியைப்போன்றமுகம் [உவமைத்தொகை. வி 155.]
(6.) இராப்பகல். ...................... இராவும் பகலும் [உம்மைத்தொகை. வி. 156]
(7.) பொற்றொடி. ...................... பொற்றொடியை அணிந்தவள். [அன்மொழித்தொகை வி. 157]

தொகாநிலை. வி. 126. 151.

(8.) கொற்றன் வந்தான. ...................... எழுவாய்த்தொடர்.
(9.) கொற்றா கொள். ...................... விளித்தொடர்.
(10.) உண்டசாத்தன். ...................... தெரிநிலைப்பெயர் எச்சத்தொடர்.
பெரியசாத்தன். ...................... குறிப்புப்பெயர் எச்சத்தொடர்.
(11.) உண்டுவந்தான். ...................... தெரிநிலைவினை எச்சத்தொடர்.
விருந்தின்றி உண்ணான் ......... குறிப்புவினை எச்சத்தொடர்.
(12.) உண்டான் சாத்தன் ...................... தெரிநிலை முற்றுத்தொடர்
குழையன் கொற்றன். ............. குறிப்புமுற்றுத்தொடர்.
(13.) அணங்குகொல் ...................... இடைத்தொடர்.
(14.) தனிபேதை ...................... உரித்தொடர்.
(15.) பாம்பு பாம்பு. ...................... அடுக்குத்தொடர்.

**153.** NATURAL COMBINATION OF WORDS WITHOUT EUPHONIC CHANGES.

[இயல்புப்புணர்ச்சி.]

௧௫௩. விகாரம் அனைத்து மேவல தியல்பே.

[வி. 19.]

[மேல்வரும் விகாரவகை அனைத்தும் மேவாதது இயல்புப் புணர்ச்சி ஆம்.]

(உ-ம) பொன் + மலை = பொன்மலை.

## § ௨. விகாரம்.

**154.** THE THREE KINDS OF EUPHONIC CHANGES.

[விகாரப்புணர்ச்சி.]

௧௫௪. தோன்றல், திரிதல், கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்தும் ஆகும்.

[வி. 20.]

[மெய் எனும், உயிர் எனும், உயிர்மெய் எனுஞ், சாரியை எனும், ஒன்றும் பலவுந் தோன்றுதலுந், திரிதலுங், கெடுதலும், மேற்சொன்ன விகாரம் ஆகும். இம்மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளின் முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் ஏற்றபெற்றி வரும்.]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ-ம்) பூ | + | கொடி | = | பூக்கொடி. / பூங்கொடி | [தோன்றல்.] |
| பல | + | தலை | = | பஃறலை | [திரிதல்] |
| நிலம் | + | வலயம் | = | நிலவலயம். | [கெடுதல்.] |

**155.** POETICAL AND ANOMALOUS CHANGES.

[செய்யுள் விகாரம்.]

௧௫௫. வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல்,
விரித்தல், தொகுத்தலும், வருஞ் செய்யுள் வேண்

[வி. 42.]

[அல்வழி வேற்றுமையான் வரும் மேற்கூறிய மூன்று விகாரமுமே அன்றி, ஆறுக இங்ஙனங் கூறிய விகாரங்களும் வருவனவாஞ் செய்யுளகத்து, அடி தொடை (வி. 180. 181.) முதலிய நோக்கி அமைக்க வேண்டும் இடத்து.]

**156.** BY POETICAL LICENSE WORDS MAY SUFFER THE LOSS OF THEIR INITIAL, MEDIAL OR FINAL LETTERS.

[செய்யுள் விகாரம்.]

கருசு. ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.

[வி. 42.]

[அடி, தொடை, முதலிய நோக்கித் தொகுக்கும் வழித்தொகுத்தல் அன்றி, வழக்கின்கண் மரூஉப்போலச் செய்யுட்கண் மரூஉவாய் அடிப்பாடாக ஒருமொழி முதல், இடை, கடை, என்னும் மூன்றிடத்துங் குறைந்து வருதலுஞ் செய்யுள் விகாரம் ஆம்.]

(உ-ம்) மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி ..... தாமரை இதழ் [முதற்குறை.]
வேதின வெரிநின் ஓதிமுதுபோத்து ........... ஓந்தி. [இடைக்குறை]
நீலுண்டுகிலிகை கடுப்ப.... . ........ .. நீலம். [கடைக்குறை.]

---

**157.** IN THE SAME COMBINATION THERE MAY BE MORE THAN ONE KIND OF CHANGE

[ஓர் சந்தேகம் அகற்றுகின்றது.]

கருஎ. ஒருபுணர்க் கிரண்டு மூன்றும் உறப்பெறும்.

[ஒரு புணர்ச்சிக்கண் தோன்றல், திரிதல், கெடுதல், என்ற விகாரம் எத்துணை வரும் என்று ஐயுறற்க, ஒன்றே அன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும்.]

(உ-ம்) நிலம் + பனை = நிலப்பனை [கெடுதலும் தோன்றலும்]
பனை + காய் = பனங்காய். [மூன்று விகாரங்களும்.]

## § ரு. பொதுப்புணர்ச்சி.

**158.** ஞ், ந, ம், ய், வ் AFTER OTHER LETTERS.

கருஅ. எண்மூ வெழுத்திற் றெவ்வகை மொழிக்கு
முன்வரு ஞ,ந,ம,ய வக்கள் இயல்பும்;
குறில்வழி யத்தனி ஐ,நொ,து முன்மெலி
மிகலும் ஆம்; ண,ள,ன,ல வழி நத் திரியும்.

[வி. 31. 39. 40.]

[(இயல்பாகவும், விதியாகவும்,) இருபத்துநான்கெழுத்தையும் ஈறாக உடைய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல், என்பன நிலைமொழி ஆகநிற்க, இவற்றிற்கு முன்னர்வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள் அல்வழி வேற்றுமை

ஆய இருவழியும் இயல்பாதலும், குற்றெழுத்தின் பின்வரும் யகரஒற்றே ஓரெழுத்தொருமொழி ஆன உயிர், உயிர்மெய், என்னும் ஐகாரமே, நொ, து, என்பவற்றிற்கு முன்னர் வரும் ஞகார நகார மகாரங்கள் பிறசொற்கள் முன் இயல்பாதல் அன்றி மிக்குமுடிதலும் ஆம்; ணகார ளகார னகார லகாரங்கட்கு முன்வரும் நகாரம் பிறவீற்றின்முன் இயல்பாதல் அன்றித் திரியும் ]

(உ-ம்.) (1.) விள + } நீண்டது, ஞானறது, மாண்டது, யாது, வலிது {
= விளஞானறது, விளநீண்டது. &c [இயல்பு]
= பலா ஞானறது, பலா நீண்டது &c.
= புளி ஞானறது, புளி நீண்டது. &c.
} அல்வழி.
பலா +
புளி +

(2) விள, பலா, &c. } + ஞாற்சி, நீட்சி. &c. { விள ஞாற்சி, விள நீட்சி, &c. } வேற்றுமை.

[பிறவும அனன.]

---

(3) மெய, கை, + { ஞானறது, நீண்டது, மாணடது, ஞாற்சி, நீடசி &c. =
{ மெய்ஞ்ஞான்றது.
மெயஞஞாறசி.
கைஞஞானறது
கைஞஞாறசி.
மெயநநீண்டது.
மெயநநீட்சி
கைநநீண்டது.
மெயமமாண்டது
கைமமாண்டது.
&c.
[மெலி மிகுந்தது]

[இருவழியும.]

---

(4.) நொ, து, + ஞெள்ளா, நாகா, மாடா =
[அல வழி.]
{ நொஞ்ஞெளளா.
துஞ்ஞெளளா.
நொநநாகா.
துநநாகா
நொமமாடா.
தும்மாடா.
[மெலிமிகுந்தது]

---

(5.) மண் + நனறு, நனமை = மண்ணனறு. மண்ணனமை.
முள + நனறு, நனமை = முண்ணனறு. முணணனமை.
பொன + நனறு, நனமை = பொனனனறு. பொனனனமை.
கல் + நனறு, நன்மை = கனனனறு. கனனனமை.
} ண, ள, ன, ல முன் நகரந் திரிந்தது.

[இருவழியும்.]

**159. EPICENE NOUNS, AND THOSE OF THE HIGHER CLASS UNITE WITH WORDS BEGINNING WITH A HARD CONSONANT WITHOUT CHANGE.**

கருகூ. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம்; ஆவி ய,ர,முன்
வன்மை மிகா; சில விகாரம் ஆம் உயர்திணை.

[வி. 27.]

[இருதிணைப் பொதுவானபெயர்க்கும், உயர்திணைப் பெயர்க்கும் ஈறுன மெய்கள் வல்லினமுதல்மொழி வந்தால் இயல்பாம். உயிரே யகரமே ரகரமே என்னும் இவ்வீற்ற இருபெயர்கள் முன்னரும் வரும் க, ச, த, ப

க்கள் மிகாஆம். மெய் உயிர்ஈற்று உயர்திணைப்பெயர்கள் நாற்கணங்க ளோடும் புணரும் இடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவன வும் சில உள ஆம்.]

(உ-ம்.) சாத்திதாய் + { குறிது, சிறிது, தீது, பெரிது, கை, செவி, தலை, புறம். / குறியள், சிறியள், தீயள், பெரியள். / குறிது, சிறிது, தீது, பெரிது. கை, செவி, தலை, புறம். / குறியள், சிறியள், தீயள், பெரியள். }

[அல்வழி வெற்றுமை இரண்டிடத்தும் வலிவர இயல்பாதல் காண்க.]

குமரன் + கோட்டம் = குமரக்கோட்டம், குமரகோட்டம்.

சேரன் + சோழன் + பாண்டியன = சேரசோழ பாண்டியர்.

**160.** THE STRONG CONSONANTS NOT DOUBLED AFTER INTERROGATIVES, OR VOCATIVES.

கசு0. ஈற்றியா வினா,விளிப் பெயர்முன்வலி இயல்பே.

[வி. 27.]

[மூன்றீற்று வினா முன்னும், யா என்னும் வினாப்பெயர் முன்னும், உயிர் ஈறு ஒற்றீறு ஆய விளிப்பெயர்கள் முன்னும், வரும் வல்லினம் இயல் பாம்.]

(உ-ம்.) நம்பியா கொண்டான், சென்றான், தந்தான், போயினான்.
நம்பி யோ கொண்டான.
யா குறிய.
நம்பி கொள், செல், தா, போ.

**161.** THE SECOND PERSON OF VERBS OR IMPERATIVES ENDING IN A VOWEL, OR IN ய், ர், ழ்.

கசுக. ஆவி ய,ர,ழ இறுதிமுன் னிலைவினை,
ஏவல்,முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.

[வி. 27.]

[உயிரையும், ய,ர,ழ என்னும் மூன்றொற்றையும் இறுதியாகவுடை விகுதி உருபினவாய முன்னிலை வினைமுன்னும், ஏவல் வினைமுன்னும், வரும் வல்லினம் இயல்புடனே விகற்பமாம்.]

(உ-ம்.) { உண்டனை / உண்டாய் / உண்டிர் / தாழ் } கொற்றா, சாத்தா, தேவா, பூதா.

நடகொற்றா, நடக்கொற்றா.

## § ச. உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சி.

### 162. VOWEL AND VOWEL; ய் OR வ் INSERTED.

[உடம்படு மெய்கள்.]

கசுஉ. இ, ஈ, ஐவழி யவ்வும்; ஏனை
உயிர்வழி வவ்வும்; ஏமுன் இவ்
உயிர்வரின், உடம்படு மெய் யென்றாகும்.

[வி. 23.]

[இகர ஈகார ஐகாரங்களின் வழியே, யகரமும்; அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் இவ்வேழ் உயிர்களின் வழியே வகரமும்; ஏகாரத்தின் வழியே யகரமும் வகரமும், உயிர்முதன்மொழி வந்தால், உடம்படுமெய் என்று வரும்.]

### 163. INITIAL INTERROGATIVE AND DEMONSTRATIVE LETTERS: EXCEPTION TO (162. 158.)

[162. 158. எய்திய விதிவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.]

கசுஙு. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்;
பிறவரின் அவையும்; தூக்கிற் சுட்டு
நீளின் யகரமும்; தோன்றுத னெறியே.

[வி. 25.]

[எ என்னும் வினா இடைச்சொல் முன்னும், அ இ உ என்னும் மூன்று சுட்டிடைச்சொல் முன்னும், உயிரும் யகரமும் வந்தால் வகரமும்; ஒழிந்த மெய்கள் வந்தால் அம்மெய்களுஞ்; செய்யுட்கண் சுட்டு நீண்டிசைத்த வழி யகரமும் மிகுதல் முறை ஆம்.]

(உ-ம்.) 1. எவ்வணி? எவ்யானை?
2. அவ்வணி, அவ்யானை. இவ்வணி, இவ்யானை. உவ்வணி, உவ்யானை.
3. எக்குதிரை? அக்குதிரை. இக்குதிரை. எங்ஙனம்? இங்ஙனம்.

ஆ, + இடை, = ஆயிடை = அவ்விடம்.

**164.** FINAL உ BOTH ABBREVIATED AND NATURAL. [EXCEPTION TO 162.]
[SEE சூ. 94.]

[162-ல் எய்தியது விலக்கிப் பிறிது விதி வருத்தல்.]

கசூச. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்;
யவ்வரின் இய்யா முற்றும் அற்றொரோவழி.
[வி. 24.]

[குற்றியலுகரம் உயிர்முதல் மொழி வந்தால் தனக்கு ஆதாரம் ஆன மெய் நிற்கத் தான்கெடும்; யகரமுதன்மொழி வந்தால் இகரம் ஆகத் திரியும்; முற்றியல் உகரமும் அவ்விரு விதியும் பெறும் ஒரோவிடங்களின்.]

(உ-ம்.) நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு + அரிது, அருமை &c. = நாகரிது, எஃகரிது, வரகரிது, கொக்கரிது, குரங்கரிது, தெள்கரிது. நாகருமை, எஃகருமை, வரகருமை, கொக்கருமை, குரங்கருமை, தெள்கருமை.

கதவு + அரிது = கதவரிது.
கதவு + அருமை = கதவருமை
கதவு + யாப்பு = கதவியாப்பு
} முற்றுகரங் கெட்டதுந் திரிந்ததுங்காண்க

"தன் முகமாகத் தான் அழைப்பதுவே,"
எ-தில் குற்றியல் உகரம் கெடாமல் வகர உடம்படுமெய் பெற்றதுகாண்க.

## § ரு. உயிரீற்று முன்வல்லினம்.

**165.** க, ச, த, ப AFTER A VOWEL ARE DOUBLED. [GENERAL RULE.]

[உயிரீற்றின்முன் வல்லினம் புணரும் ஆறு.]

கசூரு. இயல்பினும் விதியினு' நின்ற உயிர்முன்
க, ச, த, ப மிகும், விதவாதன மன்னே.
[வி. 27.]

[இயல்பினனும், விதியினனும், இறுதிஆக நின்ற உயிர்களின் முன்னர்வரும் க, ச, த, ப க்கள் பெரும்பாலும் மிகும், விதந்து சொல்லாதன.]

(உ-ம்.) 1. ஆடு + கொண்டான், செய்தான், தக்கவன், போனான் = ஆடுக்கொண்டான், ஆடுச்செய்தான், ஆடுத்தக்கவன், ஆடுப்போனான். } அல்வழி.

2. விள + கோடு &c = விளக்கோடு [அல்வழி.]

3. தாழ + கோல் = தாழக்கோல். [விதியினுல்.]

**166.** NAMES OF TREES. [EXCEPTION.—(165.)]

[மரப்பெயர்முன் வரும் வல்லெழுத்து.]

கசுசு. மரப்பெயர் முன்னர் இனமெல் எழுத்து

வரப்பெறு நவும்உள, வேற்றுமை வழியே.

[வி. 161.]

[உயிர்ஈற்று மரப்பெயர்கள்முன் மேலைப் பொதுவிதியான் வல்லெழுத்து மிகாது, வரும்வல்லெழுத்திற்கு இனம் ஆன மெல்லெழுத்து மிகப் பெறுவனவுஞ் சில உள வேற்றுமைக்கண்.]

(உ-ம்.) விளங்காய்

§ சு. அகரஈற்றுச் சில சோற்கள்.

**167.** EXCEPTIONS TO (165.) [WORDS IN அ.]

[அகரவீற்றுச் சொல்லுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கல்.]

கசுஎ. "செய்யிய" என்னும் வினைஎச்சம், பல்வகைப்

பெயரின் எச்ச,முற் றாறன் உருபே,

அஃறிணைப் பன்மை, அம்ம,முன் இயல்பே.

[வி. 27.]

[இங்ஙனம் விதந்த அகரஈற்றுச் சொற்கள் ஆறன் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.]

(உ-ம்.) உண்ணிய கொண்டான ............... வினைஎச்சம்.
உண்ட குதிரை .. ..................... பெயர்எச்சம.
உண்டன குதிரைகள .... .............. வினைமுறறு.
தன கைகள் ........................... ஆறன உருபு.
பல குதிரைகள் ... ........ ........... அஃறிணைபபன்மை.
அம்ம கொற்றா ........................ அம்ம.

**168.** EXCEPTION TO (165.): வாழிய.

[வியங்கோள் முற்றுச்சொற்கு எய்தாததெய்துவித்தல்.]

கசுஅ. வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்

ஏகலும் உரித்,தஃ தேகினும் இயல்பே.

[வி. 85.]

["வாழிய" என்னும் வியங்கோள் முற்றினது ஈற்றுயிர் மெய் குறைதலும் உரித்து; குறைந்து, இகர ஈறாய் நின்றாலும், வல்லினம் பொது விதியான் மிகாது, சிறப்பு விதியுட் கூறியஇயல்பே ஆம்.]

(உ-ம்.) வாழி கொற்றா.

### 169. EXCEPTION TO (165.): சாவ.

[ சாவ என்னும் நிலைமொழிக்கு எய்தாததெய்துவித்தல். ]

**௧௬௯. சாவ என் மொழி ஈற் றுயிர்மெய் சாதலும் விதி.**

[வி. 86.]

[ "சாவ" என்னும் செய என் எச்சவினைச் சொல்லினது ஈற்றுயிர்மெய் கெட்டுப்புணர்தலும் விதிஆம். ]

(உ-ம்.) சாக் குத்தினை. [சாவக்குத்தினன் ]

### 170. EXCEPTION TO (165.): பல AND சில DOUBLED.

[ வருமொழிக்கு எய்தியது பிறழாமற்காத்தலும், சிறப்புவிதியும், நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும். ]

**௧௭௦. பல, சில, எனும் இவை தம்முன் தாம் வரின்**
**இயல்பு' மிகலும், அகரம் ஏக**
**லகரம் றகரம் ஆகலும், பிற வரின்**
**அகரம் விகற்பம் ஆகலும், உள பிற.**

[பல, சில என்னும் இவ்விரு சொல்லுந் தம்முன்னர்த் தாம் வருமாயின் இயல்பாதலும், மிகுதலும், அகரங்கெட லகரம் றகரம் ஆகலும், இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதானும் ஒன்று வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உள ஆம். ]

(உ-ம்.) 1. பல பல, சில சில, } என இயல்பாயின. 2. பலப்பல, சிலச்சில, } எனமிக்கன.

3. பற்பல, சிற்சில. } அகரம் கெ, லகரம் றகரமாயிற்று. [வி.35.] பல்பல, சில்சில. } சிறுபான்மையாய வரும்.

4. பல + சாலை = பல்சாலை, பலசாலை.
சில + யானை = சில்யானை, சிலயானை.
பல + தாழிசை = பலதாழிசை, பஃறாழிசை.
பல + ஞானம் = பன்ஞானம்.
பல + நாள் = பன்னாள் [வி. 39.]
பல + அணி = பல்லணி, பலவணி. [வி.29.]
} எனப் பிறவர அகரம் விகற்பம் ஆயிற்று.

## § எ. ஆகாரஈற்றுச் சிலசொற்கள்.

### 171. EXCEPTION TO (165.): WORDS IN ஆ.

[ஆகார ஈற்றுச்சொற்களிற் சிலவற்றிற்கு எய்தியது ஒருபக்கம் விலக்கல்.]

**௧௭௧. அல்வழி ஆ,மா, மியா,முற்று, முன் மிகா.**

[வி. 27.]

[அல்வழி (க்கண்,) ஆ (வும்,) மா (வும் ஆகிய இருபெயரும்,) மியா (என்னு முன்னிலையசை இடைச்சொல்லும், ஆகார ஈற்றஃறிணைப்பன்மை எதிர்மறை) முற்று (வினையும் நிற்க, இவற்றின்) முன் (வரும் வல்லினம்) மிகா.]

(உ-ம்.) ஆ + குறிது = ஆகுறிது. [சிறிது, தீது, பெரிது]
மா + குறிது = மாகுறிது.
கேண்மியா + கொற்றா = கேண்மியாகொற்றா. [சாத்தா, தேவா, பூதா]
உண்ணா + குதிரைகள = உண்ணாகுதிரைகள. [செந்நாய்கள, தகர்கள், பன்றிகள்.]

உண்ணா கிடந்தன எ-து { உண்ணாதன ஆகிய குதிரைகள கிடந்தன [வினையால் அணையும்பெயர். சூ.286]
உண்ணாதனவாய்க்கிடந்தன. [வினைமுற்று வினையெச்சம் ஆயிற்று. சூ. 351.] }

---

உண்ணாக்குதிரைகள. [எதிர்மறைப் பெயரெச்சம். சூ. 340.]
உண்ணாக்கிடந்தன. [உண்டுகிடந்தன. சூ 343.]

### 172. EXCEPTION TO (165.): FINAL ஆ SHORTENED IN POETRY.

[நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தல்.]

**௧௭௨. குறியதன் கீழ் ஆக் குறுகலும், அதனோ டுகரம் ஏற்றலும், இயல்பும் ஆந் தூக்கின்.**

[வி. 41.]

[குற்றெழுத்தின் கீழ் (நின்ற) ஆகாரம் குறுகலும், அக்குறுகலுடனே உகரம் பெறுதலும், (அவ்விரண்டும் இன்றித் தன்) இயல்பின் நிற்றலும், ஆகிய மூன்று விதியும் பெறுஞ் செய்யுட்கண்.]

(உ-ம்.) "நில விரி கானல் வாய்."................ நிலா விரி: (குறுகல்.)
கனவு.................................. கனா. (குறுகலோடு உ பெற்றது.)
"நிலா வணங்கு வெண்மணல் மேனின்று." (இயல்பு.)

## § ஃ. இகரஈற்றுச் சிலசொற்கள்.

**173.** EXCEPTION TO (165): SPECIAL RULE REGARDING *அன்றி, இன்றி.*

[இகர இற்று வினை எச்சக்குறிப்பிற்கு எய்தாதது எய்துவித்தல். முன்வரும் வல்லினத்திற்கு எய்தியது விலக்கல்.]

களஙா. அன்றி, இன்றி என் வினை எஞ் சிகரந்
தொடர்பினுள் உகரம் ஆய் வரின் இயல்பே.

["அன்றி," "இன்றி" என்னும் வினையெச்ச(க்குறிப்புச்சொல்லினது-ஈற்று) இகரஞ்செய்யுட்கண் உகரமாய் வரும்ஆயில் (க, ச, த, பக்கள் பொது விதியான் மிகாது) இயல்பாம்.]

(உ-ம்.) "நாணறுபோகி." ...................... நாண், அன்றி.
"விண்ணினறுபொயப்பின்". ............ விண், இன்றி.

**174.** EXCEPTION TO (165) SPECIAL RULE REGARDING *நாழி* AND *உரி.*

[எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.]

களச. உரிவரி னாழியின் ஈற்றுயிர் மெய்கெட,
மருவும் டகரம்; உரியின் வழியே
யகர உயிர் மெய் ஆம், ஏற்பன வரினே.

[உரி (என்னும் அளவுப்பெயர்) வரின், நாழி (என்னும் அளவுப்பெயரி)னது ஈற்றுயிர்மெய் கெட அவ்வழி டகர ஒற்று வரும்; உரி (என்னும் அளவுப்பெயரின்) பின் யகர உயிர்மெய் வரும்; (அவ்வுயிர்மெய் வருதற்கு) ஏற்ற (வருமொழிகள்) வரும்ஆயின்.]

(உ-ம்.) 1. நாழி + உரி = நாடுரி [நாவுரி என இக்காலத்து வழங்கும்.]
2. உரி + உப்பு = உரிய உப்பு.

**175.** EXCEPTION TO (165.) SPECIAL RULE REGARDING *புளி, sourness.*

[எய்தியதன்மேற் சிறப்பு விதி.]

களரு. சுவைப்புளி முன் இன மென்மையுந் தோன்றும்.
[வி. 161.]

[புளி (என்னும் மரமும் பழமும் அன்றி, அறு) சுவையுள் ஒன்றை (உணர்த்தும் பெயர்) முன் (வரும் வல்லினம் மிகுதலே அன்றி அவற்றிற்கு) இனம் ஆய மெல்லினமும் (ஒரோவழி) மிகும்.]

(உ-ம்.) புளி { + கறி = புளிங்கறி.
{ + சோறு = புளிஞ்சோறு.

**176.** EXCEPTION TO (165.) : இ, ஐ, AT THE END OF IMPERSONAL NOUNS, BEFORE STRONG LETTERS.

[எய்தியது ஒருபக்கம் விலக்கல்.]

**கஎசு. அல்வழி இ,ஐ, முன்னர் ஆயின்**
**இயல்பு மிகலும், விகற்பமும் ஆகும்.**

[இகர ஐகார ஈற்று (அஃறிணைப் பெயர்) முன் (வல்லினம் அல்வழிக்கண்வரும்) ஆயின் இயல்பாயும், (பொதுவிதியான்) மிகுந்தும், (ஒன்றற்கே ஒருகால்) மிகாதும் (ஒருகால்) மிகுந்தும் புணரும்.]

(உ-ம்.)
1. பருத்தி + குறிது = பருத்தி குறிது.
யானை + குறிது = யானை குறிது. } [இயல்பாயின.]
2. ஆடி + திங்கள் = ஆடித்திங்கள்.
சித்திரை + திங்கள் = சித்திரைத்திங்கள். } [மிக்கன.]
3. கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது.
தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது. } [விகற்பித்தன.]

§. கூ. ஈகாரஈற்றுச் சிலசொற்கள்.

**177.** EXCEPTION TO (165.) : SPECIAL RULE REGARDING ஆ + பீ.

[இ குறுகும் என்று எய்தாதது எய்துவித்தல். வல்லினத்திற்கு எய்தியது பிறழாமற் காத்தல்.]

**கஎஎ. ஆமுன் பகரஈ அனைத்தும்வரக் குறுகு**
**மேலன அல்வழி இயல்பா கும்மே.**

[ஆ (என்னும் பெயர்) முன் (நின்ற) பகர ஈகாரம் இருவழியும் நாற்கணங்களும் வரில் குறுகும்; குறுகி, விதி இகர ஈறுகநின்ற அதன்மேல் வரும் வல்லினம் அல்வழிக்கண் (மேலைச் சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள்) இயல்பைப்பெறும்.]

(உ-ம்.)
ஆ + பீ = ஆப்பி.
ஆப்பி + அரிது = ஆப்பியரிது. } அல்வழி.
ஆப்பி + குளிச்சி = ஆப்பிக்குளிச்சி வேற்றுமை.

[பகர ஈ என்பது இடைக்காட்டக்கல், சூ. 267 காண்க.]

**178.** EXCEPTION TO (165.) : SPECIAL RULE REGARDING பீ, நீ, மீ.

௧௭௮. பவ்வீ, நீ,மீ, முன்னர் அல்வழி
இயல்பாம்; வலிமெலி மிகலும் ஆம் மீக்கே.

[பகர ஒற்றை ஊர்ந்து நின்ற ஈகார ஈற்றிடக்கர்ப்பெயரும், நீ (என்னு முன்னிலை ஒருமைப் பொதுப்பெயரும்,) மீ (என்னும் மேலாய பண்பை யும், அப்பண்பாகுபெயராய் மேல் ஆய இடமுதலியவற்றையும் உணர்த்தி நிற்கும் பலபொருள் ஒருசொல்லும் நிற்க, இவற்றின்) முன் (வரும் வல் லினம்) அல்வழிக்கண் இயல்பாம்; (இங்ஙனம் புணரும்) மீ (என்னும் சொற்குமுன் அல்வழிக்கண்) வல்லெழுத்து மிகலும் ஆம், மெல்லெழுத்து மிகலும் ஆம்.]

(உ-ம்.) 1. பீ + குறிது = பீகுறிது.
நீ + குறியை = நீகுறியை.
மீ + கண் = மீகண். [இயல்பாயின]

2. மீ + கூற்று = மீக்கூற்று.
மீ + தோல் = மீந்தோல். [மிக்கன.]

## § ௧௦. உகரஈற்றுச் சிலசொற்கள்.

**179.** EXCEPTION TO (165.); WORDS IN உ.

[முற்றுகர வீற்றுட் சிலவற்றிற்கு.]

௧௭௯. மூன்றா றுருபெண், வினைத்தொகை சுட்டீ
றாகும் உகர முன்னர் இயல்பாம்.
[வி. 27.]

[(முற்றுகரவீற்று) மூன்றும் உருபே, ஆறும் உருபே, (இயல்பாயும் விகாரமாயும் வரும்) எண்ணே, வினைத்தொகையே, சுட்டுப்பெயரே, என் னும் இவற்றின்முன் (வரும் வல்லினம்) இயல்பாம்.]

(உ-ம்.) 1. சாத்தனொடு கொண்டான். [மூன்றும் வேற்றுமை.]
2. சாத்தனது கை. [ஆறும் வேற்றுமை.]
3. ஒரு புலி. [இயல்பாய வந்த எண்.]
4. இரு செவி. [விகாரத்தால் வந்த எண்.]
5. தரு சோறு. [வினைத்தொகை]
6. அது குறிது. [சுட்டுப்பெயர் அல்வழி]
7. அது கொண்டான். [சுட்டுப்பெயர் வேற்றுமை.]

**180.** EXCEPTION TO (165.): SPECIAL RULE REGARDING

அது BEFORE அன்று IN POETRY.

கஅ0. அதுமுன் வரும்அன் றுனுறாந் தூக்கின்.

[அது என்னும் சுட்டுப்பெயர்முன்வரும் அன்று என்னும் வினைக்குறிப்புச்சொல் முதல் நீளுஞ் செய்யுளகத்து.]

(உ-ம்.) அது + அன்று = அதான்று.

**181.** EXCEPTION TO (165.): SHORTENED உ IN UNINFLECTED COMBINATION.

[குற்றியலுகரவீற்றுள் சிலவற்றிற்கு.]

கஅக. வன்றொடர் அல்லன முன் மிகா, அல்வழி.

[வி. 27.]

[வன்றொடர் ஒழிந்த ஐந்தன் (பகுதிக் குற்றுகர ஈற்றின்) முன்னும் (வரும் வல்லினம்) மிகா, அல்வழிக்கண்.]

(உ-ம்.) காசு + கடிது = காசு கடிது. [நெடிற்றொடர்.]
எஃகு + சிறிது = எஃகு சிறிது. [ஆய்தத்தொடர்.]
வரகு + தீது = வரகு தீது. [உயிர்த்தொடர்.]
குரங்கு + பெரிது = குரங்கு பெரிது. [மென்றொடர்.]
தெள்கு + சிறிது = தெள்கு சிறிது. [இடைத்தொடர்.]

[சூ. 94 காண்க.]

**182.** SHORTENED உ IN INFLECTED COMBINATION.

[இதுவும் அது.]

கஅஉ. இடைத்தொடர், ஆய்தத் தொடர், ஒற் றிடையின்
மிகா நெடில், உயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை.

[வி. 27.]

[இடைத்தொடர் (முன்னும்), ஆய்தத்தொடர் (முன்னும்), ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர் (முன்னும்), உயிர்த்தொடர் முன்(னும்), (வரும் வல்லினம்) மிகா வேற்றுமைக்கண்.]

(உ-ம்.) தெள்கு + கடுமை = தெள்கு கடுமை. [இடைத்தொடர்.]
எஃகு + கடுமை = எஃகு கடுமை. [ஆய்தத்தொடர்.]
காசு + கடுமை = காசு கடுமை. [ஒற்றிடையில் மிகாநெடிற்றொடர்.]
வரகு + பெருமை = வரகு பெருமை. [உயிர்த்தொடர்.]

[சூ. 94 காண்க.]

**183. EXCEPTION TO (165.): SHORTENED உ IN THE TERMINATIONS டு, று. THE FORMER WORD QUALIFIES THE LATTER, AND THE SONANT IS DOUBLED AND SO CHANGED INTO A SURD.**

[புறனடையும் சிறப்புவிதியும்.]

க௮௩. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறஒற் றிரட்டும் வேற்றுமை மிகவே.
[வி. 26. 68.]

[நெடிற்றொடர்க் குற்றுகரஈற்று மொழிகளுள்ளும், உயிர்த்தொடர்க் குற்றுகரஈற்று மொழிகளுள்ளும், (அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லெழுத்துஆறனுள்) டகார றகாரமான இரண்டொற்றும், பெரும்பாலும், வேற்றுமைக்கண் இரட்டும்.]

(உ-ம்.) ஆடு + கால் = ஆட்டுக்கால். } வேற்றுமை.
பாறு + செவி = பாற்றுச்செவி. }

காடு + அரண் = காட்டரண். [அல்வழியிலும்.]
காடு + அகம் = காடகம். [இயல்பு]

**184. EXCEPTIONS TO (165.): A FEW WORDS ENDING IN SHORTENED உ, AFTER A SOFT CONSONANT.**

[மென்றொடர்க் குற்றுகரவீற்று மொழிகள்.]

க௮௪. மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்இன வன்றொடர்; ஆகா மன்னே.
[வி. 26.]

[மென்றொடர் (க்குற்றுகர) மொழிகளுள் சில வேற்றுமைக்கண் தமக்கு இனம் ஆன வன்றொடர் ஆதலை ஒழிந்தன பெரும்பால்.]

(உ-ம்.)
1. குரங்கு + கால் = குரக்குக்கால்.
2. கழஞ்சு + கோல் = கழச்சுக்கோல்.
3. எண்கு + குட்டி = எட்குக்குட்டி.
4. மருந்து + பை = மருத்துப்பை.
5. கரும்பு + வில் = கருப்புவில்.
6. கன்று + ஆ = கற்றா.

**185.** EXCEPTION TO (165.): FINAL SHORTENED உ CHANGED INTO ஐ.

௧௮௫. ஐயீற் றுடைக்குற் றுகரமும் உளவே.

[வி. 26.]

[ஐ (காரச் சாரியையை) இறுதியிலே பெற்று வரும் (மென்றொடர்க் குற்றுகர மொழிகளும் சில உள.]

(உ-ம.) பண்டு + காலம் = பண்டைக்காலம்.
இன்று + தினம = இன்றைத்தினம.
அன்று + கூலி = அற்றைக்கூலி.

**186.** EXCEPTION TO (165): WORDS IN SHORTENED உ INDICATING POINTS OF THE COMPASS.

[குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்க்கு.]

௧௮௬. திசையொடு திசையும், பிறவுஞ் சேரின்,
நிலை ஈற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்,
றகரம் ன,ல,வாய்த் திரிதலும் ஆம்பிற.

[வி. 160.]

[திசைச்சொல்லோடு திசைச்சொல்லும், பிறசொல்லும் புணரும் இடத்து, நிலைமொழி ஈற்றின்நின்ற உயிர்மெய்யும், (அதன்மேல் நின்ற) ககர ஒற்றுங் கெடுதலும், (அங்ஙனம் நின்ற) றகர ஒற்று னகர ஒற்றாயும், லகர ஒற்றாயுந் திரிதலும் ஆம்.]

(உ-ம்.) வடக்கு / தெற்கு } + கிழக்கு = { வடகிழக்கு. / தென்கிழக்கு.

வடக்கு + திசை = வடதிசை.
மேற்கு + திசை = மேற்றிசை, மேல்திசை.

மேலைத்திசை, கீழ்த்திசை, கீழைச்சேரி / வடக்கூர், வடக்குமலை, தெற்குமலை } எனவும் வரும்.

**187.** EXCEPTION TO (165.): SPECIAL RULE REGARDING தெங்கு FOLLOWED BY காய்.

[தெங்கு என்னும் பெயர்க்கு.]

கஅஎ. தேங்கு நீண் டீற்றுயிர் மெய்கெடுங், காய் வரின்.

[வி. 161.]

[காய் என்னும்சொல் வரும்ஆயின், தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும்.]

(உ-ம்.) தெங்கு + காய் = தேங்காய்.

**188.** NOUNS OF NUMBER WHEN FORMED INTO COMPOUNDS.

[ஒன்றுமுதல் எட்டீற்று எண்ணுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி.]

கஅஅ. எண்ணிறை, அளவும், பிறவும் எய்தின்
ஒன்று முதல், எட் டீறும் எண்ணுள்
முதல்ஈர் எண்முத னீளு மூன் றாறேழ்
குறுகும் ஆறேழ் அல்ல வற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி, என்மனார் புலவர்.

[வி. 159.]

[எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிறபெயரும் வரின் (நிலைமொழி ஆகநின்ற) ஒன்றுமுதல் எட்டீறும் எண்களுள் (1)முதற்கண்ணவாய ஒன்று இரண்டு என்னும் இரண்டெண்ணும், முதல் நீளும்; (2)மூன்றும், ஆறும், ஏழும் முதல்குறுகும்; (3)ஆறும், ஏழும், அல்லாத ஆறெண்களின் ஈற்றுயிர்மெய்யும், (4)ஏழு என்னும் எண்ணீற்றுயிருங் கெடும்; ஏற்கும் இடங்களின் என்று சொல்லுவர் புலவர்.]

(உ-ம்.) 1. ஒன்று: ஓர்ஆயிரம், ஓர்கழஞ்சு, ஓர்கலம், ஓர்மரம்.
இரண்டு: ஈர்ஆயிரம், ஈர்கழஞ்சு, ஈர்கலம், ஈர்மரம்.

2. மூன்று: முப்பது, முக்கழஞ்சு, முக்கலம், மும்மரம்.
ஆறு: அறுபது, அறுகழஞ்சு, அறுகலம், அறுமரம்.
ஏழு: எழுபது, எழுகழஞ்சு, எழுகலம், எழுமரம்.

3. சூ. 189.—193 காண்க.

4. ஏழு: எழ்கடல்.

☞ இரண்டாயிரம், மூன்றுபடி, நான்குபொருள், எனவும் வரும்.

**189.** EXCEPTION TO (165) AND SUPPLEMENTAL TO (188.): REGARDING ஒன்று AND இரண்டு.

[இதுவும் அது.]

கஅகூ. ஒன்றன் புள்ளி ரகரம் ஆக,—
இரண்டன் ஒற்றுயிர் ஏக,—உவ் வருமே.
[வி. 159.]

[(மேற்கூறிய நால்வகைப்பெயரும் வரும்இடத்து ஈற்றுயிர்மெய் ஏகும் என்றமையான், இறுதி உயிர்மெய்கெட (சூ. 188.) நின்ற) ஒன்றென்னும் எண்ணினது (னகர) ஒற்று, ரகர ஒற்றாக; இரண்டென்னும் எண்ணினது (ணகர) ஒற்று (ம் ரகரததை ஊர்ந்துநின்ற அகர உயிருங்) கெட, (அவ்விரண்டு ரகரத்தின் மேலும்) உகரம்வரும்.]

(உ-ம) ஒன்று ... ... ... ... ஒரு, ஒரு, ஓர், ஓர், ஒரு.
இரண்டு. ..... .... .... . இரு, ஈர், இரு.

**190.** EXCEPTION TO (165) AND SUPPLEMENTAL TO (188). REGARDING மூன்று.

ககூ0. மூன்றன் உறுப்பழிவும் வந்ததும் ஆகும்.
[வி. 159.]

[(நால்வகைப்பெயரும் வரும்இடத்து இறுதி உயிர்மெய்கெட (சூ. 188.) நின்ற) மூன்றென்றும் எண்ணினது (னகர) ஒற்றுக் கெடுதலும், வரும் ஒற்றாகத்திரிதலும் ஆம்.]

(உ-ம.) மூன்று .... ... .... ..... .. .. மூ, மு
மூவிடம். முச்சாதி...... .... .. .. முப்பது மும்மொழி.

**191.** EXCEPTION TO (165.) AND SUPPLEMENTAL TO (188). REGARDING நான்கு.

ககூக. நான்கன் மெய்யே ல, ற, ஆகுமே.
[வி. 159]

[(நால்வகைப்பெயரும் வரும்இடத்து இறுதி உயிர்மெய் கெட (சூ. 188.) நின்ற) நான்கென்னும் எண்ணினது (னகர) ஒற்று லகர ஒற்றும், றகர ஒற்றுயுந் திரியும்.]

(உ-ம்.) நான்கு....... ...... ......... நால், நாற்.

**192.** EXCEPTION TO (165.) AND SUPPLEMENTAL TO (188.): REGARDING *ஐந்து*.

௧௯௨. ஐந்தன் ஒற் றடைவதும், இனமுங், கேடும்.

[வி. 159.]

[(நால்வகைப்பெயரும் வரும்இடத்து இறுதி உயிர்மெய்கெட (சூ. 188.) நின்ற) ஐந்தென்னும் எண்ணினது (நகர) ஒற்று வரும் ஒற்றாகியும், அதற் கினம் ஆகியுங், கெட்டும் முடிவதாம்.]

(உ-ம்.) ஐம்மூன்று. ஐவ்வணம்.
ஐங்கலம். ஐங்கழஞ்சு.
ஐயம்பு. ஐயொன்று.

**193.** EXCEPTION TO (165.) AND SUPPLEMENTAL TO (188.): எட்டு MAKES எண்.

௧௯௩. எட்டன் உடம்பு ணவ் வாகும் என்ப.

[வி. 159.]

[(நால்வகைப்பெயரும் வரும்இடத்து இறுதி உயிர்மெய்கெட (சூ. 188.) நின்ற) எட்டென்னும் எண்ணினது (டகர) ஒற்று ணகர ஒற்றாகும், என்று சொல்லுவர் (புலவர்.)]

(உ-ம்.) எண்பது, எண்குணம், எண்கலம்.

**194.** EXCEPTION TO (165.): *ஒன்பது* BEFORE *பத்து* AND *நூறு*.

[ஒன்பது என்னும் எண்ணுப்பெயர்க்கு எய்தாதது எய்துவித்தல்.]

௧௯௪. ஒன்பா னொடுபத்து, நூறும் ஒன்றின்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு
தகர நிறீஇப், பஃ றகற்றி, னவ்வை
நிரலே, ண, ள வாத் திரிப்பது நெறியே.

[வி. 159.]

[ஒன்பதுடனே பத்தென்பதும், நூறென்பதும், வந்து புணரும் ஆயின் (அந்நிலைமொழி வருமொழிகளுள்) முன்னதாகிய (நிலைமொழியினின் றும்) ஏனைவருமொழியாகிய பத்தையும், நூற்றையும், (நிரனிறை வகை யானே நூறெனவும் ஆயிரம் எனவுந்) திரித்து, (நிலைமொழிக்கு முதற்கண்)

ஒகர உயிரோடு தகர மெய்யை (அதற்காதாரம் ஆக) நிறுத்தி, அந்நிலை மொழி இறுதிக்கண் பஃதைக்கெடுத்து, (அம்மொழிமுதற்கயல் நின்ற) னகர ஒற்றை முறையே ணகர ஒற்றாயும்,ளகர ஒற்றாயுந் திரிப்பது முறை ஆம்.]

(உ-ம்.) ஒன்பது { + பத்து = (1.) ஒன்பது நூறு, (2.) தொன்பது நூறு.
{ + நூறு = (1.) ஒன்பது ஆயிரம், (2 ) தொன்பது ஆயிரம்.

(3.) தொன் நூறு, (4.) தொண்நூறு, (5.) தொண்ணூறு.
(3.) தொன்ஆயிரம், (4.) தொள்ஆயிரம், (5.) தொள்ளாயிரம்.

**195.** EXCEPTION TO (165.): *பத்து* AFTER NUMERALS.

௧௯௫. முதல் இரு நான்காம் எண் முனர்ப் பத்தின்
இடைஒற் றேகல், ஆய்தம் ஆகல்,
என இரு விதியும் ஏற்கும் என்ப.
[வி. 159.]

[ஒன்றுமுதலாகிய எட்டெண்களின் முன்னும் (வரும்) பத்தென்னும் எண்ணிடை நின்ற (தகர) ஒற்று (ஒருகாற்) கெடுதலும், (ஒருகால் இடையே தகரநின்ற நிலைக்களத்து அதுகெட்டு) ஆய்தம் வருதலும், என்னும் இவ்விரண்டு விதியையும் ஏற்கும் என்று சொல்லுவர் (புலவர்.)]

(உ-ம்.) ஒருபது, ஒருபஃது. &c.

**196.** EXCEPTION TO (165.): 10, 20, &c., WITH UNITS FOLLOWING THEM.

௧௯௬. ஒருபஃ தாதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்
எண்ணும், அவைஊர் பிறவும், எய்தின்
ஆய்தம் அழியஆண் டாகுந் தவ்வே.
[வி. 159.]

[ஒருபஃதாதி (ஆய எட்டெண்களின்) முன்னும் ஒன்றாதி ஒன்பதெண்ணும், அவைஊர்ந்த பிறவும், வந்துபுணரும் ஆயின் ஆய்தங்கெட அந்நிலைக் களத்து (இயல்பாய) தகரம்வரும்.]

(உ-ம்.) ஒருபத்தொன்று,
இருபத்திரண்டு, இருபத்தொன்றேகால்.
முப்பத்துமூன்று, எண்பத்தெண்கலனே.

**197.** EXCEPTION TO (165.): TEN FOLLOWED BY DIGITS, &C., TAKES இன் OR இற்று.

௧௯௭. ஒன்றுமுதல் ஈர் ஐந் தாயிரங், கோடி
எண்ணிறை, அளவும், பிற, வரில் பத்தின்
ஈற்றுயிர் மெய் கெடுத் தின்னும், இற்றும்,
ஏற்ப தேற்கும்; ஒன்பதும் இனைத்தே.
[வி. 159.]

[ஒன்றுமுதல் ஆகிய பத்தும், ஆயிரமுங், கோடியும் என்னும் எண்ணுப் பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிறபெயரும், வந்து புணருமாயின் (நிலைமொழிஆகிய) பத்தென்னும் எண்ணினது ஈற்றுயிர்மெய்யைக் கெடுத்து, (அந்நிலைக்களத்து) இன்சாரியை எனும், இற்றுச்சாரியை எனும் ஆண்டைக்கேற்பதேற்று நிற்கும்; ஒன்பதென்னும் நிலைமொழியும் இங்ஙனம் விதந்த எண்ணுதிப்பெயர்வந்து புணரும் ஆயின் இன் எனும், இற்றேனும், ஆண்டைக் கேற்பதேற்று நிற்கப் பெறும்.]

(உ-ம்.) பதினொன்று, பதிற்றொன்று, பதின்மடங்கு.
ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றொன்று.

**198.** EXCEPTION TO (165.): TEN AND TWO=பன்னிரண்டு.

௧௯அ. இரண்டு முன்வரில் பத்தின் ஈற் றுயிர்மெய்
கரந்திட ஒற்று னவ் வாகும் என்ப.
[வி. 159.]

[இரண்டென்பது வரில் பத்தென்னும் நிலைமொழியினது ஈற்றுயிர் மெய்கெடத் தகர ஒற்று னகர ஒற்றாகத் திரியும் என்று சொல்லுவர் (புலவர்.)]

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு.

**199.** EXCEPTION TO (165.): NUMERALS REPEATED, DISTRIBUTIVES.

௧௯௯. ஒன்ப தொழித்தஎண் ஒன்பதும் இரட்டில்
முன்னதின் முன் அல ஓட உயிர் வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.
[வி. 159.]

[ஒன்பது (என்னும் எண் ஒன்றனையும்) ஒழித்து நின்ற (ஒன்றுதி பத்திறன) எண் ஒன்பதனையும் இரட்டித்துக்கூறின், (நிலைமொழி) முதலெ

முத்தொன்று நிற்க அல்லன எல்லாங்கெட, உயிர் (முதலான எண்) வரின் வகர ஒற்று, மெய் (முதலான எண்) வரின் அவ்வந்த ஒற்று மிகுதல், முறைமை (ஆம்.)]

(உ-ம) ஒவ்வொன்று, இவ்விரண்டு, ஐவ்வைந்து, அவ்வாறு.
மும்மூன்று, நான்னான்கு.
எவ்வேழு, எவ்வெட்டு.
பப்பத்து

## § கக. ஊகாரஈற்றுச்சிலசொற்கள்.

**200.** EXCEPTION TO (165.): NAMES OF FLOWERS.

உ00. பூப்பெயர் முன் இன மென்மையுந் தோன்றும்.

[வி. 119.]

[பூ என்னும் (பலபொருட) பெயர்ச்சொல் முன் (வல்லினம் வரின் பொதுவிதியான் க,சத,ப மிகுதலே அன்றி,) அவற்றிற்கினம்ஆகிய மெல்லொற்றுகளும் மிகும்.]

(உ-ம) பூ + கொடி = பூங்கொடி
பூ + சோலை = பூஞ்சோலை
பூ + தடம் = பூந்தடம்
பூ + பணை = பூம்பணை.
} இன மென்மை தோன்றியது.

பூ + கொடி = பூக்கொடி.
பூ + சோலை = பூச்சோலை.

## § கஉ. ஏ,ஓ ஈற்றுச்சிலசொற்கள்.

**201.** EXCEPTION TO (165.). ஏ AND ஓ FINALS.

உ0க. இடைச்சொல் ஏ,ஓ முன் வலி இயல்பே.

[வி. 27.]

[இடைச்சொல் ஆய,(ஆறு) ஏகாரத்தின் முன்னும், (எட்டு) ஓகாரத்தின் முன்னும், வல்லினம் (வருமாயின் பொதுவிதியான் மிகாது) இயல்பாம்.]

(உ-ம்.) அவனே கொண்டான்.
அவனோ கொண்டான்.

## § கரு. ஐகார ஈற்றுச்சிலசொற்கள்.

**202.** EXCEPTION TO (165.): AND SPECIAL RULE REGARDING FINAL ஐ.

௨0௨. வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி
ஈற்றழி வோடும் அம் ஏற்பவும் உளவே.
ஶ. 161.]

[ஐகார ஈற்றுச்சொல் வேற்றுமைக்கண் வரும் ஆயின், இறுதி ஐகாரங் கெடாது, அம்முச் சாரியை பெற்றுமுடிவனவும்; ஐகாரங்கெட்டு, அம்முச்சாரியை பெற்று முடிவனவும் சிலஉள ஆம்.]

(உ-ம்.) 1. புன்னை + கானல் = புன்னையங்கானல்.
2. தாழை + காய் = தாழங்காய்.

**203.** EXCEPTION TO (165.): THE WORD பனை IN COMBINATION.

௨0௩. பனை முன்
கொடிவரின் மிகலும், வலிவரின் ஐபோய்
அம்முந், திரள்வரின் உறழ்வும், அட் ன்
கட் டந்நீ ளலு ம் வேற்றுமை.

[பனை (என்னும்பெயர்) முன் கொடி (என்னும்பெயர்) வரும்ஆயின், வந்தது மிகுதலும்; க, ச, த, பக்கள் வரின் (நிலைமொழி ஈற்று) ஐகாரங் கெட்டு, அம்பெறுதலும்; திரள் (என்னும் பெயர்) வரும்ஆயின் வந்தது மிகுந்தும், தம்முள் உறழ்தலும்; அட்டு (என்னும் பெயர்) வரும்ஆயின் ஐகாரங் கெட, வருமொழி அகரம் ஆகாரம் ஆதலும், ஆம்வேற்றுமைக் கண்.]

(உ-ம்.) 1. பனை + கொடி = பனைக்கொடி.
2. பனை + காய்&c. = பனங்காய், பனஞ்செறும்பு, பனந்துண், பனம்பழம்.
பனை + திரள் = பனைத்திரள்.
பனை + அட்டு = பனாட்டு.

உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

# நன்னூல்.

## I. எழுத்ததிகாரத்தில்

## (IV.) மெய்யீற்றுப்புணரியல்.

### § க. மெய்யீற்றின் முன்உயிர்.

**204.** NATURAL COMBINATION: GENERAL RULE.

[மெய்யீற்றின்முன் உயிர்வந்து புணரும் ஆறு.]

௨௦௪. உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே.

[வி. 19

[(நிலைமொழி ஈற்றில் நின்ற) மெய்யின்மேல் (வருமொழிமுதல்) உயிர் வந்து ஒன்றுபட்டு இணங்கி நிற்பது இயல்புப் புணர்ச்சியே ஆம்.]

(உ-ம்.) தோன்றல் + அழகன் = தோன்றலழகன். [அல்வழி]
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான். [வேற்றுமை.]

**205.** EXCEPTION TO (204.): CONSONANTS AFTER A SHORT MONOSYLLABLIC WORD.

[எய்தியதன்மேற் சிறப்பு விதி.]

௨௦௫. தனிக்குறில் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும்.

[வி. 29.]

[தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டித்து நிற்கும்.]

(உ-ம்.) மண் + அரிது = மண்ணரிது. [அல்வழி.]
பொன் + ஒளி = பொன்னொளி. [வேற்றுமை.]

## § ௨. மெய்யீற்றின் முன்மெய்.

**206.** ய் AFTER A CONSONANT; A DOUBTFUL RULE.

[ய ஒழிந்த பத்துமெய்முன் வரும் யகரத்திற்கு.]

௨0௬. தன் ஒழி மெய் முன் யவ் வரின் இகரந்
துன்னும் என்று, துணிநரும் உளரே.

[யகரந்தன்னை ஒழிந்த (ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்னும் பத்து) மெய்முன்னும் வந்தால், தன்முன் இகரச்சாரியை பொருந்தும் என்று அறிதிற்கொள்வாருஞ் சிலர் உள்ர்.]

(உ-ம்.) மண் + யாது = மண்ணியாது.

**207.** CERTAIN VERBAL NOUNS AND IMPERATIVES TAKE உ.

[முதனிலைத் தொழிற்பெயர்க்கும் ஏவலுக்கும்.]

௨0௭. ஞ, ண, ந, ம, ல, வ, ள, ன ஒற்று தொழிற்பெயர்,
ஏவல் வினை, நனி யவ்வன் மெய் வரின்
உவ்வுறும்; ஏவல் உறு சில சில்வழி.

[(ய, ர ழக்களை ஒழிந்த) எட்டொற்றும் இறுதி ஆகும் முதனிலைத் தொழிற்பெயரும், ஏவல்வினையும், (மேல்விதந்த) யகரம் ஒழிந்த மெய்வரும் ஆயின் பெரும்பாலும் உகரச்சாரியை இறுதிக்கண் பொருந்தும்; சில ஏவல்வினை அவ்வுகரச் சாரியையைப் பொருந்தா, சில இடங்களின்.]

(உ-ம்.) 1. உரிஞ் { + கடிது = உரிஞுக்கடிது. [அல்வழி.]
+ கடுமை = உரிஞுக்கடுமை. [வேற்றுமை.]

2. உண் + சாத்தா = உண்ணுசாத்தா.

பல், பல்லு; கல், கல்லு; வாழ், வாழு,
எனபனவும் இவைபோல்வனவும் வரும்.

**208.** CERTAIN RADICAL VERBALS IN ந்.

[நகரவீற்றுத் தொழிற்பெயர்க்குச் சிறப்பு விதி.]

௨0௮. நவ்விறு தொழிற் பெயர்க் கவ்வும் ஆம் வேற்றுமை.

[நகரம் இறுதி ஆகும் முதனிலைத் தொழிற்பெயர்க்கு (உகரச்சாரியையே அன்றி) அகரச்சாரியையும் ஆம், வேற்றுமைக்கண்.]

(உ-ம்.) பொருந் + கடுமை = பொருநக்கடுமை, பொருநுக்கடுமை.

## § ௫. ண,ன ஈற்றுச்சொற்கள்.

**209.** ண் AND ன் CHANGED INTO ட் AND ற்: SPECIAL RULE.

[ணகர னகரங்கள் புணரும் விதம்.]

உ0௯. ண,ன வல் லினம்வரட் ட,ற வும்; பிற வரின்
இயல்பும் ஆகும், வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.

[வி. 34. 35. 37. 38.]

[ணகார னகாரங்கள் வேற்றுமைக்கண் வல்லினம் வந்தால் முறையே டகாரமும், றகாரமும் ஆம், மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாம். அல்வழிக்கண் மூவினம்வந்தாலும் இயல்பே ஆம்.]

(உ-ம்.) (1.) சிறுகண் + களிறு = சிறுகட்களிறு.
பேர்அமர்க்கண் + பேதை = பேர் அமர்க்கட்பேதை. [வேற்றுமைவழி.]
பொன் + தட்டு = பொற்றட்டு.

(2.) மண், பொன். } + நீட்சி, வன்மை. [இயல்பு. வேற்றுமைவழி.]

(3.) மண், பொன். } + கடிது, நீண்டது, வலிது. [இயல்பு. அல்வழி:]

**210.** EXCEPTION TO (209.): ண் AND ன் DROPPED BEFORE ந.

[அவ்விரண்டீற்றுள் ஒரு சார்பினவற்றிற்கு எய்தியது விலக்கி, பிறிதுவிதி வகுக்கின்றது.]

உ௧0. குறில்அணை வில்லா ண,னக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

[வி. 40.]

[(தனிக்) குறில் (ஒன்றனையும்) ஒழிந்து (ஒருமொழி தொடர்மொழிகளைச்) சார்ந்த ணகார னகாரங்கள் (வருமொழிக்கு முதலாக) வந்த நகரம் (மயக்கவிதி இன்மையில்) திரிந்த இடத்து (இயல்பாகாது,) கெடுதலைப் பொருந்தும்.]

(உ-ம்.) (1.) தூண் + { நன்று = தூணன்று, நன்மை = தூணன்மை.
(2.) பயன் + { நன்று = பயனன்று. நன்மை = பயனன்மை.

**211.** EXCEPTION TO (209.): CERTAIN NOUNS IN ண்.

[ணகர இற்றுள்ளே சிலவற்றிற்கு எய்தியது விலக்கலும் பிறிதுவிதி வகுத்தலும்.]

௨௧௧. சாதி, குழூஉப், பரண், கவண், பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண், சாண், பிற
டவா கலும்ஆம் அல்வழி யும்மே.

[சாதி (பற்றியுந்,) திரள் (பற்றியும், வரும் பெயர்களும்,) பரண், கவண் என்னும் பெயர்களும் ஆனவற்றின் இறுதி (ணகரம்) வேற்றுமைக்கண்ணும் (வல்லினம்வந்தால்) இயல்பாம்; (எண்ணல் அளவை அன்றி) உணவிற்குரிய (எள்ளின் திரிசொல் ஆய) எண் (என்னும் பெயருஞ், சாண் (என்னும் நீட்டல் அளவைப் பெயரும், வல்லெழுத்துகள்வரில் திரிந்து) டகரம் ஆகலும் பொருந்தும் அல்வழிக்கண்ணும்.]

(உ-ம்.) உமண் + குடி = உமண்குடி.
பரண் + கால் = பரண்கால்.
கவண் + கால் = கவண்கால்.

எண் + கடிது = எட்கடிது [எண்கடிது ரூ. 208.]
சாண் + கோல் = சாட்கோல். [சாண்கோல்]

**212.** EXCEPTION TO (208.): CERTAIN NOUNS IN ன்.

[ன இற்றுச்சாதிப்பெயர்க்கு எய்தியது விலக்கி, பிறிதுவிதி வகுத்தல்.]

௨௧௨. னஃகான் கிளைப்பெயர் இயல்பும், அஃகான்
அடைவும் ஆகும், வேற்றுமைப் பொருட்கே.

[னகர (ஈற்றுச்) சாதிப்பெயர் (வல்லினம் வர ஈறு திரியாது) இயல்பாதலும், அகர (ச்சாரியை) பெறுதலும் ஆம், வேற்றுமைப்பொருட் (புணர்ச்சிக்) கண்.]

(உ-ம்.) எயின் + குடி = எயின்குடி, எயினக்குடி.

**213.** EXCEPTION TO (208.): THE WORD மீன்.

[மீன் என்னும் மொழியைப் பற்றிய சிறப்புவிதி.]

௨௧௩. மீன்றவ் வொடுபொரூஉம், வேற்றுமை வழியே.

[மீன் (என்னும் மொழிஇறுதி னகரம்) வேற்றுமைக்கண் (வல்லெழுத்து வரின்) றகரத்தோடு உறழ்ந்து வரும்.]

(உ-ம்.) மீன் + கண் = மீன்கண், மீற்கண்.

**214.** EXCEPTION TO (208.): THE WORD தேன்.

[தேன் என்னும் மொழியைப்பற்றிய சிறப்புவிதி.]

உகச. தேன் மொழி மெய் வரின் இயல்பு மென்மை
மேவின் இறுதி அழிவும், வலி வரின்
ஈறுபோய் வலிமெலி மிகலும் ஆம், இருவழி.

[தேன் (என்னும்) சொல் (மூவின) மெய்யும் வரின் (இறுதி னகரம்) இயல்பாதலும், மெல்லினம் வரின் அவ்விறுதி (இயல்பாதலே அன்றிக்) கெடுதலும், வல்லினம் வரின் இறுதி (இயல்பாதலே அன்றிக்) கெட வந்த வல்லினமாதல், அதற்கினமாதல் மிகுதலும் ஆம், இருவழிக்கண்ணும்.]

(உ-ம்.) தேன் { + கடிது &c. = தேன்கடிது. தேன்சிறிது. தேன்தீது. தேன்பெரிது. &c.
+ கடுமை = தேன்கடுமை. தேன்மலிவு.

தேன் + மொழி = தேமொழி.

தேன + குழம்பு = தேக்குழம்பு, தேங்குழம்பு, தேன்குழம்பு.

**215.** EXCEPTION TO (208.): THE WORD எகின்.

உகரு. மரம் அல் எகின் மொழி இயல்பும், அகர
மருவ வலிமெலி மிகலும் ஆகும்.

[மரம் அன்றிப் (பறவை ஆய அன்னத்தை உணர்த்தும்) எகின் என்னும் சொல் (வேற்றுமைக் கண்ணும் வல்லினம்வர இறுதி) இயல்பாதலும், (இருவழியும்) அகரச் சாரியையைப்பொருந்தவரும், வல்லெழுத்தாதல், அவற்றிற்கினமாதல், மிகுதலும் ஆம்.]

(உ-ம்.) எகின + கால = எகின்கால். [வேற்றுமை.]

எகின + புள் = எகினப்புள், எகினம்புள். [அல்வழி.]

எகின் + கால் = எகினக்கால், எகினங்கால்.

**216.** EXCEPTION TO (208.): THE WORDS குயின், ஊன்.

[இவ்விரண்டு மொழிகளைப்பற்றிய சிறப்பு விதி.]

உகசு. குயின், ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே.

[குயின் (என்னும்பெயரும்,) ஊன் (என்னும்பெயரும், வல்லினம்வரின் அல்வழிக்கண் இயல்பாதலே அன்றி) வேற்றுமைக்கண்ணும் இயல்பாம்.]

(உ-ம்.) குயின்கடுமை. ஊன்குறை.

**217.** EXCEPTION TO (208.): THE WORDS மின், பின், பன், கன். [COMP. 207.]

[இந்த நான்கு மொழிகளைப்பற்றிய சிறப்பு விதி.]

உகஎ. மின், பின், பன், கன் றொழிற் பெயர் அனைய;
கன், அவ் வேற்று மென்மையோ டுறழும்.

[இந்நான்கு சொல்லுந் தொழிற்பெயர்போல (யவ்வல்) மெய்வரின் உகரச் சாரியையைப் பொருந்தும்; இவற்றுள், "கன்" என்னுஞ்சொல் உகரச் சாரியையே அன்றி, அகரச் சாரியையும் பெற்று, வல்லினம்வந்தால் வரும் எழுத்தாதல், அதற்கினம்ஆதல், மிகப்பெறும்.]

(உ-ம்.) மின் + கடிது = மின்னுக்கடிது.
பின் + கடிது = பின்னுக்கடிது.
பன் + கடிது = பன்னுக்கடிது.
கன் + கடிது = கன்னுக்கடிது.

கன் + தட்டு = கன்னார்தட்டு.
கன் + தூக்கு = கன்னார்தூக்கு, கன்னந்தூக்கு.

**218.** EXCEPTION TO (208.): THE WORDS தன், என், நின்.

உகஅ. தன், என், என்பவற் றீற்று னவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பாம் உறவே.

[("தான்" என்பது) "தன்" என்றும், ("யான்" என்பது) "என்" என்றும், (வரும் விகார) மொழிகளின் ஈற்று னகரம் வல்லினம் வரின் (பொது விதியானே றகரமாய்த் திரிதலும், அவ்விதி ஏலாது) இயல்பாதலும் ஆம். ("நீ" என்பது "நின்" (என) நின்ற விகார) மொழி ஈற்று னகரம் வல்லினம் வரில் (திரியாது) இயல்பே ஆம்.]

(உ-ம்.) தன் + பகை = தன்பகை, தற்பகை.
என் + பகை = என்பகை, எற்பகை.
நின் + பகை = நின்பகை.

§ ச. ம் ஈறு.

**219.** FINAL ம்: GENERAL RULE.

[மகரஇறு புணருஞ் செய்கை.]

உகசு. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்.
[வி. 32. 33.]

[மகர (ஈற்றுச்சொற்கள்) இறுதி மகரம் கெட (விதிஉயிர் ஈறாய் நின்று) இயல்புயிர் ஈறுபோல (உயிர்வரின் உடம்படுமெய் தோன்றவும்,) வல்லி

னம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல் பாகவும், புணர்வனவும், வல்லினம்வரில் கெடாது அவற்றிற்கு இனமாய்த் திரிவனவும் ஆம்.]

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| வட்டம். | + ஆழி = வட்டவாழி. | | காம் + கடியம் = காங்கடியம். |
| | + கடல் = வட்டக்கடல். | | கம் + கை = கங்கை. |
| | + கேமி = வட்டகேமி. | | நும் + செவி = நுஞ்செவி. |
| | + வாரி = வட்டவாரி. | | நும் + தலை = நுந்தலை. |

**220.** EXCEPTION TO (219.): SOME WORDS IN ம்.

உஉ0. வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்;
அல்வழி உயிர் இடை வரின் இயல் பும் உள.

[வேற்றுமைக்கண், மகர இறுதி கெட, (அவற்றின்முன் வரும்) வல்லின மாதல் அவற்றிற்கு இனமாதல் மிகுதலும்; அல்வழிக்கண், உயிரும் இடையினமும் வரில் கெடாது இயல்பாதலும் உளஆம்.]

(உ-ம்.) குளம் + கரை = குளக்கரை, குளங்கரை.
பழம் + சாறு = பழச்சாறு, பழஞ்சாறு.

**221.** EXCEPTIONS TO (219.): நும், தம், எம், நம்.

உஉக. நுந், தம், எம், நம், ஈறு மவ்வரு ஞ, ந, வே.

[இந்நான்கு (விகார மொழிகள்) ஈற்று மகரம், மேல் வரும் ஞ, நக்கள் ஆகத் திரியும்.]

(உ-ம்.) நும் + ஞாண் = நுஞ்ஞாண்.
தம் + நூல் = தந்நூல்.
எம் + நாள் = எந்நாள்.
நம் + ஞாணம் = நஞ்ஞாணம்.

**222.** EXCEPTION TO (219 ): THE WORD அகம்.

உஉஉ. அக முனர்ச் செவி, கை, வரின் இடை யன கெடும்.

[அகம் (என்னும் இடைப்பெயர்) முன்னர்ச் செவி, கை (என்னும் சினைப்பெயர்) வரின் (நிலைமொழி இறுதிமகரம் வன்மைக் கினமாத் திரி தலே அன்றி, அதன்) இடைநின்ற ககர (ஒற்று)ம் (அதனை ஊர்ந்த அகர உயிருங்) கெடும்.]

(உ-ம்.) அகம் + கை = அங்கை.
அகம் + செவி = அஞ்செவி.

**223.** EXCEPTION TO (219.): THE WORDS ஈம், கம் AND உரும். [COMP. 207.]

உஉஙு. ஈமுங், கம்மும், உருமுந், தொழிற்பெயர் மானும்,
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

[இம்மூன்று சொல்லும் (இருவழியும் முதனிலைத்) தொழிற் பெயர் போல (யவ்வன்மெய் வரின் உகரச் சாரியை பெற்று) முடியும்; (இவற்றுள்,) முதற் கணின்ற ஈமும், கம்மும் வேற்றுமைக்கண் (உகரச் சாரியை அன்றி) அகரச் சாரியையும் பெறும்.]

(உ-ம்.) ஈம் + கடிது = ஈமுக்கடிது.
ஈம் + குடம் = ஈமக்குடம்.
கம் + குடம் = கம்மக்குடம்.

## § ரு. ய், ர், ழ் ஈறு.

**224.** FINAL ய், ர், ழ்.

[ய, ர, ழக்கள் க, ச, த பக்களோடு புணரும் ஆறு.]

உஉச. ய,ர,ழ முன்னர்க் க,ச,த,ப அல்வழி
இயல்பு மிகலும் ஆகும்; வேற்றுமை
மிகலும், இனத்தோ டுறழ்தலும், விதிமேல்.
[வி. 30.]

[இம்மூன்று ஈற்றின் முன்னுங் க,ச,த, பக்கள் வரின், அல்வழிக்கண், இயல்பாதலும், மிகுதலும்; வேற்றுமைக்கண், மிகுதலும், வல்லினமாதல் மெல்லினமாதல் மிகுதலும் விதி ஆம்.]

(உ-ம்.) (1.) வேய் + கடிது = வேய்கடிது. மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி.
வேர் + சிறிது = வேர்சிறிது. கார் + பருவம் = கார்ப்பருவம்.
வீழ் + பெரிது = வீழ்பெரிது. கூழ் + தண்ணீர் = கூழ்த்தண்ணீர். } [அல்வழி.]

(2.) காய் + கால் = காய்க்கால். | வேய் + குழல் = வேய்ங்குழல், வேய்க்குழல்.
தேர் + கால் = தேர்க்கால். | ஆர் + கோடு = ஆர்ங்கோடு, ஆர்க்கோடு.
பூழ் + கால் = பூழ்க்கால். | } [வேற்றுமை.]

**225.** THE WORDS தமிழ் AND தாழ்.

[இந்த இரண்டு சொற்களுக்கு எய்தாதது எய்துவிக்கிறது.]

உஉரு. தமிழ் அவ் வுறவும் பெறும், வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமேல் அற்றே.

["தமிழ்" என்னும் சொல் நாற்கணமும் வரின்
ரச் சாரியையைப் பொருந்தவும் பெறும்; "தாழ்" என்னுஞ் சொல்லுங்

"கோல்" என்னுஞ் சொல்வந்து பொருந்துமாயின் அவ்வகரச் சாரியை யைப் பெறும்.]

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| தமிழ் + | அரசன் | = | தமிழரசன். |
| | பல்லவதரையர் | = | தமிழப்பல்லவதரையர். |
| | நாகன் | = | தமிழநாகன். |
| | வளவன் | = | தமிழ வளவன். |
| தாழ் + | கோல் | = | தாழக்கோல். |

**226.** SPECIAL RULE REGARDING THE WORD கீழ்.

௨௨௬. கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்.

["கீழ்" (என்னும் சொல்) முன் (வரும்) வல்லினம் (ஒருகால் இயல்பாகியும், ஒருகால் மிக்கும்வரும்,) விகற்பத்தையும் பொருந்தும்.]

(உ-ம்.) கீழ் { + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்.
+ சாதி = கீழ்சாதி, கீழ்ச்சாதி.

§ ௬. ல், ள், ஈறு.

**227.** ல் AND ள் CHANGED INTO ற் AND ட், OR INTO ன் AND ண், OR UNALTERED.

[ல,ளக்களின் புணர்ச்சி.]

௨௨௭. ல,ள,வேற் றுமையில் ற,டவும்; அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரின் ஆம்; மெலி
மேவி ன,ண,வும், இடைவரின் இயல்பும்,
ஆகும் இருவழி யானும், என்ப.

[வி. 34. 35.]

[லகார ளகாரம் (ஆன இரண்டீறும்) வல்லினம் வரின், வேற்றுமைக்கண் (முறையே) றகார டகாரங்கள் ஆம்; அல்வழிக்கண்ணே றகார டகாரங்களுடனே உறழ்வன ஆம்; இருவழிக்கண்ணும் மெல்லினம் வரின் னகார ணகாரங்கள் ஆம்; இடைஇனம் வரின் இயல்பாம், என்று சொல்லுவர் (புலவர்.)]

(உ-ம்.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1.) | கல் | + | குறை | = | கற்குறை. | [வேற்றுமை.] |
| | முள் | + | குறை | = | முட்குறை. | [வேற்றுமை.] |
| (2.) | கல் | + | குறிது | = | கல்குறிது, கற்குறிது. | [அல்வழி.] |
| | முள் | + | சிறிது | = | முள்சிறிது. முட்சிறிது. | [அல்வழி.] |
| (3.) | கல் | + | மேல் | = | கன்மேல். | [வேற்றுமை.] |
| | முள் | + | மேல் | = | முண்மேல். | [வேற்றுமை.] |
| | கல் | + | மலை | = | கன்மலை. | [அல்வழி.] |
| | முள் | + | முடி | = | முண்முடி. | [அல்வழி.] |

(4.) கல் + யாது = கல்யாது.
முள் + வலிது = முள்வலிது. } [அல்வழி.]

கல் + யாப்பு = கல்யாப்பு
முள் + வன்மை = முள்வன்மை. } [வேற்றுமை.]

---

**228.** ல் AND ள் INTO ஃ: SUPPLEMENTAL TO (227)

[இவ்விரு ஒற்றினுக்கும் எய்தியதன்மேல் சிறப்பு விதி.]

உஉஅ. குறில்வழி ல,ளத்த அணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே.
[வி. 37. 38.]

[(தனிக்) குறிலின் பின் (னின்ற) லகர ளகரங்கள் அல்வழிக்கண்ணே தகரம் வரும் ஆயின் (றகர டகரங்கள் ஆகத்திரிதலே அன்றி) ஆய்தம் ஆகத் திரிதலையும் பொருந்தும்.]

(உ-ம்.) கல் + தீது — கஃறீது.
முள் + தீது = முஃடீது.

---

**229.** EXCEPTION TO (227.): ல் AND ள் BEFORE த AND ந

[எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.]

உஉகூ. குறில்செறி யா ல,ள, அல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடும், ஈர் இடத்தும்
வரு நத் திரிந்தபின் மாய்வும், வலி வரின்
இயல்புந், திரிபும், ஆவன உள பிற.
[வி. 37. 38. 39.]

[(தனிக்) குறில் (ஒன்றனையுஞ்) சாராது வரும் லகார ளகாரங்கள், அல்வழிக்கண் வந்த தகரந் திரியும் இடத்துக் கெடுதலும்; இருவழிக் கண்ணும், வந்த நகரந் திரியும் இடத்துக் கெடுதலும்; வல்லினம் வரின், (அல்வழிக்கண், உறழாது) இயல்பாதலுந், திரிதலும், (வேற்றுமைக்கண் திரியாது இயல்பாதலும்,) பொருந்துவன உள.]

(உ-ம்.) (1.) வேல் + தீது = வேறீது
வாள் + தீது — வாடீது. } [அல்வழி.]

(2.) வேல் + நன்று = வேனன்று.
வாள் + நன்று = வாணன்று } [அல்வழி]

வேல் + நன்மை — வேனன்மை
வாள் + நன்மை — வாணன்மை } [வேற்றுமை]

(ப.) கால் + கடிது = கால்கடிது.
தேன் + சிறிது = தேன்சிறிது.

---

அழுகல் + காய் = அழுகற்காய்.
வாள் + படைக்கையன் = வாட்படைக்கையன்.

---

**230.** VERBAL NOUNS IN ல், ள். [COMP. 207.]

உ௱O. ல,ள,இறு தொழிற்பெயர் ஈர் இடத்தும் உவ்வுறு
வலி வரின்; அல்வழி இயல்பும் ஆவன உள.

[லகாரத்தை இறுதி ஆகவுடைய (விகுதி பெற்ற) தொழிற்பெயரும், ளகாரத்தை இறுதி ஆகவுடைய (முதனிலைதிரிந்த) தொழிற்பெயரும் (முதனிலைத்தொழிற்பெயர்போல யவ்வல் மெய்வரின் உகரம் பெறுமோ பெருவோ என்று ஐ உறற்க:) இருவழியும் உகரம் பெருவாம்; (வல்லினம் வரின்) அல்வழிக்கண் (உறழாது) இயல்பாவனவும் சிலஉள.]

(உ-ம்.) ஆடல் + கடிது = ஆடற்கடிது, ஆடல்கடிது.
கோள் + கடிது = கோட்கடிது, கோள்கடிது. } [அல்வழி.]

---

ஆடல் + கடுமை = ஆடற்கடுமை.
கோள் + கடுமை = கோட்கடுமை. } [வேற்றுமை.]

---

ஆடல் + நன்மை = ஆடனன்மை.
கோள் + நன்மை = கோணன்மை.

---

**231.** EXCEPTION TO (227.): THE WORD வல். [COMP. 207.]

[எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.]

உ௱க. வல்லே தொழிற்பெயர் அற்றிரு வழியும்;
பலகை,நாய் வரினும் வேற்றுமைக் கவவும் ஆம்.

["வல்" (என்னும் சூதாடு கருவிப்பெயர் அவ்வல் மெய்வரின்) தொழிற்பெயரே போல (இருவழியும் உகரச் சாரியை) பெறும்; பலகை, நாய் (என்னும் இருபெயர்) வரினும், (பிறபெயர் வரினும்,) வேற்றுமைக்கண் அகரச் சாரியை (யும் உகரச் சாரியையும்) பெறும்.]

(உ-ம்.) (1.) வல் + கடிது = வல்லுக்கடிது. [அல்வழி.]
வல் + கடுமை = வல்லுக்கடுமை. [வேற்றுமை.]

---

(2.) வல் + பலகை = வல்லப்பலகை, வல்லுப்பலகை.
(3.) வல் + நாய் = வல்லநாய், வல்லுநாய்.

**232.** EXCEPTION TO (227.): THE FOUR WORDS நெல், செல், கொல் AND சொல்.

உ௬உ. நெல்லுஞ், செல்லுங், கொல்லுஞ், சொல்லும்,
அல்வழி யானும் றகரம் ஆகும்.

[இந்நான்கு சொல்லும் (வல்லினம் வரின் பொதுவிதியான் உறழாது, அல்வழிக் கண்ணும் வேற்றுமைபோல) றகரமாய்த் திரிந்து முடியும்.]

(உ-ம்.) நெற் கடிது | கொற்கடிது
செற் கடிது | சொற்கடிது.

**233.** EXCEPTION TO (227.): இல் FOLLOWED BY ஐ AND ஆ.

உ௬௩. இல்லென் இன்மைச் சொற்கை அடைய
வன்மை விகற்பமும், ஆகா ரத்தொடு
வன்மை ஆகலும், இயல்பும் ஆகும்.

[(இல்லிடத்தை உணர்த்தாது) இன்மைப் பண்பை உணர்த்தி நிற்கும் "இல்" என்னும் சொற்கு ஐகாரச் சாரியை பொருந்த (அவ்வழி வரும்) வல்லினம் விகற்பித்தலும், ஆகாரச் சாரியை பொருந்த (அவ்வழி வரும்) வல்லினம் மிகுதலும், (இவ்விரு விதியும் பெறாது) இயல்பாதலும் பொருந்தும்.]

(உ-ம்) இல் + பொருள் = இல்லைபொருள், இல்லைப்பொருள்
இல் + பொருள் = இல்லாப்பொருள்.
இல் + பொருள் = இல்பொருள்.

**234.** EXCEPTION TO (227.): THE WORDS புள் AND வள். [COMP. 207.]

உ௬௪. புள்ளும், வள்ளுந், தொழிற்பெயரு மானும்.

[இவ்விரு சொற்களும் (இருவழியும் யவ்வல் மெய்வரின் பொது விதியான் முடிதலே அன்றித்) தொழிற்பெயர் போல (உகரச் சாரியை பெற்றும்) புணரும்.]

(உ-ம்.) புள் + கடிது, கடுமை = புள்ளுக்கடிது, புள்ளுக்கடுமை.
வள் + கடிது, கடுமை = வள்ளுக்கடிது, [வள்]ளுக்கடுமை.

## § எ. வ், ஈறு.

**235.** DEMONSTRATIVES IN வ்: SPECIAL RULE.

[வகர இற்றுச் சுட்டுப்பெயர் மூவினத்தோடு புணருஞ் செய்கை.]

உ௬௫. சுட்டு வகர மூ வினம் உற முறையே
ஆய்தமு மென்மையும், இயல்பும் ஆகும்.

[("அவ்," "இவ்," "உவ்" என்னும் அஃறிணைப் பன்மைச்) சுட்டு (ப்

பெயர் ஈற்று) வகரம் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வரமுறையானே ஆய்தமும், வரும் மெல்லினமும், இயல்பும் ஆம்.]

(உ-ம்.) அவ் + கடிது = அஃகடிய.
அவ் + ஞானம் = அஞ்ஞானம்.
அவ் + யானை = அவ்யானை.

---

**236.** THE WORD தெவ்: SPECIAL RULE. [COMP. 207.]

[தெவ் என்னும் மொழி யவ்வல்லாத மெய்களோடு புணருஞ் செய்கை.]

உ௱௬. தெவ்வென் மொழியே தொழிற்பெயர் அற்றே;
மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்.

[“தெவ்” என்னும் சொல் (யவ்வல் மெய்யோடு புணரும் இடத்துத்) தொழிற்பெயர்போல உகரச் சாரியை பெற்று முடியும்; (அவற்றுள்) மகரம் வருங்கால் (உகரச் சாரியை பெறுதலே அன்றி, ஒரோவழி ஈற்று) வகரம் மகரமாகத்திரியவும் பெறும்.]

(உ-ம்.) (1.) தெவ் + கடிது = தெவ்வுக்கடிது.
(2.) தெவ் + மன்னர் = தெம்மன்னர்.

**237.** CHANGES IN THE INITIAL OF THE SECOND WORD IN A COMPOUND. த AND ந AFTER ன, ல AND ண, ள.

[வருமொழிக்கு முதலாகிய மெய்களுள் திரிதற்கு உரியன இவை.]

உ௱௭. ன, ல முன் ற, ன வும்; ண, ள, முன் ட, ண வும்;
ஆகுந் த, நக்கள் ஆயுங் காலே.

[வி. 37. 38. 39.]

[னகர லகரங்கள் முன்னர் வருந் தகரம் றகரமாம்; அவற்றின் முன்னர் வரும் நகரம் னகரம்ஆம்; ணகர ளகரங்களின் முன்னர் வருந் தகரம் டகரம் ஆம்; அவற்றின் முன்னர்வரும் நகரம் ணகரம்ஆம், ஆராயுங்காலத்து.]

(உ-ம்.)
(1.) த { பொன் + தீது, தீமை = பொன்றீது, பொற்றீமை.
கல் + தீது, தீமை = கற்றீது, கற்றீமை.
மண் + தீது, தீமை = மண்டீது, மண்டீமை.
முள் + தீது, தீமை = முட்டீது, முட்டீமை.
(2.) ந { பொன் + நன்று, நன்மை = பொன்னன்று, பொன்னன்மை
கல் + நன்று, நன்மை = கன்னன்று, கன்னன்மை.
மண் + நன்று, நன்மை = மண்ணன்று, மண்ணன்மை.
முள் + நன்று, நன்மை = முண்ணன்று, முண்ணன்மை.
} [இருவழியிலும்.]

## § ௪. புறனடை.

**238.** GENERAL RULE IN REGARD TO MEMBERS OF WORDS. THE RULES LAID DOWN IN THE NEXT CHAPTER ARE ANALOGOUS TO THOSE IN THIS AND THE PRECEDING CHAPTERS.

உ௱௩௮. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

[மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியும் முடிபுகள் அப்பொருட் புணர்ச்சிக் கண்ணும் ஒக்கும்.]

(உ-ம்) எல்லாவற்றதும. சூ 315 காண்க. [எல்லா + அற்று + அது + உம்.]
எல்லாவற்றுக்கோடும் எனப் பொருட்சந்தியிலும் அற்று எ-ம், உம் எ-ம் வந்தன.

---

**239.** ANALOGY AND THE "USUS LOQUENDI" TO BE OUR GUIDES IN ANOMALIES AND CASES NOT SPECIFIED.

[இப்புணரியலுக்கு ஆவதோர் புறனடை.]

உ௱௩௯. இடை, உரி, வடசொலின், இயம்பிய கொளாதவும்
போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

[இடைச் சொல்லினும், உரிச் சொல்லினும், வடசொல்லினும், (உயிர் ஈறும் ஒற்றீறும் ஆன புணரியலில், தோன்றல் திரிதல் கெடுதல் இயல் பென) ஓதிய புணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், இலக்கணப்போலி மொழிகளும், மரூஉமொழிகளும், (இருவகை வழக்கினும் நடக்கும் முறைமை அறிந்து, அதற்குப்) பொருந்தும் ஆறு புணர்க்கை அறிவுடையோர் எல்லார்க்கும் முறைமை.]

(உ-ம்.) ஆன்கன்று [வேற்றுமைப்புணர்ச்சியிலே இடைச்சொல் இயல்பாயிற்று. சூ. 216]
நடகதோன் [உரிச்சொல் முன் மெலி மிகுந்தது.]
தனதடம். [வடசொல் முன் வலி இயல்பாயிற்று]
இல்முன் எ-கு முன்றில். [இலக்கணப்போலி.]
அவிகள் தந்தை எ-கு அவெச்சை. [மரூஉமொழி.]

---

மெய்யீற்றுப்புணரியல் முற்றிற்று.

# நன்னூல்.

## I. எழுத்ததிகாரத்தில்

### (V.) உருபு புணரியல்.

[இஃது வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் ஆறு கூறுவது.]

### § க. உருபுகள்.

**240.** THE FORTY INFLECTIONAL PARTICLES. THE TERM OF THE NOM. IS COUNTED. 8 x 5=40.

[ எட்டுருபுகள் சாரும் இடவகையால் இத்துணைத்தென்பது. ]

உசo. ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல, என
வருபெயர் ஐந்தொடு, பெயர்முதல் இருநான்
குருபும் உறழ்தர நாற்பதாம் உருபே.
[வி. 55.]

[இப்பாற் பொருளின என்று கருத வரும் ஐந்து பெயருடனே, (எழுவாய் வேற்றுமையான) பெயர்முதலாக (விளி ஈறாக நின்ற) எட்டு உருபினையும், உறழ (வேற்றுமை) உருபுகள் நாற்பதாம். ]

(உ-ம்.) நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ, என் ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர்திணை, ஆண்பால் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன. மற்றவைகளும் இப்படியே.

**241.** SIGNS OF CASE, WHERE PLACED AND FOR WHAT PURPOSE.

[ வேற்றுமை உருபுகள் வருதற்குக் காரணமும் வரும் இடமும். ]

உசக. பெயர்வழித் தம்பொருள் தர வரும் உருபே.

[(வேற்றுமை) உருபுகள் தம்பொருளைத் தரப், பெயர்க்குப்பின் வரும்.]

**242.** THESE TERMINATIONS COMBINE WITH NOUNS ACCORDING TO THE PRECEDING RULES: GENERAL RULE.

[ஐம் முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழியோடு புணரும் ஆறு.]

உசஉ. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

[(தொகாநிலையாய (சூ. 415.) வேற்றுமைப் புணர்ச்சிக்கண், இடையே நின்று நிலைமொழியோடும், வருமொழியோடும், புணரும்) ஒற்றுயிர்களை முதலும் ஈறும் ஆக உடைய (ஐம்முதலிய) வேற்றுமை உருபு ஆறும், (இடைச்சொல்லேனும் இயல்பொடு விகாரத்தியையும்) புணர்ச்சி வகையால் பெரும்பாலும் ஒக்கும், (போன இரண்டியல் உள்ளும்) வேற்றுமைப் புணர்ச்சிக்கண் (இயல்பொடு விகாரத்தியைந்த ஒற்றுயிர் முதல் ஈற்றுப் பெயர்களை.)]

(உ-ம்.) நம்பிகண் வாழ்வு. [சூ. 159. 209. இயல்பாயின.]
பழிக்கஞ்சி. [சூ. 165. ககரம் இரட்டித்தது.]

§ உ. சாரியை.

**243.** THE USE OF EUPHONIC INCREMENTS: *சாரியை.*

[சிறப்புவிதி: சாரியை வரும் ஆறு.]

உசங. பதமுன் விகுதியும், பதமும், உருபும்,
புணர்வழி ஒன்றும் பலவுஞ் சாரியை,
வருதலுந் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.
[வி. 108.]

[பதத்தின்முன் விகுதியேனும், பதமேனும், உருபேனும், புணரும் இடத்துச் சாரியை ஒன்றேனும், பலவேனும், வருதலும் வராதொழிதலும், இவ்விரண்டுமொகிய விகற்பமும் ஆம்.]

**244.** A LIST OF SEVENTEEN GENERAL INCREMENTS.

[சாரியை இவை என்கின்றது.]

உசச. அன், ஆன், இன், அல் அற்றிற் றத்தம்
தம், நம, நும், ஏ, அ, உ, ஐ, கு, ன,
இன்ன பிறவும், பொதுச்சா ரியையே.
[வி. 108.]

[அன்னும், ஆனும், இன்னும், அல்லும், அற்றும், இற்றும், அத்தும், அம்மும், தம்மும், நம்மும், நும்மும், ஏயும், அவ்வும், உவ்வும், ஐயும்,

குவ்வும், னவ்வும், இவைபோல்வன பிறவும், (விகுதி, பதம், உருபு என்னும் மூன்று புணர்ச்சிக்கண்ணுந், தனிமொழிக்கண்ணும் வருதலிற்) பொதுச்சாரியை என்னும் பெயரவாம்.]

(உ-ம்.)

| | |
|---|---|
| ஒன்றன்கூட்டம். [அன்.] | ஒருபாற்கு. [ஆன.] |
| வண்டின்கால். [இன்] | தொடையல். [அல்] |
| பலவற்றை. [அற்று.] | பதிற்றுப்பத்து. [இற்று.] |
| மாத்திலே. [அத்து.] | புளியங்காய். [அம்.] |
| எல்லார் தம்மையும். [தம்.] | எல்லார் நம்மையும். [நம்.] |
| எல்லீர் நுமமையும். [நும்.] | கலனே தூணி. [ஏ] |
| நடந்தது. [அ.] | சாத்தனுக்கு. [உ.] |
| பண்டைக்கால். [ஐ.] | உய்குவாய. [கு.] |
| ஆன்கன்று. [ன.] | அவன றனையும். [தன.] |
| அவனருன். [தான.] | அவர்தாம். [தாம்.] |
| புற்றுஞ்சோறு. [ஆம.] | |

## § ௩. சிறப்புவிதிகள்.

### 245. THE DECLENSION OF எல்லாம்.

[ நிலைமொழியோடு உருபு புணர்தற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி. ]

உசரு. எல்லாம் என்ப திழிதிணை ஆயின்
அற்றோ டுருபின் மேலும் உறுமே;
அன்றே னம்மிடை அடைந்தற் றுகும்.

[வி. 67.]

["எல்லாம்"(என்னும் பொதுப்பெயர்) அஃறிணைக்கண் ஆனகாலை அதனோடு (ஆறு) உருபும் புணரின், இடையே அற்றுச் சாரியையும், உருபின் மேல் முற்றும்மையும் பெறும்; உயர்திணைக்கண் ஆனகாலை இடையே நம்முச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும்.]

(உ-ம்.) எலலாம், எல்லாவற்றையும் முதல்.
எல்லா நம்மையும் முதல்.

### 246. THE DECLENSION OF எல்லாரும், எல்லீரும்.

உசசு. எல்லாரும், எல்லீரும், என்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்,நும், சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.

[வி. 67.]

["எல்லாரும்" (என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயரோடும்),"எல்லீரும்" (என்னும்முன்னிலைப் பொதுப் பெயரோடும் ஆறு உருபும் புண

ரும் இடத்து) அவ்விருபெயரின் இறுதிகளினின்ற (முற்) றும்மைகளைத் தள்ளி, (அந்நிலைக் களங்களில்) படர்க்கைப் பெயர்க்குத் தம்முச் சாரியையும், முன்னிலைப்பெயர்க்கு நும்முச் சாரியையும் பொருந்த, அவற்றால் தள்ளுண்ட (முற்)றும்மைகள் உருபின்பின்னே வந்துபொருந்தும்.]

(உ-ம.) எல்லார் தம்மையும். எல்லாரையும். } எனைவற்றோடும். இவ்வாறு ஒட்டுக.
எல்லீர் நும்மையும் எல்லீரையும். }

---

**247.** THE DECLENSION OF THE PERSONAL AND REFLEXIVE PRONOUNS.

௨௪௭. தான், தாம், நாம், முதல் குறுகும்; யான், யாம்,
நீ நீர், என், எம், நின், நும், ஆம் பிற
குவ்வின் அவ்வரு' நான்கா' றிரட்டல்.

[வி. 72-74.]

[(இங்ஙனம் கூறிய இருதிணைப்பொது ஆய மூவிடப்பெயர் ஏழோடும் ஆறு உருபும் புணரும் இடத்து,) "தான்," "தாம்," "நாம்" என்னும் மூன்று பெயரும் (நெடில்) முதல் குறுகி, (முறையே "தன்னை," "தம்மை," "நம்மை" என) வரும்; "யான்," "யாம், நீ, நா (என்னும் நான்குபெயரும் முறையே) "என்னை," "எம்மை," "நின்னை," "நும்மை" என வரும்; இவ்வேழு பெயரோடும் குவ்வுருபு புணரும் இடத்து இடையே ("தனக்கு" என) அகரச் சாரியை வரும்; குவ்வுருபின் அகரச் சாரியை வரினும் ஆறும் உருபுயிர்கள் வரினும் (இவ்வேழு விகாரமொழிகளின் இறுதிய ஆயதனிக் குறில்முன்) ஒற்றுக்கள் இரட்டாவாம்.]

---

**248.** THE DECLENSION OF ஆ, மா, கோ: EUPHONIC INSERTION OF ன்.

[இப்பெயர்களைப்பற்றிய சிறப்புவிதி.]

௨௪௮. ஆ, மா, கோ, ன அணையவும் பெறுமே.

[வி. 65.]

["ஆ" (என்னும் பெயரும்,) "மா" (என்னும் விலங்கின் பொதுப்பெயரும்,) "கோ" (என்னும் இறைவனை உணர்த்திநிற்கும் பெயரும், உருபுகள் புணரும் இடத்து,) ன(கரச்சாரியை) பொருந்தவும் பெறும்.]

(உ-ம்.) ஆ, ஆனை. [ஆவினை.] ஆனுக்கு. [ஆவினுக்கு. ஆவுக்கு.]
கோ, கோனை. [கோவை.]
மா, [மாவை.]

**249.** THE DECLENSION OF CERTAIN NOUNS OF NUMBER IN POETRY.

[செய்யுளிலே, சில எண்ணுப்,பெயர்களைப்பற்றிய சிறப்புவிதி.]

உசகூ. ஒன்று முதல் எட் டீறும் எண் ணூர்
பத்தின் முன் ஆன் வரிற் பவ்வொற் றொழிய, மேல்
எல்லாம் ஓடும்; ஒன்பதும் இற்றே.

[வி. 159.]

[ஒன்றுமுதல் எட்டீறும் எண்களோடு புணர்ந்த பத்தென்னும் எண் முன்னர் (உருபுகள் புணரும் இடத்து இடையே) ஆன்சாரியை வரின், (அப்பத்தென்னும் எண்ணினது) பகர ஒற்றொன்றுமே நிற்க, மேல் நின்ற எல்லா எழுத்தும் கெடும்; ஒன்பதென்னும் எண்முன்னரும் உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியை வரின், அதன்பகர ஒற்று நிற்க, மேல் நின்ற எல்லா எழுத்துங் கெடும்.]

(உ-ம்.) ஒருபது, ஒருபானை. [ஒருபதை. ஒருபஃதை.]
இருபது, இருபானுக்கு. [இருபதை. இருபஃதை.]

ஒன்பது, ஒன்பானை. [ஒன்பதை. ஒன்பஃதை.]

**250.** THE DECLENSION OF CERTAIN DEMONSTRATIVE PRONOUNS.

உருO. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

[வி. 71. 69.]

[(அஃறிணைப் பன்மையவாய) வகர ஈற்று (மூன்று) சுட்டுப்பெயர்க்கும் (உருபுகள் புணரும் இடத்து) அற்றுச் சாரியை பொருந்தல் முறைமை ஆம்.]

(உ-ம்.) அவை, அவற்றை, [அவற்றினை.]
இவை, இவற்றை, [இவற்றினை.]
உவை, உவற்றை, [உவற்றினை.]

**251.** THE DECLENSION OF அஃது, இஃது AND உஃது.

உருக. சுட்டின் முன் ஆய்தம் அன் வரிற் கெடுமே.

[வி. 71.]

[(அஃது, இஃது, உஃது எனவரும்) மூன்று சுட்டுப்பெயர்களோடு (உருபுகள் புணரும் இடத்து,) இடையே அன் சாரியைவரின், (மொழி முதற் சுட்டெழுத்துகள் மூன்றின் முன்னின்ற) ஆய்தங் கெடும்.]

(உ-ம்.) அஃது, அதனை, [அஃதை, அதை.]
இஃது, இதனை, [இஃதை, இதை.]
உஃது, உதனை, [உஃதை, உதை.]
} விகற்பித்து வரும்.

**252.** *அத்து* LOSES ITS INITIAL *அ*. [EXCEPTION TO (162.).]

[*பிறிது விதி.*]

உருஉ. அத்தின் அகரம்

[வி. 66.]

[*அத்துச் சாரியையின் அகர உயிர், (இய*
*கர (உயிர் ஈற்றின்) முன்வரின், (வகர உடம்படு மெய் பெறாது,) கெடும்*]

(உ-ம்.) *மரத்துக்குறை* [*மர + அத்து + குறை. அகரங்கெட்டது.*]

---

**253.** THE INCREMENT TO BE DISCOVERED BY ANALYSIS.

[*சாரியைக்காவதோர புறனடை.*]

உருரு. இதற்கிது சாரியை எனின்அள வின்மையின்,
விகுதியும் பதமும் உருபும் பகுத்திடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.

[(*விகுதிமுதலிய புணர்ச்சிக்கண்*) *இதற்கு இது சாரியை என்று வரையறுத்து விதித்தனவற்றுள்ளும், ஒழிந்தனவற்றுள்ளும், தனித்தனி சொல்லப்புகின், வரையறைப்படாமையின், விகுதிப்புணர்ச்சியினையும், பதப்புணர்ச்சியினையும், உருபுப்புணர்ச்சியினையும், கண்டுழிப் பகுத்து, இடையே நின்ற (ஏகாரம் அகரம் முதலிய) எழுத்துச் சாரியையினையும், (அன், ஆன்முதலிய) பதச் சாரியையினையும், (இவ்விரண்டு சாரியையும் தோன்றா) இயல்பினையும் தெரிய அறிவித்தல் பெரியோரது நெறி ஆம்.*]

(உ-ம்.) *என்றிசினோர் = என்று + சின + ஓர்* சூ. 356. 373. 394.
*ஆதலால் இகரம் ஆனது சாரியை எனக்கொள்க.*
*தனதை, எனச் சாரியை இன்றி இயல்பாய் வந்தது.*

---

**254.** THESE RULES TO BE APPLIED WITH DISCRIMINATION.

[*நான்கின் புணர்ச்சிக்கு ஆவதோர் புறனடை.*]

உருச. விகுதி பதஞ்சா ரியைஉரு பனைத்தினும்
உரைத்த விதியுள் ஓர்ந் தொப்பன கொளலே.

[*விகுதியே, பதமே, சாரியையே, உருபே என்னு நான்கின் புணர்ச்சிக்கண்ணும் (விதிகள் பொதுப்படக் கூறப்பட்டவேனும், அவ்) விதிக*

ளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும், இவ்விதி இதற்குப் பொருந்தாது, என உய்த்துணர்ந்து, எவ்விதி எதற்குப் பொருந்துமோ, அவ்விதி அதற்குக் கொள்க.]

(உ-ம்.) சென்று, சென்றும் என்பன இறந்தகாலமும்,
சேறு, சேறும் எனபன எதிர்காலமும் பொருந்தும்;

ஆதலால் "றவ்வொடு உகரவும்மை நிகழ்பல்லவும்" (சூ. 145.) என விதித்தார் ஆயினும் இவ்விகுதி வந்த இடத்தெல்லாம் இந்த இரண்டு காலமும் பொருந்தாது எனக்கொள்க.

---

**255.** PECULIARITIES IN COMBINATIONS OF THE SECOND CASE: EXCEPTION TO (242.)

[வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை.]

உருரு. இயல்பின் விகாரமும், விகாரத் தியல்பும்;
உயர்திணை இடத்து விரிந்துந் தொக்கும்;
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்;
அன்ன பிறவும்; ஆகும் ஐ உருபே.

[(வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொது விதியோடு தானும் ஒருங்குமுடிதலே அன்றி, அங்ஙனம் விதித்த) இயல்பின்கண் விகாரமாயும், விகாரத்தின்கண் இயல்பாயும், உயர்திணைக்கண் விரிந்துந் தொக்கும், விரவுப்பெயர்க்கண் விரிந்தும், விரிதல் ஒழிந்தும், இவைபோல்வன பிற வேறுபாடாயும் வரும், இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி.]

(உ-ம்.) (1.) வழிபடு தெய்வநிற்புறங்காப்ப. (நீன் 21௨.)
மண் கொணர்தான. (மட் 209.)

(2.) நம்பியைக் கொணர்ந்தான். நானமுகத்தெழுது. } உயர்திணைக்கண் விரிநதுந் தொக்கும் வநதன.

(3.) கொற்றனைக் கொணர்ந்தான் ஆண்பெற்றள. } விரவுப்பெயர்க்கண் விரிந்துந் தொக்கும் வநதன.

(4.) தற்கொண்டான், என உறழப்படுவது திரிந்தே வரும். [சூ. 281.]

---

**256.** PECULIAR COMBINATIONS OF THE THIRD CASE.

உருசு. புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன்
தம்மின் ஆகிய தொழின் மொழி வரினே,
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.

[(மூன்றும் வேற்றுமைப் புணர்ச்சியுள்,) ஒற்றும் உயிரும் இறுதி ஆய் நின்ற சொல்முன்னர் (க் "கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள்"

(சூ. 297.) என்பவற்றுள், கருத்தா ஆகிய நிலைமொழிப் பொருள்) தம்மால் ஆகிய தொழிற்சொல் வரின் (அங்ஙனம் வரும்) வல்லினம் (வேற்றுமைப் பொதுமுடிபேலாது) விகற்பமும் இயல்பும் ஆம்.]

(உ-ம்.) புலி கடிக்கப்பட்டான். [இயல்பு.]
பேய் கோட்பட்டான். } [விகற்பம்]
பேய்க் கோட்பட்டான்.

*257. IN CASES NOT PARTICULARIZED JUDGE BY ANALOGY.

உருஎ. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின், விதித்தவற் றியலான்
வருத்துரை யாதவும் வருத்தனர் கொளலே.

☞ இதில் விதிப்ப என்பது அகரங்குறைந்து நின்றது.

[இதற்கிது முடிபென்று (இவ்வதிகாரத்துள் விதிக்கத் தருவனவற்றை) எல்லாம் தனித்தனி வரையறுத்து விதிக்கப் புகின் அதற்கோர் வரையறை இன்மையின், வருத்து விதித்தனவற்றின் இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு, வருத்து விதி உரையாதனவற்றையுங் (கருதல்அளவையான்) வருத்து விதிஉரைத்துக் கொள்க.]

SUMMARY OF ORTHOGRAPHY.

கட்டளைக்கலித்துறை.

அடைஎண், பெயர், முறை, தோற்றம், வடிவள வாதி, அந்தம்,
இடைநிலை, போலி, என் றீரைந் தெழுத்தும், இருபதமும்,
படுபுணர் மூன்றின் இயல்பும், விகாரமுஞ், சாரியையும்,
உடன் உணர் வாரை எழுத்தறிவார் என்பர் உத்தமரே.

உருபு புணரியல் முற்றிற்று.

# நன்னூல்.

## II. சொல்லதிகாரம்.

## ETYMOLOGY.

[சொல்லதிகாரம் எ-து சொல்லினது இலக்கணத்தை உணர்த்திய அதிகாரம். இது பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், பொதுவியல் என்னும் ஐந்துறுப்புகளோடு கூடுகின்றது.]

### (I.) பெயரில். NOUNS.

[பெயரிலக்கணத்தை உணர்த்திய இயல்.]

**258.** AN INVOCATION.

[கடவுள் வணக்கம்.]

உடுஅ. மூச்சக' நிழற்று' முழுமதி முக்குடை
அச்சுதன் அடிதொழு தறைகுவன் சொல்லே.

[மூன்றுலகத்திற்கு நிழலைச்செய்யும் நிறைந்த மதிபோலும் மூன்று குடையையுடைய அழியாதவன் அடிகளை வணங்கிச் சொல்லுவன், (மேலை அதிகாரத்தில் கூறிய எழுத்தினான் ஆய) சொல்லிலக்கணத்தை.]

### § 1. சோல்.

**259.** DEFINITION OF "சொல்." THE SUBJECTS OF THE SUCCEEDING VERSES.

[சொல் எனப்பட்டது இது என உணர்த்துகின்றது.]

உடுகூ. ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி, என்று
இருதிணை, ஐம்பாற், பொருளையுந், தன்னையு
மூவகை இடத்தும், வழக்கொடு, செய்யுளின்,
வெளிப்படை, குறிப்பின், விரிப்பது சோல்லே.

[ஒருமொழியும் (சூ. 260.), தொடர்மொழியும், பொதுமொழியும் என (மூன்று கூற்றினதாய்,) இருதிணையாகிய (சூ. 261.) ஐம்பால் (சூ. 262.

263.) பொருளினையும், அப்பொருளை அன்றித் தன்னையும், மூன்றிடத்தினும் (சூ. 266.) வழக்கின்கண்ணுஞ் (சூ. 267.) செய்யுட்கண்ணும் (சூ. 268.) வெளிப்படையானுங் (சூ. 269.) குறிப்பினானும் விளக்குவது சொல்லாம்.]

**260.** SINGLE, COMPOUND AND AMBIGUOUS WORDS.

[மூவகை மொழிகள் ஆம்ஆறு.]

உ௬௦. ஒருமொழி ஒருபொரு ளனஆந்; தொடர்மொழி
பலபொரு ளன·பொது இருமையும் ஏற்பன.

[வி. 43.]

[ஒரு மொழிகளாவன: (பகாப்பதமேனும், பகுபதமேனும், ஒன்று நின்று தத்தம்) ஒருபொருளைத் தருவனஆம். தொடர்மொழிகளாவன: (அவ்விருவகைப் பதங்களுந் தன்னோடும், பிறிதோடும், அல்வழி வேற்றுமைப்பொருள்நோக்கத்தால் இரண்டு முதலியவாகத் தொடர்ந்து நின்று இரண்டு முதலிய) பலபொருளைத் தருவனஆம். பொதுமொழிகளாவன: (ஒன்றாய் நின்று, ஒருபொருள் தந்தும், அதுவே தொடர்ந்து நின்று பலபொருள் தந்தும்,) இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனஆம்.]

(உ-ம்.) (1.) நிலம், நிலத்தன, கட, கடந்தான், நில், கனி. [ஒருமொழிகள்.]
(2.) நிலம்வலிது, அதுகொல், சாலப்பகை, நிலங்கடந்தான. [தொடர்மொழிகள்.]
(3) எட்டு, தாமரை, வேங்கை. [பொது மொழிகள்.]

(எட்டு = ஓர்எண், எள்ளைத் தூ. தாமரை = ஓர்பூ, தாவுகின்றமரை. வேங்கை = புலி, வேகின்றகை. சூ. 391 காண்க.)

**261.** THE TWO CLASSES OF PERSONAL [HIGH CLASS] AND IMPERSONAL [NOT (HIGH) CLASS] NOUNS.

[இருதிணை ஆம்ஆறு.]

உ௬௧. மக்கள், தேவர், நரகர், உயர்திணை;
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.

[வி. 52.]

[மக்களுந் தேவரும் நரகரும் உயர்திணை (ஆம்); (அவரை) ஒழிந்த ("விலங்கு" முதலிய) உயிர் உள்ளனவும், ("நிலம், நீர்" முதலிய உயிர்) இல்லனவும், அஃறிணை (ஆம்.)]

**262.** DIVISIONS OF WORDS OF THE HIGHER CLASS: SINGULAR MASCULINE, SINGULAR FEMININE, AND PLURAL OF BOTH.

[ஐம்பாலுள் சில பாலும், அவற்றிற்கு உரியதிணையும்.]

**உ௬௨. ஆண், பெண், பலர் என முப்பாற் றுயர்திணை.**

[வி. 53.]

[ஆண், பெண், பலர் என்னும் இம்மூன்று பாலினையும் உடைத்து உயர்திணை.]

☞ ஆடவர் எ-து ஆண்பன்மை.
பெண்டிர் எ-து பெண்பன்மை.
மக்கள் எ-து இருபாற்பன்மை.

**263.** DIVISIONS OF THE LOWER OR IMPERSONAL CLASS: SINGULAR AND PLURAL.

**உ௬௩. ஒன்றே, பலஎன் றிருபாற் றஃறிணை.**

[வி. 53.]

[ஒன்றும், பலவும் என்னும் இரண்டு பாலினை உடைத்து அஃறிணை.]

☞ அஃறிணைக்கண்ணும் சேவல் எ-து ஆண்பாலும், பெடை எ-து பெண்பாலும் உண்டு.

**264.** EPICENES.

[திணைபால்களுக்கு ஆவதோர் புறனடை.]

**உ௬௪. பெண்மைவிட் டாண்அவா வுவபே டாண்பால்;**
**ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்;**
**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்.**

[பெண்டன்மையினை விட்டு, ஆண்டன்மையினை அவாவுவன வாகிய பேடுகள் (உயர்திணை) ஆண்பால் ஆம்; ஆண்டன்மையினை விட்டுப் பெண்டன்மையினை அவாவுவன வாகிய பேடுகள் (உயர்திணைப்) பெண்பால் ஆம்; இவ்விருவகைப் பேடுகளும் (உயர்திணை ஆம் அன்றி,) அஃறிணையை ஒப்பனவும் ஆம்.]

(உ-ம்.) "பெண்ணவாய் ஆணிழந்த பேடி அணியவோ,
நாந்தக்க கலம்?"

**265.** THE THREE PERSONS WITH THEIR VARYING திணை AND பால்.

[மூன்றிடத்துஞ் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்தும் ஆறு.]

உசரு. படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பின,
பெறப் படுந் திணை பால் அனைத்தும்; ஏனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

[வி. 54.]

(வெளிப்படைச் சொல்லாயுங், குறிப்புச் சொல்லாயும், வழக்கின் கண்ணுஞ், செய்யுட்கண்ணும் நிற்கும்) படர்க்கைவினைமுற்றுச் சொல்லையும், படர்க்கைப் பெயர்ச்சொல்லையும் முன் குறித்தால், (பின் அவ்விருவகைச்சொல்லுங் கருவியாக) இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும். ஒழிந்த தன்மை முன்னிலை வினைமுற்றுச் சொல்லையுந், தன்மை முன்னிலைப் பெயர்ச்சொல்லையும் (முன் குறித்தாற் பின்பு அந்நால்வகைச் சொல்லுங் கருவியாக இருதிணை ஐம்பாலுள்) ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் பெறப்படும்.]

(உ-ம்) நடந்தான். நடந்தாள். } நடந்தார்
நடந்தது. நடந்தன
அவன் அவள். } அவர்
அது. அவை
} இவை முன்பு தம்மை உணர்த்திப, பின்பு இருதிணை ஐம்பாலாகிய பொருள்களை உணர்த்தின.

நடந்தேன், நடந்தேம்.
நடந்தாய், நடந்தீர்
நீ, நீர்.
} இவை முன்பு தம்மையும், பின்பு ஒருமைப்பாலையும், பன்மைப் பாலையும், உணர்த்தின.

**266.** THE THREE PERSONS.

[மூவிடம் ஆம்ஆறு உணர்த்துகின்றது.]

உகசு. தன்மை, முன்னிலை, படர்க்கை மூ விடனே.

[வி. 54.]

[மூவிடம் ஆவன: தன்மையும், முன்னிலையும், படர்க்கையும் ஆம்.]

**267.** PROSE.

[வழக்கம் இன்னதென்பது.]

உகூஎ. இலக்கண முடைய திலக்கணப் போலி,
மரூஉ, என் றாகு மூவகை இயல்பும்;
இடக்கர் அடக்கல், மங்கலங், குழூஉக் குறி,
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

[இலக்கணமுடையது என்றும், இலக்கணப்போலி என்றும், மரூஉ என்றும், வழங்கும் மூவகை இயல்பு வழக்கும்; இடக்கரடக்கல் என்றும், மங்கலம் என்றும், குழூஉக்குறி என்றும், வழங்கும் மூன்று தகுதி வழக்குடனே கூட அறுவகைப்படும் வழக்கிலக்கணம்.]

(உ-ம்)
- (1) நிலம், நீர். [இலக்கணம்.]
- (2) முன்றில். (இல்முன்) புறநகர். (நகர்ப்புறம்) [இலக்கணப்போலி]
- (3) அருமந்தபிள்ளை.) (அருமருந்தன்னபிள்ளை.) சோணாடு. (சோழநாடு.) [மரூஉ]

} இயல்பு வழக்கு.

- (4) கால் கழீஇவருதும். [இடக்கரடக்கல்.]
- (5.) துஞ்சினார். (செத்தார்) நன்காடு. (சுடுகாடு.) [மங்கலம்.]
- (6.) சொல்விளம்பி. (கள்) காரை. (பார்ப்பார் ஆடை.) [குழூஉக்குறி.]

} தகுதி வழக்கு.

**268.** POETRY.

[செய்யுள் ஆமாறு உணர்த்துகின்றது.]

உகூஅ. பல்வகைத் தாதுவின், உயிர்க்குடல் போற்பல [வி. 137.*]
சொல்லாற் பொருட்கிடன் ஆக, உணர்வினின்
வல்லோர், அணிபெறச் செய்வன செய்யுள்.

[வி. 167.]

[(தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர், என்னும்) எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கிடனாக இயற்றப்பட்ட உடம்பு போல, (இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் (சூ. 271–274.) என்னும்) நால்வகைச் சொற்களாற், பொருட்கிடன் (வி. 214.) ஆகக், கல்வி அறிவினாற் செய்யுள் இயற்றவல்லோர் அலங்காரம்பெற (வி. 194.) இயற்றுவன செய்யுள் ஆம்.]

## 269. AMBIGUOUS AND UNAMBIGUOUS EXPRESSIONS.

[வெளிப்படையுங் குறிப்பும் ஆமாறு.]

உசகூ. ஒன்றொழி பொதுச்சொல், விகாரந், தகுதி, [வி. 153. 156.]
ஆகு பெயர், அன் மொழி, வினைக் குறிப்பே,
முதறொகை குறிப்போ டின்ன பிறவுங்,
குறிப்பிற் றரு மொழி; அல்லன வெளிப்படை. [வி.137.*]

[(இருதிணை ஆண் பெண்ணுள்) ஒன்றனை ஒழிக்கும் பொதுச்சொல்லும் (சூ. 393), (வலித்தல் முதலிய ஒன்பது) விகாரச் சொல்லும் (சூ. 155. 156.), (மூவகைத்) தகுதி வழக்குச்சொல்லும் (சூ. 267.), ஆகுபெயர்ச் சொல்லும் (சூ 290), அன்மொழித் தொகைச் சொல்லும் (சூ. 410), வினைக்குறிப்புச் சொல்லும் (சூ. 321.), முதற் (குறிப்புச் சொல்லும்), தொகை (க்குறிப்புச் சொல்லும்), (இம்முதறொகை அல்லாத பலவாற்றானும் வருங்) குறிப்புச் சொல்லும் (சூ. 449.), இவைபோல்வன பிறவும், குறிப்பினான் (இருதிணை ஐம்பாற்பொருளைத்) தரும் சொற்கள் ஆம்; இவை அல்லன எல்லாம் வெளிப்படையான் (அப்பொருள்களைத் தரும் சொற்கள் ஆம்.)]

(உ-ம்.) (1.) ஆயிரம் மக்கள் பொருதார். [உயர்திணை ஆண்பால்.]
(2.) இப்பெற்றங்கள் உழக்கும
இப்பெற்றம் உழவொழிந்தன.
(3) மரைபுரைசீறடி [தாமரை.]
(4) கனகாரி [சுகோரி]
(5) புளித்தின்றான் [ஆகுபெயர், புளியம்பழம்.]
(6.) சொல்லவல்லன. [வினைக்குறிப்பு]
(7) அறத்தாறிதுவென வொன்னாக்குறிப்பு. [முதற்குறிப்பு.]
(8.) ஐவர். [தொகைக்குறிப்பு, பாண்டவர்]

## 270. DIFFERENT CLASSIFICATIONS OF WORDS.

[சொல் இவ்வளவினையுடைது என்பது.]

உஎ0. அதுவே,
இயற்சொல், திரிசொல், இயல்பிற் பெயர், வினை
என இரண் டாகும்; இடை, உரி அடுத்து
நான்கும் ஆந்; திசை வட சொல் அணு காவழி.
[வி. 43.]

[மேற்காட்டிய சொல் இயற்சொல், திரிசொல் என்னும் இயல்பினையுடைய பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், என இரண்டாம்; (இவற்றுடன்) இடைச்சொல்லும், உரிச்சொல்லும் அடுத்து நான்கும் ஆம்; (இவை களோடு) திசைச்சொல்லும், வடச்சொல்லும் அணுகாத இடத்து.]

### 271. UNEQUIVOCAL PURE TAMIL WORDS.

[இயற்சொல்லிலக்கணம்.]

உ௭க. செந்தமிழ் ஆகித், திரியாதியார்க்குந்
தம்பொருள் விளக்குந் தன்மைய இயற்சொல்
[வி. 43.]

[செந்தமிழ் (நிலத்து மொழி) ஆகி, (அந்நிலத்து மொழியுள் மேற்கூறப்படும்) திரிசொற்போலாது, கற்றார்க்குங் கல்லாதார்க்கும் ஒப்பத் தம்பொருளை விளக்குந் தன்மையினையுடைய உலக வழக்கு இயற் சொல்லாம்.]

(உ-ம்.) மண், பொன். [பெயரியற்சொல்.]
நடந்தான். [வினைஇயற்சொல்.]
அவனை. [வேற்றுமையுருபு இடைஇயற்சொல்.]

### 272. EQUIVOCAL PURE TAMIL WORDS.

[திரிசொல் ஆமாறு.]

உ௭உ. ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்,
பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்,
அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்.
[வி. 43.]

[ஒரு பொருளைக் கருதிய பலசொல் ஆகியும், பலபொருளைக் கருதிய ஒருசொல் ஆகியுங், கற்றார் உணரும் பொருளவாய் வருவன திரிசொல் ஆம்.]

(உ-ம்.) (1.) கிள்ளை, சுகம், தத்தை.
[கிளி என்னும் ஒருபொருள் குறித்த பல பெயர்த்திரிசொல்.]

(2.) வாரணம்:
[யானை, சங்கு, கோழி முதலியவற்றைக் குறித்தலால் பலபொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.]

(3.) படர்ந்தான், சென்றான், ஏகினான்.
[இவை போயினான் என்னும் ஒருபொருளைக் குறித்தலால் ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல்.]

(4.) ஆர்த்தான். [சூ. 391 காண்க.]
[ஒலித்தான், கட்டினான், என்னும் பொருளைக் குறித்தலால் பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்.]

(5.) சேறும், வருதும். [சூ. 145 காண்க.]
றும், தும் என்னும் விகுதிகள் தன்மைப்பன்மை என்னும் ஒரு பொருள் குறித்த பலஇடைத் திரிசொல்.]

(6.) சொல். [சூ. 367 காண்க.]
[ஐயத்தையும், அசைநிலைபாவத்தையும் குறித்து நிற்பதால் பல பொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்.]

(7.) சால, தவ, உறு, நனி [சூ. 388 காண்க]
[மிகல் எனனும் ஒருபொருள்குறித்த பலவுரித்திரிசொல்]

(8) கடி. [சூ. 389 காண்க.]
[காப்பு, கூர்மை, விரை, விளக்கம் முதலிய பலபொருள் குறித்த ஓர் உரித்திரிசொல்.]

## 273. WORDS OF LOCAL USAGE. PROVINCIALISMS AND FOREIGN WORDS.

[திசைச்சொல் வரும்ஆறு.]

உளஙூ. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்,
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழ்ஒழி நிலத்தினுந்,
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப.
[வி. 43.]

[செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு (கொடுந்தமிழ்) நிலத்தின் கண்ணும் (பதினெண் மொழியுள், தமிழும் மேற்கூறும் வடசொற்குக் காரணம் ஆகிய ஆரியமும் ஒழிந்த) பதினாறு மொழியும் வழங்கும் பதினாறு நிலத்தின் கண்ணும், (உள்ளோர்) தங்குறிப்பினவாய் (ச் செந்தமிழோர் குறிப்பின் அன்றி, அத்திசைகளின் நின்றுஞ் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன) திசைச்சொல் என்று கூறுவர் (புலவர்.)]

### வெண்பா.

THE TWELVE DISTRICTS WHERE INFERIOR TAMIL IS SPOKEN.

[1] தென்பாண்டி, [2] குட்டங், [3] குடங், [4] கற்கா, [5] வேண், [6] பூழி,
[7] பன்றி, [8] அருவா, [9] அதன்வடக்கு,—நன்றாய
[10] சீதமலாடு, [11] புனனாடு: [12] செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்.
[இவை பன்னிரண்டுங் கொடுந்தமிழ் நாடு.]

### கலித்துறை.

THE SEVENTEEN DISTRICTS LYING AROUND THE TAMIL COUNTRY.

[1] சிங்களஞ், [2] சோனகஞ், [3] சாவகஞ், [4] சீனந், [5] துழுக், [6] குடகங்,
[7] கொங்கணங், [8] கன்னடங், [9] கொல்லந், [10] தெலுங்கங், [11] கலிங்கம், [12] வங்கம்,
[13] கங்க, [14] மகதங், [15] கடாரங், [16] கவுடங், [17] கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாம் இவையே.
[முற் குறித்வைகளைச் சூழ்ந்த தமிழ்ஒழிந்த பதினேழு தேசங்கள்.]

(உ-ம்) பகவைப் பெற்றம். [தென்பாண்டி] அச்சோ. [சிங்களம்]
சேற்றைச் சொன்றி. [குட்டம்.] பாண்டில். [தெலுங்கு]
தாயைத் தள்ளை. [குடம்.] மாமரத்தைக் கொக்கு. [துழுவம்.]

**274.** SANSCRIT WORDS.

[வடசொல் ஆமாறு.]

உஎச. பொதுஎழுத் தானுஞ், சிறப்பெழுத் தானும்,
ஈர்எழுத் தானும், இயைவன வடசொல்.

[வி. 43.]

[(ஆரியத்திற்குந் தமிழிற்கும்) பொதுஎழுத்தானும், (ஆரியத்திற்கே உரிய) சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்தானும், இவ்விரண்டினானுஞ் (செந்தமிழ்ச்சொல்லை ஒப்பன ஆகி, வடதிசைக்கணின்றுஞ் செந்தமிழ் நிலத்து வந்து) வழங்குவன வடசொல் ஆம்.]

| | | | |
|---|---|---|---|
| (உ-ம) | அமலம் | [பொது எழுத்தால்.] | AMALAM. |
| | சித்தி. | [சிறப்பெழுத்தால்.] | SIDD'HI. |
| | சலம. | [ஈரெழுத்தால.] | JALAM. |

[சூ. 146, 147 காண்க.]

## § 2. பெயர்ச்சொல்.

**275.** NOUN.

[பெயரின் பொது இலக்கணம்.]

உஎரு. இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து, தொழில்அல காலந் தோற்று,
வேற்றுமைக் கிடன்ஆய்த், திணைபால் இடத்தொன்
றேற்பவும் பொதுவும் ஆவன பெயரே.

[வி. 44. 48. 49.]

[இடுகுறியுங், காரணக்குறியும், மரபினையும், ஆக்கப்பாட்டினையுந் தொடர்ந்து, வினையால் அணையுங் காரணக்குறி ஆகிய தொழிற்பெயர் ஒன்றுங் காலந் தோற்ற அல்லன காலந் தோற்றுவாய், எட்டு வேற்றுமையுஞ் சார்தற்கிடமாய், இருதிணை ஐம்பால் மூவிடத்துள் ஒன்றனை எற்பவும், பலவற்றினை எற்பவுமாய் வருவன பெயர்கள் ஆம்.]

(உ-ம்.) (1.) மரம், கமுகு. [இடுகுறி மரபு தொடர்ந்துவந்தன. ARBITRARY-PRIMITIVES.]

(2.) பறவை. [காரணக்குறி மரபு தொடர்ந்துவந்தது. DESCRIPTIVE-PRIMITIVES.]

(3.) பாட்டினுள் குமரன பெயர் முட்டை. [இடுகுறியாக்கந் தொடர்ந்துவந்தது. ARBITRARY-DERIVATIVES.]

(4.) பொன்னன். [காரணக்குறியாக்கந் தொடர்ந்துவந்தது. DESCRIPTIVE-DERIVATIVES.]

(5.) மரம் [இடுகுறிப்பொதுப்பெயர். காரணமின்றிப்பல்வகை மரங்களைக்குறிக்கும்.]
[ARBITRARY-GENERIC.]

(6.) பனை. [இடுகுறிச்சிறப்புப்பெயர். காரணமின்றி ஓர்சாதிமரங்களைக்குறிக்கும்.]
[ARBITRARY-SPECIFIC.]

---

(7.) அணி. [காரணப்பொதுப்பெயர் பலவகை அலங்காரங்களுக்குப்பொது. அணிவதால்அணி.]
[DERIVATIVE-GENERIC.]

(8.) முடி. [காரணச்சிறப்புப்பெயர் வேந்தர் அணியும் முடிக்குச்சிறப்பு. முடிவதால் முடி.]
[DERIVATIVE-SPECIFIC.]

## 276. PERSONAL MASCULINE NOUNS, SINGULAR.

[உயர்திணை ஆண்பாலுக்குரிய பெயர்கள்.]

உஎசு. அவற்றுள்,

1 2 3 4 I 5 6
கிளை, எண், குழூஉ, முதல், பலபொருள்; திணை, தேம்,
7 8 8 8 9 II 10
ஊர், வான், அகம், புற, முதல நிலன்; யாண்
11 12 13 14 III
டிருது, மதி, நாள், ஆதிக் காலம்;
15 16 17 18 19 20 IV
தோள், குழல், மார்பு, கண், காது, முதல் உறுப்
21 22 23 24 25 26
பளவறி வொப்பு, வடிவு, நிறங், கதி,
27 28 29 30 V
சாதி, குடி, சிறப், பாதிப், பல் குணம்;
31 32 33 VI
ஓதல், ஈதல், ஆதிப் பல் வினை;
34 35 36 37
இவை அடை சுட்டு வினைப் பிற மற்றோ
டுற்றனவ் வீறு; நம்பி, ஆடூஉ,
விடலை, கோ, வேள் குரிசி றென்றல்;
இன்னன; ஆண் பெயர் ஆகும் என்ப.

[வி. 52. a.]

[(மேல் பெயரே என்றவற்றுள் இங்ஙனம் பகுத்துக் கூறிய) பொருள் ஆதி ஆறனோடும், இவற்றை அடையுஞ் சுட்டினோடும், வினாவினோடும், பிற என்பதனோடும், மற்றென்பதனோடும் பொருந்திய னகர ஈற்றுப்பெயர் களும்; "நம்பி" முதலாக எடுத்து ஓதிய (எழு) பெயர்களும்; இவை போல்வன பிறவும்; (உயர்திணை) ஆண்பாற் பெயர்கள் ஆம் என்று சொல் லுவர். (புலவர்.)]

(உ-ம்.) (1.) தமன், நமன். [கிளையால் வருபெயர்.]
(2.) ஒருவன். [எண்ணால் வருபெயர்.]
(3.) அவையத்தான். [கூட்டத்தால் வருபெயர்.]
(4.) பொன்னன். [முதல்என்பவற்றால் வருபெயர்.]
(5.) வெற்பன், மறவன். இடையன். ஊரன். சேர்ப்பன். [மலை, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணையால் வருபெயர்.]

I. இவை எல்லாம் பொருளால் வருபெயர்.

(6.) சோழியன். [தேசத்தால் வருபெயர்.]
(7.) சிறூரான். [ஊரால் வருபெயர்.]
(8.) வானத்தான், அகத்தான், புறத்தான். [வான், அகம், புறம், ஆகிய மூன்றால் வருபெயர்.]
(9.) மண்ணகத்தான். [முதல் என்பதினால் வருபெயர்.]

II. இவை இடத்தால் வருபெயர். [நிலன்.]

(10.) மூவாண்டினன்.
(11.) வேனிலான.
(12.) தையான்.
(13.) ஓணத்தான். [ஆண்டு, இருது, மதி, நாள் ஆகிய நான்கினால் வருபெயர்.]
(14.) கெருநலான். [ஆதிஎன்பதினால் வருபெயர்.

III. இவை காலத்தால் வருபெயர்.

(15.) திணிதோளான.
(16.) செம குஞ்சியான்.
(17.) வரை மார்பான்.
(18.) செம் கண்ணான.
(19.) குழைக் காதான. [தோள்முதலிய ஐந்தால் வருபெயர்.]
(20.) குறுந் தாளன். [முதல் என்பதினால் வருபெயர்.]

IV. இவை அவயவத்தால் வருபெயர். [சினை.]

(21.) பெரியன.
(22.) புலவன்.
(23.) புலியனையன்
(24.) கூனன்.
(25.) கரியன.
(26.) மானுடன்.
(27.) அரசன்.
(28.) சோழன்.
(29.) ஆசிரியன். [அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி சாதி, குடி, சிறப்பு ஆகிய ஒன்பதினால் வருபெயர்.]
(30) நல்லன. [ஆதி என்றதினால் வருபெயர்.]

V. இவை குணத்தால் வருபெயர்.

(31.) ஓதுவான்.
(32.) ஈவான. [ஓதல ஈதல் என்கிற இரண்டாலும் வருபெயர்.]
(33.) கணக்கன். [ஆதிஎன்பதினால் வருபெயர்.]

VI. இவை தொழிலால் வருபெயர். [வினை.]

(34.) இவன
(35.) எவன்
(36) பிறன்
(37.) மற்றையான். [சுட்டு, வினா, பிற மற்று என்பவற்றால் வருபெயர்.]

[சூ. 132 காண்க.]

---

**277. FEMININE PERSONAL NOUNS, SINGULAR.**

[உயர்திணைப் பெண்பாலுக்குரிய பெயர்கள்.]

உஎஎ. கிளைமுதல் ஆகக் கிளந்த பொருள்களுள்,
ளவ்வொற் றிகரக் கேற்ற ஈற்றவும்;
தோழி, செவிலி, மகடூஉ, நங்கை,
தையலோ டின்னன; பெண்பாற் பெயரே.
[வி. 52. 5.]

[(மேலைச் சூத்திரத்துக்) கிளைமுதலாகப் பகுத்துக் கூறிய அறுவகைப் பொருள்களும் ளகர ஒற்றும், இகர உயிரும் உறுதற்கேற்ற அவ்விரண்

டீற்றவாய் வரும் பெயர்களும்; "தோழி" முதலாக எடுத்தோதிய (ஐந்து) பெயர்களும்; இவற்றுடனே இவை போல்வன பிறவும்; (உயர்திணைப்) பெண்பாற்பெயர்கள் ஆம்.]

(உ-ம்.) தமள்.
ஒருத்தி.

இருளை, மாது, அரிவை, அங்கனை, மடந்தை.

**278.** PLURAL OF NOUNS OF THE HIGHER, OR PERSONAL CLASS.

[பலர்பாலுக்குரிய பெயர்கள்.]

உஎஅ. கிளந்த கிளைமுதல் உற்ற ரவ் வீற்றவும்;
கள் என் ஈற்றின் ஏற்பவும்; பிறவும்;
பல்லோர் பெயரின் பகுதி ஆகும்.

[வி. 69. 52. s.]

[மேற்கூறப்பட்ட கிளைமுதலிய அறுவகைப் பொருளையும் பொருந்திய ரகர ஒற்றீற்றுப் பெயர்களும்; கள் (என்னும் விகுதியை) ஈறாகவுடைய பெயர்களுள் ஈண்டைக்குப் பொருந்தி வருவனவும்; இவை போல்வன பிறவும்; பலர்பாலின் பெயர்கள் ஆம்.]

(உ-ம்.) தமர், இருவர்.
கோசர், மனுக்கள்.
தமர்கள், அரசர்கள்.
மாந்தர், மக்கள்.

**279.** SINGULAR OF THE LOWER OR IMPERSONAL CLASS, TAKING THE TERMINATION து.

[அஃறிணை ஒருமைக்குரிய பெயர்கள்.]

உஎகூ. வினச்சுட் டுடனும், வேறும் ஆம்பொருள்
ஆதி உறு துச்; சுட்டனை ஆய்தம்;
ஒன்றென் எண் இன்னன ஒன்றன் பெயரே.

[வி. 69.]

[வினவின் கண்ணுஞ் சுட்டின்கண்ணுங் கரந்து அவற்றுடனும், (வினவுஞ் சுட்டவும்படாது) வேறும், வரும்பொருளாதி ஆறனையும் பொருந்திய தவ்விகுதி ஈற்றுப்பெயருஞ்; சுட்டோடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய தவ்விகுதி ஈற்றுப்பெயரும்; ஒன்று என்னும் எண்ணுகு பெயரும்; இவை போல்வன பிறவும்; அகறிணை ஒருமைப் பெயர் ஆம்.]

(உ-ம்.) (1.) எது, யாது. [வினாவிலே மறைந்தது.]
(2.) இது, அது, உது. [சுட்டிலே மறைந்தது.]
(3.) குழையது, நிலத்தது, முலத்தது, கோட்டது, கரியது, ஆடலது. [வினாவுஞ் சுட்டும் படாமல், பொருள் முதலான ஆறையும் பொருந்தியது.]
(4.) அஃது, இஃது, உஃது. [சுட்டோடு கூடிய ஆய்தம்.]
(5.) ஒன்று.

---

(6.) பிறிது, அனையது, மற்றையது. [அவைபோல்வன.]

**280.** PLURAL OF THE LOWER OR IMPERSONAL CLASS, ENDING IN வை, அ, வ், கள் AND NUMERALS.

[அஃறிணைப் பன்மைக்குரிய பெயர்கள்.]

உஅ0. முன்னர் அவ்வொடு வருவை; அவ்வும்;
சுட்டிறு வவ்வுங்; கள்இறு மொழியும்;
ஒன்றல் எண்ணும்; உள்ள, இல்ல,
பல்ல, சில்ல, உள, இல பல, சில;
இன்னவும்; பலவின் பெயர்ஆ கும்மே.
[வி. 69.]

[முன்னர்க் கூறிய "வினாச்சுட்டுடனும், வேறும் ஆம்பொருள் ஆதி" ஆறனேடும், (ஏற்ற பெற்றி) வரும் வகர ஐகார ஈற்றுப் பெயர்களும்; அகர ஈற்றுப் பெயர்களும்; வகர (ஒற்று) ஈற்றுச் சுட்டுப் பெயர்களும்; கள் (என்னும் பகுதிப் பொருள் விகுதி) இறுதி ஆகிய பெயர்களும்; ஒன்றல்லாத (இரண்டு முதலிய) எண்ணுகு பெயர்களும்; "உள்ள" என்பது முதலிய (குறிப்புவினையால் அணைந்த எட்டுப்) பெயர்களும்; இவை போல்வன பிறவும்; அஃறிணைப் பன்மைப் பெயர்கள் ஆம்.]

(உ-ம்) (1.) எவை.
(2.) இவை.
(3.) செடியவை
(4) பொருள, பொருளன.
(5.) அவ், இவ்.
(6.) பார்வைகள்.
(7.) இரண்டு, மூன்று, கோடி.

**281.** OTHER NOUNS OF THE LOWER CLASS ARE EITHER SINGULAR OR PLURAL. THEY HAVE NO DISTINCTION OF NUMBER.

[அஃறிணை இருபாலுக்கும் உரிய பெயர்கள்.]

௨௮௧. பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற் பொதுமைய.

[அஃறிணைப் பெயர்களுள், (இங்ஙனம்) பால் பகுத்தலை ஒழிந்து நின்ற பெயர்கள் அனைத்தும், (அத்திணை இரு) பாற்கும் உரிய பொதுப்பெயர்கள் ஆம்.]

(உ-ம்) யானை வந்தது.
யானை வந்தன.

☞ தொல்காப. "தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே"

**282.** DIVISIONS OF NOUNS COMMON TO BOTH CLASSES.

[இருதிணைக்கும் உரிய பொதுப்பெயர்கள்.]

௨௮௨. ¹முதற்பெயர் நான்குஞ், ²சினைப்பெயர் நான்கும்,
³சினைமுதற் பெயர்ஒரு நான்கு' ⁴முறை இரண்டும்,
⁵தன்மை நான்கு' ⁶முன்னிலை ஐந்தும்,
⁷எல்லாந், ⁸தாந், ⁹தான், இன்னன, பொதுப்பேயர்.

["முதற்பெயர்" முதலான ஒன்பது கூற்றுப் பெயர்களும்; இவைபோல்வன பிறவும், (இருதிணைக்கும் உரிய) பொதுப்பெயர்கள் ஆம்.]

(உ-ம்) சூரியன உதித்தான, சூரியன உதித்தது
ஊமை வந்தான், ஊமைவந்தாள்.

[283 காண்க.]

☞ தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும் கு. 285 காண்க.]

**283.** SUBDIVISIONS OF NOUNS (282.) ACCORDING TO GENDER AND NUMBER.

[முதற் பெயர் முதல், முறைப்பெயர் இறுகக் கிடந்தவற்றைக் காரணவகையால் வகுத்தல்.]

௨௮௩. ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மையின்
ஆம் அந் நான்மைகள்; ஆண் பெண் முறைப் பேயர்.

["ஆண்மை" முதலிய இந்நான்கு பாலுங் காரணமாக, முற்கூறிய (முதற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் என்னும் மூன்றும்) ஒவ்

வொன்றும் நந்நான்காம்; ஆண்மை, பெண்மை (என்னும் இருபாலுங் காரணமாக) முறைப்பெயர் இரண்டாம்.]

| | ஆண்மை. | பெண்மை. | ஒருமை. | பன்மை. | |
|---|---|---|---|---|---|
| 1. | சாத்தன், | சாத்தி | கோதை, | கோதைகள். | ஆக: 4. |
| | [இவை முதற்பெயர்.] | | | | |
| 2 | முடவன், | முடத்தி. | செவிபிலி, | செவியிலிகள். | ஆக: 4. |
| | [இவை சினைப்பெயர் ] | | | | |
| 3 | முடக்கொற்றன், | முடக்கொற்றி | கொம்பூமருதி, | கொம்பூமருதிகள். | ஆக: 4. |
| | [இவை சினைமுதற்பெய | | | | |
| 4. | தந்தை, | தாய். | | | ஆக. 2. |
| | [இவை முறைப்பெயர் ] | | | | |

☞ கள் என்னும் விகுதி அஃறிணைப் பன்மைக்குச்சிறந்தது; ஆயினும், உயர்திணைப் பன்மையிலும் விரவி வரும்.

**284.** NOUNS COMMON TO BOTH CLASSES (281.) TAKE THE DISTINCTIONS OF பால்.

[திணைப் பொதுவாய் நின்ற பெயர்கள்.]

உஅச. அவற்றுள்,
ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.

[("முதற்பெயர்" முதலவாகக் கூறப்படும் இருபத்தாறும் (சூ. 282.), பிறவும், ஆகிய பொதுப்பெயர்களுள்) ஒவ்வொன்று இருதிணைக் கண்ணுந் தன்றன் பால்களை ஏற்கும்.]

(உ-ம்)
(1.) சாத்தன் இவன்; சாத்தி இவள்.
சாத்தன் இவ்வெருது; சாத்தி இப்பசு.
கோதை இவன்; கோதை இவள்.
கோதைகள் இவர்; கோதைகள் இவை.
(2.) தந்தை இவன்; தந்தை இவ்வெருது.
தாய் இவள்; தாய் இப்பசு.
(3.) யான் நம்பி; யான் நங்கை; யான் பூதம்.
யாம் மக்கள்; யாம் பூதங்கள்.

**285.** THE PERSONS OF PRONOUNS.

[தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்.]

உஅரு. தன்மை: யான், நான், யாம், நாம்; முன்னிலை:
எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ.
அல்லன படர்க்கை; எல்லாம் எனல் பொது.
[வி. 72. 73.]

["தன்மைப்பெயர்" நான்காவன: யான், நான், யாம், நாம் (என்பன ஆம்.)
"முன்னிலைப்பெயர்" ஐந்தாவன: எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ (என்பன ஆம்.)

(திணை பாலுள் ஒன்றற் கேற்பவும் பொதுவும் ஆகிய பெயர்களுள் இவ் விரண்டிடத்து ஒன்பது பெயரும்) அல்லாத பெயர்கள் அனைத்தும் "படர்க்கை" (இடத்திற்குரிய ஆம்). (அவற்றுள்,) எல்லாம் என்னும் பெயர் (ஒன்று) மூவிடத்திற்கும் உரித்தாம்.]

---

**286.** THE PERSONS OF VERBAL NOUNS.

[வினைப்பெயர்களுக்கும் வினையால் அணையும் பெயர்க்கும் இடம் வகுத்தல்.]

உஅசு. வினையின் பெயரே படர்க்கை; வினையால்
அணையும் பெயரே யாண்டும் ஆகும்.

[வி. 94. 95.]

[("யான் உண ," "நீ உணல்," "அவன் உணல்," எனமூவிடத்து ஆயினும் "அவ்வுணல், தினல்," என்றற்றொடக்கத்து) வினையின்பெயர் படர்க்கைக்கே உரிய ஆம். அவ்வினையால்அணையும்பெயர் (அவ்வினையின் பெயர்போல் படர்க்கைக்கே உரிய ஆகாது, "உண்டேனை," "உண்டாயை," "உண்டானை," எனத் தனித்தனி) மூவிடத்திற்கும் உரிய ஆம்.]

[சூ. 338 காண்க.]

---

**287.** THE NUMBERS OF PRONOUNS.

[பன்னிரண்டு பொதுப்பெயர்களைப்பற்றிச் சொல்லியது.]

உஅஎ. தான், யான், நான், நீ, ஒருமை; பன்மை தாம்,
யாம், நாம், எலாம், எலீர், நீயிர், நீர், நீவிர்.

[வி. 72. 74.]

[தான், யான், நான், நீ, (என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று, ஒருமை (ப்பெயர் ஆம்). தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் (என்னும் எட்டும் இருதிணை இருகூற்றுப்) பன்மை (ப்பெயர் ஆம்).]

☞ [இருதிணை முக்கூறு = ஆண், பெண், ஒன்று.
இருதிணை இருகூறு = பலர், பல. [சூ. 262. 263.]

**288.** NOUNS FORMED FROM NUMBERS.

[எண்ணால் வரும் உயர்திணைப் பெயர்க்கு ஆவதோர் புறனடை.]

௨௮௮. ஒருவன், ஒருத்தி பெயர்மேல் எண்ணில.

[வி. 159.]

[(எண்ணான், உயர்திணை ஆண்பாற்பெயரும், பெண்பாற்பெயரும், வருங்காலத்து ஒன்றென்னும் எண்ணானே) "ஒருவன்," "ஒருத்தி," என வருவன அன்றி, இவற்றின்மேல் "இரண்டு" முதலிய எண்களான் இப் பெயர்கள் வருவன இல ஆம்.]

[இருவர் என வருமே அன்றி இருவன், இருத்தி என வார]

**289.** THE NOUN ஒருவர்.

௨௮௯. ஒருவர் என்ப துயர் இரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

[வி. 159.]

["ஒருவர்" என வழங்குஞ் சொல் உயர்திணை ஆண்பால் பெண்பால் இரண்டற்கும் பொதுவாய், (அத்திணைப்) பன்மை (வாய்பாட்டு) வினையைக்கொண்டு முடியும் பாங்கினை உடைத்து என்று சொல்லுவர் (புலவர்).]

(உ-ம்.) (1.) ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்.
(2.) பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார்.
(3.) யாஅர் ஒருவர் உலகத்தோர் சொல்லில்லார்.

**290.** SYNECDOCHE.

[காரணப்பெயர்களுள் ஆகுபெயர் ஆமாறு.]

௨௯௦. பொருண்முதல் ஆறோ டளவை, சொற், றானி,
கருவி, காரியம், கருத்தன், ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.

[வி. 162.]

[பொருளே, இடமே, காலமே, சினையே, குணமே, தொழிலே என்னும் ஆறுடனே, (இவற்றின் பகுதிய ஆகிய நால்வகை) அளவையே, சொல்லே, தானியே, கருவியே, காரியமே, கருத்தாவே (என்னும் ஆறும்) ஆதியாக வரும் பொருள்களுள் ஒருபொருளின் இயற்பெயரானே அப்

பொருளினுக்கு இயைந்த பிறிதொரு பொருளைத், தொன்று தொட்டு வரு முறையே, கூறிவருவன ஆகுபெயர்கள் ஆம்.]

(உ-ம்.) (1.) தாமரை அனைய தாள். ஆம்பல் அனைய தேம்பொதி செவ்வாய்.
[முதற்பொருளின் பெயர் அதின் சினையாகிய மலருக்கும் ஆயிற்று.]

(2.) அகன் அமர்ந்து.
[இடப்பெயர் மனத்துக்காயிற்று.]

(3.) கார்த்திகை பூத்தது.
[காலப்பெயர் அக்காலத்தில் உண்டாகும் வெந்தோன்றிக்கும் ஆயிற்று.]

(4.) கார் அறுத்தது.
[இது மும்மடி ஆகுபெயர்; எப்படியெனில், கார் என்பது நிறம், அது மேகத்திற்கும் ஆகும், மேகத்தின் பெயர் பருவத்துக்கும்ஆகும், அப்பருவத்தின் பெயர் அக்காலத்தில் உண்டாகும் பயிருக்கும் ஆகும.]

(5.) புளி முளைத்தது.
[சினைபபெயர் முதலுக்காயிற்று. இது இருமடி ஆகுபெயர். எப்படியெனில், புளி எனபது சுவைபபெயர், அது பழத்துக்கும் ஆயிற்று. அப்பழத்தின் பெயர் மரத்திற்கும ஆயிற்று.]

(6.) புளித்தின்றன.
[சுவையாகிய குணப்பெயர் பழத்திற்கும் ஆயிற்று]

(7.) எழுத்தறியத்தீரும் இழிதகைமை.
[தொழிற்பெயர் அக்கரத்திற்கும் ஆயிற்று]

(8.) கால்.

(9.) அரை
[எண்ணல் அளவைப் பெயர்கள் அவயவங்களுக்கும் ஆயின]

(10.) நெஞ்சநொந்தது.
[மனமாகிய தானி அதின் தானமாகிய மார்புக்கும் ஆயிற்று]

(11.) திருவாசகம்.
[முதற்கருவிபபெயர் காரியமாகிய நூலுக்கும் ஆயிற்று.]

(12.) இந்நூல் அலங்காரம்.
[காரியத்தின் பெயர் காரணத்துக்கும ஆயிற்று]

(13.) இந்நூல் திருவள்ளுவர்.
[கருத்தாவின் பெயர் நூலுக்கும ஆயிற்று.]

(14) காளை வந்தான்.
[உவமை ஆகுபெயர்.]

## § 3. வேற்றுமை.

### 291. CASE.

[மேலே வேற்றுமைக் கிடனாய் என்றார் (275); அவ்வேற்றுமை இனைய எனவும் இத்துணைய எனவும் சொல்லியது.]

**௨௯௧. ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்**
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.**

[வி. 55.]

[தன்மை ஏற்றுக் கோடற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்கட்கும் இறுதியாய், அப்பெயர்ப்பொருளை வேற்றுமைப் படுத்துவன ஆன வேற்றுமைகள் எட்டே ஆம்.]

292. THE SIGNS AND ORDER OF THE EIGHT CASES.

[வேற்றுமைகளின் பெயரும் முறையும்.]

உகூஉ. பெயரே, ஐ, ஆல், கு, இன், அது, கண்
விளி என் றாகும், அவற்றின் பெயர், முறை.

[வி. 55. &c.]

[(மேல் எட்டே வேற்றுமை என்றவற்றின் பெயர் என்னை? கிடக்கை முறை என்னை? எனில்) "பெயர்" முதலாக "விளி" ஈறாக இங்ஙனம் கூறிய பெயரும் முறையும் ஆம்]

293. THESE SIX TERMINATIONS ADDED TO THE NOMINATIVE

[எழுவாய் உருபே ஏனை உருபுகளையும் ஏற்கும்.]

உகூ௩. ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே

[(எழுவாய் வேற்றுமையாவது பெயர் மாத்திரையாய்த் தோன்றி நிற்கும் நிலை என்ப; ஆகலின்,) அவ்வெழுவாயாய் நின்ற உருபே (ஐம்முதலிய) ஆறு வேற்றுமைகளின் உருபும் ஏற்கும்]

294. THE NOUNS நீயிர், நீவிர், நான் HAVE NO OTHER CASE [EXCEPTION TO 293.]

[இரண்டாவது முதலிய ஏழுருபும் ஏலாதன இவை.]

உகூச. நீயிர், நீவிர், நான், எழுவாய் அல பெறா.

[வி. 72. 73.]

[இம்மூன்று பெயரும் எழுவாய் வேற்றுமையினை அன்றி, ஏனைஏழு வேற்றுமையினையும் ஏலா.]

295. THE NOMINATIVE IS THE NOUN ITSELF· ITS RELATION TO THE PREDICATE

[எழுவாயாகிய பெயர் வேற்றுமையிலக்கணம்.]

உகூ௫. அவற்றுள்,
எழுவாய் உருபு திரிவில் பெயரே,
வினை, பெயர், வினாக் கொளல் அதன் பயனிலையே.

[(மேற்கூறிப் போந்த எட்டு வேற்றுமையுள்) முதல்வேற்றுமையின் உரு

பாவது திரிபில்லாத பெயரே (ஆம்). அதன் பொருளாவது: வினையையும், பெயரையும், வினாவையும் கொளப் பொருணிலையாய் வருதல் ஆம்.]

(உ-ம்.) சாத்தன் வந்தான். [வினை. வி. 129.]
சாத்தன் இவன். [பெயர். வி. 131.]
ஆ யது? [வினா.]

296. THE SECOND OR ACCUSATIVE CASE: ITS SIGN AND SIGNIFICATIONS.

[ஐயுருபு: இரண்டாம் வேற்றுமையினிலக்கணம்.]

உ௯௬. இரண்டா வதனுரு ஐயே; அதன்பொருள்:
ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல்,
ஒத்தல், உடைமை, ஆதி, ஆகும்.

[வி. 58. 129.*]

[இரண்டாம் வேற்றுமையினது உருபு (மேற்கூறிய) ஐஉருபு ஒன்றுமே. அதன் பொருள்களாவன: (தன்னை ஏற்ற பெயர்ப்பொருளை) ஆக்கப்படுபொருளாகவும், அழிக்கப்படுபொருளாகவும், அடையப்படுபொருளாகவுந், துறக்கப்படுபொருளாகவும், ஒக்கப்படுபொருளாகவும், உடைமைப்படுபொருளாகவும், இவைபோல்வன பிறவாகவும், (வேற்றுமை செய்தல்) ஆம்.]

(உ-ம்.)
வளர்த்தான். [ஆக்கல்.]
உடைத்தான். [அழித்தல்.]
சேர்ந்தான். [அடைதல்.]
இழந்தான். [நீத்தல்.]
ஒத்தான். [ஒத்தல்.]
[ .]
[செயப்படுபொருள்.]

297. THE THIRD CASE: ITS SIGNS AND SIGNIFICATIONS.

[மூன்றாம் வேற்றுமையினிலக்கணம்.]

உ௯௭. மூன்றா வதனுரு ஆல், ஆன், ஒடு, ஓடு;
கருவி, கருத்தா, உடனிகழ் வதன்பொருள்.

[வி. 59.]

[மூன்றாம் வேற்றுமையின் உருபு (மேற்கூறிய) ஆலே அன்றி, ஆனும், ஒடுவும், ஓடுவும் ஆம். அவற்றின் பொருள்களாவன: (தம்மை ஏற்ற பெயர்ப்பொருளைக்)கருவியாகவும், (ஏதுப்பொருட்டாகிய) கருத்தா ஆகவும், உடனிகழ்வதாகவும், (வேற்றுமை செய்தல்) ஆம்.]

(உ-ம்.) (1.) அறிவால் ஆகிய காட்சி. [கருவி.]
மண்ணால் ஆக்கிய குடம்.
மண்ணான் இயன்ற குடம்.
தேவனால் ஆகிய உலகம்.
(2.) தச்சனால் செய்யப்பட்ட தேர். [கருத்தா.]
(3.) கொடியொடு கட்டுண்டான். [உடனிகழ்ச்சி.]
ஊசியொடு குயின்ற தூசுமபட்டும்.

மதியோடொக்கும் முகம்.
பெண்டகையாற் பேர்அமர்க் கட்டு. [ஆல் உருபால் வந்த உடனிகழ்ச்சி.]
"மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ்செய் வாரிற்றலை."
[வேறுவினை உடனிகழ்ச்சியும், ஒருவினை உடனிகழ்ச்சியும்.]

☞ மதியோடொக்கும் முகம். [செயப்படு பொருளிலே ஒடு வந்தது.]

**298.** THE FOURTH OR DATIVE CASE: ITS SIGN AND SIGNIFICATIONS.

[நான்காம் வேற்றுமையினதிலக்கணம்.]

உகூஉ. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே.
கொடை, பகை, நேர்ச்சி, தகவது ஆதல்,
பொருட்டு, முறை, ஆதியின் இதற்கிதெனல் பொருளே.
[வி. 60.]

[நான்காம் வேற்றுமைக்கு உருபு (மேற்கூறிய) கு ஒன்றுமே ஆம். அதன் பொருளாவது: கொடையும், பகையும், நேர்ச்சியும், தகவும், அது ஆதலும், பொருட்டும், முறையும், முதலான பொருள் (தோன்றப் புணரும் புணர்ச்சிக்கண்,) இதற்கிதென (அங்ஙனம் வருதற்குரிய எப்பொருளினையும் ஏற்றுக்கொள்ளும் பொருளாகத்,) தன்னை ஏற்ற பெயர்ப்பொருளை வேற்றுமை செய்தல் ஆம்.]

(உ-ம்.) (1.) இரப்போர்க் கீந்தான். [கொடை.]
(2.) பிணிக்கு மருந்து. [பகை.]
(3.) விளக்கினுக்கு எண்ணெய். [நேர்ச்சி.]
(4.) அரசருக்கே உரித்து. [தகுதி.]
(5.) அவனுக்கு நெல். [அது அது ஆதல்.]
(6.) கூழிற்குக் குற்றேவல் செய்தான். [பொருட்டு.]
(7.) சாத்தனுக்கு மகன். [முறை.]

அவனுக்கும் அவளுக்கும் பொருத்தம் இல்லை. [யாப்பு.]
இன்றைக்கு வரும். [எல்லை.]
அவ்வூர்க்கும் இவ்வூர்க்கும் காதம். [எல்லை.]
அவனுக்குச் சிறந்தவன் இவன். [சிறப்பு.]
மனைக்கு விளக்கு மனையாட்டி. [உவமை.]

"ஆதி" என்பதிலே வரும்.

**299.** THE FIFTH CASE: ITS SIGNS AND SIGNIFICATIONS.

[ஐந்தாம் வேற்றுமையினது இலக்கணம்.]

௨௯௯. ஐந்தா வதன்உரு பில்லும், இன்னும்;
நீங்கல், ஒப்பெல்லை, ஏதுப், பொருளே.

[வி. 61.]

[ஐந்தாம் வேற்றுமையின் உருபாவன: இல்லும், (மேற் கூறிய) இன்னும் (ஆம்). அவற்றின் பொருளாவன: நீங்கற்பொருளாகவும், உவமைப் பொருளாகவும், எல்லைப்பொருளாகவும், ஏதுப்பொருளாகவும், (தம்மை ஏற்ற பெயர்ப் பொருளை வேற்றுமை செய்தல்) ஆம்.]

I. நீக்கப்பொருள்.

(உ-ம்.) *தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்.*
*[உருபேற்றசொல் தலை; உருபுநோக்கிய சொல் மயிர்.]*
*அரசரில் பெரியர் கற்றோர். [உயர்வு.]*
*ஆவின் இழிந்தது மேதி. [தாழ்வு.]*

II. ஒப்பு.

*பாலின் வெளிது கொக்கு. [வண்ணம்.]*
*அதனிற் பெரிது இது. [அளவு.]*

III. எல்லை.

*கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்குச்சோணாடு.*

IV. ஏது.

*கள்ளரின் அஞ்சினான்.*
*வாணிகத்தின் ஆயினான்.*

**300.** THE SIXTH CASE: ITS SIGNS AND SIGNIFICATIONS.

[ஆறும் வேற்றுமையினதிலக்கணம்.]

௩௦௦. ஆறன் ஒருமைக் கதுவும், ஆதுவும்,
பன்மைக் கவ்வும், உருபாம்; பண்புறுப்
பொன்றன் கூட்டம், பலவின் ஈட்டந்,
திரிபின் ஆக்கம், ஆந்தற் கிழமையும்;
பிறிதின் கிழமையும்; பேணுதல் பொருளே.

[வி. 62.]

**[ஆறும் வேற்றுமையினது ஒருமை (ப் பொருண்மை) க்கு (மேற்கூறிய) அது என்பதே அன்றி, ஆது என்பதும்; பன்மை (ப் பொருண்மை) க்கு**

அகரமும் உருபாம். அவற்றின் பொருளாவன: (குணமுந் தொழிலுமாகிய) பண்பும், சினையும், ஒருபொருட்கூட்டமும், பலபொருட்கூட்டமும், ஒன்று திரிந்தொன்றானதும், ஆகிய (ஐந்து) தற்கிழமைப் பொருளினையும்; பிறிதின் கிழமைப்பொருளினையும்; (உடையதாகத் தம்மை ஏற்ற பெயர்ப் பொருளை) வேற்றுமை செய்தல் ஆம்.]

(உ-ம்.) I. தற்கிழமை.

(I.)

நிலத்தது அகலம்.
சாத்தனது இயல்பு. } [பண்புத்தற்கிழமை.]

(II.)

சாத்தனது கண். [உறுப்புத்தற்கிழமை.]

(III.)

மக்களது தொகுதி.
நெல்லினது குபபை. } [ஒன்று பல கூடிய ஒன்றன் கூட்டத்தற்கிழமை.]

(IV.)

விலங்கினது கூட்டம். [வேறு பல கூடிய பலவின் ஈட்டத்தற்கிழமை.]

(V.)

நெல்லினது பொரி. [திரிபிலக்கத்தற்கிழமை.]

II. பிறிதின் கிழமை.

சாத்தனது வில். [பொருட்பிறிதின் கிழமை.]
சாத்தனது தோட்டம். [இடப்பிறிதின் கிழமை.]

பிறவும் அன்ன.

எனதுகை, தனதுதாள். [ஒருமை.]
எனகைகள், தனதாள்கள். [பன்மை.]

**301.** THE SEVENTH CASE: ITS SIGNS AND SIGNIFICATIONS.

[ஏழாம் வேற்றுமையினதிலக்கணம்.]

௩௦௧. ஏழன் உருபு கண் ஆதி ஆகும்;
பொருள் முதல் ஆறும் ஓர் இரு கிழமையின்
இடன் ஆய் நிற்றல், இதன் பொருள் என்ப.
[வி. 63.]

[ஏழாம் வேற்றுமையின் உருபு (மேற்கூறிய) கண்ணே அன்றி, (வருஞ் சூத்திரத்தில் சொல்லப்பட்ட) பிறவும் ஆம். இவற்றின் பொருளாவன: (தம்மை ஏற்ற பெயர்ப்பொருளாகிய) பொருள்முதலிய ஆறும் (சூ. 132) (மேற்போந்த) இருகிழமைப்பொருட்கும் (சூ. 300.) இடமாகிநிற்க, அவற்றினை வேற்றுமை செய்தலாம், என்று சொல்லுவர் (புலவர்).]

**302.** VARIOUS NOUNS USED AS SIGNS OF THE SEVENTH CASE.

[மேல் (301) "ஆதி" என்றார்: அவை இவை என்பது.]

௩௦௨. கண், கால் கடை, இடை, தலை, வாய், திசை, வயின்,
முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல்,
பின், பா டளை, தேம், உழை, வழி, உழி, உளி,
உள், அகம், புறம், இல் இடப்பொருள் உருபே.

[வி. 63.]

[இங்ஙனம் "கண்" முதலாக, "இல்" ஈறாக, எண்ணப்பட்ட இருபத் தெட்டும் இடப்பொருளாக வேற்றுமைசெய்யும் உருபுகள் ஆம்.]

**303.** THE EIGHTH CASE: METHODS OF FORMATION AND SIGNIFICATIONS.

[எட்டாம் வேற்றுமையினிலக்கணம்.]

௩௦௩. எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு, குன்றல், மிகுதல், இயல்பயற்
றிரிபும் ஆம்; பொருள், படர்க்கை யோரைத்
தன் முகம் ஆகத் தான் அழைப் பதுவே.

[வி. 64.]

[எட்டாம் வேற்றுமை ஆகிய விளிக்கு வேறுஉருபின்று, (அவ்விளி அடைந்த) பெயர்ஈற்றின் திரிபுங், கேடும், மிகுதலும், இயல்பும், ஈற்றயல் நின்றதன் திரிபுமே உருபாம்; இவற்றின் பொருளாவன: இவற்றினை ஏற்ற படர்க்கைப் பெயர்ப்பொருளை ஒருவன் தனக்கு எதிர்முகமாக அழைக் கப்படுவதாக வேற்றுமைசெய்தல் ஆம்.]

**304.** NOUNS WHICH ADMIT OF THE VOCATIVE.

[பெயருக்குள்ளே விளிக்கப்படுவன இவை.]

௩௦௪. இ, உ, , வோடை, ஓ, ன, ள, ர, ல,
ய, ஈற் றுயர், , ஓ, ர, அல்
ணஃகான், ஆ, ஈ ருகும் பொதுப்பெயர்;
ஞ, ந, ஒழி அனைத்திற் றஃறி[illegible] விளிப்பன.

[இ, உ, ஊ, ஐ, ஓ, ன, ள, ர, ல, ய என்னும் பத்திற்றுயர்திணைப் பெய ரும்; இவற்றுள் ஓகாரமும், ரகரமுமான இரண்டும் ஒழித்துநின்ற எட்டு

னே ணகாரமும், ஆகாரமுமான இரண்டும் கூடிய பத்தீற்றுப் பொதுப் பெயரும்; நாலாறுமீறே (சூ. 107.) என்றவற்றுள் ஞகரமும், நகரமும், ஈருகாறென மேலே அதிகாரத்து விலக்கிய எகரமும்) ஒழிந்த (சூ. 108.) இருபத்தோர் ஈற்றஃறிணைப்பெயரும் விளிக்கப்படுவன ஆம்.]

**305.** GENERAL RULE REGARDING THE TERMINATIONS OF THE EIGHTH CASE.

[மூவகைப் பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு.]

௩௦௫. இம்முப் பெயர்க்கண் இயல்பும், ஏயும்,
இகர நீட்சியும், உருபா மன்னே.
[வி. 64.]

[மேல் (விளிக்கப்படும் என்ற) மூவகைப் பெயர்க்கண்ணும், இயல்பாதலும், ஏகாரமிகுதலும், இகர ஈறு ஈகாரஈருய்த் திரிதலும், விளி உருபாம் பெரும்பாலும்.]

(உ-ம்.) முனி. வேந்த [இயல்பு]
முனியே. [ஏகாரம மிகுதல்]
நமபீ. [இகரம் நீளுதல்.]

**306.** THE SAME NOUNS IN ஐ.

[ஐகார வீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௦௬. ஐஇறு பொதுப்பெயர்க் காயும், ஆவும்,
உருபாம்; அல்லவற் ருயும் ஆகும்.

[ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்கு (இயல்பும், ஏகாரமிகுதலும் அன்றி,) ஐகாரம் ஆயும் ஆவுமாய்த்திரிதலும், உயர்திணை அஃறிணைப்பெயர்க்கு அவ்வுருபுகள் அன்றி ஐகாரம் ஆய்எனத் திரிதலும் உருபாம்.]

(உ-ம்.) அன்னே, அன்னை.

**307.** THE VOCATIVE CASE: PERSONAL NOUNS IN ன்.

[னகரவீற்றுயர் திணைப்பெயர்க்கெய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௦௭. ஒருசார் னவீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவ்யல் நீட்சி; அதனோ
டீறு போதல்; அவற்றோ டோஉறல்;

ஈற்றழிந் தோஉறல்; இறுதிய ஆதல்;
அதனோ டயல்திரிந் தேஉறல்; ஈற்றழிந்
தயல்ஏ ஆகலும்; விளிஉரு பாகும்.

[(பொதுவிதி அன்றி,) னகரஈற்று உயர்திணைப்பெயர்களுள் [1]சில அளபெழுதலுஞ்; [2]சில ஈறுகெடுதலுஞ்; [3]சில ஈற்றயனீடலுஞ்; [3]சில ஈற்றயனீண்டு, ஈறுகெட்டு, ஓகார மிகுதலுஞ்; [4]சில ஈறுகெட்டு, ஓகாரமிகுதலும்; [5]சில இறுதி னகர ஒற்று யகரஒற்றாய்த்திரிதலுஞ்; [6]சில இறுதி னகர ஒற்று யகர ஒற்றாய்த் திரிந்து, அயலில் ஆகாரம் ஓகாரமாய், ஏகார மிகுதலுஞ்; [7]சில ஈறுகெட்டு, அயலில் அகரம் ஏகாரம் ஆதலும், விளியுருபாம்.]

(உ-ம்.) அம்பர்கிழாஅன். [அளபெடை.]
தோழ. [ஈறழிந்தது]
பெருமான. [அயல் நீண்டது.]
இறைவா. [அயல்நீட்சியோடு ஈறழிந்தது.]
ஐயாவோ. [அயல் நீண்டு, ஈறு கெட்டு, ஓ மிக்கது.]
வாயிலாய். [ன யவ்வாயிற்று]
வாயிலோயே. [இறுதி யவ்வாகி, ஈற்றயல் ஓ ஆகி, ஏ மிக்கது.]
ஐயே. [ஈறுகெட்டு அகரம் ஏகாரம் ஆயிற்று]

---

**308.** THE SAME PERSONAL NOUNS IN ள்.

[ளகர ஈற்று உயர்திணைப்பெயர்க்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௦௮. ளஃகான் உயர்பெயர்க் களபீறழிவயல்
நீட்சி; இறுதி ய ஒற் றாதல்;
அயலில் அகரம்ஏ ஆகலும் விளித்தனு.

[ளகரஈற்றுயர்திணைப் பெயர்க்குப் (பொதுவிதியன்றி) அளபெழலும், ஈறுகெடலும், அயல்நீடலும், இறுதி ளகரஒற்று யகரஒற்றாதலும், ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும் விளி உருபாம்.]

(உ-ம்.) விறன் மிகுவேஎள். [அளபெடை.]
துனி கொள்ளல் எல்லா நீ! [ஈறு கெட்டது.]
தமர்காள்! [ஈற்றயல் நீண்டது.]
குழையாய்! [ளகரம் யகரம் ஆயிற்று.]
நிலமிசை சொல்வேம் அடிகேள். [அயல் நின்ற அ, ஏ ஆயிற்று.]

### 309. THE VOCATIVE CASE: PERSONAL NOUNS IN ர்.

[ரகர இற்று உயர்திணைப்பெயர்க் கெய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௦௯. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழல்; ஈற்றயல்
அகரம் இ, ஈ, ஆதல்; ஆண்டை ஆ
ஈ ஆதல்; அதனோ டேஉறல்; ஈற்றே
மிக்கயல் யாக்கெட் டதன்அயல் நீடல்;
ஈற்றின் ஈர் உறல்; இவையும் ஈண்டுருபே.

[(பொதுவிதியன்றி,) ரகார ஈற்று உயர்திணைப் பெயர்க்கு அளபெழலும்; ஈற்றயல் அகரம் இகரமாதலும், ஈகாரமாதலும்; அவ்விடத்து ஆகாரம் ஈகாரமாதலும்; அதனோடு ஏகாரம் ஏற்றலும்; ஈற்றில் ஏகாரம் மிக்கு, அயலில் யாக்கெட்டு, அதன் அயல்இகரம், ஈகாரமாதலும், ஈற்றின்ஈராதலும், விளியுருபாம்.]

(உ-ம்) சிறுஅர். [அளபெடை.]
நல்லன்மின் தெவ்விர். [தெவ்வர் என்பதில் அர் என்பதுஇர் ஆயிற்று.]
வணிகீர். [அ, ஈ ஆயிற்று.]
சான்றீர். [ஆ, ஈ ஆயிற்று.]
சான்றீரே. [ஆ. ஈ ஆகி, ஏ மிக்கது.]
நம்பீரே. [நம்பியார் என்பதில் ஏ மிக்கு, யா கெட்டு, இ, ஈ ஆயிற்று.]
எமரீர். [ஈற்றில் ஈர் வந்தது.]

### 310. THE SAME PERSONAL NOUNS IN ல் AND ய்.

[லகார யகார இற்றுயர்திணைப்பெயர்க் கெய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௧௦. லகார ஈற் றுயர்பெயர்க் களபயல் நீட்சியும்;
யகார ஈற்றிற் களபும் ஆம உருபே.

[(பொதுவிதி அன்றி,) லகாரஈற்று உயர்திணைப்பெயர்க்கு அளபெழலும், ஈற்றயனீடலும்; யகாரஈற்று (உயர்திணை) ப்பெயர்க்கு அளபெழலும், உருபாம்.]

(உ-ம்.) மாஅல். [அளபெடை.]
தோன்றுஅல். [ஈற்றயல்நீட்சி.]
சேஎய். [யகாரஈற்றிற்கு அளபெடை.]

**311.** THE SAME NOUNS IN ன்.

[னவ்வீற்று அஃறிணைப்பெயர்க்கும், விரவு பெயர்க்குஞ் சிறப்புவிதி.]

௩௧௧. னஈற் றுயர்திணை அல் இரு பெயர்க்கண்
இறுதி அழிவத னோடயல் நீட்சி.

[பொதுவிதியன்றி, னகரஈற்று அஃறிணைப் பெயர்க்கண்ணும், விரவுப் பெயர்க்கண்ணும், இறுதிகெடுதலும், அதனோடு ஈற்றயல் நீடலும், விளி உருபாம்.]

(உ-ம்.) அலவ. (அஃறிணைப்பெயர்.)
சாத்த.
சாத்தா. } (பொதுப்பெயர்.)

**312.** THE VOCATIVE CASE: IMPERSONAL NOUNS IN ல், ள்.

[ல, ள, வீற்றுப் பெயர்களுக்குச் சிறப்புவிதி.]

௩௧௨. ல; ள, ஈற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்கண்
ஈற்றயல் நீட்சியும் உருபா கும்மே.

[(பொதுவிதி அன்றி,) லகார ளகார ஈற்று அஃறிணைப் பெயர்க்கண்ணும், விரவுப்பெயர்க்கண்ணும், ஈற்றயல்நீடலும், விளியுருபாம்.]

(உ-ம.) முயால்.
இளிகாள். } (அஃறிணை.)
மக்காள. (பொதுப்பெயர்.)

**313.** DIFFERENT FORMS OF VOCATIVE ADAPTED TO DIFFERENT KINDS OF CALLING.

[விளி உருபுகளுக்கு ஆவதோர் புறனடை.]

௩௧௩. அண்மையின் இயல்பும், ஈ றழிவுஞ்; சேய்மையின்
அளவும்; புலம்பின் ஓவும் ஆகும்.

[(மேற்போந்த விளியுருபுகளுள்) இயல்புகளும், ஈறழிவுகளும் அண்மை விளிக்கண்ணும்; அளபுகள் சேய்மை விளிக்கண்ணும்; ஓகாரங்கள் புலம்பல் விளிக்கண்ணும் வரும்.]

### 314. EXCEPTION TO (304.): VOCATIVE WANTING IN CERTAIN PRONOUNS AND OTHER NOUNS.

[ஓர் புறனடை.]

௱௧௪. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற ன, ள, ர,
வை, துத், தாந், தான், இன்னன

[(மேல்விளிக்கப்படும் என்றவற்றுள்,) நுவ்வுடனே (மூன்றுமுதல்) வினாவையும், (மூன்று) சுட்டையும், (வரன்முறையேபொருந்திய) ன, ள, ர என்னு மூன்றீற்றுயர்திணைப்பெயர்களும், வை, து என்னும் இரண்டீற் றஃறிணைப்பெயர்களுந், தாம், தான் என்னும் பொதுப்பெயரும் விளிக் கப்படா.]

### 315. SPECIAL RULE ABOUT THE TERMINATIONS ஐ, கண், அது.

[முதல் சினைத்தொடர் பின்கண் இரண்டாம் உருபு இரண்டன் பாலும் வாராது எனப் புறனடை.]

௱௧௫. முதலை ஐ உறிற் சினையைக் கண் உறும்;
அதுமுதற் காயிற் சினைக்கை ஆகும்.

[முதலினை "ஐ" உருபு பொருந்தில் சினையினைக் "கண்"ணுருபு பொருந்தும்; "அது" உருபு முதலுக்கு வரிற் சினைக்கு "ஐ" உருபு வரும்.]

(உ-ம்.) பனையைக் காலின்கண் வெட்டினன
பனையது காலை வெட்டினன்.
பனையின்கண் காலை வெட்டினன.

பனையைக் காலை வெட்டினன எ-து வழு

☞ [முதல், சினை, இரண்டிடத்தும் ஐயுருபு வாராது]

**316.** FURTHER ILLUSTRATION OF (315.): THE BODY AND ITS MEMBERS. THE AGGREGATE AND ITS COMPONENT PARTS.

[மேலே கூறியதற்குக் காரணம். பிண்டப்பொருள்.]

௩௧௬. முதல் இவை, சினை இவை, என வேறுள இல,
உரைப்போர் குறிப்பின; அற்றே பிண்டமும்.

[சூ. 428. 282.]

[(கடங்கள்இவை, படங்கள்இவை, என்றாற்போல) முதற்பொருள் கள்இவை, சினைப்பொருள்கள்இவை, என வேறுள்ளன இலவாம், ஒரு பொருளையே இரண்டாகப் பகுத்துக்கூறுவாரது குறிப்பின் மாத்திரைய வேயாம்; பிண்டப்பொருளும் அத்தன்மைத்தாம்.]

(உ-ம்.) யானையது கோடு. } ஒன்றற்குச் சினை மற்றொன்றற்கு முதல்.
கோட்டது நுனி. }

நெல்லைப் பொலியின்கண் வாரினான். } (பிண்டப்பொருள்.)
நெல்லினது பொலியை வாரினான். }

நெல்லைப் பொலியை வாரினான, என்பது வழு.

நெல்லினது குப்பை, குப்பையினது நெல். [இவையே முதல், இவையே சினை என வேறறியக்கூடாது.]

**317.** ANOMALOUS INTERCHANGE OF CASES. THE CONTEXT IS THE GUIDE

[உருபு மயக்கம்: புறனடை.]

௩௧௭. யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

[வி. 137.*]

[ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் கூறப்பட்ட தாயினும், (அவ்வுருபு மயங்கி வந்தமையின், அவ்வுருபு சென்ற வழியே பொருள் சாராது,) பொருள்சென்றவழியே அவ்வுருபு சாரும்.]

(உ-ம்) (1.) காகு வேயொடு தக்கு வீங்கு தோள
[ஒடுவை ஐயுருபாகத் திரித்துக் கொள்க]

(2) மணற்கீன்ற முன்னை
[குவ்வைக் கண்ணுருபாக்குக]

(3.) செய்பவனுடைமையைக்காட்டிவிடும்.
[ஐயுருபைக் குவ்வுருபாக்குக.]

அவராற் செய்யத்தகும் அக்காரியம்.
அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம்.
மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்.
மதுரையை நீங்கினன்.
[illegible]க்கு வருவான.

**318.** POETICAL INSERTION OF அ IN THE 2D, 3D AND 4TH CASES.

[சில வேற்றுமை உருபு செய்யுட்கண் திரிந்துவரும்: புறனடை.]

௩௧௮. ஐ, ஆன், குச் செய்யுட் கவ்வும் ஆகும்;
ஆகா அஃறிணைக் கான் அல் லாதன.

["ஐ," "ஆன்," "கு" (என்னு மூன்றுருபுஞ்) செய்யுளகத்து (ஒரோவழி) அகரமாகத் திரிந்து வரவும்பெறும்; அஃறிணைக்கண்ணெனின் "ஆன்" ஒன்றுமே திரியும், ஐயுங் குவ்வுந் திரியா.]

(உ-ம்) (1.) காவலோனக் களிறஞ்சும். [காவலோனை.]
புலவரான. [புலவரான்.]
கடிநிலையின்றே ஆசிரியற்க. [ஆசிரியற்கு.]
(2.) புள்ளினன. [புள்ளினன்.]

**319.** THE GOVERNING, OR SUPPLEMENTARY WORD FOLLOWING SUCH OF THE CASES.

[எட்டு வேற்றுமைகளுக்கும் முடிக்குஞ் சொல்.]

௩௧௯. எல்லை இன்னும், அதுவும், பெயர்கொளும;
அல்ல வினைகொளு நான்கேழ் இருமையும்
புல்லும்பெறும் பாலும், என்மனர் புலவர்.

[வி. 129. 131.]

[("நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப்பொருளே" என்னும் நான்குபொருள்களுள்) எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமையும், ஆறும்வேற்றுமையும், பெயரைக்கொண்டு முடியும். ஒழிந்த (எழுவாய் முதலிய வேற்று

மைகளெல்லாம்) வினையைக்கொண்டுமுடியும். (அவற்றுள்) நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையினையேயன்றி வினையொடு பொருந்தும் பெயரையுங்கொண்டு முடியும் பெரும்பாலும், என்று சொல்லுவர் புலவர்.]

(உ-ம்.) (1.) கருவூரின்கிழக்கு. சாத்தனதுகை. [பெயர்கொண்டன.]

(2.) சாத்தன் வந்தான்.
குடத்தை வனைந்தான்.
வாளால் வெட்டினான்.
சாத்தனுக்குக் கொடுத்தான். } [இவை வினைகொண்டன.]
கோயின் நீங்கினான்.
அவையின்கண் இருந்தான்.
கொற்றா கொள்.

(3.) பிணிக்கு மருந்து.
மணியின்கண் ஒளி. } [இவை பெயருங் கொண்டன.]

சாத்தன் வருதல். குடத்தை வனைதல்.
சாத்தன் வந்தவன். குடத்தை வனைந்தவன். } [தொழிற்பெயரும் வினையாலணையும் பெயருங் கொண்டன. வி. 145.]

சாத்தன் யாவன்?
சாத்தன் யார்?
சாத்தன் அவன். } [வினைப்பெயரும் வினாவினைக்குறிப்புஞ் சுட்டுப் பெயருங் கொண்டன.]

பெயரியல் முற்றிற்று.

# நன்னூல்.

## II. சொல்லதிகாரத்தில்

## (II.) வினையியல்.

[இஃது வினை இலக்கணத்தை உணர்த்திய இயல்.]

### 320. DEFINITION OF A VERB.

[தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம்.]

௩௨௦. செய்பவன், கருவி, நிலஞ், செயல், காலஞ்,
செய்பொருள், ஆறுந், தருவது வினையே.

[வி. 45.]

[கருத்தாவுங், கருவியும், இடமுஞ், செயலும், காலமுஞ், செயப்படு பொருளும் (ஆகிய) அறுவகைப்பொருளையுந் தருவது (தெரிநிலை) வினைச் சொல்லாம்.]

(உ-ம்) வனைந்தான், [எனபதில் செய்பவன, குயவன்; கருவி, தண்டசக்காமுதலியவை; நிலம், வனையும் நிலம்; காலம், இறந்தகாலம்; செயபொருள், குடம் முதலியவை ]

### 321. CONJUGATED APPELLATIVES.

[குறிப்புவினைச் சொல்லினது பொது இலக்கணம்.]

௩௨௧. பொருள் முதல் ஆறினுந் தோற்றி, முன் ஆறனுள்
நல் மாத்திரை விளக்கல்

[வி. 93.]

[பொருளாதி ஆறும் அடியாக அவற்றின்கண் தோன்றி, மேல் (கருத்தா முதலாகச் சொன்ன) ஆறனுள் கருத்தா ஒன்றையுமே விளக்குதல் வினைக் குறிப்புச் சொல் (லினது இலக்கணம்) ஆம்.]

(உ-ம்.) குழையன். [பொருள்.]
அகத்தன். [இடம்.]
ஆதிரையான. [காலம்.]
குறந்தாளன். [சினை.]
கரியன். [குணம் ]
ஊணன. [தொழில்.]

[சூ. 276 காண்க.]

[☞ இவை "குழையை புடையன ஆயினன்," "அகத்தின் கண்ணிருந்தான," என அர்த்தங் கொடுப்ப தால் வினைக்குறிபபு முற்று என்று சொல்லுவார்கள. ஆகிலும் இவை எல்லாம் பெயர்ச் சொறகள் என்றும்; ஆயி னன, ஆயிருந்தான எனகிற வினைமுற்று அவற்றினபின தொக்கு நிற்கிறதெனறுஙகூறுவது தகும.]

## 322. FINITE VERB AND INCOMPLETE FORMS.

[வினைச்சொற்களை வகுதது உணர்ததுகின்றது.]

௩௨௨. அவைதாம்,—

முற்றும், பெயர்வினை எச்சமும், ஆகி
ஒன்றற் குரியவும் பொதுவும் ஆகும்.

[வி. 77.]

[(மேல் இரண்டு சூத்திரத்தானுங் கூறிய தெரிநிலையாயுங் குறிப்பாயும் வரும்) வினைச்சொற்கள் தாம் முற்று வினைச்சொற்களும், பெயரெச்ச வினைச்சொற்களும், வினையெச்ச வினைச்சொற்களும் ஆகித், (திணை பால் இடங்களின்) ஒன்றற்குரியனவும், பொதுமையில் நிற்பனவும் ஆகும்.]

[சூ 142-145 காண்க.]

## 323. THE FINITE VERB

ஆம் ஆறு.]

௩௨௩. பொது இயல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதல் அறு பெயர் அல தேற்பில முற்றே.

[வி. 77.]

[(தெரிநிலைமுற்றும், குறிப்புமுற்றும், பெயரெச்சமும், பெயரெச்சக் குறிப்பும், வினையெச்சமும், வினையெச்சக்குறிப்பும் ஆகிய) அறுவகை வினை வினைக்குறிப்புக்கும் (பொது இலக்கணமாகிய செய்பவன் முதலிய) ஆறனையும் தோற்றுவித்துப், பொருட்பெயர் முதலிய அறுவகைப்பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி, அல்லது ஒன்றனையும் ஏலாதன முற்றுவினை, வினைக்குறிப்புகள் ஆம்.]

(உ-ம்) செய்தான் அவன்.
நல்லன் அவன்.

**324.** THE TWENTY SEVEN VARIATIONS OF THE FINITE VERB, IN ITS THREE TENSES, THREE PERSONS AND FIVE பால்.

[தெரிநிலை வினைமுற்று காலவிகற்பங்கள் பற்றி இவ்வளவாம் என்பது.]

௩௨௪. ஒருவன் முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்;
ஒருமை*ப் பன்மையைத் தன்மை முன்னிலையினும்;
முக்காலத்தினும் முரண, முறையே
மூவைந் திருமூன் றாறாய் முற்று
வினைப்பதம் ஒன்றே, மூவொன் பான் ஆம்.
[வி. 77.]

[ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் ஐம்பாலவாகிய வினை முற்றுக்களைப் படர்க்கைக்கண்ணும்; ஒருமை பன்மை (என்னும் இருபாலவாகிய வினைமுற்றுக்களைத்) தன்மைக்கண்ணும், முன்னிலைக்கண்ணும், (வைத்து) முக்காலங்களானும் மாற, முறையே (படர்க்கைவினைமுற்றுப்) பதினைந்தும், (தன்மைவினைமுற்று) ஆறும், (முன்னிலைவினைமுற்று) ஆறும் (ஆகிய) முற்றுவினைச்சொல் ஒன்றுமே இருபத்தேழாம்.]

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | (1.) | நடந்தான், ள், ர், து, ன. | [போனகாலம்.] | படர்க்கைவினைமுற்று கடு. |
| | | நடக்கின்றான், ள், ர், து, ன. | [நிகழ்காலம்.] | |
| | | நடப்பான், ள், ர், து, ன. | [எதிர்காலம்.] | |
| | (2.) | நடந்தேன், ம். | [போனகாலம்.] | ஆக, தன்மை வினைமுற்று |
| | | நடக்கிறேன், ம். | [நிகழ்காலம்.] | |
| | | நடப்பேன், ம். | [எதிர்காலம்.] | |
| | (3.) | நடந்தாய், நடந்தீர். | [போனகாலம்.] | ஆக, முன்னிலை வினைமுற்று |
| | | நடக்கிறாய், நடக்கிறீர். | [நிகழ்காலம்.] | |
| | | நடப்பாய், நடப்பீர். | [எதிர்காலம்.] | |

ஆக, வகை மூன்றுக்கும் முற்றுவினை உஎ.

*[ப் சநத இன்பப்பொருட்டு விரித்தல் விகாரமாய் வந்தது.]

**325.** THE FINITE VERB: THE THIRD PERSON SINGULAR, MASCULINE, (OF THE HIGHER CLASS.)

[இருவகை முற்றுகள் திணை, பால், இடங்களில் ஒன்றற்குரியவாம் ஆறு.]

௩௨௫. அன், ஆன், இறுமொழி ஆண்பாற் படர்க்கை.

[அன், ஆன் (என்னும் இருவிகுதியும்) இறுதியாகிய மொழிகள் (உயர்திணை) ஆண்பால் படர்க்கை (வினைமுற்றும், வினைக்குறிப்புமுற்றும் ஆம்).]

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | *நடந்தனன்; | நடந்தான். | [போனகாலம்.] |
| | *நடக்கின்றனன்; | நடக்கிறான். | [நிகழ்காலம்.] |
| | *நடப்பனன்; | நடப்பான். | [எதிர்காலம்.] |
| | *குழையினன்; | குழையான். | [குறிப்புவினைமுற்று] |

*[அன் சாரியையும் வந்தது காண்க.]

**326.** THE FINITE VERB: THE THIRD PERSON SINGULAR, FEMININE, (OF THE HIGHER CLASS.)

௩௨௬. அள், ஆள், இறுமொழி பெண்பாற் படர்க்கை.
[வி. 77.]

[அள், ஆள், (என்னும் இருவிகுதியும்) இறுதி ஆகிய மொழிகள் (உயர்திணைப்) பெண்பாற் படர்க்கை (வினைமுற்றுங் குறிப்புமுற்றும்) ஆம்.]

(உ-ம்.) *நடந்தனள்; நடந்தாள். [போனகாலம்]
*நடக்கின்றனள்; நடக்கின்றாள். [நிகழ்காலம்.]
*நடப்பள்; நடப்பாள். [வருங்காலம்.]
*குழையினள்; குழையாள். [குறிப்புமுற்று.]
*[அன் சாரியை வந்தது காண்க.]

**327.** THE FINITE VERB: THE THIRD PERSON PLURAL, EPICENE, (OF THE HIGHER CLASS.)

௩௨௭. அர், ஆர், பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கை; மார் வினையொடு முடிமே.
[வி. 77

[அர், ஆர், ப, மார் (என்னும் நான்கு விகுதியினையும்) இறுதியாகவுடைய மொழிகள் உயர்திணைப்பன்மைப் படர்க்கை (வினைமுற்றும், குறிப்புமுற்றும் ஆம்). (இவற்றுள்) மாரீற்று வினைமுற்றுப் (பொதுவிதியால் பெயருடன் முடிவதன்றி) வினையுடனும் முடியும்.]

(உ-ம்) *நடந்தனர், நடந்தார்.
*நடக்கின்றனர், நடக்கின்றார்.
நடப்பர், நடப்பார், நடமார். } [தெரிநிலை.]
நடப்ப, ஒழிப.
குழையினர், குழையார். [குறிப்பு வினை]

"ஆர்த்தார், கொண்மார், வந்தார்." [வினையுடன் முடிந்தது.]

[அன் சாரியையும் வந்தது காண்க]

**328.** THE FINITE VERB: THE THIRD PERSON SINGULAR, NEUTER, (OR OF THE LOWER CLASS.)

௩௨௮. து, று, டுக் குற்றியல் உகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை; டுக் குறிப்பின் ஆகும்.
[வி. 77.]

[இம்மூன்று குற்றியலுகர ஈற்று விகுதிகளையும் இறுதியாகவுடைய மொழிகள் அஃறிணை ஒருமைப்படர்க்கை (வினைமுற்றும் குறிப்புமுற்றும்

ஆம்). (இவற்றுள்,) ஒவ்விகுதி குறிப்பின்கண் அன்றித் தெரிநிலைக்க‍ண் வாராது.]

(உ-ம்.) நடந்தது, நடக்கின்றது, நடப்பது. } [தெரிநிலை.]
*வந்தன்று, கூயிற்று. }
அணித்து, அற்று, பொருட்டு, [குறிப்பு.]
*[அன் என்பது சாரியை.]

---

**329.** THE FINITE VERB: THE THIRD PERSON PLURAL, NEUTER, (OF THE LOWER CLASS.)

௩௨௯. அ, ஆ, ஈற்ற பலவின் படர்க்கை;
ஆ வெதிர்மறைக் கண்ண தாகும்.
[வி. 77.]

[இவ்விருவிகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் அஃறிணைப் பன்மைப் படர்க்கை (வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்). (இவற்றுள்,) ஆகாரம் எதிர்மறை வினைக்கண்ணதாம் அன்றி, உடன்பாட்டுவினைக்கண் வாராது.]

(உ-ம்.) (1.) *நடந்தன, நடந்த. } [தெரிநிலை உடன்பாடு.]
*நடவா நின்றன, *நடக்கின்றன. }
*நடப்பன, நடப்ப. }
(2.) *கரியன, கரிய. [குறிப்பு உடன்பாடு.]
(3.) நடந்தில, நடவாநின்றில, *இல்லன, இல்ல.
(4.) நடவா.
*[அன் சாரியையும் வந்தது காண்க.]

---

**330.** VERBAL FORMS ADMITTING NO DISTINCTION OF GENDER (OR CLASS.)

[இருதிணைக்கும் பொதுவினை, இவை.]

௩௩௦. தன்மை, முன்னிலை, வியங்கோள், வேறில்லை
உண்டீர் எச்சம், இருதிணைப் பொதுவினை.

[தன்மை (வினை வினைக்குறிப்பு முற்றும்), முன்னிலை (வினை வினைக் குறிப்புமுற்றும்), வியங்கோள் (வினைமுற்றும்), வேறு, இல்லை, உண்டு (என்னு மூன்று வினைக்குறிப்புமுற்றும்), பெயரெச்ச (வினை வினைக் குறிப்பு)ம், வினையெச்ச (வினை வினைக்குறிப்பு)ம், இருதிணைக்கும் பொதுவினை (ஆம்).]

## 331. THE FINITE VERB: THE FIRST PERSON SINGULAR.

[தன்மை ஒருமை வினைமுற்று.]

௩௩௧. கு, டு, து, று என்னுங் குன்றியல் உகரமோ
டல், அன், என், ஏன், ஆகும் ஈற்ற
முக்கூற் றொருமைத் தன்மை.

[வி. 77.]

'யாகவுடைய மொழிகள்
கண்ணவாகிய (ஒருவன் ஒருத்தி ஒன்றென்கிற மூன்று) பால்களுக்கும் ஒருமைத்தன்மை (வினைமுற்றுங் குறிப்புமுற்றும் ஆம்).]

(உ-ம்.) உண்கு. (= உண்பேன்.) | சென்று. (= சென்றேன்.)
உண்டு. (= உண்டேன.) | சேறு. (= செல்லுவேன்.)
வந்து. (= வந்தேன்.) | திருமு. (= திருமுவேன்.)
வருது. (= வருவேன்.)
உண்பல். } (= உண்பேன்.) | *உண்டனன். } (= உண்டே
உண்பென். } | *உண்டனென். }

*[அன் சாரியை வந்தது காண்க.]

---

## 332. THE FINITE VERB: THE FIRST PERSON PLURAL.

[தன்மைப் பன்மை வினைமுற்று.]

௩௩௨. அம், ஆம் என்பன முன்னிலை யாரையும்,
எம், ஏம், ஓம் இவை படர்க்கை யாரையும்,
உம், ஊர் க, ட, த, ற, இருபா லாரையும்,
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

[வி. 77.]

[(தன்னிலையில் நிற்பதன்றி) அம், ஆம் என்னும்
யும் இறுதியாகவுடைய மொழிகள் முன்னிலையாரையும்; எம், ஏம், ஓம் என்னும் இம்மூன்று விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் படர்க்கையாரையும்; கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் (முன்னிலை படர்க்கை என்னும்) ஈரிடத்தாரையுந், தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை (வினைமுற்றுங் குறிப்புமுற்றும் ஆம்).]

(உ-ம்.) (1.) *உண்டனம், *உண்ணாநின்றனம், உண்பம். } [தெரிநிலை.] (நாமும் நீரும்.)
உண்டாம், உண்ணாநின்றாம், உண்பாம். }
நாரினம், நாரினும். [வினைக்குறிப்பு.]

(2.) *உண்டனெம், உண்டேம், உண்டோம். [தெரிநிலை.]
தாரினெம், தாரினேம், தாரினோம். [வினைக்குறிப்பு.] (நாமும் அவரும்.)

(3.) உண்கும், உண்டும், வந்தும், சேறும். (நாமும், நீரும், அவரும்.)
*[அன் சாரியை வந்தது காண்க.]

**333.** SPECIAL RULE: FORMS LIKE செய்கு AND செய்கும் MAY ALSO BE USED AFTER THE MANNER OF GERUNDS.

௩௩௩. செய்கென் ஒருமையும், செய்கும்என் பன்மையும்,
வினையொடு முடியினும், விளம்பிய முற்றே.

[செய்கு என்னும் (தன்மை) ஒருமைமுற்றும், செய்கும் என்னும் (தன்மைப்) பன்மைமுற்றும், (பெயருடனே அன்றி) வினையுடனேயு முடியும்; அங்ஙனம் முடியினும் மேற்கூறிய முற்றே ஆம்.]

(உ-ம.) உண்கு வந்தேன்.
உண்கும் வந்தேம் } என வினை எசசமாக வரும்.

**334.** "THE SECOND PERSON IS MORE WORTHY THAN THE THIRD."

௩௩௪. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.

[(தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மையானாற் போல (சூ. 330.)) முன்னிலை (யோடு) கூடிய படர்க்கையும் முன்னிலை ஆம்.]

(உ-ம்) உண்டீர் நீயும் அவனும்.

"ஒண் வேல் நாராய், நின் சேவலு' நீயுமாய்
வந்தேம் பூங் கானல் வைகலுஞ் சென்றீரால்"

**335.** THE FINITE VERB: THE SECOND PERSONS SINGULAR INDICATIVE AND IMPERATIVE.

[முன்னிலை ஒருமை வினைமுற்று.]

௩௩௫. ஐ, ஆய், இகர ஈற்ற மூன்றும்;
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்;
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே.
[வி 77.]

[ஐ, ஆய், இ (என்னும் மூன்று ஈற்று) மொழிகளும், (விகுதிகுன்றுதலும், குன்றியும், நிற்பனவாகிய) ஏவற்கண்வரும் இருபத்து மூன்றீற்று மொழி

களும்; (ஒருவன், ஒருத்தி, ஒன்று என்கிற) மூன்றுபால் (களுக்கும் பொதுவாகிய) முன்னிலை (ஒருமை வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்).]

(உ-ம்.) (1.) *உண்டனை, *உண்ணாநின்றனை, உண்பை.
உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய்.
உண்டி, உண்ணாநின்றி, சேறி. } [தெரிநிலை முற்றுவினைகள்.]

(2.) *வில்லினை, வில்லாய், வில்லை. [குறிப்பு.]

(3.) நடவாய், நட, உண், ஆதி. [ஏவல்.]
*[அன் சாரியையும், இன் சாரியையும் வந்தன.]

### 336. இ AND ஏ ADDED TO CERTAIN IMPERATIVES, IN POETRY.

[ஏவல் முற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௩௬. முன்னிலை முன்னர் ஈயும், ஏயும்,
அந்நிலை மரபின்மெய் ஊர்ந்து வருமே.

[முன்னிலை (ஏவல் முற்றென மேற்கூறியவற்றிற்கு) முன்னே ஈகாரமும், ஏகாரமும், ஆண்டு வந்து நிற்றற்குரிய மரபினையுடையமெய் (யாதானும் ஒன்றை) ஊர்ந்து வரும்.]

(உ-ம்.) சென்றீ.
சின்மே.

### 337. SECOND PERSONS PLURAL, INDICATIVE AND IMPERATIVE.

[முன்னிலைப்பன்மை வினைமுற்று.]

௩௩௭. இர், ஈர், ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை; மின், அவற் றேவல்.
[வி. 77.]

[இர், ஈர் (என்னும் இரு விகுதியினையும்) இறுதியாகவுடைய மொழிகள் இருதிணைப் பன்மைமுன்னிலை (வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்). மின் என்னும் விகுதியை இறுதியாகவுடைய மொழிகள் இருதிணைப் பன்மை முன்னிலை ஏவல்முற்றும்.]

(உ-ம்.) (1.) *உண்டனிர், *உண்ணாநின்றனிர், உண்குவிர்.
உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர். } [தெரிநிலை.]

(2.) குழையினிர், குழையீர். [குறிப்பு வினை.]

(3.) உண்மின். [ஏவல்.]

☞ [உண்ணும், தின்னும், உண்ணுங்கள், தின்னுங்கள். இவை முதலிய புதியன]
*[அன் சாரியை வந்து காண்க.]

**338.** THE OPTATIVE: ONE FORM COMMON TO ALL PERSONS, NUMBERS AND GENDERS.

௩௩௮. க, ய வொடு ர ஒற் றீற்ற வியங்கோள்;
இயலும் இடம்பால் எங்கும் என்ப.
[வி. 85.]

[க, ய என்னும் இரண்டுயிர்மெய்யினையும், ரகர ஒற்றினையும் இறுதியாக உடையன வியங்கோள்முற்றும். (அவை) மூவிடத்தினும் ஐம்பாலினுஞ் செல்லும் என்று சொல்லுவர் (புலவர்).]

(உ-ம்.) *வாழ்க, வாழிய, வாழியர்.*

*"வெல்க, வாழி, நின் வென்றி வார் கழல்,*
*செல்க நீபனை, சிறக்க நின் புகழ்."*

*"மகன் எனல்; மக்கட் பதடி எனல்."* [அல்.] } *இவை புதியன.*
*"மரீஇய தோரால்."* [ஆல்.]

**339.** THE DEFECTIVE VERBAL FORMS வேறு, இல்லை, உண்டு.

[இவ்வினைக்குறிப்பு முற்று மூன்றும் பாலிடங்களுக்குப் பொது.]

௩௩௯. வேறில்லை உண்டைம் பால்மூ விடத்தன.
[வி. 125.]

[வேறு, இல்லை, உண்டு (என்னும் மூன்று வினைக்குறிப்புமுற்றும்) ஐம்பாற்கும் மூவிடத்திற்கும் உரியனவாம்.]

(உ-ம்.) *அவன் . . .* } *வேறு. இல்லை. உண்டு.*
*அவள் . . .*
*அவர் . . . .*
*அது. . . . .*
*அவை . . .*
*யான். . . .*
*யாம். . . . .*
*நீ, நீர் . . .*

## 340. RELATIVE, (OR ADJECTIVAL) PARTICIPLES: COMMON FORMS.

[பெயர் எச்சம் ஆமாறு.]

௩௪௦. செய்த, செய்கின்ற, செய்யும், என் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயர் எச் சம்மே.

[வி. 87.]

[செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூவகைப்பட்ட சொல்லின் கண் (முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று) காலமுஞ், செயலுந் தோன்றி, (வினைமுற்றுதற்கு வேண்டும்) பால் ஒன்றும் தோன்றாது, (அப்பாலுடனே) செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் அறுவகைப் பொருட்பெயரும் ஒழிய நிற்பன பெயரெச்சவினை வினைக்குறிப்புகள் ஆம்.]

| | இறப்பு. | நிகழ்வு. | எதிர்வு. | | |
|---|---|---|---|---|---|
| (உ-ம்.) (1.) | உண்ட, | உண்ணாநின்ற, / உண்கின்ற, | உண்ணும், ... | சாத்தன். / கலம். / இடம். / ஊண். / நாள். / சோறு. | [அறுவகைப் பொருட்பெயரும் எஞ்ச நின்றன.] |

(2.) வேலான் முகத்த களிறு.
மூவிலைய வேல்.
உள்ள பொருள்.
[உடன்பாட்டுக் குறிப்புப் பெயர் எச்சம்.]

(3.) ஓடாத சாத்தன். [எதிர் மறைப் பெயர் எச்சம்.]

## 341. POETICAL CHANGES OF THE FORM செய்யும்.

[செய்யும் என் எச்சத்திற்கு, எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௪௧. செய்யும் என் எச்ச ஈற் றுயிர்மெய் சேறலும்,
செய்யுளுள் உம் உந் தாதலும், முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே.

["செய்யும்" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதி உயிர் மெய்கெடுதலுஞ், செய்யுளகத்து (அதன் இறுதி) உம்மை உந்து எனத்திரித

லும், அது முற்றாயின் அதன் இறுதி உயிரேனும், உயிர்மெய்யேனுங், கெடுதலும் உளவாம்.]

(உ-ம்.) (1.) ஆகும் பொருள்................ ஆம்பொருள்.
போகும்பொருள்................ போம் பொருள்.
வாவும் புரவி.................... வாம் புரவி.
} [உயிர்மெய் கெட்டது.]

(2.) பாயும்.................. பாய்ந்து. [உம் எ-து உந்து எனத்திரிந்தது.]

(3.) இவை போகும்........ ... இவை போம்.
சூழும் .................... சூழ்ம்.
} [முற்றுவினையில் உயிர்மெய்யும், உயிருங் கெட்டன.]

## 342. THE VERBAL (ADVERBIAL) PARTICIPLE, OR GERUND.

[வினை எச்சம் ஆம்ஆறு.]

௩௪௨. தொழிலுங், காலமுந், தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினைஎச் சம்மே.
[வி. 86.]

[(பின்னர், "செய்து" "செய்பு" முதலியவாய் விதந்துகூறும் வாய்பாடுகளின் கண்) தொழிலும், (இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்) காலங்களும், (முறையே) தோன்றி (வினைமுற்றுதற்கு வேண்டும்) பால் ஒன்றும் தோன்றாது (அப்பாலுடனே) வினை ஒழிய நிற்பன வினையெச்சவினை வினைக்குறிப்புகள் ஆம்.]

## 343. DIFFERENT FORMS OF THE VERBAL (ADVERBIAL) PARTICIPLE OR GERUND.

[வினை எச்ச வாய்பாடுகள்.]

௩௪௩. செய்து, செய்பு, செய்யாச், செய்யூச்,
செய்தெனச், செயச், செயின், செய்யிய, செய்யியர்,
வான், பான், பாக்கின வினைஎச் சம்; பிற
ஐந்தொன் றாறு முக் காலமு முறை தரும்.
[வி. 86.]

["செய்து" என்பது முதலிய ஒன்பது வாய்பாட்டான் வருவனவும்; வான், பான், பாக்கு என்னும் மூன்று விகுதியவாய் வருவனவும்; இவை போல்வன பிறவும்; வினையெச்ச வினைகளாம்; (இவற்றுள்,) முன்னைய ஐந்தும் இறந்தகாலமும், ("செய" என்பது) ஒன்று நிகழ்காலமும், (ஒழிந்த) ஆறும் எதிர்காலமுங் காட்டுவனவாம்.]

| | இறந்தகாலம். | நிகழ்காலம், அல்லது முக்காலத்துக்கும் பொது. | எதிர்காலம். | எதிர்மறை. |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | (1.) நடந்து, | நடக்க, | (7.) நடக்கின், | செய்யாது. |
| | உண்டு, | உண்ண, | நடந்தால், | நடவாது. |
| | சென்று, | (6.) செய்ய, | நடந்தக்கால், | செய்யாமல். |
| | கற்று, | —— | நடத்தற்கு, | நடவாமல். |
| | —— | செய்கும, | (8.) ஆடிய, | செய்யா. |
| | ஆடி, | நடப்ப, | (9.) ஆடியர், | நடவா. |
| | ஆய், | | (10.) விடுவான், | —— |
| | (2.) உண்குபு, | | (11.) நடப்பான், | அன்றி. |
| | (3.) உண்ணூ, | | (12.) விடுபாக்கு, | இன்றி. |
| | (4.) உண்ணூ, | | செய்யில், | |
| | (5.) உண்டென, | | காண்டலும், | |
| | —— | | | |
| | தமீஇ, | | | |
| | புக்கு, | | | |
| | விட்டு, | | | |
| | பெற்று, | | | |

[இவ்வெச்சங்களுக்கு ஆவதோர் புறனடை.]

**௩௪௪. THE WORDS BY WHICH THESE ARE FOLLOWED AND SUPPLEMENTED.**

௩௪௪. அவற்றுள்,

முதலி ஞன்கும் ஈற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும்; பிறவும் ஏற்கும்பிற.

[மேலைச் சூத்திரத்து முதற்கட் (கூறிய செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்னும்) நான்கும், இறுதிக்கண் (கூறிய வான், பான், பாக்கு என்னும்) மூன்றுந் தன் கர்த்தாவின் வினையைக்கொண்டு முடியும்; இடை நின்ற (செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும்) ஐந்தும், (இன்னவென்றதனால் வருவனவும், வினையெச்சக்குறிப்புகளும் வினைமுதலையும் அஃதல்லாத) பிற கர்த்தாவின் வினையையுங் கொண்டு முடியும்.]

(உ-ம்.) (1.) அவன் உண்டு வந்தான்.
அவன் உண்பு வந்தான்.
அவன் உண்ணூக் களிப்பான்.
அவன் உண்ணூ மகிழ்வான். வினைமுதலைக் கொண்டன.
அவன் சொல்வான் எழுந்தான்.
அவன் அலைப்பான் சென்றான்.
அவன் உண்பாக்குச் சென்றான்.

(2.) அவன் உண்டென மகிழ்ந்தான்.
அவன் உண்டென மகிழ்ந்தான் இவன்.
அவன் உண்ண வந்தான்.
அவன் உண்ண வந்தான் இவன். வினைமுதலையும் பிறவினை மு
[illegible]
அவன் உண்ணின் மகிழ்வான் இவன்.
அவன் உண்ணிய மகிழ்வான்.
அவன் உண்ணிய மகிழ்வான் இவன்.

[அவன் உண்டால் உவப்பான். [illegible] உவப்பான் இவன்.]

**345.** THE SAME: A SPECIAL RULE REGARDING A VERB WHOSE SUBJECT IS A MEMBER.

௩௪௫. சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

[(முதலினுன்கும், ஈற்றின் மூன்றும் என்ற வினையெச்சங்கள்) சினை வினையாயின், (அவை தன் கர்த்தாவின் வினையைக் கொள்ளும் என்ற விதியானே) சினையொடுமுடிதலே அன்றி, முதலுடனும் முடியும்: (அங் ஙனம் முடியும் ஆயினுஞ் சினையொடு முடிதற்கு ஒற்றுமை உண்மையின் வினைமுதல் கொண்டதே ஆம்).]

(உ-ம்.) கால் ஒடிந்து இற்று வீழ்ந்தது. [சினையொடு முடிந்தது.]
கால் ஒடிந்து வீழ்ந்தான். [வினைமுதலோடு முடிந்தது.]

**346.** AN ANOMALY: FORMS OF THE ADVERBIAL PARTICIPLE INTERCHANGED.

௩௪௬. சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை.

[வி. 137.]

[("முதலி னுன்கும் ஈற்றின் மூன்றும் வினைமுதல் கொள்ளும்" என்ற வினையெச்ச வாய்பாடுகளாகப்) பிறவினையெச்ச வாய்பாடுகள் திரியினும், அவற்றின் பொருள் திரியா.]

(உ-ம்,) ஞாயிறு பட்டு வந்தான்: [பட.]
யான் கொள்வான் பொருள் கொடுத்தான். [கொள்ள.]

**347.** WHEN A CONJUGATED APPELLATIVE [321] IMPLIES ACQUISITION IT MUST NOT BE CONSTRUED WITHOUT A VERB IMPLYING THIS.

[வினைக்குறிப்புக்காவதோர் புறனடை.]

௩௪௭. ஆக்க வினைக்குறிப் பாக்கம் இன் றியலா.

[ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள் ஆக்கச் சொல்லின்றி வாரா.]

(உ-ம்.) சாத்தன் நல்லன் ஆயினன். }
சாத்தன் நல்லன். } [ஆக்கச் சொல் விரிந்துந் தொக்கும் நின்றது.]
கல்வியாற் பெரியன் ஆயினன். }
கல்வியாற் பெரியன். }

☞ சாத்தன் நல்லன் என்பது இயற்கை வினைக்குறிப்பாயில் ஆக்கச் சொல் இன்றிவரும்.

**348.** THE FINITE VERBAL FORM செய்யும் CANNOT BE USED WITH THE PLURAL OF THE MASCULINE OR FEMININE.

௩௪௮. பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மையிற், செல்லா தாகுஞ், செய்யும்என் முற்றே.

[உயர்திணைப் பன்மைப் படர்க்கையினும், முன்னிலையினுந், தன்மை

யினுஞ், செல்லாது செய்யும் என்னும் எச்சத்தானுகுஞ் செய்யும் என்னும் முற்று.]

(உ-ம்.) அவன் / அவள் / அது / அவை } உண்ணும்.

"நாம், நீர், அவர் உண்ணும்," எ-ன வழு:

---

**349.** THE INTERROGATIVE *யார்* RESTRICTED TO THE HIGHER திணை.

[திணைப்பொது அன்றிப், பாற்பொதுவினை.]

௩௪௯. யார்என் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

[வி. 6.]

[வினாப் பொருண்மையைத் தரும் "யார்" என்னும் வினைக்குறிப்பு முற்று உயர்திணைமுப்பாற்கும் பொதுவினையாம்.]

(உ-ம்.) அவன் / அவள் / அவர் } யார்.

---

**350.** THE INTERROGATIVE எவன் RESTRICTED TO THE LOWER திணை.

[இதுவும் அது.]

௩௫௦. எவன்என் வினாவினைக் குறிப்பிழி ; பால்.

[வி. 6.]

[வினாப்பொருண்மையைத் தரும் "எவன்" என்னும் வினைக்குறிப்பு முற்று அஃறி 5ம் பொதுவினையாம்.]

(உ-ம்.) அஃதெவன்? / அவையெவன்?

---

**351.** FINITE VERBS USED AS VERBAL PARTICIPLES, OR GERUNDS. APPELLATIVES USED AS VERBAL AND RELATIVE PARTICIPLES.

௩௫௧. வினைமுற் றேவினை எச்சம் ஆகலும்,
குறிப்புமுற் றீரெச்சம் ஆகலும் உளவே.

[வி. 95.]

[வினைமுற்றே வினையெச்சம் ஆகி வருதலும், வினைக்குறிப்பு முற்றே வினையெச்சமாகியும், பெயரெச்சமாகி வருதலும், உளவாம்.]

(உ-ம்.) (1.) உண்டனன் வந்தான். = உண்டு வந்தான்.
(2.) நாள் அன்று போகி = அன்றி.
"வெந்திறலினன் விறல்வழுதியொடு" = திறலினனொடு.

இரண்டாவது வினையியல் முற்றிற்று.

# நன்னூல்.

## II. சொல்லதிகாரத்தில்

### (III.) இடையியல்.

[இஃது இடைச்சொல்லிலக்கணம் உணர்த்துவது.]

**352.** PARTICLES IN GENERAL. DIFFERENT KINDS. DEFINITION.

[இடைச்சொல் இவ்வளவினையுடையன; இவ்வியல்பினையுடையன என அவற்றின் பொது இலக்கணம்.]

௩௫௨. வேற்றுமை, வினை, சாரியை, ஒப் புருபுக
ட்தம் பொருள, இசைநிறை, அசைநிலை,
குறிப்பெனஎண் பகுதியிற், றனித்தியல் இன்றிப்,
பெயரினும் வினையினும், பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

[வி. 107. 46.]

[(எழுவாயுருபு முதலிய எட்டு வேற்றுமையுருபுகளுள், பெயரும் பெயரது விகாரமும்ஆகிய எழுவாயும் விளியும் ஒழித்து, ஒழிந்த) ஐம்முதலிய ஆறு உருபுகளும்; (பகுதி, விகுதி, இடைநிலை, என்னும் தெரிநிலையும் குறிப்பும்ஆகிய வினையுருபுகளுள், முதனிலை தனிவினைப்பெயரும் பொருளாதி அறுவகைப்பெயருமாகிய பகுதி ஒழித்து, ஒழிந்த விகுதிமுதலிய) வினையுருபுகளும்; (அன், ஆன், முதலிய) சாரியை உருபுகளும்; (போலப், புரைய, முதலிய) உவம உருபுகளும்; (பிறவாறு) தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருவனவும்; (வேறுபொருள் இன்றிச் செய்யுள்) இசைநிறைத்தலே பொருளாக வருவனவும்; அசைத்தலே பொருளாக நிற்பனவும்; (வெளிப்படையின்வரும் இவைபோலாது) குறிப்பின் வருவனவும்; என்னும் எட்டுவகையினை யுடையவாய்த், தனித்து நடத்தல் இன்

றிப், பெயரின்அகத்தும் வினையினகத்தும், (அவற்றின்புறமாகிய) பின்னும் முன்னும், (இவ்விடங்கள் ஆறனுள்) ஓரிடத்து, ஒன்றேனும் பலவேனும் வந்து, (அப்பெயர் வினைகட்கு அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும்) ஒன்றுபட்டு நடக்குந் தன்மையது இடைச்சொல் ஆம்.]

**353. FOURTEEN SIGNIFICATIONS OF PARTICLES.**

["தத்தம் பொருள" என்றார்; அப்பொருளாவன இவை.]

௩௫௩. தெரிநிலை, தேற்றம், ஐயமுற் றெண், சிறப்
பெதிர்மறை, எச்சம், வினா,விழை வொழிஇசை,
பிரிப்புக், கழிவாக்கம், இன்னன இடைப்பொருள்.
[வி. 110.]

["தெரிநிலை" முதலாக விதந்த பதினொன்றும், இவை போல்வன பிறவும், (மேல் "தத்தம் பொருள" என்ற) இடைச்சொற் பொருள்கள் ஆம்.]

**354. SIX USES OF THE PARTICLE ஏ.**

[ஏகார இடைச்சொல் இலக்கணம்.]

௩௫௪. பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம்,
இசைநிறை, எனஆ றேகாரம்மே.
[வி. 111.]

["(தெரிநிலை" முதலிய பதினொன்றும், அவைபோல்வன பிறவும் ஆகிய பொருள்களுள்ளும், இசைநிறைத்தல், அசைத்தல், குறிப்பு என்னும் மூன்று பொருள்களுள்ளும்,) பிரிநிலை முதலிய ஆறு பொருளையுந் தரும் ஏகார இடைச்சொல்.]

**355. EIGHT USES OF ஓ.**

[ஓகார இடைச்சொல் இலக்கணம்.]

௩௫௫. ஒழியிசை, வினாச், சிறப் பெதிர்மறை, தெரிநிலை,
கழிவசை நிலை, பிரிப் பென எட் டோவே.
[வி. 112.]

[ஒழியிசை முதலிய எட்டுப்பொருளையுந் தரும் ஓகார இடைச்சொல்.]

### 356. USES OF என AND என்று.

[என, என்று, என்னுமிவ்விரண்டு இடைச்சொல் இலக்கணம்.]

௩௱௫௰௬. வினை, பெயர், குறிப்பிசை, வண், பண் பாறினும்
என எனு மொழி வரும்; என்றும் அற்றே.

[வினைப்பொருள் முதலிய ஆறு பொருளினும் "என" என்னும் (இடைச்) சொல் வரும்; "என்று" என்னும் (இடைச்) சொல்லும் அவ்வாறு வரும்.]

### 357. EIGHT USES OF உம்.

[உம்மை இடைச்சொல் இலக்கணம்.]

௩௱௫௰௭. எதிர்மறை, சிறப்பையம், எச்சமுற் றளவை,
தெரிநிலை, ஆக்கமோ டும்மை எட்டே.

[வி. 113.]

[எதிர்மறை முதலிய எட்டுப் பொருளையும் தரும் உம்மை இடைச்சொல்.]

### 358. SPECIAL RULE REGARDING உம் WHICH INDICATES A TOTAL.

[முற்றும்மைக்குச் சிறப்புவிதி.]

௩௱௫௰௮. முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்.

[வி. 113.]

[முற்றும்மை ஒரோ விடங்களில் எச்ச உம்மையும் ஆம்.]

(உ-ம்.) எல்லாரும் இதுசெய்யார்.
ஆறுந் தருவது வினையே.

### 359. உம் INDICATING AN ELLIPSIS.

[எச்ச உம்மைக்கு ஆவதோர் விதி.]

௩௱௫௰௯. செவ்வெண் ஈற்றதாம் எச்ச உம்மை.

[வி. 113.]

[எச்சஉம்மை செவ்வெண்ணின்கண் வரும்ஆயின் ஈற்றின்கண் வரும்.]

(உ-ம்.) செய்பவன், கருவி, நிலஞ், செயல், காலஞ்,
செய் பொருளுந் தருந்திறத்தது வினையே.

**360.** WHEN PARTICLES OF ENUMERATION ARE USED THE NOUN OF NUMBER SOMETIMES INSERTED, AND SOMETIMES OMITTED.

[சில எண்ணிடைச் சொற்களுக்கு ஆவதோர் புறனடை.]

௩௬௦. பெயர்ச்செவ் வெண்,ஏ, என்றா, எனா, எண்
ணான்குந் தொகைபெறும்; உம்மை, என்றென வோ
டிந்நான் கெண்ணும் அஃ தின்றியும் இயலும்.

[(பெயர்களினிடையே எண்ணிடைச்சொல் தொக்கு நிற்ப வருஞ்) செவ்வெண்ணும், (பெயரோடு தொகாது வரும்) "ஏ" (எண்ணும்,) "என்றா" (எண்ணும்,) "எனா" எண்ணும், ஆகிய நான்குந் தொகைபெற்று நடக்கும்; "உம்மை" (எண்ணும்,) "என்று" (எண்ணும்,) "என" (எண்ணும்,) "ஒடு" (எண்ணும் ஆகிய) இந்நான்கெண்ணும், (தொகைபெற்றும்,) பெறாதும் நடக்கும்.]

(உ-ம்.) (1) சாத்தன், கொற்றன், தேவன், பூதன், நால்வரும் வந்தார்
[தொகை பெற்றே வந்தது]
(2) சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் வந்தார்.
சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் நால்வரும் வந்தார்
[தொகை பெற்றும் பெறாதும் வந்தது]
(பிறவும் அன்ன)

**361.** என்று, என, ஒடு TO BE UNDERSTOOD, THOUGH NOT ALWAYS REPEATED AFTER EACH NOUN IN THE ENUMERATION

[சிறப்புவிதி.]

௩௬௧. என்றும், எனவும், ஒடுவும், ஒரோவழி
நின்றும், பிரிந்தெண் பொருடொறு நேரும்.
[வி. 114.]

[இம்மூன்றெண்ணும் (எண்ணும்பொருளோடு நிற்றலே அன்றி,) ஓரிடத்து நின்றும், பிரிந்தெண்ணும் பொருள்தோறும் பொருந்தும்.]

(உ-ம்.) வினை பகை என்றிரண்டின் எச்சம்.—
பகை பாவம் அச்சம் பழி என நான்கும்.—
பொருள், கருவி, காலம், வினை இடனொடைந்தும்.

## 362. THESE ENUMERATING PARTICLES USED WITH VERBS FOLLOW THE SAME RULES AS WHEN USED WITH NOUNS.

[பெயரோடு வரும் எண்ணிடைச்சொற்கள் வினையோடும் வருமாறு.]

௩௬௨. வினையொடு வரினும் எண் இனைய ஏற்பன.

[எண் (ணிடைச்சொற்கள்) வினையோடு வரினும் (மேற்பெயரோடு வந்தாற்) போலவும் ஏற்பன.]

(உ-ம்.) (1.) மண்டில' மழுங்க, மலை நிறங் கிளர,
வண்டின' மலர் பாய்ந்தூத, மிசையே
கண்டலங் கானங் குருகினம் ஒலிப்ப.
[உம்மை இடைச்சொல் தொக்கு நின்றது. செவ்வெண். சூ. 360.]

(2.) கற்றுங் கேட்டுங் கற்பனை கடந்தான். [உம்மை எண். சூ. 357.]

(3.) உண்ணவென்று உடுக்கவென்று பூசவென்று முடிக்கவென்று வந்தான். [என்றெண். சூ.356.]
(4.) ஆடல் பாடலொடு வந்தான். [சூ. 361.]

## 363. THE THREE USES OF தில் (IN POETRY.)

௩௬௩. விழைவே, காலம், ஒழி இசை தில்லே.

[இம்மூன்று பொருளையுந்தரும் "தில்" (என்னும் இடைச்சொல்).]

(உ-ம்.) (1.) அரிவையைப் பெறுக தில் லம்ம யானே. [விழைவு. பெறுதல் வேட்கை.]
(2.) பெற்றாங்கறிக தில் லம்ம இவ்வூரே. [காலம். பெற்ற காலத்து.]
(3.) வருக தில் லம்ம வெஞ் சேரி சேர. [ஒழியிசை. வந்தால் ஒன்று செய்வேன்.]

## 364. THE SIX USES OF மன் (IN POETRY.)

௩௬௪. மன்னே அசைநிலை, ஒழியிசை, ஆக்கம்,
கழிவு, மிகுதி, நிலைபே றாகும்.

[இவ்வாறு பொருளையுந் தரும் "மன்" (என்னும் இடைச்சொல்.)]

(உ-ம்.) (1.) அது மற் கொண்கன் றேரே. [அசைநிலை.]
கூரிய தோர் வாண் மன். [ஒழியிசை.]
பெரியன் மன். [ஆக்கம்.]
சிறியகட் பெறினே எமக்கீயுமன்னே. [கழிவு.]
எந்தை எமக்கருளு' மன்! [மிகுதி.]
மன்று உலகத்து மன்னிய புரிமே. [நிலைபேறு.]

### 365. THE THREE USES OF *மற்று*.

[மற்றென்னும் இடைச்சொல்லிலக்கணம்.]

௩௬௫. வினைமாற் றசைநிலை, பிறிதெனு மற்றே.

[இம்மூன்று பொருளையுந் தரும் "மற்று" (என்னும் இடைச்சொல்).]

(உ-ம்.) இனி மற் றொன்றுரை. [வினைமாற்று]

அது மற் றம்ம. [அசைநிலை.]

மற்றொன்று சூழினும். [பிறிது.]

---

### 366. *மற்றை* INDICATES SOMETHING ALLIED TO SOME OTHER THING BEFORE CONTEMPLATED.

[மற்றை என்னும் ஐகாரவீற்று இடைச்சொல் பொருள் படும் ஆறு.]

௩௬௬. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

[பெயர்க்கு முதனிலையாய் வரும் "மற்றை" என்னும் ஐகார வீற்று இடைச்சொல்லானது முன் சுட்டப்பட்ட பொருள் ஒழிய அதற்கினமாகிய பொருளைக்குறித்து நிற்கும்.]

(உ-ம்.) மற்றையதுங் காண வேண்டும். [முன்கண்டதொழிய அதற்கினமாகிய ஒன்றையுங் காணவேண்டும்.]

---

### 367. TWO USES OF *கொல்* IN POETRY.

[கொல் என்னும் இடைச்சொல் இலக்கணம்.]

௨௬௭. கொல்லே ஐயம், அசைநிலைக், கூற்றே.

["கொல்" என்பது இவ்விரண்டு பொருளையுந் தருஞ்சொல்லாம்.]

(உ-ம்.) (1.) இவ்வுருக்குற்றி கொல்லோ மகன்கொல்லோ. [ஐயம்.]
(2.) சென்ற காதலர் வருவர் கொல். [அசைநிலை.]

---

### 368. *ஒடு* AND *தெய்ய* USED TO FILL UP THE METRE.

[ஒடுவெனவுந் தெய்ய எனவும் வரும் இடைச்சொல் இலக்கணம்.]

௩௬௮. ஒடுவுந் தெய்யவும் இசைநிறை மொழியே.

[இவ்விரண்டும் இசைநிறைத்தற் பொருளைத் தருஞ்சொற்களாம்.]

(உ-ம்.) (1.) விரைந்தொன்று வட்டில் போதொடு பொதுள.
(2.) சொல்லேன் றெய்ய நின்னொடு பெயர்த்தே.

**369.** அந்தில் AND ஆங்கு SOMETIMES REDUNDANT, SOMETIMES CONVEYING THE MEANING OF "PLACE."

[அந்தில், ஆங்கு என்ற இடைச்சொல் இலக்கணம்.]

௩௬௯. அந்தில், ஆங்கசைநிலை, இடப்பொருள் அவ்வே.

[இவ்விரண்டு இடைச்சொல்லும் அசைநிலைப்பொருளவாயும், இடப்பொருளவாயும் வரும்.]

(உ-ம்.) (1.) அநதிற் கழலினன கச்சினன. [அசைநிலை]
வருமே சேயிழை அநதிற் கொழுநற் காணிய. [இடம்.]

(2.) ஆஙகத திறனல்ல யாஙகழற. [அசைநிலை.]
ஆஙகாஙகாயினுமாக. [இடம்.]

**370.** USES OF அம்ம REDUNDANT AND WITH THE MEANING OF "HEAR!"

[அம்ம என்னும் இடைச்சொல் இலக்கணம்.]

௩௭௦. அம்ம உரையசை, "கேண்மின்," என்றாகும்.

["அம்ம" என்பது உரையசைப் பொருளதாயும், "ஒன்றுசொல்வன், கேண்மின்" என்னும் ஏவற்பொருளதாயும் வரும்.]

(உ-ம்) அது மற்றமம. [உரையசை.]
அமம வாழி தோழி [கேளமின]

**371.** USE OF மா WITH THE OPTATIVE MOOD.

[மா என்னும் இடைச்சொல்லிலக்கணம்.]

௩௭௧. மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

["மா" என்னுஞ் சொல் வியங்கோளின்கண் வரும் அசைச்சொல்லாம்.]

(உ-ம்) மாயக் கடவுட்குயாக மா வலனே.

**372.** POETICAL USE OF SUNDRY VOCATIVE PARTICLES

[மியா முதலிய இடைச்சொற்களின் இலக்கணம்.]

௩௭௨. மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை,
வாழிய, மாள, ஈ, யாழ, முன் னிலையசை.

[இங்ஙனங் கூறிய பத்து இடைச்சொற்களும் முன்னிலைக்கண் வரும் அசைநிலைகள் ஆம்.]

(உ-ம்.) சிலையன் செழுந்தழையன் சென்மியா. [மியா.]
தண்டுறையூர காணிக. [இக.]
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ. [மோ.]
சென்மதி பெரும. [மதி.]
சொலியாத்தை நின்வெகுளி. [அத்தை.]
நீ ஒன்றுபாடித்தை. [இத்தை.]
காணியவா வாழியமலைச்சாரல். [வாழிய.]
சிறிது தவிர்ந்தீக, மாள, நின்பரிசிலர் உய்ம்மார். [மாள.]
சென்றீ, பெரும நிற்றகைக்குநர் யாரே. [ஈ.]
செயவினை மருங்கிற் செலவயர்ந்தி, யாழ. [யாழ.]

---

## ௩௭௩. REDUNDANT PARTICLES.

[யா முதலிய இடைச்சொற்களின் இலக்கணம்.]

௩௭௩. யா,கா, பிற,பிறக் கரோ,போ, மாதிரும்,
சின்,குரை, ஒரும், போலும், இருந்திட்
டென்றும், தாம்,தான், கின்று,நின் றசைமொழி.

[யா முதலிய இடைச்சொல்லும் முன்னைய போலாது, எல்லா இடத்தி
னும் எல்லாச் சொல்லினும் வரும் அசைச்சொல்லாம்.]

(உ-ம்.) யா, பனவிருவர் யானுக்கர் அகத்தியனுக்கு [யா.]
புரிமுத் பட்டாளோ இவள் இவட்காண்டி, கா. [கா.]
ஆயனை அல்லைபிற. [பிற.]
பிறக்கினுட் செல்லான பொருந்தனம் பட்டான். [பிறக்கு.]
இருவகுபிலானும், அரோ. [அரோ]
பிரியன வாழாதென, போ. [போ.]
விரிந்தன்று, மாதோ, தெளிந்தவெம் கண்ணே. [மாதோ]
காண்டிருமல்லமோ கொண்க. [இரும.]
ஈங்காகிய வால்என்றிசின. [சின.]
அதுபெறல் அருங்குரைத்தே. [குரை.]
அஞ்சவதோரும் அறனே. [ஒரும.]
வடுவென்ற கண்ணும் வருந்தின, போலும். [போலும.]
எழுந்திருந்தேன. [இருந்து.]
நெஞ்சம் பிணந்திட்டு. [இட்டு.]
தேவாதி தேவன் அவனசேவடி சேர்தும் அன்றே. [அன்று.]
பணியும் ஆம் என்றும் பெருமை, சிறுமை.
அணியும் ஆம் தனனை வியந்து. [ஆம்]
நீர்தாம், நீதான். [தாம், தான்]
யான்பிறள அளியன் வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன. [கின்று.]
அழல் அடைந்த மன்றந்தாரத்தைபோல நின்றா நிழல் அடைந்தே
நினனை என்றேத்த. [நின்று.]

இடையியல் முற்றிற்று.

# நன்னூல்.

## II. சொல்லதிகாரத்தில்

## (IV.) உரியியல்.

[உரிச்சொல் இலக்கணம் உணர்த்துவது.]

### 374. QUALIFYING WORDS IN GENERAL

[உரிச்சொல்லின் பொது இலக்கணம்.]

௩எச. பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி,
ஒருகுணம் பலகுணந் தழுவிப், பெயர்வினை
ஒருவா, செய்யுட் குரியன உரிச்சொல்.

[வி. 47.]

[(பண்புகள் குணப்பண்பும் தொழிற்பண்பும் ஆகிய இரண்டனுள் அடங்குமாயினும், இசை குறிப்புப் பண்பெனப் பலவேறு வகைப்படுதலின்,) பல (வேறு) வகைப் (பட்ட) பண்புகளையும் உணர்த்தும் பெயர் ஆகி, (அங்ஙனம் உணர்த்துழி ஒருசொல்) ஒருகுணத்தை உணர்த்துவனவும், பலகுணத்தை உணர்த்துவனவுமாய், ஏனைப்பெயர் வினைகளை விட்டு நீங்காவாய்ச், செய்யுட்கு உரியனவாய்ப், பொருட்கு உரிமை பூண்டு வருவன உரிச்சொல் ஆம்.]

### 375. DEFINITION OF "QUALITY": பண்பு.

[பண்பு இது என உணர்த்தியது.]

௩எரு. உயிர், உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே.

[உயிராகியபொருளும், உயிர்அல்லாத (பொருளும் என இருவகையுள் அடங்கும் உலகத்துப்) பொருள்களின் குணங்கள் பண்பு ஆம்.]

### 376. FIVE-FOLD DIVISION OF LIVING CREATURES.

[உயிராகிய பொருள் இவை என்பது.]

௩௭௬. மெய், நா, மூக்கு, நாட்டம், செவிகளின்
ஒன்று முத லாக்கீழ்க் கொண்டு மேல் உணர்தலின்
ஓர் அறி வாதியா உயிர் ஐந் தாகும்.

[(இங்ஙனம்) மெய் முதலாகக்கூறிய ஐம் பொறிகளானும், (பரிசம், இரதம், கந்தம், உருவம், சத்தம் என்னும் ஐம்புலனையும் உணருங்கால் மெய்யாற் பரிசத்தை உணரும் உணர்ச்சி) ஒன்று முதலாகக் கீழ்ப்போன உணர்ச்சியுங் கொண்டு மேல்வரும் புலன்களை ஒன்றோடொன்றாக உணர்தலின் ஓரறிவுயிர் முதலாக ஐந்தாம் அவ்வுயிர்.]

### 377. CREATURES OF ONE SENSE: GRASS, TREES, &c.

[ஓர் அறிவுயிர் இவை என்பது.]

௩௭௭. புல்மர முதலஉற் றறியும்ஓர் அறிவுயிர்.

[புல்லு, மரம், முதலியன (மெய்யாற்) பரிசித்து (ப் பரிசத்தை) அறியும் ஓரறிவுயிர் (கள் ஆம்).]

### 378. CREATURES OF TWO SENSES: SHELL-FISH, &c

[ஈர் அறிவுயிர் இவை என்பது.]

௩௭௮. முரணந் தாதிநா வறிவோடீர் அறிவுயிர்.

[இப்பி, சங்கு முதலியன (கீழ்ப்போன மெய்யறிவே அன்றி) நா (வால் இரதத்தை அறியும்) அறிவோடு ஈரறிவுயிர் (கள் ஆம்).]

### 379. CREATURES OF THREE SENSES: INSECTS, &c.

[மூவறிவுயிர் இவை என்பது.]

௩௭௯. சிதல்எறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

[கறையான், எறும்பு முதலியன (கீழ்ப்போன இரண்டறிவுகளே அன்றி மூக்கால் கந்தத்தை அறியும்) அறிவினோடு மூவறிவுயிர் (கள் ஆம்).]

**380.** CREATURES OF FOUR SENSES: WINGED INSECTS, &C.

[நாலறிவுயிர் இவை என்பது.]

ருஅ0. தும்பி, வண் டாதி கண் அறிவினுல் அறிவுயிர்.

[தும்பி, வண்டு முதலியன, (கீழ்ப்போன மூன்றறிவே அன்றிக்) கண்ணுல் உருவத்தை அறியும்) அறிவினேடு நாலறிவுயிர் (கள் ஆம்).]

**381.** CREATURES OF FIVE SENSES, ALL OTHER ORGANIC BEINGS.

[ஐயறிவுயிர் இவை என்பது.]

ருஅக. வானவர், மக்க ணரகர், விலங்கு, புள்,

செவி அறிவோ டைஅறி வுயிரே.

[வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள் முதலியன, (கீழ்ப்போன நாலறிவே அன்றிச்) செவி (யாற் சத்தத்தை அறியும்) அறிவினேடு ஐயறிவுயிர் (கள் ஆம்).]

**382.** THINGS WITHOUT LIFE

[உயிரல் பொருள் இவை என்பது.]

ருஅஉ. உணர்வியல் ஆம் உயிர் ஒன்றும் ஒழித்த

உடல் முதல் அனைத்தும் உயிர் அல் பொருளே.

[அறிவு மயமாம் உயிர் ஒன்றுமே அன்றி, அவ்வுடம்பு முதலிய (உலகத்துப் பொருள்கள்) எல்லாம் உயிர் அல்லாத பொருள்கள் ஆம்.]

**383.** BODY AND SOUL, ONE AND YET DIVERSE.

[புறனடை.]

ருஅரு. ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்,

வேற்றுமை நயத்தின் வேறே உடல், உயிர்.

[(எவ்வுயிர் எவ்வுடம்பெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கும்) ஒற்றுமை நயங்கருதியவழி ஒன்றுபோற்றோன்றுமாயினும், (உயிர் சித்தா

யும், உடம்பு சடமாயும் நிற்கும்) வேற்றுமை நயமாகிய உண்மை கருதிய வழி அவ்விரண்டுந் தம்முள் வேறாம்; (ஆதலின் உயிரோடு கூடி நின்ற காலத்தும் அவ்வுடம்பினை உயிரல்பொருளென்றும்).]

**384.** QUALITIES OF THE EMBODIED LIVING PRINCIPLE.

[உயிரின்குணம் இவை என்பது.]

௩அ௪. அறிவருள், ஆசை, அச்ச மானம்,
நிறை, பொறை, ஓர்ப்புக், கடைப்பிடி, மையல்,
நினைவு, வெறுப்புவப் பிரக்க நாண், வெகுளி,
துணிவழுக் காறன் பெளிமை, எய்த்தல்,
துன்பம், இன்பம், இளமை, மூப்பிகல்,
வென்றி, பொச்சாப் பூக்க மத மறம்,
மறவி, இனைய உடல்கொள் உயிர்க்குணம்.

["அறிவு" முதலிய முப்பத்திரண்டும், இவை போல்வன பிறவும், உடலோடு கூடிய உயிர்க்குணங்கள் ஆம்.]

**385.** FACULTIES OF THE EMBODIED LIVING PRINCIPLE.

[உயிரின் தொழில்.]

௩அ௫. துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல்,
உய்த்தல், ஆதி உடல்உயிர்த் தொழிற்குணம்.

[ஐம்புலனையும் நுகர்தல் முதலிய இவ்வைந்தும், இவைபோல்வன பிறவும், உடலோடு கூடிய உயிரின் தொழிற் குணங்கள் ஆம்.]

**386.** QUALITIES OF LIFELESS MATTER.

[உயிர் அல்லாத பொருள்களின் குணம்.]

௩௮௬. பல்வகை வடிவிரு நாற்றம், ஐவண்ணம்,
அறுசுவை, யூறெட் டுயிரல் பொருட்குணம்.

[(வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம், முதலிய) பலவகை வடிவும், (நற்கந்தம், துர்க்கந்தம் என்னும்) இருநாற்றமும்; (வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும்) ஐந்துவண்ணமும்; (கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும்) ஆறு இரதமும்; (வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்னும்) எட்டூறும், உயிரல்லாத பொருள்களின் குணங்கள் ஆம்.]

**387.** FACULTIES AND QUALITIES COMMON TO BOTH.

[இருபொருட்கும் பொதுவான தொழிற்குணம்.]

௩௮௭. தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல்,
நீங்கல், அடைத னடுங்கல், இசைத்தல்,
ஈதல், இன்னன, இருபொருட் டொழிற்குணம்.

["தோன்றல்," முதலிய ஒன்பதும், இவை போல்வன பிறவும், உயிர்ப்பொருள் உயிரல்பொருள் என்னும் இரண்டற்கும் பொதுவான தொ குணங்கள் ஆம்.]

**388.** SIX WORDS IMPLYING "EXCESS."

[ஒருகுணந் தழுவிய உரிச்சொற்கள் இவை என்பது.]

௩௮௮. சால, உறு, தவ, நனி, கூர், கழி, மிகல்.
[வி. 120.]

[சால என்பது முதல் கழி என்பதீறாகக் கூறிய ஆறு உரிச்சொல்லும் மிகுதியாகிய ஒருகுணத்தை உணர்த்தும் சொற்கள் ஆம்.]

(உ-ம்.) பருவர்து சாலப் பலகொலென்றெண்ணி. [சால.]
உறு வளி தூக்கும் உயர் சினை மாவின். [உறு.]
தவச் சேய் நாட்டார் ஆயினும். [தவ.]
நனி பேதையே. [நனி.]
பொறை யில்லா நோய் கூரப் புல்லென்றிசினே. [கூர்.]
காமங் கழிகண் ணோட்டம். [கழி.]

### 389. THIRTEEN MEANINGS OF கடி.

[பலகுணந் தழுவிய உரிச்சொல்லுள் ஒன்றனை உணர்த்துவது.]

௩௮௯. கடிஎன் கிளவி: காப்பே, கூர்மை,
விரையே, விளக்கம், அச்சம், சிறப்பே,
விரைவே, மிகுதி, புதுமை, ஆர்த்தல்,
வரைவே, மன்றல், கரிப்பின் ஆகும்.

[கடி என்னும் உரிச்சொல் காப்பு முதலிய பதின்மூன்று குணத்தையும் உணர்த்தும்.]

(உ-ம்.) ஒண்சுடர் நல்லிருங் கடி நீலி. [காப்பு.]
கடிநுனைப் பகழி. [கூர்மை: கடுமைபொருந்திய நுனியையுடைய கணை.]
கடி மாலைசூடி [நாற்றம்: வாசனைபொருந்திய மாலையை அணிந்து.]
கண்ணாடியன்ன கடிமார்பன். [விளக்கம்: கண்ணாடிபோன்ற பிரகாசத்தை உடைய மார்பன்.]
கடி அரமகளிர். [அச்சம்: அச்சந்தங்கிய தெய்வப்பெண்கள்.]

கடி மாமிசைப் பூத்துக் கம்புளோடன்னம் ஆர்க்கும். [சிறப்பு: சிறப்புபொருந்திய மாமரம் மிகப்பூத்து.]
எம்மம்பு கடி விடுது நும்மரண் சேர்மின். [விரைவு: அம்பைச சீக்கிரம் விடுவோம்.]
கடிஊண் கடவுட்கிட்ட செழுங் குரல். [மிகுதி: மிகுதியாகிய உணவு.]
கடிமணம். [புதுமை: புதிதாகிய கலியாணம்.]
கடி முரசு. [ஆர்த்தல்: ஒலிக்கின்ற முரசு.]
கடித்துக் கரும்பினைக் கண் டகர நூறி. [வரைவு: இங்கே நீக்கு என்று வினை ஆயிற்று.]
கடிவினைமுடிகினி. [மன்றல்: கலியாணத் தொழில்.]
கடி மிளகுதின்ற கல்லா மந்தி. [கரிப்பு: காரமாகிய மிளகு.]

### 390. SIXTEEN SYNONYMES OF சொல்.

[ஒருகுணந் தழுவிய உரிச்சொல் உணர்த்தியது.]

௩௯0. மாற்ற நுவற்சி, செப்புரை, கரை, நொடி,
இசை, கூற்றுப், புகறல், மொழி, கிளவி,
பாட்டுப், பகர்ச்சி, இயம்பல், சொல்லே.

[மாற்றம் முதல், இயம்பல் ஈறாகக் கூறிய பதினாறும் சொல் என்னும் ஓர்குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆம்.]

(உ-ம்.) கோவலர் வாய் மாற்றம்.
பொழுதறிந்து நுவல.
செப்பலுற்றேன்.
உரைப்பார் உரைப்பவை எல்லாம்.
அறங்கரை நாவின்.
ஆயிழையாடாஞெடியும். [வி. 37.]
வாயிலிசை யெனப் புக்கு.
உற்றது சாங்கள் கூற.
புகன்றவன்றியும் பூமி கவருமே.
கண்டது மொழிமோ.
இசைக்கும் பாண, கேளினி.
விளம்பினர் புலவர்.
அறைகுவன் எண்ணே.
அறம்பாடின்றே.
வார்த்தை பகர் குற்றேன்.
இடிபோல இயம்பினன்.

### ௩௯௧. TWENTY-TWO SYNONYMES OF ஓசை.

௩௯௧. முழக்கிரட் டொலி, கலி, இசை, துவை, பிளிறிரை,
இரக்கமுக் கியம்பல், இமிழ், குளி றதிர், குழை,
கனை, சிலை, சும்மை, கவ்வை, கம்பலை,
அரவம், ஆர்ப்போ டின்னண, ஓசை.

[முழக்கு முதலிய இருபத்திரண்டும், இவை போல்வன பிறவும், என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆம்.]

(உ-ம்.) முழங்கு முந்நீர்.
குடிஞை இரட்டுங் கோடுயர் நெடு வ
ஒல்லென ஒலிக்கும் ஒலி புனல்.
கலி கெழு மூதூர்.
பறையிசை அருவி.
தோறுவைத்தல். [வி. 38.]
பிளிறு வார் முரசம்.
இரைக்கும் அஞ் சிறைப் பறவைகள்.
இரங்கும் முரசினம்.
அமுங்கின மூதூர்.
காலை முரசமதியம்ப.
கடல்.
குளிறு முரசம்.
கனிறு களித்த திருங் கார்.
குழை புனற் கன்னி.
கனைகடற் சேர்ப்ப.
சிலைத்தார் முரசங் கறங்க.
தவ்வாத சும்மை மிகு தக்கண நாடு.
கவ்வை நீர் வேலி.
வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்.
அறை கட லரவத் தானை.
ஆர்த்த பல்லியக் குழாம்.

### ௩௯௨. DICTIONARIES TO BE CONSULTED FOR PARTICULAR WORDS.

[இவ்வியலுக்காவதோர் புறனடை.]

௩௯௨. இன்ன தின்னுழி இன்னணம் இயலும்
என்றிசை நூலுள் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலில், பிங்கல முதலா
நல்லோர் உரிச்சொலி னயந்தனர் கொளலே.

[(பெயர் வினை இடை உரி என்னும் நால் வகைச்சொல்லுள்,) இன்ன சொல் (தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடத்துள்ளும், வழக்குச் செய்யுள் என்னும் இரண்டிடத்துள்ளும்,) இவ்விடத் திவ்விலக்க

ணத்ததாய் நடக்கும், என்று சொல்லக் கடவதாகிய இந்நூலுள், (அவ்விலக்கணங் காட்டுதற்கு வேண்டிய மாத்திரையே கூறுவதன்றி, உரிச்சொல்லாகிய) குணப்பெயரையும், ஏனைக் குணிப் பெயரையும் நிகண்டினுட் கூறினாற்போல விரித்துக் கூறக்கடவம் அல்லம்; விரிக்கின், "மற்றொன்று விரித்தல்" என்னுங் குற்றம் வரும்; ஆதலின், அவற்றினைக் கண்டறிய வேண்டினோர் இவ்விலக்கணம் அறிதற்கு முன்னரே ஏனைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலந்தை, திவாகரம், சூடாமணி, முதலிய நூல்களுள் வகுக்கும் உரிச்சொற் றொகுதியுள் விரும்பிக் கொள்க.]

உரியியல் முற்றிற்று.

# நன்னூல்.

## II. சொல்லதிகாரத்தில்

## (v.) பொதுவியல்.

### 393. FORMS COMMON TO BOTH GENDERS.

[பெயர்க்கும் வினைக்கும் உரியதோர் இலக்கணம்.]

௩௯௩. இருதிணை ஆண்பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே.

[உயர்திணை ஆண்பால் பெண்பால் என்னும் இருபாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும்; அஃறிணைஆண்பால் பெண்பால் என்னும் இருபாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், அவ்விருபாலுள் ஒருபாலை ஒழிக்கும் குறிப்பினான்.]

---

### 394. THE CHANGE OF ஆ INTO ஓ IN CERTAIN POETICAL FORMS.

[பெயர்க்கும் வினைக்குஞ் செய்யுட்கண் ஆவதோர் இலக்கணம்.]

௩௯௪. பெயர்வினை இடத்து ன, ள, ர, ய ஈற்றயல்
ஆ, ஓ, ஆகலுஞ் செய்யுளுள் உரித்தே.

[வி. 95.]

[பெயர்க்கண்ணும், வினைக்கண்ணும், னகார ளகார ரகார யகார ஈற்றயல் (நின்ற விகுதிமுதல்) ஆகாரம் ஓகாரம் ஆதலுஞ் செய்யுளிடத்து உரித்தாம்.]

(உ-ம்) (1.) வில்லான் என்பதற்கு வில்லோன் எனவும்.
(2.) தொடியாள் எ-திற்கு தொடியோள் எனவும்.
(3.) நல்லார் எ-திற்கு நல்லோர் எனவும்.
(4.) கொடியாய்' எ-திற்கு கொடியோய் எனவும் வரும்.

வண்ணான் முதலியவை வண்ணோன் என வாரா.
இழவோன் என அகரமும் ஓகாரம் ஆயிற்று.

**395.** TERMINATIONS COMMON TO AFFIRMATIVE AND NEGATIVE FORMS.

௩௯௫. உருபும், வினையும், எதிர் மறுத் துரைப்ப
ியா தத்தம் ஈற் றுருபின் என்ப.

[வி. 89.]

[(எட்டுவேற்றுமை) உருபுகளும், (மூவகை) வினைச்சொற்களும், எதிர் மறுத்துச் சொல்லுமிடத்தும், தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ்வுருபினின்றும் வேறுபடா என்றுசொல்லுவர் (புலவர்).]

(உ-ம்.) செய்யான், செய்வான் என்பவற்றில் ஆன் என்னும் விகுதியைக் காண்க.
நடவாத, நடக்கிற என்பவற்றில் அ என்னும் விகுதியைக் காண்க.
இன்மை, உண்மை என்பவற்றில் மை என்னும் விகுதியைக் காண்க.

**396.** HOWEVER COMPLEX THE SENTENCE THERE CAN BE BUT ONE SUPPLEMENTARY OR FINITE WORD.

௩௯௬. உருபுபல அடுக்கினும், வினைவே றடுக்கினும்,
ஒருதம் எச்சம் ஈறுற முடியும்.

[வி. 133. 135.]

[(வேற்றுமை) உருபுகள் (விரிந்துந், தொக்குந், தம்முள் விரவிப்பல) அடுக்கி (வரினும், வெவ்வேறு பலஅடுக்கி) வரினும், (மூவகை) வினைச்சொற்களுந் (தம்முள் விரவி அடுக்குந் தன்மையவன்றி வெவ்வேறு பல) அடுக்கிவரினும், தத்தம் எச்சம் இறுதியில் ஒன்று வர அதனோடனைத்தும் முடிவனவாம்.]

(உ-ம்.) (1.) சாத்தன் யானையது கோட்டை நுனிக்கட் பொருட்கு வாளாற் குறைத்தான்.
[உருபுகள் விரவிப், பல அடுக்கி, ஒருவினை கொண்டன.]

(2.) சாத்தனையுங் கொற்றனையுந் தேவனையும் பூதனையும் வாழ்த்தினன்.
[இரண்டாம் உருபு வேறுபல அடுக்கி ஒருவினை கொண்டன.]

(3.) சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தேவனுக்கும் பூதனுக்குந் தந்தை.
[நான்காம் வேற்றுமை வேறுபல அடுக்கி ஒருபெயரைக் கொண்டன.]

(4.) வாள் கைக்கொண்டான். [உருபு தொக்கு வந்தது.]

(5.) உண்டான், தின்றான், ஓடினன், பாடினன் சாத்தன்.

**397.** WORDS MAY BE INTERPOSED BETWEEN THE GOVERNING (SUPPLEMENTING) AND GOVERNED (SUPPLEMENTED) FORMS. CO. 319. 340. 344.

௩௯௭. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர் வினை இடைப்பிற வரலும் ஆம் ஏற்பன.
[வி. 132.]

[(வேற்றுமை) உருபுகளும், முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களுங் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே பிற (சொற்கள்) வருதலுமாம், ஆண்டைக்குப் பொருந்துவன.]

(உ-ம்.) சாத்தன் (வயிறார) உண்டான்.
அறத்தை (அழகுபெற) செய்தான்.
விருந்தின்றி (ஒருபோதும்) உண்ணான்.
பகைவரை (மாய) வெட்டினான்.
சாத்தா (விரைந்தோடி) வா!
கொல்லுங் (காட்டுள) யானை.

**398.** DEPENDANT WORDS MAY ALSO FOLLOW THEIR PRINCIPALS.

௩௯௮. எச்சப் பெயர் வினை எய்தும் ஈறு
[வி. 86. 87.]

[(உருபுகளும், முற்றுக்களும், பெயர் எச்சங்களும், வினையெச்சங்களுங் கொண்டு முடியும்) எச்சமாகிய பெயரும் வினையும் (அவற்றிற்கு) ஈற்றினும் வரும். சூ. 319. 340. 344 காண்க.]

(உ-ம்.) (1.) சாத்தன் வந்தான். [முதலில்.]
வந்து போனான். மரத்தைக் குறைத்தான்.
(2.) வந்தான் சாத்தன், போயினான் வந்து. [ஈற்றில்]
குறைத்தான மரத்தை.

**399.** WORDS WHICH INCLUDE OTHERS BY IMPLICATION.

[நால்வகைச் சொற்களுக்கும் ஆவதோர் இலக்கணம்.]

௩௯௯. ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே.

[(பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள்) ஒவ்வொன்று, எஞ்சி நின்ற தன்றன் இனங்களைக் கொள்ளுதற்கு உரித்தாம்.]

(உ-ம்.) சோற்றை நனி உண்டான். (கறியை நனி தின்றான்.)
நஞ்சு உண்டான் சாவான். (உண்டான் சாவான், உண்பது சாம்.)

**400.** THE GENDER &C. OF COMMON NOUNS AND VERBAL FORMS DETERMINED BY THE SUPPLEMENTING WORD.

௪௦௦. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கு
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

[(திணை பால் இடங் காலங்கட்கும்) பொதுவாகிய பெயர் வினைகளினுடைய பொதுத்தன்மையினை நீக்கி, ஒன்றற்கு உரிமைசெய்யும் மேல்வருஞ் சிறப்புப்பெயர் வினைகள் தாமே. சூ. 282. 284. 330. 338. 339 காண்க.]

(உ-ம்.) சாத்தன் இவன், சாத்தன் இது. [சிறப்புப்பெயர்.]
ஒருவர் என் ஐயர், ஒருவர் என் தாயர். [சிறப்புப்பெயர்.]
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன. [சிறப்புவினை.]

யாம் எல்லாம் வருவம்.
நீர் எல்லாம் போமின்.
அவர் எல்லாம் வருவர்.
[எல்லாம் என்பது மூவிடத்திற்கும் பொதுமையைச் சிறப்புப் பெயராலும் வினையாலும் நீக்கின.]

உண்டு வந்தான், (வந்தாள், வந்தது, வந்தார், வந்தன.)

**401.** IMPERFECT AND ELLIPTICAL FORMS ARE FOLLOWED BY THEIR APPROPRIATE SUPPLEMENTARY WORDS.

௪௦௧. பெயர், வினை, உம்மை, சொற், பிரிப்பென, ஒழி இசை
எதிர்மறை, இசை, எனுஞ் சொல்லொழி பொன்பதும்,
குறிப்புந், தத்தம் எச்சங் கொள்ளும்.

[பெயரெச்சமும் (340.), வினையெச்சமும் (344.), உம்மையெச்சமும் (357. 359.), சொல்லெச்சமும், பிரிநிலையெச்சமும் (353.), எனவெச்சமும் (361.), ஒழியிசையெச்சமும், எதிர்மறையெச்சமும், இசையெச்சமும் ஆகிய சொல்லெச்சம் ஒன்பதும், குறிப்பெச்சம் ஒன்றும், தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும்.]

(உ-ம்.) (1.) செய்த சாத்தன். [பெயர் எச்சம். செய்பவனது பெயர்.]
(2.) செய்து வந்தான். [வினை எச்சம். வினை.]
(3.) சாத்தனும் வந்தான். [முன்னர்க் கொற்றன் வந்தான் என உம்மை எச்சம்.]
(4.) இல்லென்றல் யார்க்கும் வசைஅன்று. [இல்லென்று சொல்லுதல் சொல்லெச்சம்.]
(5.) சாத்தனே கொண்டான். [பிறர் கொண்டிலர் எனப் பிரிநிலை எச்சம்.]
(6.) கடல் ஒல்லென ஒலித்தது. [என எச்சம்.]
(7.) உண்ணுதற்கோ வந்தான். [ஒழியிசை எச்சம்.]
(8.) யானோ செய்தேன். [எதிர்மறை.]
(9.) இப்பட்டுச் சினம். [இசை எச்சம்: சினத்துள்ளது.]

☞ ஆகுபெயர், அன்மொழித்தொகை முதலியன குறிப்பெச்சமாம். [சூ. 269.]

**402.** COMPOUNDS WHERE THERE IS ELLIPSIS. [ANALOGOUS TO THE SANSCRIT SAMÂSA.]

[தொகை நிலைத்தொடர் ஆமாறு.]

௪௦௨. பெயரொடு பெயரும், வினையும், வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்சொல்.
[வி. 151.]

[பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை வினை பண்பெனப் பின்னர் வகுத்துக்கூறும் அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண் அவற்றினுருபுகள் இடையே தொக்குநிற்ப, இரண்டுமுதலிய பலசொற்கள் தொடர்ந்து ஒருமொழிபோல் நடப்பன யாவை அவை தொகை நிலைத் தொடர் சொற்கள் ஆம். (சூ. 152 காண்க).]

**403.** THE SIX KINDS OF ELLIPTICAL EXPRESSIONS OR COMPOUNDS.

௪௦௩. வேற்றுமை, வினை, பண் புவமை, உம்மை,
அன்மொழி, என அத் தொகை ஆ றாகும்.
[வி. 151.]

[வேற்றுமை (த்தொகையும்), வினை (த்தொகையும்), பண்பு (த்தொகையும்), உவமை (த்தொகையும்), உம்மை (த்தொகையும்), அன்மொழி (த்தொகையும்) என மேற்கூறிய தொகை (நிலைத்தொடர்சொல்) அறுவகைப்படும்.]

**404.** ELLIPSIS OF THE CASAL SIGN. [SANS. *tat-purusha.*]

[வேற்றுமைத்தொகை.]

௪௦௪. இரண்டு முதலா இடையா றுருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.
[வி. 152.]

[(எழுவாய்க்கும் விளிக்கும்) இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறுவேற்றுமை உருபுந் தொக்க தொடர்சொற்கள் வேற்றுமைத் தொகைகள் ஆம்.]

(உ-ம்.) நிலங்கடந்தான். [இருமொழித் தொகைநிலைத்தொடர்.]
பானைக்கோட்டு நுனிக்குறைத்தான். [பன்மொழித்தொகை நிலைத்தொடர்.]

[பொற்குடம். உருபும் பொருளும் உடன்றொக்கது.]

## 405. ELLIPSIS IN VERBS OF THE SIGNS OF TENSE, PERSON, &c.

[வினைத்தொகை.]

சாரு. காலங் கரந்த பெயர் எச்சம் வினைத்தொகை.

[வி. 153.]

[காலம் பற்றிப் புடைபெயர்ச்சிவினைஉருபாகிய தம்மிறுதிக்கண் தொக்குநிற்ப (ச்செய்வதாதி அறுபொருட் பெயராகிய) (சூ. 320.) தம் எச்சங் கொண்ட பெயர்எச்சங்கள் வினைத்தொகைகள் ஆம்.]

(உ-ம்.) ஆடுவேல்.
ஆடிடம்.
திரிதொழில்.
உண்சோறு.
புணர்பொழுது.
செய்நன்றி.

(1.) நெருநல் / இன்று / நாளை } அடுகளிறு. [செய்பவன்.]
(2.) அடுவேல். [கருவி.]
(3.) அடுகளம். [இடம்.]
(4.) அடுதொழில். [செயல்.]
(5.) அடுபொழுது. [காலம்.]
(6.) அடுகந்து. [செய்பொருள்.]

## 406. ELLIPSIS OF THE ADJECTIVE SIGN: APPOSITION. [SANS. *bahubrîhi* OR KARMAD'HARAYA.]

[பண்புத்தொகை ஆம்ஆறு.]

சாசு. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்,
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங், குணத்தோகை.

[வி. 154.]

[(குணப்பெயரோடு குணிப்பெயர் புணருங்கால் அக்) குணியோடு குணத்துக்கு உண்டாகிய ஒற்றுமைநயத்தை விளக்குதற்கு ஆண்டு வரும் (ஆகிய என்னும்) மொழி (யாகிய பண்புருபு) தொக்குநிற்பனவும், (அப் பண்புருபு தொக்குநிற்பப் பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயரும் ஆய்) ஒருபொருட்கு இருபெயர்வந்தனவும் ஆகிய இவ்விரண்டும் பண்புத்தொகைகள் ஆம்.]

(உ-ம்) (1.) செந்தாமரை. [செம்மையாகிய தாமரை.]
கருங்குவளை. [கருமையாகிய குவளை. } [இவை இருமொழித்தொடர்.]

(2.) ஆயன் சாத்தன். [இருபெயர் ஒட்டுப்பண்புத்தொகை.]

(3.) செங்கிறக்குவளை. [இது பன்மொழித்தொடர்.]

**407.** ELLIPSIS OF PARTICLE OF COMPARISON. [A SPECIES OF THE SANS. BAHUBRÎHI.]

[உவமைத்தொகை ஆமாறு.]

௪௦௭. உவம உருபில துவமத் தொகையே.

[வி. 155.]

[(வினை, பயன், மெய், உருவு, என்பன பற்றிவரும்) உவம உருபுகள் தொக்க தொடர்சொற்கள் உவமத்தொகைகள் ஆம்.]

(உ-ம்.) (1.) குருவி கூப்பிட்டான். [குருவிபோற்கூப்பிட்டான். வினையுவமைத்தொகை.]
(2.) மழைக்கை. [மழைபோலுங்கை. பயனுவமைத்தொகை.]
(3.) மதிமுகம். [மதிபோலும் முகம். மெய்யுவமைத் தொகை.]
(4.) பவளவாய். [பவளம் போலும் வாய். உருவு உவமைத்தொகை.]

**408.** PARTICLES OF COMPARISON.

[திரிசொலால் வந்த உவமை உருபுகள்.]

௪௦௮. போலப், புரைய, ஒப்ப, உறழ,
மானக், கடுப்ப, இயைய, ஏய்ப்ப,
நேர, நிகர; அன்ன, இன்ன,
என்பவும்; பிறவும்; உவமத் துருபே.

[வி. 109.]

[போல என்பது முதலிய (செய என் எச்சம்) பத்தும்; அன்ன, இன்ன, (என்னும் பெயர்எச்சக் குறிப்பு) இரண்டும்; இவை போல்வன பிறவும்; உவம உருபுகள் ஆம்.]

**409.** ELLIPSIS OF உம், THE CONJUNCTIVE PARTICLE. [SANS. *Dwandwa.*]

[உம்மைத்தொகை ஆம் ஆறு.]

௪௦௯. எண்ணல், எடுத்தல், முகத்த னீட்டல்,
எனுநான் களவையுள் உம்இல தத்தொகை.

[வி. 156.]

[எண்ணல் (அளவை), எடுத்தல் (அளவை), முகத்தல் (அளவை), நீட்டல் (அளவை) என்னும் (நால்வகை அளவைகளாற் பொருள்களை அளக்குங்கால் தொடரும்) அவ்வளவைப்பெயர்களுள் உம்மையாகிய உருபு தொக்கு நிற்பன உம்மைத்தொகைகள் ஆம்.]

(உ-ம்.) கபில பரணர். [எண்ணல்.] (கபிலனும் பரணனும்.)
கழஞ்சே கால். [எடுத்தல்.] (கழஞ்சும் காலும்.)
கலனே தூணி. [முகத்தல்.] (கலனுந் தூணியும்.)
சாணரை. [நீட்டல்.] (சாணும் அரையும்.)

### 410. THE ELLIPSIS OF OTHER WORDS: METONOMY.

சகo. ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி.

[வி. 157.]

[வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத்தொடர் மொழிகளுக்கும் புறத்து, அவை அல்லாத பிறமொழிகள்ஆகிய உருபுகள் தொகுதல் அன்மொழித்தொகை ஆம்.]

(உ-ம்.) (1.) { பூங்குழல் = பூவையுடைய குழலினை உடையாள். / பொற் றாலி = பொன்னினாகிய தாலியினை உடையாள். } [வேற்றுமைத் தொகைப் புறத்து வந்தது.]

(2.) தாழ்குழல் = தாழ்ந்தகுழலினை உடையாள். [வினைத்தொகைப் புறத்து வந்தது.]

(3.) கருங்குழல் = கருமையாகிய குழலினை உடையாள். [குணத்தொகைப் புறத்து வந்தது.]

(4.) துடியிடை = துடியன்ன இடையினை உடையாள். [உவமத்தொகைப் புறத்து வந்தது.]

(5.) தகர ஞாழல் = தகரமும் ஞாழலும் விரவச் சமைந்த சாந்து. [உம்மைத்தொகைப் புறத்து வந்தது.]

### 411. THE WORD WHICH RENDERS THE ELLIPTICAL EXPRESSION INTELLIGIBLE.

சகக. முன்மொழி, பின்மொழி, பன்மொழி, புறமொழி, எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

[(தொகைநிலைத்தொடர் மொழிகளின்) முன்மொழிக்கண் எனும், பின்மொழிக்கண் எனும், அனைத்து மொழிக்கண் எனும், (அனைத்து மொழிக்குப்) புறத்துமொழிக்கண் எனுஞ், சிறந்துநிற்குந் தொகைநிலைத்தொடர் பொருள்.]

(உ-ம்.) குடம் வனைந்தான். [முன்மொழிக்கண். சட்டி முதலானவைகளையும்.]
நிலம் உழுதான். [பின்மொழிக்கண். ஐவேற்றுமைத்தொகை.]
புலி விற் கெண்டை. [அனைத்து மொழிகள். உம்மைத்தொகை.]
தாழ் குழல். [புறமொழிக்கண். அன்மொழித்தொகை.]

### 412. TWO ELLIPTICAL FORMS DISTINGUISHED.

[ஐயம் அகற்றுதற்கு ஓர்குறி.]

சகஉ. வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்;
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்.

[வல்லொற்றிடையே வந்துழி இடத்தின்கண் தொக்க தொகை ஆம்; மெல்லொற்றிடையே வந்துழிப் பெயரின்கண் தொக்க தொகையாம்.]

(உ-ம்.) வடுகக்கண்ணன். [வடுகநாட்டிற் பிறந்த கண்ணன்.]
வடுகங்கண்ணன். [வடுகனாகிய கண்ணன்.]

## 413. THE PLURAL TERMINATION AFTER THE LAST NOUN.

[உம்மைத்தொகைக்கு ஆவதோர் புறனடை.]

சகங. உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.

[வி. 156.]

[உயர்திணை (ஒருமைப்பாலின்கண் வரும்) உம்மைத்தொகைகள் (ரவ் வீறுங், கள்ளீறும் ஆகிய) பலரீற்றனவே ஆம்.]

(உ-ம்.) கபில பாணர். தேவன் தேவிகள்.

---

நிலநீர் தீ காற்றுகாயங்கள். } அஃறிணையிலே பன்மைஈற்றலும், இயல்பான ஒரு
நிலநீர் தீ காற்றுகாயம். } மை ஈற்றலும் வந்தன.

## 414. AMBIGUOUS ELLIPSIS: FROM TWO TO SEVEN DIFFERENT METHODS OF SUPPLYING THE ELLIPSIS.

சகச. தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப.

[(வேற்றுமைஉருபு முதலிய உருபுகள்) தொக்கு நின்ற வழிப், (பொருள்களான் மயங்கும் இயல்பினவாகிய தொடர்சொற்கள்) இரண்டுமுதல் ’ய பொருள்களால் மயங்கும் என்று சொல்லுவர் (புலவர்).]

(உ-ம்.) தெய்வ வணக்கம். [இரண்டுபொருள்: தெய்வத்தை வணங்கும் வணக்கம் எனவும்; தெய்வத்துக்கு வணக்கம், எனவும் விரியும்.]
தற்சேர்ந்தார். [மூன்றுபொருள்: தன்னைச் சேர்ந்தார்; தன்னோடு சேர்ந்தார்; தன்கண் சேர்ந்தார் என விரியும்]
சொல்லிலக்கணம். [நான்குபொருள்.]
பொன்மணி. [ஐந்துபொருள்.]
மாவேலி. [ஆறுபொருள்.]
சொற்பொருள். [ஏழுபொருள்.]

## 415. UNELLIPTICAL EXPRESSIONS.

[தொகாநிலைத்தொடர் ஆமாறு.]

சகரு. முற்றீ ரெச்சம், எழுவாய், விளிப்பொருள்,
ஆறுரு பிடை, உரி, அடுக்கிவை தொகாநிலை.

[முற்றும், பெயரெச்சமும், வினைஎச்சமும், எழுவாயும், விளியும் (ஆகிய ஐவகைப்) பொருளின்கண் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும்; வேற்றுமைப்பொருளின்கண், அவற்றின் உருபாகிய இரண்டாவது முதலிய

ஆறும் 'ய விரிந்துநிற்ப பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், ஏனை ச்சொற் புணர்ச்சியும், உரிச்சொற் புணர்ச்சியும், ஒரு சொல் அடுக் ம் புணர்ச்சியும் ஆகிய ஒன்பதும் தொகாநிலைத்தொடர் ஆம்.]

(உ-ம்.) (1.) உண்டான் சாத்தன். [தெரிநிலை வினைமுற்று.]
குழையன் கொற்றன். [குறிப்புவினை முற்று.]

(2.) உண்ட சாத்தன். [பெயர் எச்சம்.]
கரிய குதிரை. [குறிப்புப் பெயர் எச்சம்.]

(3.) உண்டு வந்தான். [வினைஎச்சம்.]
இன்றி வந்தான். [குறிப்பு வினைஎச்சம்.]

(4.) சாத்தன் வந்தான். [எழுவாய்.]

(5.) சாத்தவா. [விளி.]

(6.) குடத்தை வனைந்தான். [வேற்றுமை உருபு.]

(7.) அதுகொரேழி. [இடைச்சொல்.]

(8.) நனிபேதையே. [உரிச்சொல்.]

(9.) பாம்பு பாம்பு. [அடுக்குச்சொல்.] [சூ. 152 காண்க.]

## 416. GRAMMATICAL ERRORS.

[வழு இவை என

சகசு. திணையே, பால், இடம், பொழுது, வினா, இறை,
மரபாம் ஏழு மயங்கின் ஆம் வழுவே.

[வி. 134.]

["திணை" முதலாக "மரபு" ஈருக வரும் ஏழுந் தத்தம்நெறி மயங்கின் வழுவாம்.]

(உ-ம்) (1.) அவன் வந்தது. [திணைவழு.]
(2.) அவன் வந்தார். [பால்வழு.]
(3.) யான் வந்தான். [இடவழு.]
(4.) நேற்று வருவான். [காலவழு.]
(5.) கறக்கின்ற எருமை பாலோ, சினையோ. [வினாவழு.]
(6.) கடம்பூர்க்கு வழியாது? என்றால், இடம்பூணி என்னுவின் கன்று. [விடைவழு.]
(7.) ஆடு மேய்ப்பானைப் பாகன் என்பது. [மரபுவழு.]

## 417. IN QUESTIONS, WORDS OF COMMON GENDER, &c. TO BE USED.

[திணை பால்களோடு வினாவிடை வரின் வழுவாது காத்தல்.]

சகஎ. ஐயந், திணை, பால் அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப.

[திணைஐயத்தினை அவற்றின் பொதுச்சொல்லானும், பாலையத்தினை அவற்றின் பொதுச்சொல்லானுந், துணிந்து அப்பொருண்மேல் ஏலாத தன்மையினை வைத்துங் கூறுவர்புலவர்.]

(உ-ம்.) (1.)

குற்றியோ, மகனோ அங்ஙனந் தோன்றுகிறது?
தோன்றுகிறவன்? என்பது வழு.
குற்றியோ, மகனோ அங்ஙனந் தோன்றுகிற உரு?
எனப் பொதுச் சொல்லாற் கூறுக. [திணையையம்.]

ஆண்மகனோ, பெண்மகளோ, அங்ஙனந் தோன்றுகிறவர் ஆர்? [பால்ஐயம்]

ஒன்றோ, பலவோ, இச்செய்புக்க பெற்றம்? [அஃறிணைப்பால் ஐயம்]

(2.) ஆண்மகன் எனிற், பெண்மகள் அல்லள.

குற்றிஎனின், மகன் அன்று.

பல எனின, ஒன்றல்ல.

## 418. A NEUTER FOLLOWED BY MASCULINE OR FEMININE: ANOMALY I.

[திணைவழுவமைதி.]

சகஅ. உயர்திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.

[வி. 137.]

[உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணைப்பொருள் ஆகிய ஆறும் உயர் திணையோடு சார்த்தி முடிப்பின் அவ்வெழுவாய்க்குரிய உயர்திணை முடிபினவாம்.]

(உ-ம்.) நம்பி { பொன், நாடு, வாணாள், மூக்கு, குடிமை, நடை } { பெரியன், கூரியன, நல்லன, கடியன். }

[நம்பிக்குப் பொன் பெரிது என்பது சிறப்பு.]

## 419. HIGH AND LOW CLASS NOUNS SOMETIMES TAKE A COMMON VERB: ANOMALY II.

[திணை, பால், மரபு வழுவமைப்பு.]

சகக. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்,
மிகவினும், இழிபினும், ஒருமுடி பினவே.

[வி. 139.]

[திணையும் பாலும் வேறு வினைப் பலபொருள்களும் விரவிநின்ற வழி யவை பலவுஞ் சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிபினாலும் ஒருமுடி பினவாம்.]

(உ-ம்.) "திங்களும் சான்றோரும் ஒப்பர்." "ஆமையும் பெரியரும் ஐந்தடக்கி விற்பர்." [சிறப்பு.]
பார்ப்பார், தவரே, சமந்தார், பிணிப்பட்டார், மூதோர், குழவி எனும் இவர்கட்கு. [மிகுதி.]
மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடார். [இழிபு.]

**420.** GENDER AND NUMBER CONFOUNDED, FROM JOY AND OTHER CAUSES: ANOMALY III.

[திணை, பால், வழுவமைதி.]

சஉ0. உவப்பினும், உயர்வினுஞ், சிறப்பினும், செறலினும்,
இழிப்பினும், பால்திணை இழுக்கினும் இயல்பே.

[வி. 137. 138.]

---

["உவப்பு" முதலிய ஐந்தினும் பாலுந் திணையும் வழுவி வரினும் இயல்பாம்.]

(உ-ம்.) தன் புதல்வனை, "என் அம்மை வந்தாள்" என்பது உவப்பின் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

ஆவினை "என் அம்மை வந்தாள்" என்பதில், மகிழ்ச்சியினால் அஃறிணை உயர்திணை ஆயிற்று.

ஒருவனை, "அவர் வந்தார்." [உயர்வு.]

"தாதாய்! மூவேழுலகுக்குந் தாயே." [சிறப்பு.]

"எனைத்துணையர் ஆயினும் என்னாம்?
தினைத்துணையுந் தேரான், பிறன்இல் புகல்." [கோபம்.]

பெண்வழிச் செல்வானை நோக்கி, "இவன்பெண்." [இழிவு.]

---

**421.** NUMBERS AND PERSONS INTERCHANGED: ANOMALY IV.

[பால், இடம், வழுவமைதி.]

சஉக. ஒருமையிற் பன்மையும், பன்மையின் ஒருமையும்,
ஓர் இடம் பிற இடந் தழுவலும், உளவே.

[வி. 137.]

[ஒருமைப்பாலின்கண் பன்மை (ச்சொல்லைத் தழுவி) க்கூறுதலும், பன்மைப்பாலின்கண் ஒருமை (ச்சொல்லைத் தழுவி) ச்கூறுதலும், ஓரிடத்தின்கண் பிறவிடச்சொல்லை (த் தழுவி) க்கூறுதலும் உளவாம்.]

(உ-ம்.) (1.) இக்குளத்து நீர் எல்லாங் கொண்டுபெய்த்தான் இவன். [ஒருமையிற் பன்மை.]
(2.) இரண்டு கண்ணுஞ் சிவந்தது. [பன்மையில் ஒருமை.]
(3.) அவ்வைத் தந்தை அம்போரிற் செறியர். [ஒருமையில் பன்மை.]
(4.) சாத்தன்தாய் இவை செய்வேனோ? [படர்க்கையில் தன்மை.]
(5.) நீயோ, அவனோ, யார் இதுசெயதார்? [விரவி ஓரிடத்திற்குரிய முடிபு ஏற்றது.]

**422.** CERTAIN UNVARYING USES OF THE PERSONS.

[இடம் வழுவற்க எனக்காத்தல்.]

சஉஉ. தரல், வரல், கொடை, செலல் சாரும் படர்க்கை;
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.

[இந்நால்வகைச்சொற்களையும் படர்க்கை சாரும்; இவற்றுள், முதற்கண் நின்ற "தரல்," "வரல்," என்னும் இருவகைச்சொற்களையுந் தன்மை முன்னிலைகள் ஏற்கும்.]

(உ-ம்.) அவனுக்குத் தந்தான். அவனுக்குக் கொடுத்தான்.
அவன்பால் வந்தான். அவன்பால் சென்றான்.

எனக்குத் தந்தான். [எனக்குக் கொடுத்தான்.
என்பால வந்தான. எனபால் சென்றான்.] } [வழு.]

நினக்குத் தநதான். [நினக்குக் கொடுத்தான்.
நின்பால் வந்தான். நின்பால் செனறான.] } [வழு.]

**423.** THE THREE TENSES.

[காலத்தின பெயரும் முறையும்.]

சஉ௩. இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

[வி. 78.]

[முன்னர்க் கூறிய காலம் இறந்தகாலமும், எதிர்காலமும், நிகழ்காலமும் என மூன்றும்.]

**424.** THE PRESENT EXPRESSES ANYTHING SUBSISTING IN THE THREE TIMES: ANOMALY V.

[கால வழுவமைப்பு.]

சஉச. முக்கா லத்தினும் ஒத்தியல்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

[வி. 146.]

[(தந்தொழில் இடை அறுது,) முக்காலத்தினும் ஒருதன்மையவாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தாற் கூறுவர் (புலவர்).]

(உ-ம்.) அவனியைத் தாங்கி அரசர் இருக்கின்றார்.
மலை நிற்கிறது. தெய்வம் இருக்கின்றது.

## 425. INTERCHANGE OF TENSES: ANOMALY VI.

[கால வழுவமைப்பு.]

௪௨௫. விரைவினு மிகவினுந், தெளிவினும், இயல்பினும்,
பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி.

[வி. 146—149.]

[விரைவு, மிகுதி, தெளிவு என்னும் மூன்றுகாரணங்களினாலும், காரணமின்றியும், முக்காலங்களையும் ஒன்றை ஒன்றாகக் கூறப்படும் ஏற்கும் '.]

(உ-ம்.) (1.) "உண்டேன், உண்டேன்." [என்பான் விரைவினால்.]

(2.) களவு செயிற் கை அறுப்புண்டான் [மிகுதி.]

(3.) எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது. [தெளிவு.]
(4.) நாம் பண்டு விளையாடுவ திக்காய். [இயல்பு.]

## 426. SEVEN DIFFERENT KINDS OF QUESTIONS.

[வினாவின் பெயரும் முறையுந் தொகையும்.]

௪௨௬. அறிவறி யாமை, ஐயுறல், கொளல், கொடை,
ஏவல், தரும்வினா ஆறும் இழுக்கார்.

[“அறிவு” முதலியன தருதலான் வரும்வி ) ஆறனையுங் களையாது கொள்வர் புலவர்.]

(உ-ம) "இசகுததிரத்துககுப் பொருள் யாது?"
(1.) ஆசிரியன மாணாக்கனைநோக்கிக் கேட்பது, அறிவினா.
(2.) மாணாக்கன ஆசிரியனைநோக்கி அவ்வாறு கூறுவது, அறியாவினா.
(3.) குற்றியோ, மகனோ? [ஐயவினா.]
(4.) பொனனுளதோ, மணியுளதோ? [கொளல்வினா.]
(5.) சாத்தனுக்கு ஆடையில்லையே? [கொடைவினா.]
(6.) சாத்தா உண்டாயோ? [ஏவல்வினா.]

## 427. DIFFERENT MODES OF ANSWERING.

[விடையின் பெயரும், முறையுந் தொகையும் வழுவமைதியும்.]

௪௨௭. சுட்டு, மறை, நேர்; ஏவல், வினாதல்,
உற்ற துரைத்தல், உறுவது கூறல்,
இனமொழி, எனும்எண் இறையுள், இறுதி
நிலவிய ஐந்தும் பொருண்மையி னேர்ப.

[இவ்விறை எட்டனுள் (முன்னைய மூன்றும் செவ்வனிறையாம்,) பின்

னைய ஐந்தும் இறைப்பொருள் பயத்தலின் இறையாகத் தழீஇக் கொள்வர் (புலவர்).]

(உ-ம்.) (1.) "கருவூருக்கு வழியாது"? இது. [சுட்டு.]
(2.) செய்வாயோ? செய்யேன். [மறைவிடை.]
செய்வேன். [நேராக உடன்படல்.]
} செவ்வனிறை.

குறிப்பினாலே இறைபயப்பது.
நீ செய். [ஏவல்.]
செய்வேனோ. [வினுதல் விடை.]
உடம்புநொந்தது. [உற்றதுரைத்தல்.]
உடம்புநோம். [உறுவது கூறல்.]
மற்றையதைச் செய்வேன். [இனமொழி]

**428.** THE PERSON AND THE MEMBERS NOT TO BE CONFOUNDED.

சஉஅ. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

[சூ. 315. 316. 282 காண்க.]

[வினவுதற் கண்ணுஞ், செப்புதற் கண்ணுஞ் சினைமுதல்கள் ஒற்றுமை கருதி மயங்கக் கூறப்படா.]

(உ-ம்.) (1.) சாத்தி கண் பெரியவோ, கொற்றி கண் பெரியவோ?
சாத்தன் நல்லனோ, கொற்றன் நல்லனோ?
சாத்திகண் பெரிய, கொற்றிகண் பெரிய.
சாத்தன் நல்லன், கொற்றன் நல்லன்.
[வினவுதலும் விடைகொடுத்தலும் வழாநிலை.]

(2.) கண்ணல்லவோ, அவன் நல்லனோ?
கண்நல்ல, அவன் நல்லன். [வழு.]

**429.** CLASSICAL USAGE.

[மரபு ஆம் ஆறு.]

சஉக. எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதன் மரபே.

[வி. 163.]

[(தொன்று தொட்டு, உலகவழக்கிலுஞ் செய்யுள்வழக்கிலும்) யாதொரு பொருளை, யாதொரு சொல்லால், யாதொரு நெறியால் அறிவுடையோர் சொன்னார்களோ, அப்பொருளை, அச்சொல்லால், அந்நெறியாற் சொல்லுதல் மரபு ஆம்.]

(உ-ம்.) (1.) யானை மேய்ப்பன் பாகன். [வழாநிலை.]
(2.) குதிரைக்கன்று. [வழு.]

**430.** A NOUN OF MANY SHADES OF MEANING SHOULD HAVE A VERB THAT MAY AGREE WITH ALL.

சஙo. வேறு வினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்,
வேறவற் றெண்ணும், ஓர் பொது வினை வேண்டும்.

[வெவ்வேறு வினைகட்குரிய பலபொருள்களையும் (ஒழுங்கு) தழுவி நிற்கும் ஓர் பொதுச்சொல்லும், அவற்றின் சிறப்புச் சொற்களாய் எண்ணி நிற்கும் பலசொல்லும், (ஒன்றற்குரிய சிறப்புவினைவேண்டாது, எல்லா வற்றிற்கும்) உரியதோர் பொதுவினை வேண்டுவன ஆம்.]

(உ-ம்.) அடிசில் [எ-து.] உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பன [illegible]ப் பொது,
ஆதலால், அடிசில் அயின்றார், மிசைந்தார், என்க.
அணி அணிந்தார், படை வழங்கினார்.

**431.** AN EQUIVOCAL WORD DETERMINED BY A WORD IN THE CONTEXT.

சஙக. வினைசார் பினம்இட மேவி விளங்காப்
பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே.

[(குறித்த பொருளை விளக்கும்) வினையினையுஞ், சார்பும், இனமும், இடமும், முதலியபெயரினையும், பலபொருள் ஒருசொற்பொருந்தி விளங் கிக் கிடந்ததேல், (அதனை வாளாகூறி அவ்வினை பெயர்களைப் பொருந் தாமையால்,) விளங்காது கிடந்ததனைச் சிறப்பொடு கூட்டிக் கூறுவர் (புலவர்).]

(உ-ம்.) மா. [பலபொருள் ஒருசொல்.]
மாப் பூத்தது. [மாம். வினையால் விளங்கிற்று.]
மாவீழ் மலர். [வண்டு. சார்பால்.]
காலாள், கரி, மா, இரதம், நாலங்கம். [குதிரை. இனத்தால்.]
மா மறுத்தமலர் மார்பன். [திருமகள். இடத்தால்.]

**432.** COMPOUND WORDS CAPABLE SOMETIMES OF A TWO-FOLD DIVISION AND INTERPRETATION.

சஙஉ. எழுத்தியல் திரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்தும் என்ப.
[வி. 150.]

[எழுத்தினதியல்பு வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்குந் தொடர்மொழிகள் (அங்ஙனங் குறித்துக் கூறுஞ்

சொற்களின் இறுதியும் முதலுந் தோன்ற) இசை அறுத்துக் கூறும் வேறு பாட்டால் துணியப்படும் என்று சொல்லுவர் (புலவர்).]

(உ-ம்.) செம்பொன் பதின்றொடி.
செம்பொன் பதின் றொடி = செம்பொன் பத்துப்பலம்.
செம்பொன்பதின் றொடி = செம்பு ஒன்பது பலம்.

**433.** WORDS IN APPOSITION MAY HAVE A COMMON VERB, OR EACH ITS OWN.

[மரபு வழுவற்க எனக் காத்தலும், அதன் வழுவமைப்பும்.]

௪௱௩௰௩. ஒருபொருள் மேற்பல பெயர்வரின், இறுதி
ஒருவினை கொடுப்ப; தனியும் ஒரோவழி.

[வி. 135.]

[ஒரு பொருள் மேல் பலபெயர் வரும் ஆயின், (பொருள் ஒன்றே என்பது தோன்ற) இறுதிக்கண் ஒருவினைகொடுத்துக் கூறுவர், (ஒருபொருள் ஆதல் தவறாத வழிப்) பெயர்தோறுங் கொடுத்துங் கூறுவர் (புலவர்).]

(உ-ம்.) ஆசிரியன், பேரூர்கிழான், இளங்கண்ணன், சாத்தன் வந்தான்.
ஆசிரியன்வருக, பேரூர்கிழானவருக, இளங்கண்ணன்வருக, சாத்தன் வருக.

**434.** EPITHETS SHOULD PRECEDE THE NAME.

௪௱௩௰௪. திணை, நிலம், சாதி, குடியே, உடைமை,
குணந், தொழில், கல்வி, சிறப்பாம் பெயரொ
டியற்பெயர் ஏற்றிடில் பின்வரல் சிறப்பே.

["திணை" முதலாகக் "கல்வி" ஈறாக விதந்தன முதலிய பற்றிவருஞ் சிறப்புப்பெயருடனே இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கு ஏற்கும் ஆயின் அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம்.]

(உ-ம்.) (1.) குன்றவன் கொற்றவன். [திணை.]
(2.) அறிவாளன் அழகன். [நிலம்.]
(3.) பார்ப்பான் பாராயணன். [சாதி.]
(4.) ஊர்கிழான் ஓணன். [குடி.]
(5.) பொன்னன் பொறையன். [உடைமை.]
(6.) கரியன் கம்பன். [குணம்.]
(7.) நாடகி நம்பி. [தொழில்.]
(8.) தெய்வப்புலவன் திருவள்ளுவன். [கல்வி.]

**435.** A DEMONSTRATIVE PRONOUN AFTER THE NOUN; THE VERB BEFORE OR AFTER. THIS ONLY TO IN PROSE. POETRY IS UNFETTERED.

௪௩௫. படர்க்கை முப்பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்; வினை எனிற் பெயர்க் கெங்கும்
மருவும், வழக்கிடை; செய்யுட் கேற்புழி.

[படர்க்கை (இடத்தவாகிய உயர்திணைப்பெயர், அஃறிணைப் பெயர், விரவுப்பெயர், என்னும்) மூவகைப் பெயரோடு (சுட்டுப்பெயர்) சாரின் (அச்) சுட்டுப்பெயர் (அம்மூவகைப்பெயர்க்கும்) பின்வரும். (அவ்விடத்தே) வினை (யாகிய முடிக்குஞ் சொல்வரும் ஆயின், அம்முடிக்குஞ் சொல்லில்லை ஆயின்) அப்பெயர்க்குப் பின்னும் முன்னும்வரும்; இம்மரபு வழக்கின்கண்ணவாஞ்; செய்யுட்கண்ணே (எனின் நியதி இன்றி) வேண்டியஆறே வரப்பெறும்.]

(உ-ம்.) நம்பி வந்தான், அவனுக்குச் சோறு இடுக. [உயர்திணை.]
எருது வந்தது அதற்குப் புல்லிடுக. [அஃறிணை.]
சாத்தன் வந்தான் அவனுக்கு பலியிடுக. [விரவுப்பெயர்.]
வந்தான் நம்பி சோறு இடுக.

---

நம்பி அவன், அவன் நம்பி.

"அவன் அணங்கு நோய் செய்தான், ஆயிழாய், வேலன்." [செய்யுள்.]

**436.** WORDS REPEATED.

[அடுக்குத்தொடர் ஆம்ஆறு.]

௪௩௬. அசைநிலை, பொருணிலை, இசைநிறைக் கொருசொல்
இரண்டு, மூன்று, நான் கெல்லைமுறை அடுக்கும்.

[அசைநிலைக்கும், (விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலிய) பொருள் நிலைக்கும், இசை நிறைக்கும், ஒருசொல் இரண்டு மூன்று நான்களவும் முறையே அடுக்கும்.]

(உ-ம்.) (1.) அன்றே, அன்றே. [அசைநிலை.]
(2.) வந்தேன், வந்தேன். [விரைவு பொருணிலை.]
(3.) நல்குமே, நல்குமே, நல்குமே நாமகள்! [இசைநிறை.]
(4.) உய்யேன், உய்யேன். [அவலம்.]
(5.) தீத்தீத்தீ. [அச்சம் மும்முறை.]

### 437. REDUPLICATED WORDS MUST NOT BE DIVIDED.

[மரபு வழுவற்க எனக்காத்தல்.]

௪௩௭. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா.

[இரட்டைச் சொற்கள் அவ்விரட்டிப்பிற் பிரிந்து தனித்து ஒலியா.]

(உ-ம்.) சருசருத்தது. [இது இரட்டித்துப் பிரியாது நின்றது.]

### 438. ESSENTIAL ADJUNCTS NOT TO BE SEPARATED FROM A NOUN.

௪௩௮. ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

[ஒருபொருள் (மேல்) பலபெயர் (கூறுங்கால் அப்பொருளினின்றும்) பிரிதல் இல்லாதன (வற்றை நீக்காது) கூறுவர் (புலவர்).]

(உ-ம்) ஆசிரியன் பேரூர்கிழான் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்.
[மாணாக்கருக்கு நூற்பொருள் உணர்த்தலால் ஆசிரியத்தன்மையும், ஊருரிமையுங், கண்ணின் வேறுபாடும் உடையவன் சாத்தன் ஆதலால் பிரிவில்லன்.]

### 439. REDUNDANT WORDS AND PLEONASMS SANCTIONED BY CUSTOM: ANOMALY VII.

[வழுவமைப்பு.]

௪௩௯. ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.

[ஒருபொருளையே குறித்துவரும் பலசொற்கள் (அவ்வாறு வருதற்கு ஓர்காரணம் இன்றேனும் சொல்லின்பங் தோன்றச்) சிறந்து நிற்றலின் அவை வழுவென்று நீக்கப்படாவாம்.]

(உ-ம்.) மீமிசை. [மீஎன்பதும், மிசை என்பதும், மேல்.]
உயர்ந்தோங்கும் மலை. [உயர்ந்து, ஓங்கும், இரண்டும் ஒன்று.]
காளைக்கமுகு. [காளை, இளமை, இரண்டும் ஒன்று.]

### 440. உம் TO BE USED IN CERTAIN CASES.

[மரபு வழுவற்க எனக்காத்தல்.]

௪௪௦. இனைத்தென் றறிபொருள், உலகின் இலாப்பொருள்,
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்.

[வி. 113.]

[இத்தனைஎன்று வரையறை உணரப்படும் பொருளும், எக்காலத்தும்

எவ்விடத்தும் இல்லாத பொருளும், அவற்றை வினைப்படுத்துக் கூறுங் கால் முற்றும்மை (சூ. 359.) வேண்டி நிற்கும்.],

(உ-ம்.) (1.) தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார். [இனைத்தென்றறிபொருள்.]
(2.) பவளக்கோட்டு நீலயானையென்றும் இல்லை. [உலகின் இலாப்பொருள்.]
ஒளிமுன்னிருள் எக்கும் இல்லை.

**441.** THE OBJECT SOMETIMES MADE THE SUBJECT: ANOMALY VIII.

[மரபு வழுவமைப்பு.]

சசக. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே.

[வி. 129.*]

[செயப்படுபொருளையும் (கருவியையும் இடத்தையும் செயலையுங் காலத்தையும்) கருத்தாவைப் போல வைத்து, அதன்மேல் வினைமுதல் வினைஏற்றிக் கூறுதலும் வழக்கின்கண் உரித்தாம்.]

(உ-ம்.) இம்மாடு நான் கொண்டது.
இச்சோறு நான் கொடுத்தது.
இவ்வெழுத்து நான் எழுதினது. } [செயப்படு பொருள்.]

இவ்வெழுத்தாணி நான் எழுதியது. [கருவி.]
இவ்வீடுயான இருந்தது. [இடம்.]
இத்தொழில் நான்செய்தது. [செயல்.]
இந்நாள் நான் பிறந்தது. [காலம்.]

**442.** THE FIRST MEMBER OF A COMPOUND NOUN MAY BE EITHER COMMON, OR PECULIAR TO THOSE WORDS.

சசஉ. பொருள்முதல் ஆறும் அடைசேர் மொழி இனம்.
உள்ளவும், இல்லவும், ஆம் இரு வழக்கினும்.

[வி. 150.]

[பொருள் ஆதி ஆறுகிய அடைகள் அடுத்து வருமொழிகள் இனம் உள்ளனவே ஆம் அன்றி, இனம் இல்லனவும் ஆம்; உலகவழக்கினுள்ளுஞ், செய்யுள் வழக்கினுள்ளும்.]

(உ-ம்.) (1.) செந்தாமரை.
செய்க்குடம். } [இனம் உள்ளது.]
(2.) உப்பளம்.
சிறைவண்டு. } [இனம் இல்லது, உப்பில்லா அளம் இல்லாததினலே.]

**443.** SUCH EPITHETS AND PHRASES MAY ALSO SUGGEST THE OPPOSITE.

**௪௪௩. அடைமொழி இனமல் லதுந்தரும் ஆண்டுறின்.**

[(மேற்கூறிய) அடைசேர்மொழி இனத்தைத் தருதலே அன்றி, அதனோடு இனம் அல்லதனையுந் தரும், அவ்விடத்திற்குப் பொருந்தும் ஆயின்.]

(உ-ம்.) "அறஞ்செய்தான் மோட்சம் புகுவான" எனின்
"மறஞ் செய்தான நரகம் புகுவான்" என வரும்.

**444.** SUCH MEMBERS OF COMPOUND WORDS MAY BE ACCUMULATED.

**௪௪௪. அடைசினை முதல்முறை அடைதலும், ஈரடை
முதலோ டாதலும், வழக்கியல்; ஈரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.**

[சூ. 282. 283 காண்க.]

[(மேற்கூறிய) அடையானது முதல் சினைகளை அடுத்து வருங்கால், ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றை ஒன்று விசேடித்து வருதலும்; இரண்டடை முதலை விசேடித்து வருதலும், வழக்கு நடையாம்; இரண்டடை சினையை விசேடித்து வருதலும் இவ்வரம்பிறந்து வருதலுஞ் செய்யுள் நடைஆம்.]

(உ-ம்.) செங்காலனாரை.
பழக்குலை வாழை.
முழங்குதிரை கடல். } [ஓர்அடை, ஒருசினை, ஒருமுதல்.]
மனைசிறு கிணறு. [இரண்டு அடை]
சிறுகருங்காக்கை. [இரண்டடை முதல்.]

சிறுபைந்தூவி. [ஈரடை, சினை.]

பெருந்தோட் சிறுமருப்புக் பேரமர்க்கட்பேதை. [மயங்கிவந்தது.]

**445.** LET NATURAL QUALITIES BE SO EXPRESSED.

**௪௪௫. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.**

[(இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள், என
பொருள்களுள்) இயற்கைப்பொருளை இத்தன்மைத்து என்று கூறுக.]

(உ-ம்.) நிலம் வலிது.

**446.** WHEN ARTIFICIAL QUALITIES ARE SPOKEN OF THE CAUSE MAY BE EXPRESSED OR UNDERSTOOD; SO MAY THE WORD IMPLYING THE ACQUISITION OF THE QUALITY.

௪௪௬. காரண முதலா ஆக்கம் பெற்றுங்,
காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்,
ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்,
இருமையும் இன்றியும் இயலுஞ் செயும்பொருள்.

[(முதல் துணை நிமித்தங்களாற் செய்யும் பொருளாகிய செயற்கைப் பொருளைக் கூறுங்கால்) காரணச்சொல் முன்வர ஆக்கச்சொல் பின்வரப் பெற்றுங், காரணச்சொல் தொக்குநிற்ப ஆக்கச்சொல் வரப்பெற்றும், ஆக்கச்சொல் தொக்கு நிற்பக் காரணச்சொல்வரப் பெற்றும், இவ்விருவகைச் சொல்லுந் தொக்கு நிற்கவும் நடக்கும்.]

(உ-ம்.) கடுவுங் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின.
[காரணமுதலா ஆக்கம் பெற்றது.]

மயிர் நல்லவாயின. [காரணச்சொல் தொக்கு ஆக்கம் பெற்றது.]

கடுவுங் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்ல. [ஆக்கச்சொல் தொக்கு வந்தது.]

மயிர்நல்ல. [இரண்டும் தொக்கு வந்தது.]

**447.** DIRECT AND INDIRECT METHODS OF NEGATION AND AFFIRMATION.

௪௪௭. தம்பால் இல்ல தில்லெனின், இன்னுய்
உள்ளது கூறிய மாற்றியும், உள்ளது
சுட்டியும், உரைப்பர் சொற்சுருங் குதற்கே.

[(ஒருவன் வினவியது) தம்பக்கல் இல்லையாயின் (அதனை) "இல்லை" என்னல் உறின், (அவன் வினவியதற்கு இனமாய்த் தம்பக்கல்) உள்ளதனைக்கூறி அக்கூற்றானே அதனை இல்லை என்றும், உள்ளதாயின் இத்துணை உண்டென்றும் கூறுவர் (புலவர், வினவுதலுஞ் செப்புதலும் ஆகிய) சொற்கள் சுருங்குதற் பொருட்டு.]

(உ-ம்.) பயறுளதோ, வணிகீரே ?
உழுந்துண்டு.
உண்டு. }
இவ்வளவுண்டு. }

### 448. THE THREE SYNONYMES ஈ, தா AND கொடு.

சசஅ. ஈ, தா, கோடுஎனு' மூன்று' முறையே
இழிந்தோன், ஒப்போன், மிக்கோன் இரப்புரை.

[“ஈ” என்பது இழிந்தோன் உயர்ந்தோன் மாட்டு இரக்குஞ் சொல் ஆம். “தா” என்பது ஒப்போன் ஒப்போன்மாட்டு இரக்குஞ் சொல் ஆம். “கொடு” என்பது உயர்ந்தோன் இழிந்தோன் மாட்டு இரக்குஞ் சொல் ஆம்.]

(உ-ம்.) தந்தை ஈ!
தோழா தா!
மைந்தா கொடு!

### 449. WORDS THAT SUGGEST AN IDEA.

சசகூ. முன்னத்தின் உணருங் கிளவியும் உளவே.

[(வெளிப்படையான் அன்றிக்) குறிப்பால் பொருள் உணரப்படுஞ் சொற்களுஞ் சில உள ஆம்.]

(உ-ம்.) செஞ்செவியர் = செவிஎல்லாஞ் செம்பொன் அணிந்த செல்வத்தினர்.

### 450. PERSONIFICATION: WHEN FACULTIES AND ATTRIBUTES ARE POETICALLY ASCRIBED, USE THE FINITE WORDS PROPER TO THE LOWER CLASS (NEUTER).

சரு0. கேட்குந போலவுங், கிளக்குந போலவும்,
இயங்குந போலவும், இயற்றுந போலவும்,
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே.

[(கேளாதனவற்றைக்) கேட்குவன போலவுஞ், (சொல்லாதனவற்றைச்) சொல்லுவன போலவும், (நடவாதனவற்றை) நடப்பன போலவும், (இத்தொழில்கள் அல்லன பிறசெய்யாதனவற்றைச்) செய்வன போலவும், அஃறிணை இடத்தும் சொல்லப்படும்.]

(உ-ம்.) இரவெல்லாம் நின்றும் ஆல் ஈர்ங்கதிர்த்திங்கள்!
பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்.
இவ்வழி அவ்வூருக்குப் போம்.
தேன் தோய்க்கியும் மலை.

**451.** IN POETICAL AND RHETORICAL FIGURES GENDERS AND CLASSES ARE CONFOUNDED. [PERSONIFICATION.]

சருக. உருவக உவமையில், திணை, சினை முதல்கள்,
பிறழ்தலும், பிறவும் பேணினர் கொளலே.
[வி. 205.]

ின் கண்ணும், உவமைக் கண்ணும், (இரு) திணை (தம்முள் மயங்குதலுஞ்,) சினைமுதல் (தம்முள்) மயங்குதலும், (இவ்வியலுள்) சொல்லாது ஒழிந்தனவும் போற்றிக்கொள்க.]

(உ-ம்.) "மன்னர் மடங்கன், மறையவர் சொனமாலை,
,
அன்ன நடையினர்க் காரமுதந், துன்னும்
பரிசிலர்க்கு வானம், பனிமலர்ப்பூம் பைந்தார்
எரிசின வேறனே எவகோ?"

## § பொருள் கோள்.

**452.** THE EIGHT METHODS OF ARRANGEMENT AND CONSTRUCTION OF WORDS IN SENTENCES.

[பொருள் கோளின் பெயருந் தொகையும் உணர்த்திற்று.]

சருஉ. யாற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூண்,
தாப்பிசை, அளைமறி பாப்புக், கொண்டுகூட்
, ,
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே.

[யாற்றுநீர்ப் பொருள்கோளும், மொழிமாற்றுப் பொருள்கோளும், நிரனிறைப் பொருள்கோளும், விற்பூட்டுப் பொருள்கோளுந், தாப்பிசைப் பொருள்கோளும், அளைமறி பாப்புப் பொருள்கோளுங், கொண்டுகூட்டுப் பொருள்கோளும், அடிமறிமாற்றுப் பொருள்கோளும் எனப் பொருள்கோள் எட்டாம்.]

**453.** (I.) NATURAL CONSTRUCTION: WHEN THE CONSTRUCTION FLOWS LIKE A RIVER UNINTERRUPTEDLY ONWARD.

சருங. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
, ,
அற்றற் றொழுகும் அஃ தியாற்றுப் புனலே.

[(மொழிமாற்று) முதலிய போல் பிறழ்ந்து செலவேண்டாது, யாற்றுப்

புனல் ஒழுக்குப்போல் நெறிபட்டு, அடிதோறும் வான்பொருள் அற்றற்றொழுகும் அப்பொருள்கோள் யாற்றுநீர்ப் பொருள்கோளாம்.]

(உ-ம்.) "சொல்லரும் சூற் பசும் பாம்பின் தோற்றம் போல்,
மெல்லவே கரு இருந் தீன்று, மேல் அலார்
செல்வமே போல், தலை நிறுவித், தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே."

[சொல்லானது...ஈன்று ..நிறுவி ..இறைஞ்சிக்காய்த்த. இதின்பொருட் ஒழுகியது ஆற்றுநீர் ஒழுக்குக்கு உவமை. சொல்=செந்நெற்கதிர்.]

---

**454.** (II.) TRANSPOSED CONSTRUCTION: WHEN A DISTINCT CLAUSE IS INTERPOSED BETWEEN TWO WORDS CLOSELY CONNECTED IN SENSE.

௪௫௪. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றி, ஓர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே.

[(இரண்டு மொழியும் அவை கொள்ளும் இரண்டு பயனிலையுமாய் வரக் கூறுவார் அந்நான்கனுள்) ஏற்ற பயனிலைகட்கு இயையும் மொழிகளைத் தனித்தனிக் கூட்டிக் கூறாதேலாத பயனிலைகட்கு இயையாத மொழிகளைத் தனித்தனிக் கூட்டி ஓரடியுள்ளே கூறும் பொருள்கோள் மொழிமாற்றுப் பொருள்கோள் ஆம்.]

(உ-ம்.) "சுரை ஆழ அம்மி மிதப்ப, வரை அனைய யானைக்கு நீத்து முயற்கு நிலை, என்ப கானக நாடன் சுனை."

(உ-ம்.) "சுரைஆடக் (கெண்டை கயத்தாட) மஞ்ஞை, சுரை (ஆழ அம்மி)
மிதப்ப, வரை அனைய யானைக்கு (நீத்துமுயற்கு) நிலை, என்ப
கானக நாடன் சுனை."

[கரையில் மஞ்ஞை ஆடும்; கயத்தில் கெண்டை ஆடும்; சுரை மிதக்கும்; அம்மி ஆழும்; யானைக்கு நிலை; முயலுக்கு நீத்து.]

---

**455.** (III.) ARTIFICIALLY ARRANGED CORRESPONDING CONSTRUCTION: WHEN SEVERAL SUBJECTS ARE STRUNG TOGETHER, AND THEN THEIR SEVERAL PREDICATES FOLLOW IN CORRESPONDING ORDER.

௪௫௫. பெயரும் வினையும்ஆம் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ, முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை மொழியே.

[பெயரும் வினையும் ஆகியசொற்களையும் (அவைகொள்ளும் பெயரும் வினையும் ஆகிய) பயன் நிலைகளையும் வேறு வேறு நிரையாக நிறுத்தி, முறையாய் எனும் எதிராய் எனும் இதற்கிது பயன்நிலை என்பது படக் கூறும்பொருள்கோள் நெறிப்பட்ட நிரனிறைப்பொருள்கோள் ஆம்.]

(உ-ம்.) "கொடி, குவளை, கொட்டை; நுசுப்புண் கண், மேனி;
மதி, பவளம், முத்தம்; முகம், வாய், முறுவல்;
பிடி, பிணை, மஞ்ஞை; நடை, நோக்குச், சாயல்;
வடிவினளே வஞ்சி மகள்."

(எக-ம். சூத்திரமும் இதற்கு உதாரணம்.)

| | | |
|---|---|---|
| கொடி ........ நுசுப்பு | மதி.........முகம் | பிடி............நடை |
| குவளை...... .. கண் | பவளம்......வாய் | பிணை ... ... ...நோக்கு |
| கொட்டை...... மேனி | முத்தம்......முறுவல் | மஞ்ஞை.........சாயல் |

**456.** (IV.) THE STRUNG-BOW CONSTRUCTION: WHEN THE FIRST AND LAST WORDS CORRESPOND.

சருசு. எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்
பொருணோக் குடையது பூட்டுவில் ஆகும்.

[(செய்யுட்கண்) முதலினும் ஈற்றினும் நிற்கும் மொழிகள் தம்முள் பொருள் நோக்கமுடைய பொருள்கோள் பூட்டுவிற் (பொருள்கோள்) ஆம்.]

(உ-ம்.) "திறந்திடுமின், தீயவை பிற்காண்டு' மாதர்
இறந்து படிற் பெரிதாம் ஏதம், உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."
[கதவைத் திறந்துவிடுங்கள்!]

**457.** (V.) THE DOUBLE-FACED CONSTRUCTION: WHEN THE SUBJECT IS IN THE MIDDLE.

சருஎ. இடைநிலை மொழியே ஏனை ஈர் இடத்து,
நடந்து, பொருளை நண்ணுதல் தாப்பிசை.

[இடை நிற்கும் மொழி ஒழிந்த முதலினும் ஈற்றினுஞ் சென்று, பொருளைக் கூடும் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோள் ஆம்.]

(உ-ம்.) "உண்ணாமை உள்ள துயிர்நிலை, ஊன், உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு."
[ஊன் எ-து இடையிலே நின்றது.]

**458.** (VI.) THE INVOLVED CONSTRUCTION.

சருஅ. செய்யுள் இறுதி மொழிஇடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே.

[செய்யுட்கண் ஈற்றின் நின்ற சொல் இடையினும் முதலினுஞ் சென்ற பொருள்கோள் அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆம்.]

(உ-ம்.) "தாழ்ந்த உணர்வினராய்த் தாள் உடைந்து தண்டேன்றித் தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணி நலிய முன்செய்த வினை என்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே."

**459.** (VII.) THE ENTIRELY DISARRANGED CONSTRUCTION.

௪௫௯. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டுகூட்டே.

[செய்யுள் அடிபலவினும் இயல்பாகிய யாற்றுநீர்ப்பொருளுக்கேலாது, கோத்துக் கிடந்த மொழிகளை எடுத்து, அப்பொருளுக்கேற்ற இடத்துக் கூட்டும் பொருள்கோள் கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆம்.]

(உ-ம்.)
5. (தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட) 3. (பைங்கூந்தல்)
6. (வெண்கோழி முட்டை உடைத்தன்ன) 4. (மாமேனி)
2. (அஞ்சனத் தன்ன) 7. (பசலை தணிவாமே,)
1. (வங்கத்துச் சென்றார் வரின்)

---

**460.** (VIII.) THE CONSTRUCTION IN WHICH THE ORDER OF THE LINES MAY BE CHANGED WITHOUT INJURY TO THE SENSE OR THE METRE.

௪௬0. ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்,
யாப்பி னிடைமுதல் ஆக்கினும் பொருள் இசை
மாட்சியு மாறா அடியவும், அடிமறி.

[(பொருளுக்கு) ஏற்கும் இடத்தெடுத்து நீங்காது கூட்டும் அடியினை உடையவும், யாதானும் ஓரடியை எடுத்து அச்செய்யுட்கண் முதல் இடை ஈறுகளின் யாதானும் ஓரிடத்துக் கூட்டினும் பொருளோடு ஓசை மாட்சியும், ஓசை ஒழியப் பொருள் மாட்சியும், வேறுபடாத அடியினை உடையவும், ஆகிய பொருள்கோள் அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆம்.]

(உ-ம்.) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்,
கொடுத்துத்தா னுய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்,

இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்,
விடுக்கும் வினை உலந்தக் கால்."

பொதுவியல் முற்றிற்று.

**461.** ALL THINGS OMITTED ARE TO BE INFERRED FROM WHAT HAS BEEN LAID DOWN.

சகூக. சொற்றொறும் இற்றிதன் பெற்றிஎன் றனைத்தும்
முற்ற மொழிகுறில் முடிவில; ஆதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்,
தெற்றென உணர்தல் தெளிவோர் திறனே.

[சொற்றொறும் இத்தன்மைத்து இதன் இலக்கணம், என்று முற்ற மொழியப் புகின் வரம்பில ஆம்; ஆதலின் எடுத்துக் கூறிய சொற்களின் இலக்கணத்தைக்கொண்டு, சொல்லாதனவற்றின் இலக்கணங்களையும் ஒப்புமை கருதி, இதுவும் அதுஎன முற்ற விளங்க உணர்தல் நூல் ஓதித் தெளிதற்குரிய மாணுக்கர்திறன் ஆம்.]

**462.** OBSOLETE FORMS TO BE REJECTED AND NEW ONES RECEIVED.

சகூஉ. பழையன கழிதலும், புதியன புகுதலும்,
வழுவல; கால வகையி னானே.

[முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்திறத்தலும், முற்காலத்தில்லன சில பிற்காலத்திலக்கணமாய் வருதலுங், குற்றம் அல்லவாம், காலவேற்றுமையது ஆகலான்.]

SUMMARY OF சொல்லதிகாரம்.

இருதிணை, மூவிட' நான்மொழி, ஐம்பால், அறுதொகை,ஏழ்
அருவழு வெட்டுரு பொன்பான் தொகாநிலை, ஆய்ந்தஎச்சம்
ஒருபது, கோள் எட்டு, முப்பொழு தீர்இடம், ஓர் இயல்பாய்
வருமொழி மூன்றும், உணரச்சொல் வன்மை வருந்திருவே.

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது.

நன்னூல், முடிந்தது முற்றும்.

# இலக்கண நூல்,

## II. பங்கு.

## ஆசிரியவசனங்கள்.

# II. NATIVE AUTHORITIES.

## [II.] THE ELEMENTS OF PROSODY.

## (II.) யாப்பருங்கலம்.

NOTE [This work is the most practically useful of all those that have been written on Tamil Prosody. The kârigei quoted here is an able work; but adds nothing really important. Much of Tamil prosody has fallen into deserved desuetude. The more important rules have an asterisk affixed.]

### (1.) THE COMPONENT PARTS OF VERSE.

### (1.) உறுப்பியல்.

***1.** VERSE: ITS ESSENTIALS.

[இயாப்பு இன்னது என்பது.]

க. எழுத்தசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கோ
டிழுக்கா நடைய தியாப்பெனப் படுமே.
[வி. 167.]

### § க. எழுத்து. [காரிகை. I. 4.]

***2.** FIFTEEN DIVISIONS OF LETTERS CONSIDERED AS THE ELEMENTS OF METRICAL SYLLABLES.

உ. உயிரே, மெய்யே, உயிர்மெய் என்று; [வி. 2. 7. 13.]
குறிலே, நெடிலே, அளபெடை என்று; [வி. 3. 4. 14.]
வன்மை, மென்மை, இடைமை என்று; [வி. 8–10.]
சார்பிற் றோன்றுந் தன்மைய என்று; [வி. 12. 15. 24.]
ஐ, ஔ, மகரக் குறுக்கம் என்றுங் [வி. 15. (1.)]
கைம்மூ எழுத்தும் ஆம் அசைக் குறுப்பே.

**3.** ÂYTHAM AND CONSONANTS HAVE NO DEFINITE QUANTITY.

௩. தனிநிலை ஒற்றிவை, தாம் அலகிலவே,
அளபெடை அல்லாக் காலை யான. [வி. 16.]

---

**4.** THE QUANTITY OF SHORTENED இ AND உ, AND OF PROLONGED VOWELS.

௪. தனிசீர் வண்ணந் தாங்கெட வரினே
குறுகிய இகரமுங், குற்றிய லுகரமும்,
அளபெடை ஆவியும், அலகியல் பிலவே.
[வி. 16. காரிகை. III. 1.]

---

§ ௨. அசை. [காரிகை. I. 5.]

***5.** METRICAL SYLLABLES OF TWO KINDS.

௫. நேரசை என்று, நிரையசை என்று,
ஆய் இரண்ட் ாகி அடங்கு’மன் அசையே.
[வி. 168.]

---

***6.** *நேரசை:* SINGLE LONG METRICAL SYLLABLES: WHEN THE VOWEL IS LONG BY NATURE OR POSITION; OR WHEN THE SYLLABLE STANDS ALONE AT THE END OF A FOOT.

௬. நெடில்குறிற் றனியே நின்றும்ஒற் றடுத்தும்,
நடைபெறு நேரசை நால்வகை யானே.
[வி. 169.]

---

**7.** A SHORT MONOSYLLABLE DOES NOT FORM A SYLLABLE EXCEPT IN THREE CASES.

௭. குறிப்பே ஏவ றறசுட டலவழி
தனிக்குறின் மொழிமுத றனியசை இலவே.
[காரிகை. III. 2.]

***8.** *நிரையசை:* TWO SHORT, OR A SHORT AND LONG SYLLABLE.

அ. குறில்இணை குறினெடி’ றனித்தும், ஒற்ற’டுத்தும்,
நெறிமையி’ னான்காய் வரு’நிரை அசையே.
[வி. 170.]

**9.** ஐ OCCURRING IN THE MIDDLE AND END SYLLABLES.

கூ. ஈறும் இடையும் இணைந்தும் இணையசை
ஆகும் ஐஎனப அறிந்திசி னோரே.
[காரிகை III. 1.]

§ ௩. சீர். [காரிகை I. 6.]

***10.** METRICAL FEET.

[சீர்களது பெயர் வேறுபாடு.]

க0. இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என்றும்
மயக்கற’ வகுத்த சீர்மூன்’ றாகும்.
[வி. 172.]

☞ The system of technical names for these feet such as Têmâ, &c., is of an origin later than this work. Co. [காரிகை I. 7. 8.]

***11.** FOUR KIND OF FEET OF TWO METRICAL SYLLABLES.

[— —, ∪∪—, ∪∪∪∪, —∪∪.]

கக. ஈரசை கூடிய சீர்இயற் சீர், அவை
ஈரிரண்’ டென்ப’ இயல்புணர்ந் தோரே.
[வி. 174.]

***12.** EIGHT KINDS OF FEET OF THREE METRICAL SYLLABLES.

[—, OR ∪∪ ADDED TO EACH OF THE FORMER.]

கஉ. மூவசைச் சீர்உரிச் சீர்இரு நான்கனுள்
நேரிறு நான்கும் வெள்ளை, அல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே.
[வி. 175.]

**13.** SIXTEEN FEET OF FOUR METRICAL SYLLABLES. [—◡◡, ——, ◡◡— OR ◡◡◡◡ ADDED TO EACH OF THE FEET IN 11.]

கங. நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னாறே.

[வி. 176.]

***14.** FEET OF ONE METRICAL SYLLABLE.

கச. ஓரசைச் சீருமஃ தோரிரு வகைத்தே.

[வி. 173. காரிகை II. 5.]

**15.** ANOMALOUS USAGE.

கரு. விரவியும் அருகியும் வேறும் ஒரோவழி
மருவியும் பெறுது வழங்குமன் அவையே.

**16.** FEET OF THREE METRICAL SYLLABLES IN WHICH THE SECOND IS A நேர்.

கசா. நிரைநடு வியலா வஞ்சி உரிச்சீர்
கலியினு ளகவலிற் கடிவரை யிலவே.

☞ ["மாஞ்சீர் கலியுட் புகா; கலிப்பாவின் "விளங்கனி" வந்த தாஞ்சீர் அடையா, அகவல் அகத்தும்; அல்லாத எல்லாம் தாஞ்சீர் மயங்கும்......"]

§ ச. தளை. [காரிகை I. 10.]

***17.** THE SEVEN MODES OF COMBINING METRICAL FEET.

கஎ. சீரொடு சீர்தலைப் பெய்வது தளை; அவை
ஏழென மொழிப இயல்புணர்ந் தோரே.

[வி. 177.]

**18.** TWO MODES OF COMBINATION PECULIAR TO வெண்பா.

[1. காய் + நேர்; 2. மா + நிரை, விளம் + நேர்.]

கஅ. வெண்சீர் ஒன்றலும், இயற்சீர் விகற்பமும்,
என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே.

[வி. 179.]

**19.** TWO MODES OF COMBINATION PECULIAR TO அகவல்.

[1. நேர்+நேர்; 2. நிரை+நிரை.]

கக. ஈரசைச் சீர்நின் றினிவருஞ் சீரொடு
நேரசை ஒன்ற னிரையசை ஒன்றல் என்
றுயிரு வகைத்தே ஆசிரி யத்தளை.
[வி. 178.]

**20.** COMBINATION PECULIAR TO கலிப்பா.

உ0. நிரை ஈ றில்லா உரிச்சீர் முன்னர்
நிரைவரு காலைக் கலித்தளை ஆகும்.

**21.** TWO MODES OF COMBINATION PECULIAR TO வஞ்சி: THE OPPOSITES OF 18.

உக. தன்சீர் இறுதி நிரையொடு நேர்வரின்
வஞ்சித் தளையின் வகை இரண் டாகும்.

**22.** THE LAWS OF COMBINATION STRICTLY OBSERVED ONLY IN வெண்பா.

உஉ. வெள்ளையுட் பிறதளை விரவா; அல்லன
எல்லாத் தளையு மயங்கியும் வழங்கும்.

## § ரு. அடி. [காரிகை I. 12. 13.]

**23.** FIVE KINDS OF METRICAL LINES.

உங. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி,
கழிநெடி லடி எனக் கட்டுரைத் தனரே.
[வி. 180.]

**24.** THE NUMBER OF METRICAL FEET IN EACH, FROM TWO TO FIVE.

உச. குறளடி, சிந்தடி,—இருசீர், முச்சீர்;
அளவடி, நெடிலடி,—நாற்சீர், ஐஞ்சீர்;
நிரனிறை வகையா னிறுத்தனர் கொளலே.
[வி. 180.]

**25.** LINES OF FROM SIX TO TEN FEET.

௨௫. கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்,
அறுசீர் முதலா ஐயிரண் டீறா
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே.
[வி. 180.]

**26.** LINES USED IN வஞ்சிப்பா.

௨௬. சிந்தடி, குறளடி, என்றிரண் டடியான்
வஞ்சி நடக்கும் என்மனார் புலவர்.
[காரிகை II. 1. "வஞ்சி என்னும் ஒண்பா அடி குறள் சிந்தென்றுரைப்ப."]

**27.** FEET USED IN கலிப்பா, வெண்பா AND அகவல்.

௨௭. கலியொடு வெண்பா அகவல் கூறின்
அளவடி தன்னால் நடக்கும் என்ப.
[காரிகை II. 1. "வெண்பா அகவல் கலிப்பா அளவடி."]

**28.** ALL LINES USED IN THE (INFERIOR) SPECIES OF METRE.

௨௮. பாவினம் எல்லா அடியினும் நடக்கும்.

**29.** IN அகவல் LINES ARE FOUND BELONGING TO OTHER METRES.

௨௯. இயற்சீர் வெள்ளடி, வஞ்சி யடி; அவை
அகப்பட வரூஉம் அகவலும் உளவே.

**30.** IN கலிப்பா AND வஞ்சிப்பா ALSO OTHER LINES ARE FOUND.

௩0. வெள்ளடி கலியினுள் விரவவும் பெறுமே.
வஞ்சியுள் அகவன் மயங்கினும் வரையார்.

**31.** THE MINIMUM NUMBER OF LINES IN EACH KIND OF VERSE.

௩௧. ஈரடி வெண்பாச் சிறுமை; மூவடி
ஆசிரி யத்தொடு வஞ்சி; எஞ்சிய
ஈரிரண் டடியே இழிபென மொழிப.

§ ௩. தொடை. [காரிகை I. 16–20.]

**32.** DIFFERENT KINDS OF CONNECTION BETWEEN LINES.
[IN காரிகை STATED TO BE 35.]

௩௨. தொடையே அடிஇரண் டியையத் தோன்றும்;
மோனை, எதுகை, முரண், இயை பளபெடை,
பாத மிணையே, பொழிப்போ டொரூஉத் தொடை,
சீரியன் முற்றொடு, சிவணும்ஆர் அவையே.
[வி. 181.]

***33.** RECURRENCE OF THE FIRST LETTER IN EACH LINE.
[அடி மோனைத் தொடை ஆம்ஆறு.]

௩௩. ஆதி எழுத்தே அடிதொறும் வரின்அடி
மோனைத் தொடைஎன மொழிமனார் புலவர்.

(உ-ம்.) "மாவும் புள்ளும் வதுவையிற் படர,
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப,
மாலை தொடுத்த கோதையுங் கமழ,
மாலை வந்த வாடை
மாயோன் இன்னுயிர்ப் புறத்திறுத் தற்றே."

[அடி தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுத்தது.]
[வி. 183. காரிகை I. 16.]

***34.** INITIAL RHYME.

[அடி எதுகைத் தொடை ஆம்ஆறு.]

௩௪. இரண்டாம் எழுத்தொன் றியைவதே எதுகை.

(உ-ம்.) "வடிஏர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்,
கடிஆர் கனங்குழாய், காணார்கொல் காட்டின்
இடியின் முழக்கஞ்சி ஈர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்திசைத்த கை."

[அடி தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுத்தது.]
[வி. 182. காரிகை I. 16.]

**35.** DIFFERENT KINDS OF CONSONANTS ADMISSIBIE IN INITIAL RHYME

௩௫. வருக்க நெடில் இனம் வரையார் ஆண்டே.

[வருக்க எழுத்தும், நெடில் எழுத்தும், இன எழுத்தும் எதுகை (யும் மோனையும) ாய் வந்தால் அவற்றை வருக்க எதுகை, (வருக்க மோனை,) நெடில் எதுகை, (நெடில் மோனை,) இன எதுகை, (இன மோனை) என்று பெயரிட்டு வழங்கப்படும்.]

(உ-ம) "நாடாத நட்டலிற் கேடில்லை, நடடபின
வீடில்லை நடபாள பவாக்கு" [வருக்கம]

"ஆயநதாயநது கொளளாதான கேணமை கடைமுறை
தான சாநதுயாந தரும" [நெடில]

டபுண உளளாறும, ஆறுதே
விஞற் சுட்டவடு" [இனம இடையினம]

**36.** ANTITHESIS IN THE INITIAL WORDS.

[அடி முரணடொ்டை ஆமஆறு.]

௩௬. மொழியினும் பொருளினு முரணுதன் முரணே.

(உ-ம) "இருளபரந தனன மாநீா மருங்கில்,
நிலவு குவிததனன வெணமணல ஒரு சிறை,
இருமபின அனன கருங கோட்டுப புனனை,
பொனனின அனன நுணடாா திறைகருஞ
சிறுகுடிப பாதவா மடமகள
பெருமதா மழைக்கணும உடையவால் அணஙகே"
[அடி தோறும முதற்கணணே மறுதலைபபடத் தொடுதததது]
[காரிகை I 16]

**37.** DIFFERENT KINDS OF ANTITHETICAL COMBINATION.

௩௭. கடை, இணை, பின் முரண், இடைப் புணர் முரண் என
இவையுங் கூறுப ஒருசா ரோரே.

***38.** CONSONANCE IN THE LAST FOOT FINAL RHYME.

[அடி இயைபுததொடை ஆம்ஆறு]

௩௮. இறுவாய் ஒப்பின் அஃ தியையெனப் படுமே.

(உ-ம) "இன்னகைத் துவாவாயக் கிளவியும் அணஙகே,
நனமா மேனிச் சுணஙகும ஆா அணஙகே,
ஆடமைத தோளி கூடலும அணஙகே,
அரிமதா மழைக்கணும அணஙகே,
திருநுதற் பொறித்த திலதமும அணஙகே"
[அடி தோறும் இறுதிச்சீர் ஒனறி வாதததொடுத்தது]
[காரிகை I 16]

**39.** CORRESPONDENCE OF PROLONGED LETTERS.

[அடி அளபெடைத்தொடை.]

௩௯. அளபெடை ஒன்றுவ தளபெடைத் தொடையே.

(உ-ம்.) "ஆஅ! அளிய அலவன்றன் பார்ப்பினோ
டீஇர் இரையுங் கொண்ட மீஇஅளைப்பள்ளியுட்
டேஎக் கிரைஅலைப்பத் துஞ்சா திறைவன்றேள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறூஉதால்!
ஓஒ உழக்குந் துயர்."

[அடி தோறும் முதன்மொழிக்கண் உயிர் அளபெடுத்தொன்றிவரத் தொடுத்தது.]

[காரிகை I. 16.]

**40.** LITERAL COINCIDENCE OR CONSONANCE IN THE FIRST AND SECOND FEET.

[இணைமோனை ஆமாறு.]

௪௰. இருசீர் மிசைவரத் தொடுப்ப திணையே.

[முதல் இருசீர்க்கண்ணும் மோனைமுதலாகிய ஐந்தும் (32.) வரத் தொடுப்பது இணைமோனை.]

(உ-ம்.) "வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பைஇல."

[காரிகை I. 19.]

**41.** LITERAL COINCIDENCE OR CONSONANCE OF THE FIRST AND THIRD FEET.

[பொழிப்பு மோனை ஆமாறு.]

௪௧. முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே.

[முதற்சீர்க்கண்ணும் மூன்றுஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாகிய ஐந்தும் (32.) வரத்தொடுப்பது பொழிப்புமோனை.]

(உ-ம்.) "வானின் றுலகம் வழங்கி வருதலால்
றான் அமிழ்தம் என்றுணரற் பாற்று."

[காரிகை I. 19.]

**42.** LITERAL COINCIDENCE OR CONSONANCE IN FIRST AND FOURTH FEET.

[ ஒரூஉத்தொடை ஆம் ஆறு.]

௪௨. சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத் தொடை.

[ நடு சீர்க்கண்ணும் இன்றி முதற் ாக்கண ணும் மோனை முதலாகிய ஐந்தும் (32.) வரத்தொடுப்பது (ஒருவும்) ஒரூஉத் தொடை.]

(உ-ம்.) "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
[காரிகை I. 19.]

**43.** LITERAL COINCIDENCE OR COINCIDENCE IN THE THREE FIRST FEET.

[ கூழை ஆம் ஆறு.]

௪௩. மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை என்மனார் குறிப்புணர்ந் தோரே.

[ இறுதிச்சீர்க்கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாகிய ஐந்தும் (32.) வரத்தொடுப்பது கூழை.]

(உ-ம்.) "தானந் தவம்இரண்டுந் தங்கா, வியனுலகம்
வானம் வழங்கா தெனின்."
[காரிகை I. 19.]

---

**44.** WHEN ALL BUT THE SECOND HAVE THE COINCIDENCE [ = THE UPPER GAP.]

[மேற்கதுவாய் மோனை ஆம்ஆறு.]

௪௪. முதலஅயற் சீர் ஒழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே.

[ முதல் அயற்சீர்க்கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாகிய ஐந்தும் (32.) வரத்தொடுப்பது மேற்கதுவாய்.]

(உ-ம்.) "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி."
[காரிகை I. 19.]

**45.** WHEN ALL BUT THE PENULTIMATE FOOT HAVE THE COINCIDENCE. [= THE LOWER GAP]

[கீழ்க்கதுவாய் மோனை ஆம் ஆறு.]

சரு. ஈற்றயற் சீர்ஒழிந் தெல்லாந் தொடுப்பது
கீழ்க் கது வாயின் கிழமைய தாகும்.

[ஈற்றயற்சீர்க்கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனைமுதலாகிய ஐந்தும் வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய்.]

(உ-ம்) "சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

[காரிகை I. 10.]

**46.** WHEN EVERY FOOT HAS THE CONSONANCE

[முற்றுமோனை ஆம் ஆறு.]

சசா. சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே.

[வருசீர் முழுவதும் ஒன்றின் முற்றாகும்.]

(உ-ம) "துபபார்க்குத துபபாய துபபாக்கித் துப்பாக்குத்
துபபா யதூஉ மழை."

[காரிகை I. 19.]

**47.** THREE OTHER KINDS OF COMBINATION.

சஎ. செந்தொடை இரட்டையோ டந்தாதி எனவும்
வந்த வகையான் வழங்கு மன் பெயரே.

[48. 49. 50 காண்க.]

**48.** [BLANK VERSE:] SIMPLE COMBINATION WITHOUT EITHER மோனை OR எதுகை.

[ செந்தொடை ஆம்ஆறு. ]

சரு. செந்தொடை ஒவ்வாத் திறத்தன ஆகும்.

[ மோனை முதலான தொடையுந் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது செந்தொடை. ]

(உ-ம.) "பூதத வேங்கை வியனசினை ஏறி
மயிலினம் அகவு' நாடன,
நனுதற் கொடிசசி மனததகததோனே'"

[காரிகை I. 17. 18.]

**49.** DOUBLE COMBINATION.

[ இரட்டைத் தொடையாம் ஆறு. ]

சகூ. ))ரட்டை அடி முழு தொரு சீர் இயற்றே.

[ஓர் அடி முழுதும் ஒருசொல்லே வரத் தொடுப்பது ))ரட்டைத்தொடை.]

(உ-ம ) "ஒக்குமே, ஒக்குமே, ஒககுமே, ஒக்கும்
விளக்கினிற் சிறெரி ஒக்குமே ஒககும
குளக் கொட்டிப பூவினிறம."

[காரிகை I. 17. 18.]

**50.** THE END OF ONE LINE BECOMES THE BEGINNING OF ANOTHER.

[ அந்தாதித்தொடை ஆம் ஆறு. ]

ரு0. ஈறு முதலாத் தொடுப்பதந் தாதிஎன்
றேறுதினர் மாதோ உணர்ந் திசினோரே.

[ அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தாகிலும், அசையாகிலும், சீர் ஆகிலும், அடிஆகிலும் மற்றை அடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும். ]

(உ-ம் ) "உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிரமதி,
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை,
முக்குடை கீழற் பொற்புடை ஆசனம்,
ஆசனத் திருநத திருநதொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாநதர் ஈதெனப்
பன்னருஞ் சிறப்பின விண்மிசை உலகே.'

[காரிகை I. 17. 18.]

**51.** IN MINGLED COMBINATIONS THE NAME OF THE FIRST IS GIVEN.

௫௧. தொடைபல தொடுப்பினுந், தளைபல விரவினும்,
முதல்வந் ததனான் மொழிந்திசிற் பெயரே.

## (2.) KINDS OF METRE.

## (2.) செய்யுளியல்.

**52.** KINDS OF VERSE.

௫௨. செய்யுட் டாமே மெய்பெற விரிப்பிற்
பாவே, பாவினம், என இரண் டாகும்.

**53.** METRES. [*காரிகை* I. 15.]

௫௩. வெண்பா, ஆசிரியங், கலியே, வஞ்சி,
பண்பாய்ந் துரைத்த பா நான்கும்மே.

[வி. 184.]

[வெண்பா செப்பலோசையான் வரும், ஆசிரியப்பா அகவலோசை யால் வரும், கலிப்பாதுள்ளலோசையான்வரும், வஞ்சிப்பா தூங்கலோ சையான் வரும்.]

[*காரிகை* II. 1.]

**54.** SUBORDINATE METRICAL COMPOSITIONS.

'. தாழிசை, துறையே, விருத்தம், என்றிவை
பாவினம்; பாவொடு பாற்பட் டியலும்.

☞ These names seem to be given to indicate respectively, (1.) a kind of metre resembling the principal metre, but inferior to it in melody, (2.) a composition following the same general methods, and (3.) one freer and more flowery.]

## § ௪. வெண்பா இலக்கணம். [காரிகை II. 3.]

**55.** THE METRE CALLED வெண்பா. [=THE CLEAR (SOUNDING) VERSE.]

செப்பல் இசையன வெண்பா; மற்றவை
அந்தடி சிந்தடி ஆகலும், அவ்வடி
அந்தம் அசைச்சீர் ஆகவும் பெறுமே.

[வி. 185.]

[செப்பலோசை ஆனது ஏந்திசைச்செப்பல், தூங்கிசைச்செப்பல், கிசைச்செப்பல் என மூன்றுவகைஆம்; இவற்றுள்:]

[I.] வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனர் புலவர்.

(உ-ம்.) "யாதானு' நாடாம்ஆல், ஊர்ஆம் ஆல், என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத ஆறு."

[II.] இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
தூங்கிசைச்செப்பல் என்மனர் புலவர்.

(உ-ம்.) "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு."

[III.] வெண்சீர் ஒன்றலும், இயற்சீர் விகற்பமும்,
ஒன்றிய பாட்டே ஒழுகிசைச்செப்பல்.

(உ-ம்.) "கடன் என்ப நல்லவை எல்லாங் கடன்
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு."

☞ வெண்பா, வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என நான்கும்,
ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் என நான்கும்,
கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், என நான்கும்,
வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் என நான்கும்,
மருட்பா என ஒன்றும், ஆக பதினேழுவகையானசெய்யுள் உண்டென்பார்.

**56.** FIVE KINDS OF வெண்பா.

௫௬. குறள், சிந் தின்னிசை, நேரிசை, பஃறொடை,
எனஐந் தாகும் வெண்பாத் தானே.

[வி. 186.]

**57.** THE குறள் AND சிந்து. [=THE SHORT VERSE, AND THE DEFECTIVE.]

௫௭. ஈரடி குறள்; சிந் திருதொடை இயற்றே.

[வி. 137. காரிகை II. 3. 5.]

**58.** THE நேரிசை. [=POSSESSED OF CORRECT HARMONY.]

௫௮. நாலோர் அடியாய்த் தனிச்சொற் பெற்றுடன்
ஈரொரு வாய்முற் றிருவிகற் பொன்றினு
நேரிசை வெண்பா எனப்பெயர் ஆகும்.

[வி. 189. காரிகை II. 3.]

**59.** THE இன்னிசை. [= THE EUPHONIC.]

விகற்பொன் றாகியு மிக்கும், தனிச்சொல்
இயற்றப் படாதன இன்னிசை வெண்பா.

[வி. 190. காரிகை II. 4.]

**60.** THE பஃறொடை. [= MANIFOLD COMBINATION.]

௬0. பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா.

[காரிகை II. 4.]

-<<<>>>-

**61.** வெண்செந்துறை. [METRE NEARLY OF THE வெண்பா KIND AND PARTAKING OF ITS EXCELLENCE.]

௬௧. ஒழுகிய ஓசையின் ஒத்தடி இரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே.

[(க.) இது வெண்பாவின் இனம் ஆம்.
(உ.) தளை தட்டும். ஒழுகிய ஓசை.
(ங.) வெள்ளைச் செந்துறை எனவும், வெண்செந்துறை எனவும் படும்.
(ச.) எனைத்துச் சீரானும் ஒத்தஅடியாய் வரப்பெறும்.

(உ-ம்.) "ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம் [வி. 157.]
ஓதலிற் சிறந்தன் றொழுக்கம் உடைமை."

☞ அடிஇரண்டாய், அளவொத்து விழுமிய பொருளின்றியும், ஒழுகிய ஓசையின்றியும் வருவன எல்லாஞ் செந்துறைச் சிதைவுத்தாழிசைக் குறள் எனப்படும்,]

[காரிகை II. 6.]

**62.** THE *தாழிசைக்குறள்.* [=VERSES LIKE THE *குறள்* BUT WANTING ITS RHYTHM.]

கூஉ. அந்தடி குறைநவுஞ், செந்துறைச் சிதைவுஞ்,
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே:
உரைத்த இரண்டுங் குறட்பா வினமே.

☞ [(க.) இருநாற் சீரின் மிக்க பலசீரால் வரும்.
(உ.) இரண்டடியில் ஈற்றடி குறைந்துவரும்.
(ங.) குறட்டாழிசை எனினும் தாழிசைக்குறள் எனினும் ஒக்கும்.

(உ-ம்.) "கண்ணனுவார் வினைகைய நாடொறு நற்' றவர்க்கரசாம் ஞானநற்
கண்ணினுன் அடியே அடைவார்கள் கற்றவரே."]

[காரிகை II. 6.]

**63.** THE *வெள்ளைத்தாழிசை.* [=WANTING IN THE SMOOTHNESS OF THE *வெண்பா.*]

கூங. அடி ஒரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடின், அது வெள்ளொத் தாழிசை ஆகும்.

☞ வெள்ளைத்தாழிசை, வெண்டாழிசை, வெள்ளொத்தாழிசை எனினும் ஒக்கும்.

(உ-ம்.) "நண்பி தென்று தீய சொல்லார்,
முன்பு நின்று முனிவு செய்யார்,
அன்பு வேண்டுபவர்."

[காரிகை II. 7.]

**64.** THE *வெண்டுறை* [=AN IMITATION OF THE METHOD OF *வெண்பா.*]

கூச. மூன்றடி முதலா ஏழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்தப நிறபினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை ஆகும்.

(உ-ம்.) "தாளாளர் அல்லாதார் தாம்பலர் ஆயக்கால் என்னும்? என்னும்?
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிழும் பிளிற்றி ஆங்கே."

[காரிகை II. 7.]

**65.** THE வெளிவிருத்தம். [=EXPANDED METRE ANALOGOUS TO வெண்பா.]

. நான்கடி யானு நடைபெற் றடிதொறுந்
தான்றனிச் சொற்கொளின் வெளிவிருத் தம்மே.

(உ-ம்.) "ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார் ஒருசாரார்;
கூகூ என்றே கூவிளிகொண்டார் ஒருசாரார்;
மாமா என்றே மாய்ந்தனர் நீந்தார் ஒருசாரார்;
ஏகீர் நாகீர், என் செய்தும் என்றார் ஒருசாரார்."

[வி. 193. காரிகை II. 7.]

## § உ. ஆசிரியப்பா இலக்கணம்.

[=The master's metre (?)]

**66.** VERSE CALLED அகவல். [=THE PEACOCK'S DANCE.]

௬௬. அகவல் இசையன அகவல், மற்றவை
ஏ, ஓ, ஈ, ஆ என ஐ என்றிறுமே.

[வி. 191.]

[அகவல் ஓசை ஆனது ஏந்திசை அகவல், தூங்கிசை அகவல், ஒழுகிசை அகவல் என மூன்றும். இவையாவன:

நேர்நேர் இயற்றளை யான்வரும் அகவலும்;
நிரைநிரை இயற்றளை யான்வரும் அகவலும்;
ஆய்இரு தளையும் ஒத்தாகிய அகவலும்;
ஏந்த றூங்கல் ஒழுகல் என்றிவை
ஆய்ந்த நிரனிறை ஆகும் என்ப.]

**67.** FOUR KINDS OF அகவல்.

௬௭. நேரிசை, இணைக்குறள், மண்டில நிலைப்பெயர்
ஆகு மண் டிலமென் றகவ லொன்கே.

[காரிகை II. 8.]

### 68. THE VERSE CALLED நேரிசை ஆசிரியம்.

௬௮. அந்த அடியின் அயல்அடி சிந்தடி
வந்தன நேரிசை ஆசிரியம்மே.

(உ-ம்.) "நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று,
நீரினும் ஆர் அளவின்றே, சாரற்
கருங்கோற குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன இழைக்கு' நாடனொடு நட்பே."

[காரிகை II. 8.]

### 69. THE VERSE CALLED இணைக்குறள்.

௬௯. இணைக்குறள் இடைபல குறைந்திறில் இயல்பே.

(உ-ம்.) "நீரின தன்மையுந் தீயின வெம்மையும்
சாரச சார்நது
தீரத தீரும்;
சார னுடன கேண்மை
சாரச சாரச சார்நது
தீரத் தீரத் தீரப் பொல்லாதே!"

[காரிகை II. 8.]

### 70. THE VERSE CALLED மண்டிலம். [=THE COIL.]

௭௰. மனப்படும் அடிமுதல் ஆய் இறின் மண்டிலம்;
நிலைக்குரி மாபின் நிற்கவும் பெறுமே.

☞ மண்டிலம எனினும் நிலைமண்டிலம் எனினும் காரிகையில் ஒக்கும்.

[காரிகை II. 8.]

### *71. THE VERSE CALLED நிலை மண்டிலம்.

☞ காரிகையில் இது அடிமறிமண்டிலம் எனப்படும.

௭௧. ஒத்த அடியின தாகியும், ஒற்றி
நிற்பவும் என்னும் நிலைமண் டிலமே.

[எல்லா அடியும் ஒத்து, முதல் நடு இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டிலம்.]

[இந்நூலின் சூத்திரங்களை இதற்குதாரணம் எனக்கொள்க.]

[காரிகை II. 8.]

**72.** THE VERSE CALLED *அகவற்றாழிசை.*

எஉ. மூன்றடி ஒத்து முடிபின வாய்விடின்
ஆன்றடி அகவற் றாழிசை ஆகும்.

[மூன்றடியாய்த் தம்முள் அளவு ஒத்துவருவன ஆசிரியத்தாழிசை.]

[காரிகை II. 9.]

---

**73.** THE VERSE CALLED *அகவற்றுறை.*

எந. கடையதன் அயல்அடி கடைதபு நடையவு;
நடு அடி மடக்காய் நான்கடி ஆகி
இடை இடை குறைநவும் அகவற் றுறையே.

[நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருனவும்; நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடை மடக்காய் வருனவும் எல்லாம் ஆசிரியத்துறை.]

[காரிகை II. 9.]

***74.** THE VERSE CALLED *ஆசிரியவிருத்தம்.*

எச. கழிநெடில் அடிநான் கொத்திறின் விருத்தம்; அஃ
தழியா மரபின தகவல தாகும்.

[கழிநெடில் அடி நான்காய்த், தம்முள் அளவு ஒத்து வருவன ஆசிரிய விருத்தம்.]

[வி. 193. காரிகை II. 9.]

## § ௫. கலிப்பா இலக்கணம்.

***75.** THE METRE CALLED *கலிப்பா*. [= THE RESOUNDING VERSE.]

௭௫. துள்ளல் இசையன கலியே; மற்றவை
யும் அகவலும் ஆய்வினை நிறுமே.

[ஏந்திசைத்துள்ளல் கலித்தளை இயையின்; வெண்டளை தன்றளை என்றிரண்டியையின் ஒன்றி அகவற்றுள்ளல் என்றோதுக; தன்றளை பிறதளை என்றிவை அனைத்தும் பொருந்தி வரினே பிரிந்திசைத்துள்ளல்.]

**76.** THREE KINDS OF *கலிப்பா*.

௭௬. ஒத்தா ழிசைக்கலி, வெண்கலிப் பாவே,
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்.
[காரிகை II. 10.]

**77.** THREE KINDS OF *ஒத்தாழிசைக்கலி*. [SEE 79-81.]

௭௭. நேரிசை, அம்போ தரங்கம்,வண் ணகம்என
றோதிய மூன்றே ஒத்தா ழிசைக்கலி.
[காரிகை II. 10.]

**78.** SUBDIVISIONS OF வெண்கலி AND கொச்சகம். [SEE 82-86.]

௭௮. வெண்கலி ஒன்றே, கொச்சகம் ஐந்தெனப்
பண்பறி புலவர் பாற்படுத் தனரே.
[காரிகை II. 11.]

**79.** THE VERSE CALLED *நேரிசை ஒத்தாழிசை*.

௭௯. தரவொன்று, தாழிசை மூன்றுஞ் சமனாய்த்,
தாவிற் சுருங்கித் தனிநிலைத் தாகிச்,
சுரிதகஞ் சொன்ன இரண்டினுள் ஒன்றாய்,
நிகழ்வது நேரிசை ஒத்தா ழிசையே.

[முன் ஒருதரவு வந்ததன்பின் மூன்று தாழிசை வந்ததன்பின் ஒரு

தனிச்சொல் வந்ததன்பின் ஆசிரியத்தாலும் வெண்பாவாலுஞ் சுரிதக உறுப்பு வந்து சொன்ன பெற்றியிற் றிரியாது வருவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.]

[காரிகை II. 10.]

**80.** THE VERSE CALLED அம்போதரங்க ஒத்தாழிசை.

௮௦. முந்திய தாழிசைக் கீறாய் முறைமுறை
ஒன்றனுக் கொன்று சுருங்கு முறுப்பின
தம்போ தரங்க ஒத்தா ழிசைக்கலியே.

[காரிகை II. 10.]

**81.** THE VERSE CALLED வண்ணக ஒத்தாழிசை.

௮௧. அவற்றொடு முடுகியல் அடிஉடை அராகம்
அடுப்பது வண்ணக ஒத்தா ழிசையே.

", அடுக்கியல், போக்கியல் எனவும்படும்.]

. II. 11.]

**82.** THE VERSE CALLED கலி வெண்பா.

௮௨. தன்றளை ஓசை தழீஇய நின் றீற்றடி
வெண்பா இயலது கலிவெண் பாவே.

[கலித்தளை தட்டு கலிஓசை தழுவியும், வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து, ஈற்றடி முச்சீரான் இறும் எனின் கலிவெண்பாவாம்.]

[வெண்கலிப்பா எனவும்படும்]

[காரிகை II. 11.]

**83.** THE VERSE CALLED கொச்சகம்.

௮௩. தரவே, தரவிணை, தாழிசை தாமுஞ்
சிலவும் பலவுஞ் சிறந்து மயங்கியு
மற்று விகற்பம் பலவாய் வருநவுங்
கோச்சகம் என்னுங் குறியின ஆகும்.

☞ [கட்டளைக்கலித்துறைக்கு (85 காண்க) கொச்சகக்கலிப்பா என்று பெயரிடுவார் உளரே.]

[காரிகை II. 12.]

### 84. THE VERSE CALLED கலித்தாழிசை.

௮௪. அடி எனைத் தாகியும் ஒத்து வந் தளவினிற்
கடை அடி மிகுவது கலித்தாழிசையே.

[இரண்டடியாலும், பல அடியாலும் வந்து, ஈற்றடி மிக்கு, அல்லாத அடி தம்முள் ஒத்துவருவன எல்லாங் கலித்தாழிசை.]

[காரிகை II. 13.]

### *85. THE VERSE CALLED கலித்துறை.

௮௫. நெடில் அடி நான்காய் நிகழ்வது க

[ஒரு சீர் அடி நான்காய் வருவது கலித்துறை.]

☞ கட்டளைக் கலித்துறைக்கு இலக்கணம்:

முதற்சீர் நான்கும் வெண்டளைபிழையா,
கடைச்சீர் ஒன்றும் விளங்காய் ஆகி,
நேர்பதினாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே.

[வி. 192. காரிகை II. 13.]

### *86. THE VERSE CALLED கலிவிருத்தம்.

௮௬. அளவடி நான்கின கலிவிருத் தம்மே.

[நாற்சீர் அடி நான்காய் வருவது கலிவிருத்தம்.]

(உ-ம்.) "என்பு தோல் உடை யார்க்கும் இ லார்க்குந் தம்
அன்ப வைப்புலன் மாசற மாய்ப்பதென்
முன்பு பின் பின்றி மூவுல கத்தினும்
அன்பின் அல்லதோர் ஆக்கம் உண் டாகுமோ?"

[வி. 193. காரிகை II. 13.]

## § ௪. வஞ்சிப்பா இலக்கணம்.

☞ This is now entirely disused.

**87.** THE METRE CALLED வஞ்சி.

௮௭. தூங்கல் இசையன வஞ்சி; மற்றவை
ஆய்ந்த தனிச்சொலோ டகவலின் இறுமே.

[ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்;
ஒன்று வஞ்சித் தளையே வரினும்;
என்றிவை இரண்டும் பிறவு' மயங்கினும்;
ஏந்தல், அகவல், பிரிந்திசைத் தூங்கல் என்
றுய்ந்த நிரனிறை ஆகும் என்ப.]

[காரிகை II. 14.]

**88.** THE VERSE CALLED வஞ்சி விருத்தம்.

௮௮. சிந்தடி நான்காய் வருவது வஞ்சி
எஞ்சா விருத்தம், என்மனார் புலவர்.

[முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி எஞ்சா விருத்தம்.]
[வி. 193. காரிகை II. 14.]

(3.) SUPPLEMENT.

## (3.) ஒழிபியல்.

**89.** ANALOGY TO BE THE GUIDE IN CASES NOT SPECIFIED.

௮௯. மிக்குங் குறைந்தும் வரினும் ஒருபுடை
ஒப்புமை நோக்கி ஒழிந்தவுங் கொளலே.

**90.** THE தனிச்சொல்.

௯0. அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொல்; அஃ
திடையினும் வஞ்சியுள் இயலும் என்ப.

☞ தனிச்சொல் எனினும் கூன் எனினும் ஒக்கும்.

[காரிகை III. 8.]

**91.** THINGS TO BE OBSERVED BY A POET.

௯௧. நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதியும்;
அறுவகைப் பட்ட சொல்லின் விகாரமும்; [வி. 41.]
எழுத்தின் இசையை அசைபெறுத் தியற்றலும்;
வழுக்கா மரபின் வகையுளி சேர்த்தலும்;
அம்மை முதலிய வாயிரு நான்மையும்;
வண்ணமும் பிறவு மரபுளி வழாமைத்
திண்ணிதி னடத்த றெளிந்தோர் கடனே.

☞ அம்மை = அழகு. [காரிகை III. 9.] வண்ணம் = சந்தம். [காரிகை III. 9]

[நன்னூல் 401. &c. 155. 441. 388.]

**92.** POETICAL ABILITY IS THE TEST.

வெண்பா.

௯௨. செந்தமிழ்ச் செய்யுட் டெரிந்துணர்ந்து, செந்தமிழ்க்கண்
வந்த வடமொழியு மாற்றதே,
சந்தம்
வழுவாமற் கொண்டியற்று மாண்பினோர்க் குண்டோ
தழுவாமை நிற்குந் தமிழ்?

யாப்பருங்கலம் முடிந்தது முற்றும்.

# VOCABULARY AND CONCORDANCE OF GRAMMATICAL TERMS.

## லக்கண அகராதி.

Sufficient is given here to enable the student to write out an explanation in prose (which he should always do) of the poetical portions of the Grammar and the exercises. References in brackets refer to the *analysis* of the word.

வி refers to the foregoing Catechism; சூ to the Nannûl; and யாப்: to the Yâpparungalam.

A line thus | is intended to shew the root, or the parts of the compound word.

## அ

அ. விஞ 2. 3. 5. சூத். 63. 64. 66. 73. 125. ஆறன் உருபு. சூ. 62. சூ. 300. பலவினபடர்க்கை விகுதி. சூ. 329. சாரியை. சூ. 108. 140. 244. 247. 318. வி. 106.
எதிர்ந்ததம். வி. 166.
விகாரத்தால் இடையிற்றோன்றுவது. சூ. 225.

அக்கரன்=அகரவெழுத்து, (கான், எழுத்துச்சாரியை.) சூ. 126. 212.

அக்கான் அடைவு=அகரச் சாரியைபெறுதல். சூ. 212. [94. 97.

அக்கு | தல்=குறுகுதல். வி. 26. சூ. 60.

அக்கு=அஃது. சூ. 251.

அஃறிணை = [அன்மையாயதிணை. வி. 38. சூ. 228.] மிருகமுதலிய உயிருள்ளனவும் உயிரில்லனவும் ஆகிய தாழ்ந்தசாதி. சூ. 261. வி. 52.

அஃறிணை இருபாற்று=தாழ்ந்தசாதி ஒன்றன்பாலும், பலவின்பாலும், என இரண்டு பிரிவுடையது. சூ. 263.

அஃறிணை | ப்பன்மை=அகர இற்று அஃறிணைப்பலபெயர். சூ. 280. வி. 28.

அஃறிணை | ப்பெயர் = தாழ்ந்தகுலப்பெயர். சூ. 281. வி. 52.

அகச் | சுட்டு. வி. 5. [33. 96.] சூ. 66.

அகடு=நடு. வி. 79.

அகத்தியம். வி. 1. 5. 6. 27. 56. 62. 96. 124.

அக | த்திலக்கணம் = எழுத்தால் வேறுபொருளை உணர்த்தாது, எழுத்தின்தன்மையை உணர்த்துவது. [அகத்து. வி. 119.]

அகத்து=உள்ளே. வி. 63.

அகப் | படுதல்=இடைத்தல். யாப். 29. [வி. 124.]

அகப் | பொருள். வி. 220.

அகம் = இடம். சூ. 222. ஏழன் உருபு. வி. 63.

அகத்தால்வருபெயர். சூ. 276. வி. 162. மனம். வி. 85. 137.

அகரம் = மெய்யெழுத்தின் சாரியை. சூ. 126. [252.

அகர | முன்னை=அகரஉயிர்ந்றின்முன். சூ.

அகலல்=அகலம் ஆதல். வி. 93. 143. நீங்கல். வி. 61. 81.

அகவல். வி. 178. 191. யாப். 19. 29. 66. &c. மயிலின் நடை. வி. 81.

அகவற் | சீர். வி. 174.

அகவற் | றுறிசை. யாப். 72.

அகவற் | றுறை. யாப். 73.

அகழ் | தல்=தோண்டுதல். வி. 143.

அகற் | றுதல் = நீக்கல். விரிவாக்கல். வி. 82. [அகலல். வி. 103.]

அகன்=அகம். சூ. 290. [வி. 17. சூ. 122.]

அகில் = நல்ல வாசனையுள்ள மரம். வி. 63.

அக்கரம்=எழுத்து. (அக்ஷரம்.) சூ. 290. [வி. 18.]

அங்கம்=உறுப்பு. வி. 86.
அங்கனை=பெண்.சூ. 277. [S. Anganâ.]
அங்கா=வாயைத்திறத்தல். சூ. 87.
அங்கா|த்தல்=வாயைத்திறத்தல்.
அங்கா|ப்பு=வாயைத்திறத்தல். சூ. 76. 77. [வி. 94.]
அங்|ஙனம்=அப்படி, அங்கே. [அ+ஙனம். வி. 25. சூ. 106.]
அசை. வி. 168. [வி. 96.]
அசை|ச்சீர். வி. 173.
அசை|த்தல்=அசையச்செய்தல். யாப். 34.
அசை|நிலை=அசையாக அசைத்தலே பொருளாகநிற்பவை. வி. 116. சூ. 355. 364. 367. 436.
அசை|மொழி=அசைச்சொல். சூ. 93. 373.
அசோகு=ஓர்மரம். சூ. 56.
அச்சம்=பயம், அஞ்சிக்கை, அவைக்கு அஞ்சுதல். சூ. 31. 384.
அச்சம|றடல்=கேட்போர்க்கு அச்சமுண்டாகப பேசுதல். சூ. 31.
அச்ச|ாணி=கடையாணி, தேரின் அச்சுக்குரிய ஆணி. வி. 91. [அச்சு+ஆணி. வி. 119.]
அ|ச்சுதன் = அழிவில்லாதகடவுள். சூ. 258. [வி. 166.]
அஞ்சனம்=கண்ணுக்கிடு மை. சூ. 459.
அஞ்ச|தல் = பயப்படல். வி. 89. 92. 213.
அஞ்|செஞ்|சீறடி=அழகிய சிவந்த சிறிய அடி. சூ. 156. [வி. 121.]
அடக்கம்=விநயம். வி. 85.
அட|ங்கு|தல்=வணங்கல். வி. 95. மனம் வாய் மெய்களை அடக்குதல். சூ. 40.
அடி=கீழ், பாதம். சூ. 80. முதல். சூ. 82. முதல்நின்ற. சூ. 136. யாப். 23. &c. வி. 180. பகுதி. வி. 76.
அடிகள்=குருவே! வி. 84. 85.
அடி|சில்=உணவு, சாதம். சூ. 430.
அடி|நா=முதல்நாக்கு. சூ. 82.
அடி|ப்பாடு=பகுதி. வி. 76. [அடியாகப்படுவது. வி. 96.]
அடி|மறி|மாற்றுப்|பொருள்|கோள். 460.
அடி|மறி|மண்டலம். யாப். 71.
அடி|யணம்=மேல்வாய் அடி. சூ. 82.
அடி|யளந்தான்=விட்டுணு. வி. 95. [வி. 152.]
அடி|யேன் = அடியனேன்= அடியான். அடிமையாகியநான். [வி. 93.]
அடு|க்கு = ஒருசொல் பலதரம் அடுக்கி வருதல். சூ. 436. வி. 200.
அடு|க்கு|ப்புணர்ச்சி. சூ. 415. வி. 126.
அடு|தல்=சமைத்தல், காய்ச்சுதல். வி. 188. கொல்லல். சூ. 421.
அடு|த்தல்=சேருதல். வி. 34. 94. சூ. 270.
அடை=விசேடணம். [வி. 96.]
அடை|சேர்|மொழி = அடை மொழிகள் சேர்ந்து வருஞ்சொல். சூ. 442. 443.
அடை|தல் = சேருதல். சூ. 387. 444. அடையப்படுபொருள். சூ. 296.
அடை|மொழி = ஒருமொழியை விசேடித்துவருவது. வி. 132. சூ. 443. 444.
அடை|வு=அடைதல், பெறுதல். சூ. 212.
அட்டு = பழ இரசம் முதலியவை அட்டபாகு. சூ. 203.
அணங்கு = பெண். யாப். 38. கொலை. சூ. 435.
அணம் = மேல்வாய்க்கட்டை. சூ. 82.
அணி = அலங்காரம். சூ. 268. வி. 194. சூ. 430.
அணி அதிகாரம். வி. 194—213.
அணி|கலம் = ஆபரணம். வி. 70. [வி. 153.]
அணி|தல்=அணியாக உடுத்துக்கொள்ளுதல். வி. 29. 59. சூ. 385. 430.
அணித்து=சமீபம். [வி. 93. அணிமை.]
அணிந்துரை = அலங்கரித்துச் சொல்வது; புனைந்துரை என்றதுபோல், அணிந்துரைப்பது. சூ. 1. 55.
அணி|வகுத்தல்=அணிஅணியாக வகுத்தல். வி. 27.
அணு=ஒலிநுட்பம். சூ. 58.
அணுகா|வழி = சேராதஇடம். சூ. 270. [வி. 91.]
அணுகு|தல் = கிட்டல், சேருதல். சூ. 270.
அணுத்|திரன் = செவிக்கு விடயமாகிய நாதம். சூ. 58. 74. [வி. 152.]
அணை|தல்=சேருதல். வி. 24. 26. 29. 68. சூ. 279. 435.
அண்ட|கூடம்=உலகம். வி. 17.

அண்ணம்=மேல்வாய் அகம். சூ. 74. 83.
அண்ணல்=அரசன். வி. 157.
அண்ணுத்தல் = மேனோக்கல். அங்காத்தல். சூ. 457.
அண்பல் = முன்னம்பல், மேல்வாய்ப்பல். சூ. 77. 80.
அண்மை=சமீபம். சூ. 313. வி. 5. (ந.)
அதர்=ஆட்டின் கழுத்திலிருக்கும் அதர். வி. 68.=வழி. வி. 86.
அதி. வி. 123. (உ.)
அதிகார(உரை) = அதிகாரத்தால் வருவிக்கப்பட்டுத் தன் அதிகாரத்தோடு பொருந்தக்காட்டி எழுதுவது. சூ. 21.
அதி|காரம் = அதிகரித்தல், முறைமை. சூ. 21.
அதிரல்=ஓசைஇடல். சூ. 391.
அது=சுட்டுப்பெயர். வி.71.சூ.180.298. ஆறும்வேற்றுமைஉருபு.வி.62.சூ.292. விகுதி. வி. 77. 93.
அது|வாதல்=முதற்காரணப் பொருள். சூ. 298.
அத்தி=ஓர்மரம். வி. 161.
அத்து=சாரியை இடைச்சொல்.சூ.244. 252. வி. 66. 108.
அத்தை=முன்னிலையசை. சூ. 372.
அநவரதம் = என்றென்றைக்கும். வி. 117. [வி. 166.]
அநாதி எழுத்து=ஒலி எழுத்து.
அநு. வி. 123. (உ.)
அந். வி. 166.
அந்தடி=கடையடி. யாப். 55.
அந்தணன்=பெரியோன். வி.84.95.137. [அம் + தண் + அன். வி. 93.]
அந்தம் = இறு, முடிவு. யாப். 68.
அந்தாதி. வி. 199. யாப். 50. [அந்தம்+ஆதி. வி. 42.]
அந்தில்=இடைச்சொல். சூ. 369.
அந்தோ. வி. 79. 117.
அப. வி. 123. (உ.)
அபி. வி. 123. (உ.)
அமரர் = சுரர், வானோர். (சாவில்லாதவர்.) வி. 152. [166.]
அமர்=யுத்தம். சிற. பா. 17.
அமர்தல்=அமைதல், இருத்தல், இனிப்பபொருந்தல். சூ. 56.
அமிழ்து=அமிழ்தம்=அமிர்தம்=சாவா மருந்து. வி. 113. [166.]
அமுதம்=அமிழ்தம். சூ. 451.
அமைபவன் = பொருந்தி இருப்பவன். சூ. 26. [வி. 95.]
அமைதல். வி. 95.
அமைத்தல்=நிறைத்தல், அரிப்படச்செய்த்தல். சூ. 36. 40.
அமை|த்தோள் = மூங்கில் போன்ற தோள். சூ. 55. [வி. 155.]
அமைவரல்=தன் அறிவினிடத்து நிறைதல். சூ. 41. 44. [ வி. 124. (இ.) ]
அம் = சாரியை இடைச்சொல். சூ. 202. 244.
வினைப்பெயர்விகுதி வி. 96. தன்மைப்பன்மை விகுதி. வி.77. அழகு.வி.61. 81. 93.
அம்போதரங்கம். (கடலலை.) யாப். 80. (அம்பல் + தரங்கம்.)
அம்ம=இடைச்சொல். வி. 117. உரையசை ஏவல். சூ. 370.
அம்மா=அதிசயக்குறிப்பு. வி. 85. 117.
அம்முதல்=அகரமுதல். சூ. 63. 73.
அம்மை=அழகு. யாப். 91.தாய். சூ.420.
அயல் = அருகிடம். வி. 41. 64. எழன் உருபு. வி. 63.
அயற்|றிரிபு = இற்றயல் எழுத்துத் திரிதல். சூ. 303. 307.
அயிலல்=உண்ணல். சூ. 430.
அரக்கி=இராட்சதி. வி. 84.
அரசு=அரசன். வி. 108. [17.]
அரமகளிர்=தேவமகளிர். சூ. 389.
அரம். வி. 76.
அர|வம் = ஓசை. சூ. 391. பாம்பு (சர்ப்பம்.)
அர|ற்று|தல்=ஒலித்தல். வி. 81.
அரி = கண்வரி. யாப். 38. (செவ்வரி கருவரி.)
அரிது, அரிய = அருமையானது, அருமையானவை. வி. 82.
அரிதின்=அரிதாக. சூ. 34.
அரிதுணர்பொருள்=அரிதாகக் கற்றோர் அறிகின்றபொருள். சூ. 272. [வி. 93. 153.]
அரி|ப்பரித்தல் = கொழித்தல். வி. 86.
அரி|மா|நோக்கம்=முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தின்பார்வை. சூ. 19.
அரி|வை=பெண். சூ. 277.
அரு=அரிய. வி. 93. [அருமை. சூ. 6. 135. வி. 121.]
அருகு=சமீபம். வி. 41. 93.

அருகுதல் = அருகிவருதல். யாப். 15.
அருங்கலை = அருமையான சாத்திரம். சிற. பா. 17. [வி. 121.]
அருத்தாபத்தி=அருத்தத்தின் வரிசை.
அருமந்தபிள்ளை = அருமருந்தன்ன பிள்ளை. சூ. 267.
அரும்=அருமையான. [வி.121.] சூ.453.
அரும்பு = அரும்பர், முகை, மொட்டு. வி. 17.
அரும்புதல்=மலர்தல். வி. 84.
அருவா, அருவாவடதலைநாடு. (அதன் வடக்கு) =கொடுந்தமிழ்நாடுகள். சூ. 273.
அருவி=மலையின் வீ[illegible]ருவி. வி. 61. 64.
அருள்=கிருபை. வி. 70. 82. 93. சூ. 26. 384. (அரிய உள்ளம்.) [ருள்.
அரூபப்பொருள் = வடிவில்லாப்பொருளா உயிர். வி. 23.
அரோ=அசைநிலை. வி. 79. 116. சூ. 373.
அர்=பல்லோர் படர்க்கை விகுதி. சூ. 140. 327. வி. 77. [யாப். 3.4.
அலகு=செய்யுள் அலகு, எண் அளவு.
அலங்கல்=மாலை. வி. 94.
அலங்|காரம். வி. 162.
அலர்=மலர். சிற. பா. 5.
அலர்தல் = மலர்தல், பூத்தல். வி. 34.
அலவன்=நண்டு. யாப். 39.
அலறுதல்=புலம்பல். வி. 79.
அலி எழுத்து = ஆய்தம் ஆகிய எழுத்து.
அலை|த்தல்=அலையச்செய்தல். யாப். 39.
அல்=மெய்யெழுத்து. வி. 7. இரவு. வி. 70. வினைப்பகுதி. வி. 125. தொழிற்பெயர் விகுதி. வி. 94. சாரியை. 108. சூ. 244 ஒருமைத் தன்மை விகுதி. சூ. 331. வியங்கோள் விகுதி. சூ. 338.
அல்ல, அல்|லவை = தீயவை, (அறனல்லாதவை.) வி. 79. 81. 95.
அல்|லல்=துன்பம். வி. 31. 79.
அல்|லால்=அல்லாமல். வி. 41. 125.
அ|ல்வழி=[அல்லாதவழி.] வேற்றுமை அல்லாதவழி. [வி. 125. 153.] [176.
அல்வழிச் சந்தி. வி. 22. சூ. 152. 171.
அல்|வழி|ப்புணர்|ச்சி. சூ. 152.
அவ. வி. 123. (உ.)
அவயவம் = அங்கம், உறுப்பு. சூ. 276.
அவ|ற்றுள் = முன்சொல்லிய பலவற்றில். [வி. 63. 71.]

அவனி=பூமி. வி. 86. சூ. 424.
அவா=ஆசை. பொருளின் மேல் அதிகமாக வைக்கும் ஆசை. சூ. 31. வி. 27.
அவா|நிலை=சில சொற்களை வேண்டிநிற்குநிலை. (அவாவியநிலை. வி. 153.)
அவா|வுதல் = ஆசித்தல். வி. 87. 93.
அவி|தல்=அழிதல். வி. 137.
அவிழ்|தல்=கட்டவிழ்தல். வி. 26. மலர்தல். வி. 93.
அவை = சபை. வி. 26. 213. சூ. 53. அஃறிணைப்பன்மை. சூ. 250. வி. 71. 213.
அவை|யம்=அவை. வி. 86. சூ. 276. [வி. 108.]
அவ்வது=அவ்வகை. வி. 25.
அவ்வியயம் = வடமொழி இடைச்சொல. வி. 123. (உ.)
அழல் = தீ. குளிர் காய்வோன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப்போல. சூ. 46.
அழி|த்தல்=அழிக்கப்படு பொருள். சூ. 296.
அழீ|இ=அழித்து. வி. 79.
அழு|கல்=அழுகியது. சூ. 229.
அழுக்காறு = பொறாமை. சூ. 31. 384. [வி. 89. (ஊ.)] பிறருக்கு வருங் கல்வியைக் குறித்துக் கொள்ளும் பொறாமை.
அழு|க்கு=ஓசை. சூ. 391.
அழு|ங்க|ல்=ஒலித்தல். சூ. 391.
அழை|த்தல்=விளித்தல். சூ. 303.
அளத்தல், அளக்கல்=அளவுசெய்தல். வி. 73. சூ. 28. [307. 308. 310.
அளபு=மாத்திரை, அளபெடுத்தல். சூ.
அள|பெழு|ல்=ஓசை நிரம்பத் தத்தம் மாத்திரையின் மேற்பட்டொலித்தல். சூ. 91.
அளவடி. வி. 180. (அளவு+அடி.)
அளவில்=அளவுக்குத்தக்கபடி. சூ. 27.
அளவு = (அளபு,) மாத்திரை. வி. 25. சூ. 72. 89. 101. பெருமைசிறுமைமுதலிய பிரமாணங்களால் வருபெயர். சூ. 276.
அளவை=எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல், ஆகிய அளத்தல். சூ. 290.
அளபெடை. வி. 14. சூ. 91, 92. வி. 79. [அளபு+எடை. வி. 94. 96.]

அனறு=நரகம், நிரயம். சூ. 457.
அனாவுதல்=கலத்தல். வி. 113.
அனி = எளிமை. வி. 72. தயவு. வி. 84.
அனித்தல்=கொடுத்தல். வி. 37. 84. சூ. 35.
அனிய=எளிய. யாப். 39. [வி. 93. 121.]
அனை=ஏழன் உருபு. வி. 63. வனை. யாப். 39.
அனை|மறி|பாய்ப்பு. சூ. 458. [வனையில் மறியும் பாம்பினுடைய. வி. 26.]
அள்=பெண்பாற்படர்க்கை விகுதி. சூ. 140. 326. வி. 77.
அள்|ளல்=குழை சேறு. வி. 81.
அற=இல்லாமல், நீங்க. வி. 82. [வி. 140.] யாப். 25.
அறத்திற்|றிரியா|ப்படர்|ச்சி = தருமத்தி னின்றும் வேறுபடாத நடை. சூ. 46.
அறம், அறன் = தருமம். வி. 39. 59. 60. 216. சூ. 443.
 |ஞன். வி. 95.
 |யாமை. சூ. 426. [வி. 94.]
அறி|பொருள்=அளவறியப்படுகிறபொருள். சூ. 440.
 |வு. வி. 25. சூ. 384. 426. [வி. 94.]
அறி|வாளன்=(அறிவு + ஆள் + அன்.) அறிவை யுடையோன். சூ. 434.
அறு=நீங்கின. வி. 25. = ஆறு. வி. 159.
அறு|சுவை. சூ. 386. வி. 27,
அறு|தல்=நீங்கல், ஒழிதல். வி. 26. 79. 82.
அறு|த்தல்=நீக்கல். வி. 72.
அறை|தல்=சொல்லுதல். வி. 81. 85. சூ. 450.
அற்|கு|தல் = நிலைபெறுதல். வி. 93.
அற்பு. வி. 26.
அற்புதம்=அதிசயம். சிற. பா. 5.
அற்று = அதுபோல. வி. 41. 70. 108. 109. 137. சூ. 95.
 அத்தன்மைத்து. சூ. 164. 231. 236. [82.
 ஓர் சாரியை. சூ. 244. 245. 250. நீங்கி. வி.
அற்றற் றொழுகுதல் = அறுபட்டு அறுபட்டு நடக்குதல். சூ. 453. [அறு. வி. 86.]
அற்றார் = இல்லாதவர். வி. 82. [அறு.]
அன=அன்ன. வி. 109.
அனுன். வி. 93.
அனை=அளவு. வி. 93. 96.
அனை|த்து=அத்தன்மைத்து, அவ்வளவு. வி. 93. சூ. 156.
 எல்லாம். சூ. 209.
அனைய=போல. வி. 59. 70. 93. 109.

அன்=சாரியை இடைச்சொல். சூ. 251. வி. 65. 108.
 ஆண்|பாற்|படர்க்கை விகுதி. சூ. 140. 325. வி. 77.
 ஒருமைத் தன்மை விகுதி. சூ. 331.
அன்பு=ஆர்வம். சூ. 384. வி. 60. 212. யாப். 63. [சூ. 417.
அன்|மை = அல்லாத தன்மை. வி. 95. [அல் + மை. வி. 94.]
அன்|மொழி = அல்லாதவார்த்தை தொக்கு நிற்பது. சூ. 152. 410. வி. 157.
அன்|றி=அல்லாமல், வினை எச்சக்குறிப்பு. சூ. 173. வி. 93. 125.
அன்றில்=ஓர் பட்சி. வி. 63.
அன்று—அல்ல என்னும் வினைக்குறிப்பு. வி. 125. சூ. 180. அன்றைக்கு. வி. 81.
அன்றோ=அல்லவோ. வி. 93. [வி. 93. 112. 125.] [408.
அன்ன = ஒப்பன. வி. 63. 109. சூ. 19.
அன்னம்=அன்னப்பட்சி. வி. 23. சூ. 38. 451.
 [அது பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் உண்ணும் என்று பாவித்துச் சொல்வார்கள்.]
அன்னுன். வி. 93.

ஆ. பசு. வி. 61. 65. சூ. 171. 248.
 [பசுவானது மேய்தலும் மெல்லுதலுமே முக்கியமான தொழிலாகக் கொண்டதுபோல இடையிடையிற் பாடம் கேட்டதைச் சிந்தித்தலுமே முக்கியமான தொழிலாய்க் கொள்ளுதலால் தலையான மாணக்கருக்கு உவமை.]
 வினை எச்ச விகுதி. வி. 86. (செய்யா.)
 எதிர்மறை வினைமுற்றுவிகுதி. வி. 89.
 வடமொழிச் சந்தியில் அ + அ = ஆ. வி. 42. ஆகாரம் அகரம் ஆகும். வி. 41.
 விளி வேற்றுமையின் இறுதி. வி. 64.
 வடமொழி அவ்வியயம். வி. 123.
 (உ.) வினைப்பகுதி. வி. 82, (ஆகு.)
 அகரச் சுட்டின் நீட்டல். சூ. 163.
ஆக. வி. 60. 120. 140.
ஆகார இறுகள். சூ. 171. 172.
ஆகாரவீற்று வினைமுற்றுமுதலிய. சூ. 171.
ஆகிய=ஆன. பண்புருபு. சூ. 406. வி. 87. 119. (ஆ. ஆகு.)
ஆகிலும். வி. 142.
ஆகுபெயர் = ஆகுபெயர்ச்சொல். சூ. 269. 290. வி. 162.
ஆகுலம்=ஆரவாரம்; ஓலி. வி. 93. 213.

ஆக்கம் = ஆக்கப்பாடு. சூ. 275. 300. 347. 357. 364. 446. பொருள். வி. 79. 86. 96. 112.
தமிழ்மொழி ஆக்கம். சூ. 128.
வடமொழி ஆக்கம். சூ. 146.
ஆக்கப்பாடு = விகுதிகள் சேர மொழி உண்டாகக்கப்படுந் தன்மை. சூ. 275.
ஆக்கம் பெறுதல் = ஆக்கச்சொல்லைப் பெறுதல். சூ. 446.
ஆக்கல்=ஆக்கப்படு( பாருள். சூ. 296. எடுத்துக் கூட்டல். சூ. 460.
ஆக்கியோன்=கர்த்தா, நூல்செய்தவன். சூ. 47.
ஆங்கு = அசைநிலை, இடப்பொருள் ஆகிய இடைச்சொல். சூ. 369.
போல. வி. 109.
அவ்விடம். வி. 93. [44
ஆசான் = ஆசிரியன். குரு. சூ. 37. 41.
ஆசிரியத்தளை. வி. 178. யாப். 19.
ஆசிரியப்பா. வி. 191. யாப். 66—74.
]யவசனம்=ஆசிரியவசனங்களை எடுத்தெழுதுவது. சூ. 21.
]யன்=குரு. சூ. 276. [384.
]சை. (ச. ஆசா)=ஆவல், இச்சை. சூ.
ஆடமை=ஆடும்மூங்கில். சூ. 55. யாப். 38. [வி. 153.]
ஆடரங்கு=ஆடும்படியான அரங்கம். வி. 120. [153.]
ஆடல்=கூத்தாடல். வி. 79. 120. வாவுதல். வி. 86. தமக்கு உரிமையாக ஆளுதல். சூ. 31.
ஆடி=கண்ணாடி. சூ. 18.
ஆடு. சூ. 38.
[ஒரு செடியிலே தானே தன் வயிறு நிரம்பும் படி தழைகள் இருப்பினும், அதைச் சிறிது கடித்த மாத்திரமே விட்டுக், காடெல்லாஞ் சென்று சென்று மேய்தலால், கடைமாணாக்கருக்கு உவமை.]
ஆடூஉ=ஆண்மகன்பெயர். சூ. 276. [ஆடுவோன. வி. 96.] [33.
ஆட்சி. [ஆள் + சி. வி. 96.] உரிமை. வி.
ஆண்டு=அவ்விடம். சூ. 196. 443.
வருடம். சூ. 276.
ஆண்டை=அவ்விடம். சூ. 23.
ஆண் | பால். வி. 53. சூ. 276.
ஆண் | பெயர்=உயர்திணை ஆண்பாற் பெயர். சூ. 276.
ஆண் | மை=ஆண்டன்மை. சூ. 264. 283. தைரியம். வி. 92. [வி. 94.]

ஆதி = முதல். சூ. 79. 136. முதலானவர். வி. 158. சூ. 72. கடவுள். வி. 27. 70. [162.] = ஆகு. வி. 84.
ஆதியெழுத்து=வடிவெழுத்து.
ஆது=ஆறன் உருபு. வி. 62. எதிர்மறை வினை எச்சவிகுதி. வி. 90.
ஆத்திரையன் = பேராசிரியன், தொல்காப்பியன்.
ஆநின்று=நிகழ்கால இடைநிலை. வி. 80. சூ. 143.
ஆபரணம்=நகை. வி. 59.
ஆமை=கூர்மம். வி. 23. சூ. 419.
எதிர்மறைவிகுதி. வி. 90. 91.
ஆம்பல்=அல்லி, செவ்வாம்பல். சூ. 290.
ஆம். வி. 87. 124. [30.
ஆ | யிடை. சூ. 163.
ஆயிழாய். வி. 64. [ஆய்+இழை. வி. 153. 157.]
ஆயிழையாள்=தெரிந்தெடுத்த ஆபரணங்களை யுடையவள். (ஆய்ந்த+இழை+ ஆள. வி. 153. 157.)
ஆயினும். வி. 142.
ஆய்தம்=தனிநிலை எழுத்து. சூ. 235. வி. 12. சூ. 87. [90. 251.
முப்புள்ளிஆகிய ஆய்தவெழுத்து. சூ.
(அதின வடிவு குளம்புதத்தின் வடிவு எனக் காண்க)
உயராய்தம் = குறுகாத ஆய்தம். சூ. 60. 61. 97.
ஆய்தக் குறுக்கம் = தன்மாத்திரையிற் குறைந்தது. வி. 12. (G.) சூ. 97.
ஆய்தல்=ஆராய்தல். தெரிந்தெடுத்தல். யாப். 35. 87. வி. 121. சூ. 237.
ஆரியம்=வடமொழி.
ஆர் = அருமையான. வி. 121. வினைப்பகுதி (ஆர்தல்.) பலர்பால் விகுதி. வி. 41. 77. சூ. 327.
ஆர் | கலி=கடல். யாப். 61. [நிறைந்த ஓசை (உடையது.) வி. 153 156.]
ஆர் | க்கோடு = ஆர்ங்கோடு =ஆத்திமரத்தின்கொம்பு. (ஆர் + ங் + கோடு.) சூ. 116. 224.
ஆர் | தல்=நிறைதல். வி. 152.
ஆர் | த்தல் = சத்தித்தல், ஒலித்தல். வி. 27. 79. சூ. 391. கட்டல். சூ. 272.
ஆர்வ | த்தன்=விருப்பமுடையவன். சூ. 40. [ஆர்வம். வி. 93.]
ஆர்வம்=ஆசை. அன்பு. வி. 95. 212.

ஆலயம்=தேவர் ஆலயம். வி. 33.
ஆல் = மூன்றும் வேற்றுமை உருபு. சூ. 292. 297. வி. 59. 86. (உ.)
ஓர்மரம். வி. 161. அசைநிலை. வி. 116. 124. சூ. 450.
ஆவது. வி. 142. [95.]
ஆவி=உயிரெழுத்து. வி. 2. சூ. 63. 75. 101. 159. உயிர். வி. 124.
ஆழமுடைத்தாதல்=ஆழமானகருத்தை உடையதாதல். சூ. 13.
ஆழி = சமுத்திரம். வி. 155. 205. [வி. 96. (o.)]
ஆழ்தல் = அமிழ்தல். வி. 25. ஆழமாதல். வி. 79.
ஆளுதல்=ஆண்டுகொள்ளல், அப்பியாசித்தல். வி. 70.
ஆள்=ஆண்மகன். [வி. 77.
பெண்பாற்படர்க்கைவிகுதி. சூ. 326.
ஆளன் = உடையவன். வி. 63. சூ. 45.
ஆறனுருபு=ஆறுவேற்றுமை உருபுகள். சூ. 293.
ஆறுவது வேற்றுமயின் உருபு. சூ. 300. வி. 65. 159.
ஆறும்வேற்றுமை. வி. 62. 65. சூ. 300.
ஆறு=வழி. 124. விதம். நதி. வி. 26. 70. 84. 87. ஓர் எண். வி. 159. [415.
ஆறுருபு=ஐமுதலிய ஆறுருபு. சூ. 404.
ஆற்ற=மிகவும். வி. 113.
ஆற்றங்கரை. வி. 108.
ஆற்றல் = வலிமை. சூ. 53. செய்தல். வி. 31. 86. 90. 143.
ஆற்று | ப்புனல்=ஆற்றுநீர். சூ. 453.
ஆற்றொழுக்கு = நடுவில் விடாது, செல்லுகின்றஆற்றினது நீரோட்டம். சூ. 19.
ஆனும். வி. 142.
ஆன்=பசு. வி. 30. சூ. 248.
மூன்றன் உருபு. சூ. 297. வி. 59.
ஆண்பாற் படர்க்கை விகுதி. சூ. 325. வி. 77.
ஓர்சாரியை. வி. 108. சூ. 244.
எண் பெயர்களோடு வருஞ் சாரியை. சூ. 249.
ஆன்ற = மாட்சிமையான. வி. 79. [அகன்ற.]

இக = முன்னிலை அசை இடைச்சொல். சூ. 372.

## இ.

இகத்தல்=போகுதல். சூ. 41. கடத்தல் வி. 89. சிற. பா. 4.
இகரக்கு = இகர எழுத்துக்கு. சூ. 277. [வி. 66.] [வி. 24.
இகரக்குறுக்கம்=குற்றியல்இகரம். சூ. 93.
இகரநீட்சி=இகரம் இகாரமாதல். சூ. 305.
இகல். வி. 109.
இகல்=பகை. சூ. 384.
இகழ் | தல்=நிந்தித்தல். வி. 189.
இகுளை=தோழி. சூ. 277.
இசின் = இறந்தகாலத்து இடைநிலை. யாப். 9. 51.
[இ சாரியையுஞ் சின் இடைச்சொல்லும் எனக்கொள்க. சூ. 373.]
இசை | நிறை=ஓசையை நிறைத்து நிற்பவை. வி. 115. சூ. 352. 354. 368.
இசை=பாட்டின் ஓசை. சூ. 91. இராகம். சூ. 101. சேர்வு. சூ. 432.
சொல். சூ. 401.
இசை எச்சம்=பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொல்லுள் ஒன்றும் பலவுந் தனித்துந் தொடர்ந்தும் வரவேண்டுவது. வி. 62. சூ. 401.
இசை | த்தல்=ஒலித்தல். சூ. 125. கூறுதல். வி. 89. சூ. 387. சேர்த்தல். சூ. 459.
இடக்கர் அடக்கல் = சொல்லத்தகாததை மறைத்துச்சொல்வது. சூ. 267.
இடத்தில். வி. 63.
இடத்து, இட | த்தே=இடத்தில். வி. 63.
இட | த்தொகை. சூ. 412.
இடப்பொருளுருபு = தம்மை ஏற்ற பெயர்ப்பொருளை இடப்பொருளுக்காகச் செய்கின்ற ஏழாம் வேற்றுமையின் உருபு. சூ. 302. வி. 63.
இட | ப்பொருள் = வினைமுதலின் தொழிற்காயினுஞ் செயப்படு பொருட்காயினும் இடமாகிய பொருளாம்.
இடம்=சொல் நிற்கின்ற மூன்று தானம். சூ. 266. 416. வி. 54. இடத்தால்வரு பெயர். சூ. 132. ஏழன் உருபு. வி. 63.
இருதலைக்கும் ஒத்திருக்கும்படியான இடம். சூ. 36.
எழுத்து பிறக்கும் இடம். 75—87.
இட | வழு சூ. 416.
இட | வாகு | பெயர். வி. 162. சூ. 290.
இடி=அசனி. யாப். 34.
இடு | குறி = இடப்பட்ட அடையாளம். சூ. 275. வி. 49. (குடி.)

இடுகுறிப்பெயர். சூ. 62
இடுகுறிப் பொதுப்பெயர் = பலபொருளுக்குப் பொதுவாய் வரும்பெயர். சூ. 62.
இடுகுறிச்சிறப்புப்பெயர்=ஒருபொருளுக்குச்சிறப்பாய்வரும்பெயர். சூ. 62.
இடுக்கண்=துன்பம். வி. 34.
இடுக்கு=நெருக்கம், துன்பம். சூ. 460.
இடுதல்=இதல், விடுதல். வி. 82. 124.
இடும்பை =பொல்லாங்கு. வி. 89. யாப். 40. [சூ. 57. 91. 253.
இடை = இடைச்சொல். சூ. 239. நடு. இடம் வி. 23. 61. 63. சூ. 53. 302.
இடை (நிலை)=எழுத்துகள் சொல்லின் நடுவில் நிற்கும் இலக்கணம் சூ. 57. 110—121.
இடை | எழுத்து. வி. 10. சூ. 94.
இடை | கள் = நடுத்தரமானவர். வி. 86.
இடை | க்கணம் = இடை எழுத்துகள். வி. 10.
இடை | க்குறை. வி. 41.
இடை | ச்சொல் = பெயர் வினைகளுக்கு அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் ஒன்றுபடுந் தன்மையது. வி. 107. சூ. 352—373. 239.
[முன்னும் பின்னும் வரும், ஆயினும் பெரும்பாலும் இடையிலே வருதலால் இடைச்சொல்.]
இடை | த்தொடர்=இடைச் சொற்கள் கூடிநிற்பது. சூ. 152. 182. 415.
இடை | நிலை=முதனிலைப் பகுதிக்கும் இறுதிநிலை விகுதிக்கும் இடை நிற்பதால் இடைநிலை.
பெயர் இடைநிலை=பகுபதப் பெயர்ச்சொற்களின் இடையில்நிற்பது. சூ. 141. வி. 95. [வி. 123.
வினை இடைநிலை. சூ. 133. 142—144.
இடை | மை = இடை எழுத்துகள். சூ. 75. வி. 10.
இடை | யறுது = இடைவிடாமல். சூ. 424. வி. 164.
இடை | யினம் = வல்லெழுத்திற்கும் மெல்லெழுத்திற்கும் பொதுவாய் உச்சரிக்கப்படுகிற எழுத்துகள். சூ. 70. வி. 10.
இடை | யூறு=உபத்திரவம். வி. 72. தடை. (இடையில் உறுவது.) வி. 96.
இடை | ப்பிற | வரல்=நடுவிலேபெயர் வினைகளுக்குரிய பிறசொற்கள் வருதல். சூ. 397. வி. 132.
இடைப்பொருள் எட்டு. சூ. 353.
இடை | மாணாக்கர்=நடுமாணாக்கர். சூ. 38.
இடையன்=இடைச்சாதியான், ஐவகைநிலத்தில் நடுவாகிய முல்லை நிலத்தில் இருப்பவன். சூ. 276. (திணைகாண்க.)
இட்டு=தந்து. வி. 86. விட்டு. 72.
இணை=இரண்டு. யாப். 40.
இணை | க்குறள். யாப். 69.
இணைந்தியலல் = இரண்டெழுத் தோரெழுத்தாய்க்கூடி நடத்தல் சூ. 149.
இதழ்=உதடு சூ. 74. 78.
இதற்கிதுமுடிபு = இவ்விலக்கியத்திற்கு இவ்விலக்கணந்தான் முடிபு. சூ. 257.
இதன்பெற்றி = இதன் இலக்கணம். சூ. 461.
இத்தை = முன்னிலை அசை இடைச் சொல். சூ. 372.
இப்பி=சிப்பி. வி. 23.
இமிழ் | தல்=ஒலித்தல். சூ. 391.
இமை = நிமைக்கொட்டுதல். சூ. 100. வி. 16.
இயங்கியற்பொருள்=திரிகிறதாகிய சரப் பொருள்.
இயங்கு | தல்=நடத்தல். சூ. 450.
இயம்பு | தல்=சொல்லுதல். சூ. 36. 51. 56. வி. 95.
இயலுதல்=வருதல். சூ. 121. 128. 131. நடக்கல். சூ. 360. 392. 446. யாப். 90.
இயல் = ஒரு சாதிப்பொருள் கொண்டது, அங்கம், ஒத்து, உறுப்பு, தன்மை. வி. 84.
இயல்பின்விகாரம் = விதித்தஇயல்பிலே விகாரமாதல் சூ. 255.
இயல் | பு=சுபாவம். வி. 32. சூ. 31. 100. 136. 151.
இயல்புப்புணர்ச்சி சூ. 153. 204.
வரலாறு சூ. 4. 36. 160. 165. 172. 173. 176. 178. 179. 201.
இயல்பு | ச்சந்தி = விகாரமின்றிப் புணரும் புணர்ச்சி. சூ. 153. 204. வி. 19.
இயற் | கை=தன்மை,சுபாவம். வி. 59. 93. சூ. 253. [வி. 98.]
இயற் | கை=அளபெடை=விகாரத்தால் வராத அளபெடை. சூ. 91.

இயற் | கைப் | பொருள் = தோன்றுதொட்டு இயல்பாய் வழங்கிவருகின்றபொருள். சூ. 445.

இயற் | சீர். வி. 174.

இயற் | சொல் = யாவருக்கும் வழக்கமாய்த் தெரியுஞ்சொல். சூ. 270. வி. 43.

இயற் | பெயர் = சிறப்பில்லாதஇயல்பானபெயர்.

இயற் | றமிழ் = சுத்ததமிழ்.

இயற்று | தல் = செய்தல். சூ. 450. வி. 164. யாப். 92.

இயற்றுதற் | கருத்தா, குலாலன்குடத்தை வனைந்தான் எ-ல் குலாலன் எ-து இயற்றுதற்கருத்தா.

இயற்றும் | வினை | முதல் = செய்யுங்கர்த்தா, கருவியைத் தொழிற்படுத்துவது.

இயை | தல் = பொருந்தல் சூ. 274. (இசை.)

இயை | பு = புணர்ச்சி. சூ. 97. (இசைவு.) யாப். 38.

இயைய. வி. 109.

இயைய | ப்புணர்த்தல் = பொருந்தும்படி புணர்க்கை. சூ. 239.

இயைவன = வழங்குவன. சூ. 274.

இர | க்கம் = உருக்கம் சூ. 384.

இர | க்கு = ஓசை. சூ. 391.

இர | ங்கல் = ஒலித்தல். சூ. 391.

இர | ட்டுறமொழிதல் = ஒருவாக்கியத்தில் இரண்டுபொருள் படச்சொல்லுதல். சூ. 14.

இர | ட்டைக்கிளவி = இரட்டைச் சொல். சூ. 437. ஒலிக்குறிப்பில்வரும் இரட்டைமொழி.

(உ-ம்.) மொடுமொடுத்தது, சுறுசுறுத்தது.

இர | ட்டல் = ஒலித்தல். சூ. 391. இரட்டையாதல், இரட்டித்துநிற்றல். சூ. 136.

இர | ட்டு = இருமடங்கு. இரட்டுறுது = இருநூறு. சூ. 61. [சூ. 448.

இர | த்தல் = யாசகஞ்செய்தல். வி. 124.

இர | ப்புரை = இரத்தற்கு வருகிற சொற்கள். சூ. 448.

இர | வு = இராத்திரி. சூ. 450.

இரி | தல் = ஓடுதல். சிற. பா. 6.

இரீஇ. வி. 70. [இருத்தல். 86.]

இரு = பெரிய. வி. 157. = இரண்டு. வி. 159. சூ. 189.

ஓர்வினைப்பகுதி. வி. 24. (உ, ஈ.) 89. 92.

இருகால் = இரண்டுதரம். சூ. 42. [வி. 159.]

இருக்கு. வி. 84.

இருதிணை = உயர்திணை, அஃறிணை. சூ. 330. 337.

இருந்து. வி. 61.

இருது = பருவம். சூ. 276. [S. Ritu.] பருவத்தால் வருபெயர். சூ. 276.

இருத்தல் = இருப்புச்செய்தல். வி. 70. [வி. 103.]

உட்காருதல். சூ. 40.

இரு | பால் = இரண்டுவகை. சூ. 128.

இரு | பாற்று = இருபாலையுடையது. சூ. 289. [வி. 93.] [சூ. 57. காண்க.]

இரு | பான் = இருபது. சூ. 137. 249. இரண்டு பகுதி. சூ. 110.

இரு | பெயரொட்டுப் பண்புத் தொகை = இரண்டுபெயர்கள் கூடும் இடத்து ஆகிய என்னும் பண்புருபு தொக்கு நிற்பவை. சூ. 406.

இரு | பெயர் = பொதுப்பெயர், சிறப்புப் பெயர். சூ. 406. [55.

இரு | மை = இம்மை மறுமைகள். யாப். இருதன்மை. [வி. 94. 159.]

இரு | மைக் | குறில் = உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில். சூ. 126. [வி. 154.]

இருவர் | நூல் = கடவுள், பின்னவன் என்னும் இருவராற் செய்யப்பட்ட முதனூல் வழிநூல். சூ. 8. [வி. 152.]

இருவர் | மாறு | கோள் | ஒரு | தலை | துணிவு = இருவராலே மாறுபட்ட இரண்டனுள் ஒன்றைநீக்கி ஒன்றைத் துணிந்து எடுத்துக்கொள்ளுதல். சூ. 11.

இரு | வழக்கு = உலகவழக்கஞ் செய்யுள் வழக்கம். சூ. 442.

இரு | வழி = வேற்றுமைவழி, அல்வழி. சூ. 214. 227. [சூ. 152.]

இருளல் = அந்தகாரமாதல். வி. 82. [இருள் வி. 76.]

இருள் = அந்தகாரம், இருட்டு. வி. 39. 93. (இரவில் உள்ளது.)

இரை = ஆகாரம். யாப். 39. ஓசை. சூ. 391.

இரை | த்தல் = சத்தித்தல்; ஒலித்தல். சூ. 391.

இர் = பன்மை விகுதி. வி. 69.

முன்னிலை விகுதி. வி. 77. சூ. 140. 337.

இல | கல் = விளங்கல். சிற. பா. 2.

இலக்கணம்=இலக்கியத்தின் அமைதி. சூ. 141. 267. வி. 1. (A) முகவுரை. (ச.) தேவலட்சணம். (காப்பு.)
இலக்கணப்|போலி=இலக்கண முடையதுபோல்வருவது. சூ. 267.
நியம ஆ. அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட புராணகாவியங்கள். சூ. 141. முகவுரை. (ச.)
இல|ங்கு|தல்=பிரகாசஞ்செய்தல். முக. வி. 37. 59.
இலம், இலன். வி. 93. 125.
இலி|கார்=இல்லாதவரே. வி. 86. [வி. 64. 96. 125.] [401.
இல்=ஓர் வினைப்பகுதி. வி. 125. சூ. 233. வேற்றுமையுருபு. வி. 61. 63. சூ. 299. வினை எச்சவிகுதி. வி. 86. சூ. 343. வீடு. சூ. 420.
இல்|பொருள் உவமை. வி. 204.
இல்|லம்=வீடு. (இல்.) வி. 26. [வி. 96.]
இல்|லறம்=வீட்டிற்குரிய கடமைகள். வி. 216.
இல்லி|க்குடம்=ஓட்டைப்பானை. சூ. 38. நீர் வார்க்குந்தோறுங் கீழ்இழிந்து நிரம்பாத்து. [இல்லி=சில்லி.]
இவறு|தல்=உலோபமுடைமையாதல். வி. 35.
இவண்=இவ்விடம். வி. 89.
இவ்|விரண்டு = இரண்டிரண்டு. சூ. 71.
இழ|த்தல் = வீணுகப்போக்கடித்தல். வி. 79.
இழி|இரு|பால் = அஃறிணையில்வரும் இரண்டுபால். சூ. 350. [வி. 153.]
இழி|குணம் = தாழ்ந்தகுணம். சூ. 31.
இழி|தல் = விழுதல். வி. 61. தாழ்தல்.
இழி|திணை = அஃறிணை. சூ. 245.
இழி|ந்தோன் = தாழ்ந்தோன். சூ. 448. [வி. 95.]
இழி|பு=தாழ்வு. யாப். 31. [வி. 94.]
இழி|ப்பு = பழிப்பு. சூ. 420. [வி. 94.]
இழு|க்கம்=இழிவு. வி. 86.
இழு|க்கல்=வழுவுதல். சூ. 420. யாப். 1. வழுக்குநிலம். வி. 41. [சூ. 426.
இழு|க்கார் = வழுவாது கூறுவார்கள்.
இழு|க்கு = வழு, தப்பு. வி. 143.
இழை=பஞ்சின்நூல். சூ. 24. ஆபரணம். வி. 121.
இழை|த்தல்=நியமித்தல். வி. 89. ஒழுகல். யாப். 68.

இள = இளைய = இளம்= இளமையான. வி. 121
இளங்|கண்|ணன் = இளையகண்ணையுடையவன். சூ. 433. [வி. 93. 121.]
இள|மை = இளைமை = இளைமைப்பருவம். வி. 23. 191. சூ. 384.
இளைத்தல்=ஆயாசப்படுதல். வி. 79.
இற|த்தல்=கடத்தல். வி. 17. சூ. 101. மரித்தல்.
இற|ந்த|காலம்=போனகாலம். சூ. 142.
இற|ந்து விலக்கல்=முன்புள்ளதாய்ப் பின்பு வழங்காதாயின் அதனைவிலக்குதல். சூ. 14. [வி. 94.]
இற|ப்பு = போனகாலம். சூ. 145. 423.
இற|ல்=சாவு. வி. 164.
இற்று|ப்போதல்=அழிதல். வி. 191.
இறு|தல்=முடிதல். யாப். 87. சூ. 256.
இறு|தி=கடைசி. வி. 17. சூ. 94. 122. கடைநிலை. சூ. 256.
இறு|தி|அழிவு = இறுகெடுதல். சூ. 311.
இறு|தி|நிலை=இறுதிலே நிற்பது. [வி. 96.] (செய்யும் எனபதில் இறுதிநிலை காலங் காட்டும)
இறுதி|ப்போலி=கடைப்போலி. சூ. 122.
இறு|த்தல்=செலுத்தல், ஒடித்தல், சேரல். யாப். 33.
இறை = கடவுள். வி. 95. விடை. சூ. 427. [சூ. 453.
இறைஞ்சுதல் = தொழுதல். (காப்பு.)
இறை|த்தல்=சிதறல். யாப். 36.
இறை|வழு. சூ. 416. விடைவழு.
இறை|வன் = கடவுள். வி. 63. அரசன். புருடன். யாப். 39. [இறை + அன். வி. 93.]
இற்|று = ஓர்சாரியை. சூ. 244. இத்தன்மைத்து. சூ. 445. 461.
இற்றை. வி. 26.
இன = இவைபோல்வன பிற. [இன்ன. வி. 41.] சூ. 343.
இன|க்குறில் =நெட்டெழுத்திற்கினமாகிய குற்றெழுத்து. சூ. 91.
இன|மணி=[ஒரு] சாதிமணி. சூ. 16.
இன|மிகல் = வருமெழுத்திற்கு இனமான எழுத்து மிகுதல். சூ. 136.
இன|மொழி. சூ. 427. (ஓர் இறை: இதைச்செய்யேன், எ-கு. வேறொன்றைச் செய்வேன்.)

இனம்=சேர்க்கை, கூட்டம். சூ.71.72. வி. 11. (ப.)
பந்துக்கள். வி. 76. 96.

இனிய = இன்பமான. வி. 84. 94. 113. [93.]
இனை | த்து=இப்படி. சூ. 197. [வி. 93.]
இனை | ய=இவைபோல்வன பிற. சூ. 26. 136. 384. [வி. 93.] [292.
இன்=ஐந்தாம்வேற்றுமைஉருபு.வி.61சூ.
இனிமையான. வி. 30. 86. யாப். 38.
இறந்தகாலத்து இடைநிலை. வி. 79.
வினைஎச்சவிகுதி. வி. 86. சூ. 343.
சாரியை. வி. 65. 93. 108. சூ. 244.
இன் | பம்=நூற்பயன் ஒன்று. வி. 35. 218. சூ. 10. 384. முன்.]
இன்முன் = முன்றில். வி. 41. [இல் +
இன்மை=இல்லாமை. வி. 32. [இல் + மை. வி. 96.] சூ. 31.
இன் | றி=இல்லாமல். வி. 93. 125.
இன் | றி அமை | யாத=இல்லாமல் தீராத. சூ.23. யாதொரு நற்கருமமும் அது வில்லாமற் கூடாதாகி. சூ. 30.
இன் | று=இன்றைக்கு. வி. 25. 93.
இல்லாதது. வி. 125. [வி. 5.
இன் | ன=இவைபோல்வன. சூ. 135.280.
இன் | னணம்=இவ்வகையாய். சூ. 392.
இன் | னதல்லஇது | வென | மொழிதல்= சந்தேகப்பட வந்தவிடத்து "இது அன்று, இதுதான்" எனத் துணிந்து சொல்லுதல். சூ. 14.
இன் | னல் = துன்பம். வி. 124. 164. (இன் + அல்.)
இன் | னலம்=இனியநன்மை. வி. 213.
இன் | னன=இவைபோல்வன. சூ. 276. 277. 279. 282. 314. 353.
இன் | னா=தீமை. வி. 38. 93. 95. 113.
இன் | னாது=தீமையுள்ளது. வி. 34.
இன் | னாய்=இல்லாததாக. சூ. 447.
இன் | னான் சீ௦. வி. 5.
இன் | னிசை. வி. 190. யாப். 59.
இன் | னிசை | வெண்பா. யாப். 59.
இன் | னினி | யே=உடனே. வி. 39.
இன்னோர்=இவ்வகையோர். சூ. 39.

## ஈ

ஈ = முன்னிலை அசையாகிய இடைச் சொல். சூ. 372.

வினைப்பகுதி. சூ. 448.
நெட்டெழுத்து. சூ. 65. வி. 4.
ஈஇர்=ஈர்=ஈரமான.யாப்.39. [வி.121.]
ஈ | கை=தானம். வி. 203. [94.]
ஈ | ங்கு=இவ்விடம். வி. 72.
ஈசன்=ஆதிகடவுள். வி. 112.
ஈட் | டம்=கூட்டம். திரள். தேட்டம். சூ. 300. [ஈட்டல். வி. 96.]
ஈண் | டல்=சேர்தல். சூ. 460.
ஈண் | டு = இண்டை=இவ்வுலகம். இங்கு. வி. 109. சூ. 73. யாப். 55. இதற்கு. சூ. 309.
ஈ | தல்=கொடுத்தல். சூ. 34. 387.
கற்றுக்கொடுத்தல். கற்பித்தல். சூ.36.
ஈத்து=ஈந்து. வி. 213. [வி. 42.]
ஈம்=சுடுகாடு. சூ. 223.
ஈரடை=இரண்டு அடைமொழிகள். சூ. 444. [378.
ஈரறிவுயிர் = இப்பி, சங்குமுதலிய. சூ.
ஈரெச்சம் = பெயரெச்சம், வினைஎச்சம். சூ. 351. 397. 415.
ஈரேவல் = இருவகை ஏவுதல். சூ. 138.
ஈரைங்குற்றம் = பத்துக்குற்றம். சூ. 12.
ஈர்=ஈரமான. [வி. 121.] யாப். 39.
இரண்டு. வி. 159. சூ. 189. 457.
ஈர்ங்=ஈரம். சூ. 224. யாப். 34. சூ. 450.
ஈர்த்தல்=இழுத்தல். வி. 27.
ஈறழிதல்=கடையில்கெடுதல். சூ.307. 308. 313. [137.
ஈறு=இறுதி, கடை. சூ. 67. 89. 97. 107.
ஈறு (நிலை)= எழுத்துகள் சொல்லின் கடையில் நிற்கும் இலக்கணம். சூ. 57. 107—109.
ஈறு | போதல் = சொல்லின் கடையில் கெடுதல். சூ. 307.
இறுதிவிகுதி நீங்கல். சூ. 136.
ஈற்றசை=சொல்லின்கடையில்நிற்கும் அசை இடைச்சொல். சூ. 354. (முதற்கண்வராது.)
ஈனல்=தருதல். வி. 112. 212. சூ. 458.
பிறப்பித்தல். வி. 82. சூ. 317.

## உ

உகரக்குறுக்கம் = குற்றியல் உகரம். சூ. 60. 94. வி. 15.
உகுதல்=உதிர்தல். வி. 110.

உக்குறள் = குற்றியல் உகரம். சூ. 164. வி. 15. சூ. 94. 99.
உச்சி=தலை. சூ. 74. சிகரம். சூ. 152.
உஞற்றல்=முயற்சிசெய்தல். வி. 79.
உடம்படுமெய் = நிலைமொழி இறுதியும் வருமொழிமுதலினும் இருக்கிற உயிர்கள் உடம்படுதற்பொருட்டு இடையே வரும் மெய். வி. 23. சூ. 162.
உடம்பு (உடல்)=தேகம். சூ. 268. மெய்யெழுத்து. சூ. 59. 193.
உடறுதல்=வருத்தப்படுத்தல். யாப். 44.
உடலுயிர் = உடல்கொள் உயிர் = உடலோடு கூடிய உயிர். சூ. 384. 385. [வி. 157.]
உடல்=மெய்யெழுத்து. சூ. 204.
உடனிகழ்ச்சி=வினைகொண்டு முடிகிற பொருளினது தொழில்போன்ற தொழிலைத் தன்னிடத்திலும் உடனிகழ்கிறதாக உடையது. சூ. 297. வி. 59. [உடன் + நிகழ் + ச்சி. வி. 96.]
உடனிலை மெய்ம்மயக்கம் = எழுத்துகள் தன்னொடுதான் கூடுங் கூட்டம். சூ. 110. 118.
உடன், மூன்றன் உருபு. வி. 59.
உடன்படல்=பிறர்மதத்திற்குத் தான் உடன்படல். சூ. 11.
உடன்=விரிவிலே. சூ. 32.
உடைதல்=ஒடிதல். வி. 65. சூ. 458.
உடைத்தல்=ஒடித்தல். சூ. 459.
உடைமை = உடைமைப்பொருள். சூ. 296.=உடைத்தாதல். வி. 32. செல்வம். வி. 85. சூ. 434.
உடைய, உடை, உட. வி. 62. 93.
உடையார்=இல்லாதவர். வி. 79.
உணங்கல்=உலர்தல். வி. 89.
உணர | ல்=உணர்தல்=அறிதல். வி. 79. 86. 93. சூ. 272. 449.
உணர் | த்துதல் = அறிவித்தல். சூ. 29.
உணர் | வியல்=அறிவுமயம். சூ. 382.
உணர் | வின்றேற்றல் = அறிவில்லாமற் சொன்னல்.
உணர் | வு = உணர்ச்சி, கல்வி, அறிவு. வி. 5. 32. சூ. 268. 458.
உண்=வினைப்பகுதி. வி. 105. உண் என்பதின் விகாரம். வி. 36. 39.
உண் | டி=உணவு. வி. 27.
உண் | ணல்=பொசித்தல். வி. 78. சூ. 467.
உதவி=உபகாரம். சூ. 35.
உதாரணம்=திருட்டாந்தம், மேற்கோளுரை, காட்டுரை, எடுத்துக் காட்டுரை. சூ. 21.
உத்தி=யுத்தி, புத்திநுட்பம். சூ. 4. 14.
உப. வி. 123. (உ.)
உபசர்க்கம். சூ. 123. (உ.)
உமண்=ஓர்சாதி.
உமி. வி. 60.
உம் உந்தாகல்=உம்விகுதியானது உந்து எனத்திரிதல். சூ. 341.
உ | ம்மை = மறுமை. வி. 189. [வி. 5.] உம்மை எச்சம். சூ. 358. 359.
உம் | மை எட்டு=உம் என்னும் இடைச்சொல் எட்டுவகைப்பொருளைத்தரும். சூ. 152. 357. 360. 409. 440. வி. 113.
உம் | மைத் | தொகை. சூ. 409. 413. வி. 156.
உயராய்தம் = தன் அளைமாத்திரையிற் குறுகாதது. சூ. 61. 97. [உயர்ந்த. வி. 153.]
உயர் | தல்=மேலாதல். வி. 72. 86.
உயர் | திணை = வானவர், மனிதர், நரகர், ஆகிய மூன்றுதிறத்தாரும் உயர்ந்த சாதி. சூ. 261. 413. 418.
உயர் | திணைப் | பெயர் = உயர்ந்தகுலப் பெயர் சூ. 259.
உயர் | மூப் | பால்=உயர்திணையில்வருமூன்றுபால்கள். சூ. 349.
உயர் | வு=உயர்ச்சி, மேம்பாடு. வி. 93. [வி. 94.] சூ. 420.
உயல்=பிழைத்திருத்தல். வி. 35.
உயிரல்பொருட்குணம் = வட்டம் சதுர முதலியவாம். சூ. 386.
உயிரல்பொருள் = அறிவுமயமாம் உயிர் ஒன்றுமேயன்றி உடம்புமுதலிய உலகத்துப்பொருள்களெல்லாம் ஆம். சூ. 382. 386.
உயிரளபு=உயிரளபெடை, உயிர் எழுத்துகள் அளபெழுகிறது. சூ. 60. 91. வி. 14. [எடை, எடுத்தல். வி. 96.]
உயிர்இறுபுணரியல் = உயிர்எழுத்துகள் சொல்லின்கடைசியில் சேர்ந்துநிற்குந் தன்மையைச் சொல்வது. சூ. 162—203. வி. 23—28.
உயிர்=உயிரெழுத்து. சூ. 59. 204. 205. சீவன். சூ. 268. மனிதன். வி. 86.
உயிர் | எழுத்து=அச்சு, ஆவி. வி. 2. சூ. 63.

உயிர் | க்குணம்=அறிவுமுதலிய முப்பத்திரண்டும். சூ. 384.

உயிர் | த்தல்=மணஞ்செய்தல். வி. 86 பிறப்பித்தல். வி. 81.

உயிர் | த்தொடர்=உயிரெழுத்தைத் தொடர்ந்துவருவது. சூ. 182.

உயிர் | நிலை=சீவன். சூ. 457. உடல். உயிர்நிற்கும் நிலை.

உயிர் | மெய் = உயிரெழுத்தும் மெய்யெழுத்துங்கூடி இருக்கிற எழுத்து. சூ. 60. 89. 169. வி. 13.

உய் | தல் = சுகத்தோடிருத்தல். தப்புதல். வி. 112. 124.

உய் | த்தல் = செலவழித்தல். வி. 86. சூ. 421.

செலுத்தல். வி. 9 385.

உய் | த்துணரவைப் மிகை
லைக்கொண்டு உ சால்
லுதல். சூ. 13.

உரம்=மார்பு. சூ. 74. 75. வலி. சூ. 25.

உரவோர்=பெரியோர். சூ. 253. வல்லமையுள்ளவர். வி. 86.

உரன். வி. 63. வல்லமையுள்ளவன்.

உரி = உரிச்சொற் புணர்ச்சி. சூ. 415. பண்புத்தொடர். சூ. 152. 239. உரி என்னும்அளவுப்பெயர். சூ. 174.

உரிஇயல்=உரிச்சொல்லானது பொருளினது குணப்பண்பு தொழிற்பண்புகளை விளக்கிநிற்றலால், உரிஇயல். வி. 118—121. சூ. 374—392.

உரிச்சீர். வி. 175.

உரிச்சொல் = பொருட்குரிமை பூண்டு வருஞ்சொல். சூ. 374. வி. 47.

உரிச்சொற் பகாப்பதம். சூ. 131.

உரித்து=உரியது. வி. 93. சூ. 168.

உரிமை. வி. 62.

உருபு, வேற்றுமை உருபு. சூ. 241. உருபுப்புணர்ச்சி. 253. 254. வேற்றுமையின் அவயவம். சூ. 293. 395. 396.

உருபுப்புணரியல் = வேற்றுமை உருபுகள் நிலை மொழியோடு வருமொழிபுணருஞ் செய்கையைக் காட்டுவது. சூ. 240—257.

உருபுமயக்கம். வி. 137. சூ. 317.
"ஓர் உருபின் பொருளெரி தன் பொருள் விரிந்த நிலையக்குதல்."
(உ-ம்) [illegible]

உரும்=இடி. சூ. 223.

உருவகஉவமை =உருவகமும், உவமையும் என இரண்டும். சூ. 451.

உருவகவணி. வி. 205.

உருவம்=[எழுத்தின்] வடிவு. சூ. 57. 98. [உரு, உருவு.]

உருவு=உருவம். வி. 91. சூ. 407

உருவு உவமைத் தொகை. சூ. 407.

உருளுதல்=உருண்டையாதல். சூ. 459.

உருள்=சக்கிரம். வி. 91. 191. [370.

உரை அசை=உரையசைப்பொருள். சூ.
[செய்யுட்கண் வினுஞ் செய்யுளின் பொருட்டு அன்றித்தான் அடைந்தசொல்லின் பொருட்டுவருவது.]

உரைகாரன் = தன்னூலுக்கு உரைசெய்தவன். சூ. 51.

உரைகோளாளன் = சொல்லும் உரைமுழுமையும் மனத்துட்கொள்ளவல்ல அறிவாளன். சூ. 37.

உரைத்தல்=சொல்லல். வி. 91. சூ. 45.

உரைத்தாமென்றல் = இது முன்சொன்னோமென்றல். சூ. 14.

உரைத்து மென்றல் = இவ்விதி பின்பு சொல்வோமென்றல். சூ. 14.

உரையாசிரியர் = நூலுக்கு உரை எழுதுவோன்.

உரையிற்கோடல் = நூலிற் சொல்லாதிருந்தும் உரியபொருளை உரையிற் கொள்ளுதல்.

உலகமலையாமை=உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறுகொள்ளாமை; அல்லது, உலகமலைவில்லாமற் சொல்லல். சூ.
வி. 25. 72. 93. [சூ. 148.]

உலகியல் அறிவு = உலகநடையை அறியும் அறிவு. சூ. 26.

உலகு=உலகம். [வி. 17.] வி. 60. 72. 93.

உல | த்தல்=கெடுதல். வி. 157. சூ. 460.

உலாம். வி. 87.

உலாவுதல்=நடக்குதல், சிந்துதல். வி. 81.

உவ | த்தல்=மகிழ்தல். வி. 93. 114. சூ. 46.

உவ | ப்பு = சந்தோஷம். சூ. 384. 420. [வி. 94.]

உவமஉருபு=வினை, பயன், மெய், உருவு என்பவற்றைப்பற்றி வருகிற உவம உருபுகள். சூ. 407.

உவமத்துருபு=போலமுதலிய உவமை உருபுகள். சூ. 408.

உவமத்தொகை = உவமையுருபுகள் மறைந்து நிற்பவை. சூ. 407.
உவமப்பொருவு = ஒன்றிெனான்று சமமாக உணர்த்துவது.
உவ|மன். வி. 112.
உவ|மை அணி. வி. 204.
உவமை=ஒப்பனே. வி. 38.
உவ|மை|ஆகு|பெயர் = உவமையினால் வருகிற ஆகுபெயர். சூ. 290. வி. 162.
உவரி=கடல். [உவர். வி. 96.]
உவர்=கடல். வி. 81.
உவ்வுரு=உகரம்பெறுவாம். சூ. 230.
உவ்வுறும்=உகரச்சாரியைபொருந்தும். சூ. 207.
உழத்தல்=துன்பப்படுத்தல். துன்பபடல். வி. 79. யாப். 39. [103.]
உழப்பித்தல்=துன்பப்படுத்தல். வி. 31.
உழப்பு=(எழுத்திற்குரியமூவகை ஒலி) முயற்சி. சூ. 88.
உழுதல்=உழுதுகொள்ளல். வி. 82.
உழுநர். வி. 95. (உழு.)
உழை, உழி=ஏழன் உருபு. வி. 63. 86. இடம். வி. 93. சூ. 36.
உளர்=இருக்கிறார்கள். வி. 60.
உளி=ஏழன் உருபு. வி. 63. சூ. 302.
உள்=ஏழன் உருபு. வி. 63. வினைப்பகுதி. வி. 25. 125.
உள்வளி = உள்ளேநின்ற உதானன் என்னுங் காற்று. சூ. 74. (உள் + வளி.)
உள்ளம்=மனம், அந்தக்கரணம். வி. 81. 93. கருத்து. சூ. 36. [உள்ளே இருப்பது. வி. 96.]
உள்ளுதல்=நினைத்தல். சூ. 25. வி. 81.
உறங்கல்=நித்திரைசெய்தல். வி.
உறந்தை=ஓர்ஊர். சூ. 456.
உறழ=வி. 109. சூ. 408.
உறழ்ச்சி=விகற்பம்.
உறழ்தரல்=பெருக்கல். சூ. 240.
உறழ்தல்=பொருந்தல். சூ. 217. ஒத்தல். சூ. 122. 124. 408. விகற்பித்தல். 224. ஒன்றினென்று மிக்குச் சமமாகாமல் மாறுபடல்.
உறழ்பொருவு = உயர்வு தாழ்வுகளே உணர்த்துவது.
உறழ்வு=விகற்பம். சூ. 203.
உறு=மிகுதி. சூ. 272. 388. மிகுந்த. சூ. 61. உண்டாகும். [வி. 153.] வி. 121.
உறுதல்=பொருந்தல். சூ. 70. 74. 77. 81. சேருதல். வி. 87. வி. 145. 121. சூ. 443.
உறுப்பு=அங்கம், அவயவம். சூ. 4. 300. சினைப்பெயர். சூ. 276.
உறைதல்=இருத்தல். வி. 32. நடத்தல். வி. 25.
உறைபதி=தங்குமிடம். வி. 41.
உற். வி. 123. (உ.)
உற்றதுரைத்தல்=ஓர் இறை. சூ. 427. (உண்டானதைச்சொல்லுதல்.) [377.
உற்றறிதல் = பரிசத்தை உணர்தல். சூ. வி. 73.
உன்னே வி. 124.

## ஊ

ஊ=தசை, மாமிசம். வி. 65.
ஊக்கம்=மனஉறுதி, முயற்சி. வி. 79. 86. சூ. 384.
ஊக்குதல்=ஏறுதல். வி. 17.
ஊங்கு=மிகுதி. வி. 112.
ஊங்குதல்=மிகுதல். வி. 76.
ஊண்=உணவு. வி. 82. [வி. 96.]
ஊருணி=ஊரார்க்குப் பொதுவான ஊற்று. வி. 87. [ஊர்+உண்+இ. வி. 96.]
ஊர் = ஊரால் வருபெயர். சூ. 276. ஊர்ந்த. சூ. 140.
ஊர்கிழான்=[ஊர்கிழவன்.] மருதநிலத்தலைவன். சூ. 484.
ஊர்தல்=ஏறுதல். சூ. 94. 140. 196. 336.
ஊழ்வினை=விதி, தெய்வம். வி. 125.
ஊறு=தீமை, இடையூறு. வி. 153. பரிசம். சூ. 386.
ஊற்றுக்கோல் = ஊன்றுகோல். வி. 41.
ஊன்=மாமிசம். சூ. 216. 457.
ஊனறல் = ஊன்றிநிற்றல். வி. 27. 34. சூ. 458.

## எ

எ. வி. 2. 3. 6. சூ. 64. 67. 77. 106. 108.
எகுரு=எகு, கூர்மை. சூ. 90. 94.
எகர|வினு=எ-என்னும் வினச்சொல். சூ. 163.
எகின். சூ. 215. [451.
எங்கு = எங்கே = எவ்விடம். வி. 6. சூ.
எச்சம்=குறைவு. சூ. 322. 351. 340-348. 353. 357. 397. 398. சொல்லொழிபு. சூ. 401.

சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இருவகை. சூ. 401.
எஞ்ச | ல்=சுருங்கல். சூ. 23—24. 257.
ஒழிதல். வி. 85. சூ. 340. 422.
குறைதல். யாப். 88.
தொக்குநிற்றல். வி. 27. (L.)
எஞ்ச|ாமை=குறையாமை. வி.203.[94.]
எஞ்சிய = மற்றவைகள். சூ. 422. [95.]
எஞ்சிய சொல்லின் எய்தக்கூறல்=சொல்லாதனவற்றிற்குச் சொல்லியவற்றால் இலக்கணம் பொருந்தச்சொல்லுதல். [அருத்தாபத்தி.] சூ. 14.
எஞ்சு=எச்சம். சூ. 173.
எடுத்த மொழியின் எய்தவைத்தல்=எடுத்துச் சொன்ன சொற்களிலேதானே தான் சொல்லும் இலக்கணம் பொருந்தவைத்தல். சூ. 14.
எடு| த்தல்=எடுத்தல் அளவை. சூ. 409.
உயர்த்திக்கூறுதல். சூ. 88. [409.
எடுத்தல் அளவை = தூக்கிநிறுக்குதல்.
எடுத்துக்காட்டல் = தான் சொல்லப்படும் இலக்கணம் அமைந்த சொற்களை எடுத்துக்காட்டுதல். சூ. 14.
எடுத்துக்காட்டு=உதாரணம்.சூ.211.
எடுத்துக்காட்டுவமை. வி. 204.
எட்டனுருபு = எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள். சூ. 303. [வி. 65.]
எட்டாம்வேற்றுமை. வி. 64. சூ.303-314.
எட்டுக்கோள்=ஆற்றுநீர், மொழிமாற்று, நிர னிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று என்பனவாம். சூ. 452.
எட்டுருபு = பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பனவாம். சூ.292.
எண் = எட்டென்னும் எண். சூ. 158. 193. வி. 82. 159. [எண்டிசா=எட்டுத்திசை.] [57.
எழுத்துகளின் கணக்கிலக்கணம். சூ.
எண்ணிடைச்சொல். சூ. 359. 360. 362.
எள்ளின் திரிசொல். சூ. 211.
எண்மையான=எளிய வி. 34. [121.]
எண்ணிநிற்கிறபலசொற்கள். சூ. 430.
எண்ணால்வருபெயர். சூ. 276.
எண்ணிறை=எட்டுவிலை. சூ. 427.
எண்ணுப்பெயர்கள். வி. 159. சூ. 188—199.
எண்பொருள் = எண்ணப்பட்ட பொருள். சூ. 361.
எண்மூவெழுத்து = இருபத்துநான்கு எழுத்துகள். [எண் + மூ + எழுத்து.] சூ. 158.
எதிர். வி. 109.
எதிரதுபோற்றல் = முன்பில்லாததாய்ப் பின்பு வழக்கிவருமாயின், அதனைத் தழுவிக்கொள்ளுதல். சூ. 14.
எதிர்=பகை. சூ. 135. எதிரிடை. சூ.455.
உத்தரம். வி. 84.
எதிர்மறுத்தல்=எதிர்நடுத்தல். சூ. 395.
எதிர்மறை = எதிர்மறைவினை, எதிர்த்தல். சூ. 329. 353. 355. வி. 82-92.
எதிர்மறை எச்சம். சூ. 401.
எதிர்மறைவிகுதி=எதிரேநின்று அவ்வினையை மறுப்பவைகளின் கடைநிலை.
எதிர்வு=எதிர்காலம்.வருங்காலம்.சூ.423.
எது. வி. 6. 71.
எதுகை. வி. 182.
எந்தை=தந்தை. வி 74.
எம். வி. 72.
எம்பி=தம்பி. வி. 74.
எயிறு=பல். வி. 79.
எயினர்=வேடர். [எய்.]
எயின்=வேடர்சாதி. சூ. 212.
எய்தல்=பெறுதல். வி. 79. 95. சூ. 98.
பொருந்தல். சூ. 125.
அடைதல். சூ. 458.
வருதல். சூ. 49.
எய்துபெயர்=ஏற்கும்பெயர்கள்.சூ.303.
எய்த்தல்=இளைத்தல். வி. 86.
எரி=தீ. வி. 82. 192. [வி. 96.]
எரிதல்=வேதல். சூ. 451. [வி. 153.]
எருத்து. வி. 26.
எருமை. சூ. 38.
[எருமை சேற்றின்மேல் நின்று நீரை விரும்பு உலக்கு, அருந்துதலால் கடைமாணுக்கர்க்கு உவமை.]
எல்லாம் = மூன்றிடத்திற்கும் பொதுப்பெயர். சூ. 245. 285. வி. 67.
எல்லாரும், எல்லீரும். சூ. 246.
எல்லை=அளவு. சூ. 436.
எல்லைப்பொருள். வி. 61. சூ. 299. 310.
வரையிறும். சூ. 414.
பொருளடக்கம். சூ. 47.
எவன்=என்ன. வி. 6. 86. சூ. 350.
எவ்வது=எவ்வகை. வி. 25.
எழில்=அழகு. வி. 156.
எழுதல்=எழும்புதல். சூ. 74. 100.

எழுத்ததிகாரம்=எழுத்தில் அகத்திலக்கணம் புறத்திலக்கணமாகிய இரண்டையும் உணர்த்திய அதிகாரம்.
எழுத்தியல்=எழுத்தின் அகத்திலக்கணத்தை யுணர்த்திய இயல். சூ. 56.
எழுத்|து=எழுதப்படுவது, இரேவரி, பொறி, இலேகை, அக்கரம்
தன்னையுணர்த்தினால் எழுத்து; பிறபொருளையுணர்த்தினால் சொல். சூ. 128. எழுத்ததிகாரம். சூ. 56.
எழுத்|து|முறை|மை. சூ. 56.
எழு|பான்=எழுபது. சூ. 61. 249.
எழு|மதம்=எழுவகைமதம். சூ. 4. 11.
எழு|வாய். சூ. 295. 415. வி. 128.
முதல் ஆதி. சூ. 422. 456. [295.
முதல்வேற்றுமையினது வடிவம். சூ.
"பெயர்முழுவது உம் உருபாய எழுவாய்."
எழு|வாயுருபு = திரிபில்லாத பெயர்ச்சொல். சூ. 291. 294.
எழு|வாய்|ச்சந்தி. வி. 27. [L.]
எளிதீவில்லது=எளிதாகக் கொடாதது. சூ. 34. [எளிது + ஈவு + இல்ல .]
எளிமை = வறுமை. சூ. 384. [வி. 94.]
எள்|ளுதல்=இகழ்தல். வி. 91.
எற்றே=எவ்வளவு. வி. 85. [எற்று + ஏ.]
என. சூ. 356. வி. 86. (ந.) 72.
எனா=இடைச்சொல். சூ. 360.
எனினும். வி. 142.
எனைத்|துணை=எவ்வளவு. சூ. 420. [218.
என்=யானென்பதுதிரிந்தஎன். வி.72. சூ.
வினைப்பகுதி=சொல்லு.
ஓர் விகுதி. வி. 77.
வினாச்சொல்=என்ன.
என்ப=என்றுசொல்லுவர். சூ. 36. 193. 195. 198. 414. 432. வி. 81. [81.
என்மர்=என்றுசொல்லுவார். சூ.124. வி.
என்மனார்=என்றுசொல்லுவர் (புலவர்) வி. 81. சூ. 319. [356. 361.
என்று, என்றா. வி. 114. 86. (க.) சூ. 343.
எண்ணிடைச்சொல். சூ. 360.
என்னை=என்ன. சூ. 292.

## ஏ

ஏ = ஓர் எழுத்து. வி. 2. 6. 23. சூ. 65. 67. 77. 98.
ஓர்சாரியை. சூ. 244. இடைச்சொல். வி. 111. 65. (ந.) சூ. 201. 354.
எட்டன் உருபு. சூ. 305. 307. 308. 309. வி. 64.
ஏகல்=கெடுதல். சூ. 168. 341. போகுதல், செல்லல். வி. 63. 72. 91.
ஏகதேச உருவகவணி. வி. 205.
ஏகாங்க|உருவகவணி. வி. 205. [ஏக+ அங்கம். வி. 42.]
ஏங்|கல்=மனமடிதல். வி. 79.
ஏதம்=குற்றம். வி. 86. சூ. 456.
ஏதிலார்=அயலோர். வி. 86. [சூ. 2]9.
ஏது=காரியப்படுபொருள். வி. 59—61.
ஏதுப்பொருள்=காரணப்பொருள். வி. 61. சூ. 299.
ின்முடித்தல்=முடிவுபெறுதலைக் காரணத்தால் முடியவைத்தல். சூ. 14.
ஏதுவுருவகவணி. வி. 205.
ஏந்தல்=ஏந்திசை. யாப். 55. 87.
ஏமம்=களிப்பு. வி. 96.
ஏமா|த்தல்=களித்தல். வி. 82.
ஏம|ார்த்தல்=காப்புச்செய்தல். வி. 70.
ஏயது=ஏற்றது. வி. 95.=இயைவது.
ஏயும்=ஏகாரமிகுதல். சூ. 305.
ஏயுறல்=ஏகாரம் ஏற்றல். சூ. 309.
ஏய்ப்ப. வி. 109.
ஏய்த்தல்=இளைத்தல். சூ. 384.
ஏர்=அழகு. யாப். 34.
ஏலல் = பொருந்தல். சூ. 108. (இயலல்) ஏற்றுக்கொள்ளல். வி. 89.
ஏல் = ஏற்றுக்கொள். வி. 89. ஆனால். இருந்தால். வி. 60. 86. (உ.)
ஏவல் = ஏவுதல்=எழுப்பல், தூண்டல்.
ஏவல்|வினா. சூ. 426.
ஏவல்|வினை = கட்டளைப்பொருளுள்ள தொழில். சூ. 161. 207.
ஏவற்|கருத்தா. அரசன் ஆலயஞ் செய்தான் எ-ல் அரசன் எ-து ஏவற்கர்த்தா.
ஏவும்|வினை|முதல் = இயற்றும் வினைமுதலை தொழிலையுண்டாக்குந் தொழிலையுடையது. ஏவுங்கர்த்தா. வி. 103. சூ. 138.
ஏழனுருபு = ஏழாம் வேற்றுமையினது உருபு. [illegible] 301. [வி. 159. 65.]
ஏழாம்வேற்றுமை. வி. 63. சூ. 301.2.
ஏழு. வி. 85, 159.
ஏழை=அறிவில்லாதவன். சூ. 39.
ஏழ்|வழுவு. சூ. 416.

ஏறி=ஏறினவன். வி. 23. [வி. 96.]
ஏற் | குதல் = தாங்குதல். சூ. 293.
ஏற் | கும் = பொருந்தும். சூ. 195.
ஏற் | ப=ஏற்க. வி. 86. (ந.) 109.
ஏற் | பன=ஏற்றமொழிகள். சூ. 174.=ஏற்கும். சூ. 362.
பொருநதுவன. சூ. 397.
ஏற் | பில=ஏலாதன. சூ. 323. [460.
ஏற்புழி=ஏற்குமிடம். சூ. 188. 425. 435.
ஏற் | புக் | கோடல்=ஏற்குமிடத்து வருவித்துககொள்ளல்.
ஏற் | றல்=ஏற்றுக்கொள்ளுதல். பெறுதல். சூ. 172. [ஏல். வி. 82. (எ.)]
ஏற்றுதல்=கூட்டல். சூ. 48.
ஏனும். வி. 76. 142. [194.
ஏனை = மற்ற. வி. 59. சூ. 11. 89. 162.
ஏனை | யவும், ஏனவும், மற்றையவும். சூ. 87. [வி. 93.]

## ஐ

ஐ=இரண்டாம் வேற்றுமையினுருபு. சூ. 255. 292. வி. 58. [203.
ஐகாரம். வி. 2. 4. 11. (ந.) சூ. 202.
முன்னிலை ஒருமை விகுதி. வி. 77.
வினைப்பெயர்விகுதி. வி. 96.
ஐ | கார | குறுக்கம் = தன்மாத்திரையிற் குறைந்த ஐகாரம். சூ. 60. 95.
ஐ | கான்=ஐகாரக் (குறுக்கம்.) சூ. 61.
ஐகாரம். சூ. 124. 126.
ஐங் | காண்டிகை | புறுப்பு - காண்டிகையுரையின் அவயவமாகிய ஐந்து. சூ. 23.
ஐது=அழகியபொருள். சூ. 55. [வி. 93.]
ஐந்தடக்கல் = ஐம்பொறிகளையடக்கல். ஐந்து உறுப்புகளை அடக்கல். சூ. 419. [வி. 152.]
ஐந் | திணை = ஐந்துவகையான நிலம். [திணைகாண்க. வி. 159.] சூ. 276.
ஐந்து. வி. 159. சூ. 192.
ஐந் | தொகை | மொழி=வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத்தொகை நிலைத் தொடர்சொல். சூ. 410.
ஐப்பசி=ஓர்மாதம். சூ. 95.
ஐம் | பால்=ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல. சூ. 142. வி. 53.
ஐயந் | திரப் | பொருளை | புணர்த்தல்=பிறருக்குச் சந்தேகம்நீங்கப் பொருளைத் தெரிவித்தல். சூ. 29.
ஐ | யம்=சந்தேகம். வி. 39. சூ. 417. 353. 357.
ஐ | யறிவுயிர் = மக்கள், வானவர், நரகர், விலங்கு, புள்முதலியவை. சூ. 381.
ஐ | யிரு | குற்றம் - பத்துக்குற்றம். சூ. 4. 12.
ஐ | யுறல் ஐயுருபுபொருந்தல். சூ. 315. சந்தேகப்படல். சூ. 426. 432.
ஐ | வண்ணம். சூ. 386.
ஐ | வாய்=ஐந்து இடம். வி. 156.

## ஒ

ஒ. வி. 125. சூ. 78. 103. [சூ. 297.
ஒடு - மூன்றாம்வேற்றுமை உருபு. வி. 59.
இசை நிறைக்கிற சொல். சூ. 368.
எண் பொருள். சூ. 361.
ஒட்டாம் - ஒட்டை. வி. 17. 89.
ஒட்டணி. வி. 208.
ஒட்டல் சேரல். வி. 81. வி. 96.]
ஒட்பம் - அழகு. வி. 87. [ஒள் + பு + அம்.
ஒண் - ஒளியுள்ள. [ஒண்மை. வி. 121.]
வி. 31. யாப். 26.
ஒதுங்கல அடங்குதல். வி. 35.
ஒத்தல் - ஒக்கப்படுபொருள். சூ. 296.
இசைவாக நடத்தல். வி. 25. 59. 125.
யாப். 74. 84.
ஒத்தாழிசை. யாப். 77. 79. 81.
[தாழிசை ஒத்து ஆழ்ந்திறின ஒத்தாழிசை.]
ஒத்தியல்பொருள் தமது தொழிலில் இடையறாது ஒத்து நிகழுகின்றபொருள்கள். சூ. 424.
ஒப்ப - ஒக்க. வி. 59. [36.]
ஒப்பல் ஒக்குதல். சூ. 254. 419.
ஒப்பின்முடித்தல் = ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்துவருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிவுசெய்தல். சூ. 14.
ஒப்பு=ஒத்தல். சூ. 72.
ஒப்புப்பொருள். வி. 61. சூ. 299. அதாவது: புகழ்பொருளினுந் தன்னினும் இருக்கிற பொதுத்தன்மையால் உபமானமாகிறபொருள். உவமிக்கப்படுபொருளால் வருபெயர். சூ. 276.
ஒப்புமை = ஒத்திருக்குந்தன்மை. வி. 213. யாப். 89. [வி. 96.]
ஒப்புமைக்கூட்ட அணி. வி. 213.

ஒப்புருபுகள் = போலமுதலிய உவமை உருபுகள். சூ. 352. [448.

ஒ|ப்போன் = சமானமுடையோன். சூ.

ஒரா அல=ஒருவுதல். வி. 81.

ஒரீஇ=ஒருவி, விட்டுநீங்கி. வி. 81. 79. [86.]

ஒரு|குறி=ஒருதரம். சூ. 42.

ஒரு|ங்கு=முழுவதும். சூ. 7.

ஒரு|சார்=ஒருபுடை. சில. சூ. 307.

ஒரு|தலை|துணிதல்=இருவராலே மாறுபட்ட இரண்டனுள் ஒன்றைத் துணிந்தெடுத்துக்கொள்ளல். சூ. 14.

ஒரு|தலை=ஒருபட்சம். சூ. 11.

ஒரு|பஃது=ஒருபத்து. சூ. 196. 249.

ஒரு|பான். சூ. 249.

ஒரு|புணர்=ஒருபுணர்ச்சி. சூ. 157.

ஒரு|மை=ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால். வி. 53.

ஒருமையிற்|பன்மை=ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல். சூ. 421.

ஒரு|மொழி = ஒருபொருளைத் தருகின்ற ஒருசொல். வி. 43. சூ. 259. 399. பகாப்பதமாயினும் பகுபதமாயினும் ஒன்று நின்று தத்தம் ஒருபொருளைத் தருவன. சூ. 260.

ஒரு|வந்தம்=சம்பந்தம். வி. 79. (ஒரு + பந்தம்.)

ஒரு|வர்=உயர்திணை ஆண் பெண் இவ்விருபாற்கும் பொதுப்பெயர். சூ. 289.

ஒரு|வன், ஒருத்தி, ஒருவர். சூ. 288. 289.

ஒரு|வன் = ஆண்பாற்பெயர். சூ. 240. ஒன்றென்னும் எண்ணுல்வரும் உயர்திணை ஆண்மைப்பெயர். சூ. 288. 324.

ஒருவு|தல் = விட்டுநீங்கல். சூ. 374. வி. 87. 145.

ஒரூஉத்|தொடை. யாப். 42. (ஒருவுந் தொடை.)

ஒரூஉம். வி. 87.

ஒரோ|வழி=ஒரோர் இடங்கள. சூ. 358. 361. வி. 112.

ஒலி=அணுத்திரளின் காரிய ஒலி. சூ. 58. 391. சப்தம். வி. 23.

ஒலி|த்தல்=சத்தித்தல். சூ. 391.

ஒலி|வடிவெழுத்து=செவிப்புலனால் அறியப்படுகிற நாதமாத்திரையாற் பிறக்கும் எழுத்து. வி. 1. (ந.)

ஒல்கு|தல்=தளர்தல். வி. 86.

ஒல்லு|தல்=கூடுதல். வி. 34. [ஒல்வது. வி. 95.]

ஒழி|தல்=தொக்குநிற்றல். மறைதல். சூ. 342. 399. 402. நீங்குதல். வி. 91.

ஒழி|த்தல்=நீக்கல். வி. 89. சூ. 110.393.

ஒழி|ந்த = ஒழிந்திருப்பன. [வி. 95.] யாப். 89.

ஒழி|பு=எச்சம். குறைவு. சூ. 401.

ஒழி|ய. வி. 140.

ஒழி|யிசை = ஒழிந்த இசை. ஒழிந்த சொல். சூ. 355. 353. 363. வி. 112.

ஒழு|கல்=நடத்தல். வி. 59. 86.

ஒழு|கிசை. யாப். 55.

ஒழு|கிய ஓசை= தளைதட்டுவதால்வரும் ஓசை. யாப். 61.

ஒழு|க்கம் = நடை. நல்லொழுக்கம். வி. 41. 86. 216. [ஒழுகு. வி. 96.]

ஒழு|ங்கு=வரிசை. வி. 95.

ஒள் (ஒண், ஒட்) = பிரகாசம், அழகு. வி. 31.

ஒற்றளபு=ஒற்றளபெடை =மெய்யெழுத்து அளபெடுப்பது. சூ. 60. 92.

ஒற்று = மெய்யெழுத்து. சூ. 89. 101. 198. வி. 7.

ஒற்றுதல் = நெருங்கல். தொடுதல். சூ. 84. யாப். 71.

ஒற்றுமைநயம் = ஒருமைப்பாடு, ஒன்றுபட்டுநிற்குந்தன்மை. சூ. 383. 406.

ஒன்பதிற்றிரண்டு=பதினெட்டு. சூ. 273. 249.

[ஒன்பது விசை இரண்டு. ஒன்பது + இன் + து. வி. 93.]

ஒன்|பான்=ஒன்பது. சூ. 194. 196. 249.

ஒன்ற|உணர்த்தல்=தெரிய அறிவித்தல். சூ. 253.

ஒன்றன்|கூட்டம் = ஒரு பொருட்கூட்டம். சூ. 300. [வி. 65. 159.]

ஒன்றினமுடித்தல் = ஒன்றைச்சொல்லுமிடத்து அதற்கினமான மற்றொன்றையும் அதனோடு முடித்தல். சூ. 14.

ஒன்று=ஒன்றன்பாற்பெயர். சூ.240.279.

ஒன்று|தல்=கூடுதல். சூ. 117. 204. தெரிதல். சூ. 253.

ஒன்றொழி=ஒன்று ஒழிந்த, ஒன்றுகுறைய. சூ. 61. [வி. 153.]

## ஓ

ஓ. வி. 112. சூ. 65. 201. 355.

[illegible]
தாயிருத்தல. சூ. 13.
ஓடல்=கெடல். சூ. 249.
ஓடு, மூன்றும் வேற்றுமையின் உருபு. வி. 59.
ஓணம்=ஓர் நட்சத்திர இராசி. சூ. 276.
ஓதல்=வாசித்தல். புகழ்தல். பயிற்சிசெய்தல். வி. 70. 93.
ஓதி=ஓந்தி. சூ. 156.
ஓத்து=இயல். உறுப்பு. அங்கம். சூ. 4. 16. நூல். வி. 124. [ஓது. வி. 96.]
ஓத்துமுறை வைப்பு=இயல்களைக் காரணகாரிய முறைப்படிவைத்தல். சூ. 14.
ஓம்புதல்=பாதுகாத்தல். வி. 86.
ஓரறிவுயிர்=புல் மரமுதலியவை. சூ. 377.
ஓரன்ன = ஒருதன்மையன. சூ. 125.
ஓராஅல்=ஒருவுதல். வி. 81.
ஓரிருகிழமை=தற்கிழமை, பிறிதின் கிழமை. சூ. 301. வி. 62.
ம், அசைநிலை. வி. 93.
ஓரெழுத்தியல்பதம் = ஒரு எழுத்தாய்ப் பொருளைக்காட்டுகிற சொல். சூ. 129.
ஓர்=எண். வி. 159. விகுதி. சூ. 391.
ஓர்|தல்= உய்த்துணர்தல். சூ. 251.
ஓர்ப்பு=ஆராய்தல். சூ. 381.
ஓலை பனையினோலை. வி. 23.
ஓலைத்தூக்கு=சீட்டுக்கவி. சூ. 53.
ஓவல்=ஒழிதல். நீங்கல்.

## ஔ

ஔ|காரக்|குறுக்கம்=தன்மாத்திரையிற் குறைந்த ஔகாரம். சூ. 60. 95.
ஔ|கான்=ஔ, ஔகார [க்குறுக்க] ம். சூ. 61. 126. [17.
ஔவியம்=அவ்வியம். பொறாமை. வி.

## க

க=வியங்கோள் விகுதி. வி. 85. [86. ௬.] சூ. 338.
கக்சு=காற்பலம். சூ. 90. 94.
கங்கம்=ஓர்தேசம். சூ. 273.
கசடு=குற்றம். ஐயம். வி. 82. யாப். 25.
கஜம். வி. 18.
கஞலுதல்=ஒளிர்தல். வி. 162.
கட. வி. 125.
கடம்பூர் = ஓர் ஊர். [கடம்பு ( ஓர்மரம்.) ஊர்.]
கடல்=சமுத்திரம். வி. 25.
கடன்=கடமை. யாப். 55. 91. [கட. வி. 96. 121.] முறை. சூ. 41. 51.
கடாரம்=ஓர்தேசம். சூ. 273.
கடி = வாசனை. வி. 81. கடிது = விரைவு. வி. 72. கடியென்னும் உரிச்சொல். சூ. 272. 389. பிரகாசம். யாப். 34.
கடிதல்= கண்டித்தல். வி. 90. [63.
கடு=கடுக்காய். சூ.446. கடுமையான.வி.
கடு|த்தல்=கோபங்கொள்ளல். வி. 63.
கடு|ப்ப=போல. வி. 109. சூ. 156.
கடை=கடைசி. சூ. 91. இடம். வி. 35. 61. 63.
கடைகள்=இழிவானவர்கள். வி. 89.
கடை|க்குறை. வி. 41.
கடையியர்=பள்ளத்தியர். வி. 133.
கடை|நிலை—கடையில் நிற்பது. வி. 18. (J.) விகுதி. வி. 77.
கடை|ப்பிடி|த்தல் = தளராமுயற்சிசெய்தல். வி. 120.
கடை|ப்போலி இறுதிப்போலி. சூ.122.
கடை|முறை=கடைசி. யாப். 35.
கட்=கண். வி. 70.
கட்டளைக்கலித்துறை = ஒருவிதபா. யாப். 85. வி. 192.
கட்டு கட்டே. வி. 93.
கட்டுரைத்தல் தீர்மானித்துச் சொல்லல். சூ. 26. யாப். 23.
கணமொழி பன்மையைக்காட்டுவது.
கணம் க்ஷணம். நிமிஷம். வி. 113. [18.] வர்க்கம். விதம். வி. 8. 9. 10.
கணை அம்பு. வி. 19.
கண் இடம். வி. 63. ஏழாம்வேற்றுமை உருபு. சூ. 292. வி. 63. 93.
இரக்கம். வி. 140.
நேத்திரம். அக்ஷி. வி. 16. 70.
கணு. வி. 89.
கண்|டது செய்தது. சூ. 6.
கண்டம் மிடறு. கழுத்து. சூ. 74.
கண்|ணி=கண்ணையுடையவள். வி. 93. மாலை.
கண்|ணுடல் தயவாதல். வி. 90.
கண்|ணோட்டம் = தயவு. வி. 70.
கண்|படுத்தல்= நித்திரைசெய்தல். வி.81.
கண்பாடு நித்திரை. வி. 89.
கதி=பதவி. மக்கள், தேவர், நரகர், மிருகம் என்னும் நால்வகைக்கதிகள். சூ. 276. திசை. சூ. 458.

கதிர் = இருப்புக்கதிர். நூற்குங்கதிர். சூ. 24. கிரணம். சூ. 450.
கந்தம்=வாசனை. வி. 32.
கபிலன்=ஓர்புலவன். சூ. 413.
கமலம்=தாமரை. வி. 81. 124. 154.
கமழ்தல்=வாசனையாதல். யாப். 33.
கம்=கம்மியரது தொழில். சூ. 223.
கம்பலை=ஓசை. சூ. 391. [389.
கம்புள்=வானம்பாடி. சம்பங்கோழி. சூ.
கயம்=குளம். வி. 33. 70.
கரத்தல்=தொக்குநிற்றல். சூ. 198. 405. மறைதல். வி. 32.
கரம்=எழுத்துச்சாரியை. சூ. 126. கை.
கரவு=வஞ்சம். வி. 149.
கரிய=கருமையானவை. [வி. 93.]
கரியன்=கருமையுடையவன். சூ. 434. [வி. 93.]
கரு=கரும். வி. 61. 86. 121. சி. பா. 15. சூ. 152.
கருங்கோட்டு = கருமையான கொம் பையுடைய. யாப். 36.
கரு | தல்=நினைத்தல். வி. 112.
கருதலளவை=அநுமானப்பிரமாணம். சூ. 257.
கருத்தன்=செய்தவன். சூ. 49.
கருத்தா=வினைமுதற்பொருள். வி. 128. செய்பவன். சூ. 320.
இயற்றுதற்கருத்தா, ஏவற்கருத்தாஎன இரண்டாம்.
கருத்தா | வாகுபெயர். வி. 162. சூ. 290.
கருத்து=தாற்பரியம். வி. 81. 85. பெரு மை. சூ. 21. கருத்துளா. [கருது. வி. 96.]
கருத்து | ப்பொருள் = நினைக்கப்படும் பொருள்.
கருப்பம். சூ. 453.
கருப்பு. வி. 26. [220.
கரு | ப்பொருள்=உரிமைப் பொருள். வி.
கருமம், கர்மம் = காரியம். வி. 90. 112.
கருவி=காரணம். 320.
கருனை=பொரிக்கறி. வி. 26.
கரை=சொல். 390.
கலக்குதல் = கலங்கச்செய்தல். வி. 74.
கலகலத்தல்=ஒலிக்குறிப்பு. வி. 23.
கல | த்தல்=கூடல். வி. 82.
கல | ப்புறு | மொழி=இருதிணையிலுங் க லந்துவருவது.
கலம்=ஆபரணம். வி. 27.
கலன், பாத்திரம். வி. 30. 70. [17.]
கலி=ஓசை. சூ. 391.
கலிங்கம்=ஓர்தேசம். சூ. 273.
கலி | த்தளை. யாப். 20.
கலி | த்தாழிசை. யாப். 84.
கலி | த்துறை = ஓர்பாவினம். யாப். 85. வி. 192.
கலி | ப்பா. யாப். 75. 76.
கலி | ப்பு=மிகுதி. வி. 85.
கலி | விருத்தம். யாப். 86.
கலி | வெண்பா. யாப். 82.
கலை | பயில் | தெளிவு=நூல்களிலே பழ கிய தெளிவு. சூ. 26. [போதஞசக்தி.]
கல்=மலை. கன்மலை. சிலை. வி. 70. 83. 84. ஓர்வினைப்பகுதி. வி. 82.
கல் | வி=படிப்பு. வி. 59. 82. [96.]
கவண். சூ. 211.
கவி=பாட்டு. யாப். 16.
கவிகை=குடை. வி. 30.
கவுடம்=ஓர்தேசம். சூ. 273.
கவுள்=யானைக்கதுப்பு. யாப். 34.
கவ்வை=ஓசை. சூ. 391.
கழங்கல்=ஒலித்தல். சூ. 391.
கழல் = பாதத்தின் அணி. சிற. பா. 15.
கழற்குடம் = கழற் (காய்) பெய் (த) கு டம். சூ. 32.
கழனி=நிலம். வி. 85.
கழி=மிகுந்த. வி. 120. 140.
கழி | தல்=நீங்கல். சூ. 462.
கழித்தல்=நீக்கல். வி. 86.
கழி | நெடில் | அடி. யாப். 25.
கழி | வு=இறந்தகாலம். சூ. 145. கழிதற் பொருள். சூ. 364.
கழி | வு=இரக்கம். வி. 112.
கழுத்து = கண்டம். மிடறு. வி. 18. (J.)
களன் = சபை. சூ. 48. கொள்ளும் இ டம். சூ. 40.
களி = மயக்கம். வி. 27. கட்குடியன். கள்ளுண்டுகளிப்பவன். சூ. 39.
களி | த்தல்=களிப்படைதல். வி. 79. 81.
களி | று=ஆனை. வி. 93.
களை | தல்=பிடுங்குதல். வி. 34. [களைப வோ=பிடுங்குவார்களா. வி. 81. 112.]
களை | வு = தள்ளிவிடல். சூ. 11. வி. 94.
கள் = மது. வி. 81. பன்மைவிகுதி. சூ. 280. 283.
கள்வன்=திருடன். வி. 39.
கள் | ளம்=வஞ்சனை. வி. 81.

கள்|ளல் (கட்கல்.), திருடல். வி. 81. 82.
கற|வை=பசு. வி. 61. 137. [96.]
கறை=மாசு. வி. 80.
கற்கா=தமிழ்நாடொன்று. சூ. 273.
கற்பு=சுத்தம். மகளிர்கற்பு. வி. 62. 81.
கற்|றல்=கற்றுக்கொள்ளல். வி. 29. 82. 140.
கற்று. வி. 26.
கனகம்=பொன். வி. 153.
கன|க்கோட்டம் = அதிககோணல். சூ. 25. [கனம்=மிகுதி.]
கனங்|குழாய்—கனமுள்ள குழையுடையவளே! யாப். 34. [வி. 61. 154. 157. குழை.]
கன|வு=சொப்பனம். வி. 94.
கனல்=அக்கினி. வி. 17. 153.
கனி. வி. 124.
கனை|தல்—ஒலித்தல். சூ. 391.
கனை=சிறுதராசுத்தட்டு. சூ. 217.
கன்று. வி. 26. 61. 137 சூ. 429.
கன்னடம்—ஒருதேசம். சூ. 273.
கன்னல்=கரும்பு. வி. 26.
கன்னி கன்னிகை. இலக்குமி. சூ 391.

## கா

கா - தோட்டம். வி. 63. வினைப்பகுதி. வி. 91.
காசு=ஓர்வாய்பாடு. வி. 173.
காட்|சி=தோற்றம். காண்டல. வி. 39. 95. 125.
காட்சிப்பொருள்=காணப்படுபொருள்.
காட்டிலும். வி. 61. (w.)
காட்டு=உதாரணம். சூ. 22.
காணிய. வி. 86. (உ.)
காண்டம்=அதிகாரம்.
காண்டிகை=சுருக்கமானஉரை. சூ. 22.
காதலி = மனைவி. வி. 63. [காதல்+இ. வி. 96.]
காதல்=ஆசை. வி. 25.
காதன்மை=அன்புடைமை. வி. 34. 94.
காத்தல்=காப்பாற்றுதல். வி. 6. 85. 91.
காந்தள்=ஓர்மலர். வி. 79.
காந்துதல்=பிரகாசித்தல். வி. 133.
காமம்=ஆசை. வி. 35.
காமர்=அழகு. வி. 81.
காமி=காமமுடையவன். சூ. 39.
காய்=இளங்கனி. வி. 82. 124. [26.
காய்தல=சினத்தல் வி. 93. எரிதல். வி.
காய்த்தல்=பழுத்தல். சூ. 453.
காரகவேது = உருவப்பொருளில் ஆறு வேற்றுமைகளேபுர தந்து அவரறவற்றின முடிக்குஞ் சொல்லோடு முடித்தல்.
காரணக்குறி=ஒருநிமித்தம் பற்றிவரும் இடுகுறி. சூ. 275.
காரணப்பெயர் = ஒரு முகாந்திரம் பற்றிவருவது. சூ. 62. வி. 50. சூ. 275.
காரணப்பொருள=ஏதுப்பொருள். வி. 59. 140.
காரணம் ஏது. நிமித்தம். காரணச் சொல். சூ. 446.
முதற்காரணம்: குலாலன்மண்ணுல் குடத்தை வனைந்தான், எ-ல் மண் எ-து முதற்காரணம்.
துணைக்காரணம்: முன் உதாரணத்திற் தண்டசக்கரம் முதலியவை துணைக் காரணங்கள்.
காரணவாகுபெயர். வி. 162. சூ. 290.
காரம் எழுத்துச்சாரியை. சூ. 126.
காரிகை — அழகு. பெண். ஓர்நூல். வி. 119.
காரிய|வாகு|பெயர். வி. 162. சூ. 290.
கார். வி. 121. 162. மேகம். வி. 61.
கார்த்திகை - ஓர்மாசம். பூ. சூ. 290.
காலை பொழுது. வி. 78.
காலத்தால்வருபெயர். சூ. 276.
இருநிலைக்கும், ஒத்திருக்கும்படியான காலம். சூ. 36.
காலங்காட்டும் வினை இறுதிகள். சூ. 405. [வி. 162.]
கால|இடை|நிலை—காலத்தைக் காட்டும் இடைநிலை. வி. 78—81. சூ. 142. 144.
கால|ப்பெயர்|பகு|பதம் = காலத்தால்வரும் பெயர்ப்பகுபதம்.
காலமயக்கம். வி. 146 149. சூ. 423. 425.
காலமூன்று நிகழ்காலம்,இறந்தகாலம், எதிர்காலம்,எனமூன்று. வி.78.சூ. 423.
கால|வழு சூ. 416.
கால|வாகுபெயர். வி. 162. சூ. 290.
காலை=காலம். சூ. 36. 40.
கால் - காற்று. வி. 81. 84. காலம். வி. 82. 86. 91. 113. [வி. 41.]
பாதம். அடிமரம்.
ஏழனுருபு. வி. 63. திசை. சூ. 42.
காவலன்=புருடன். வி. 64.

காளை=வாலிபன். வி. 120. சூ. 290.
கான்=கானம்=கானகம்=வனம்.வி.124.
கானல்=சூ. 202.

வி. 81.
கிழ|மை. வி. 62.
கிழ|மைப்|பொருள்=உரிமைப்பொருள். சம்பந்தப்பொருள்: தற்கிழமைப் பொருள். தன்னின்வேறுயது. வி. 62. சூ. 300.
த்தல்=சொல்லல். சூ. 277. 450.
வி=சொல். சூ. 449. யாப். 38.
கிளி=கிளிப்பிள்ளை. சூ.272. [கிள.வி.96.]
[ஏறுமற் குறையாமற் சொல்லித்தபடி சொல்வது கிளி; ஆதலால் இடைமாணுக்கருக்கு உவமை.]
=சுற்றம். இனம். சூ. 276.
ப்|பெயர் = சாதிப்பெயர். சூ. 212.
கிள்ளை. சூ. 272.
கிறு = நிகழ்கால இடைநிலை. சூ. 143. வி. 80.
கின்று=நிகழ்கால இடைநிலை. சூ. 143. வி. 80.

கீதம்=பாட்டு. வி. 80.
கீழிடுதல்=தாழ்த்துதல். வி. 74.
கீழிதழ்=கீழுதடு. சூ. 81.
கீழ்=ஏழன் உருபு. வி. 63.
கீழ்க்கதுவாய். யாப். 45. (கது+வாய்=பிளப்பு.)
கீளல்=கிழித்தல். வி. 79.

## கு

கு=நான்காம் வேற்றுமையுருபு. சூ. 292. வி. 60.
ஒருமைத்தன்மை விகுதி. சூ. 331.
ஓர்சாரியை. சூ. 244.
குசலம், ஓர்தேசம். சூ. 273.
குஞ்சரம்=ஆனை. வி. 61.
குஞ்சி=ஆண்மயிர். சூ. 276.
குடகம் = குடகநாடு சூ. 273. குடகம் என்னும் மேல் நாடு. சிற. பா.
குடம். வி. 65.
குடல்=குடர். வி. 17.
குடி = குலத்தால் வருபெயர். சூ. 276. குலம். குடும்பம். வீடு. வி. 34.
கடல்=கீழ்க்கடல். பங்காளத்துக் கடல். நன். சிற. பா. 8.

குணசந்தி=வடமொழிச்சந்தியிலொன்று. வி. 42.
குணத்தொகை. சூ. 406. வி. 154.
குணம் = கருமைமுதலிய குணம். சூ. 434.
குணவாகுபெயர். வி. 162. சூ. 290.
குணி = குணத்தையுடையது. சூ. 406.
குணுங்கர்=நாய். வி. 143.
குத்துதல்=கொத்துதல். வி. 34.
குமரி = இந்தியாவின் தென்முனை. நன். சிற. பா. 8.
குமிழி=நீர்மேற்குமிழி. புற்புதம். வி. 23.
கும்பி=சேறு. வி. 121.
குயின்=மேகம்.சூ. 216. [குயில். வி. 17.]
குரக்கு. வி. 26.
குரம்பு=செய்கரை. வி. 137.
குரிசில்=அரசன். சூ. 276.
குரை|தல்=ஒலித்தல். வி. 63. சூ. 391.
குலன், குலம்=சாதி. நல்லசாதி. சூ. 26.
குலை|தல்=நடுங்கல். வி. 86.
குவலயாநந்தம், ஓர் நூல். [455.
குவளை=நெய்தல். உற்பலம். வி. 81. சூ.
குவி|தல்=குவியலாகச்சேரல்.யாப்.36.
குவி|வு = குவிதல். உருண்டையாதல். சூ. 78.
குழ|ல்=மாதர்தலையின்மயிர். வி. 81. கூந்தலால் வருபெயர். சூ. 276. 410.
குழ|வி=சிறுபிராயம். வி. 63. [குழ+வி= வி. 96.]
குழ|ாம்=கூட்டம். வி. 66. 86.
குழு|வுப்|பெயர்=திரள்பற்றிவரும் பெயர். சூ. 211. 276.
குழூஉ=கூட்டம். கூட்டத்தால் வருபெயர். சூ. 276.
குழூஉ|க்குறி=ஒரு கூட்டத்திலுள்ளோர் யாதாயினும் ஒரு காரணத்தால் ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து, வேறொரு சொற்குறியாற் கூறுவது. சூ. 267.
குழை=காதணி. சூ. 152. 276.
குழாய் = காதணியுடையவளே! [வி. 64. 157.]
குளிறல்=ஒலித்தல் சூ. 391.
குறடு=மரக்கட்டை. வி. 32. [113.
குறவர்=ஓர்சாதி. குறிஞ்சி நிலத்தார். வி.
குறள் = குறைந்தது. சூ. 93. யாப். 57. 69. வி. 137.

=மகரக்குறுக்கம். சூ.99.

குறி = குற்றெழுத்து. சூ. 172. பலவற்றையுங் குறித்து அறியவருங் குறிச் சூத்திரம். சூ. 20. தரம். சூ. 42. குறிப்பு. சூ. 91.

குறிஞ்சி = ஐந்திணையில் ஒன்று. சூ. 276. மலையும், மலைசார்ந்த இடமும். ஓர் மரம். யாப். 68.

குறிப்பின = குறிப்பின்படியே உண்டாகிய. சூ. 316. [வி. 93.]

குறிப்பின்=வரலாம் என்கின்ற கருத்து அறிந்து. சூ. 40.

குறிப்பு = மனத்தால் உணரப்படுவது. குறிப்புவினைமுற்று. சூ. 328. குறிப்பினால் வருபவை. சூ. 352. குறிப்புச்சொல். சூ. 269. குறித்தல். சூ. 265. எண்ணம். சூ. 272. நூல். யாப். 43. (சிறிது பொழுது நிகழ்வதோர் மெய்ப்பாடு.)

குறிப்புப்பொருள் = அரிதாயுணரும் பொருள்.

குறிப்புமுற்று = வினைக்குறிப்பு முற்றுச் சொல். சூ. 351.

குறிப்பெச்சம் = ஒன்றொழிபொதுச் சொல் முதலிய குறிப்புச்சொற்கள். சூ. 269. 401.

குறிய = குறைந்தவைகளாம். சூ. 93. [வி. 93.]

குறியதன்=குற்றெழுத்தின். சூ. 90. (குறுமை. குறியது. [வி. 93.] + அன். [வி. 65.])

குறிலிணை=இருகுறில் கூடினது. சூ. 72.

குறில்=குற்றெழுத்து. சூ. 64. குறுமை. வி. 3.

குறில்வழிலள = தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள். சூ. 228.

குறு|கு|தல்=சேருதல். வி. 41. தன் மாத்திரையிற் குறைதல். சூ. 96. 172.=சுருங்குதல். சூ. 177.

குறு|க்கல்=நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கல். சூ. 155. வி. 41.

குறை = இனம். [குறையப்படுவது. வி. 94.] சூ. 119.

குறைபொருள். வி. 62.

குறை|வினை. வி. 125.

குறை|தல்=எஞ்சல். சிறுகல். யாப். 89.

குற்றம்=பிழை. தப்பு. வி. 86. [96.]

குற்றி=தறி. சூ. 426.

குற்|றுகரம்=தன்மாத்திரையிற் குறைந்த உகரம். சூ. 183. வி. 15.

குற்|றுயிர்=உயிர்க்குறில். வி. 106.

குற்|றுயிர்|மெய். வி. 13.

குற்றியலிகரம்=தன்மாத்திரையிற் குறுகிய இகரம். வி. 15. 24. சூ. 93.

குற்|றியல்|உகரம்=குற்றுகரம்.வி.15. [குறு + இயல். வி. 119.]

குற்றேவல். வி. 121.

குன்றக்கூறல் = பொருள்குறை படச் சொல்லல்.

குன்றவன் - குன்றின்மேல் வசிப்பவன். சூ. 434. [வி. 93.]

குன்றி = குன்றிமணி. வி. 61.

குன்று=குன்றம்=கிரி, மலை. வி. 35. 61. 113. [வி. 96.]

குன்றுதல் = குறைதல். வி. 27. (1.) 61. 86. இழிதல்.

## கூ

கூடு. வி. 125.

கூட்டம் கூடுங்கூட்டம். சூ. 110.

கூந்தல்- பெண்டிர் தலைமயிர். வி. 114. சூ. 459.

கூப்புதல்=குவிதல். வி. 33. யாப். 33.

கூர் =நிறைந்த. வி. 89. சூ.388.[வி.153.] கூர்மையான. [வி. 121.]

கூர்ம். வி. 121.

கூர்மை. வி. 76.

கூழை. யாப். 43.

கூழ்=குழம்பு. வி. 113.

கூறியதுகூறல் = சொல்லியதை மறுபடியுஞ் சொல்லல். சூ. 12.

கூறு = பங்கு. பகுதி. சூ. 20. 287. வி. 125.

கூறு|தல்=சொல்லுதல். வி. 84. சூ. 40.

கூற்றம் = சாவு. யமன். வி. 38. 73. 82.

கூற்று இடைச்சொல். சூ. 367=வரலாறு. சூ. 3. வி. 96. (ம.)

கூனி. வி. 123.

கூன் = தனிச்சொல். சூத்திரத்தின் முதலில்நிற்கும் அவற்றுள், அவ்வழி முதலிய மொழிகள். சூ. 121. யாப். 90. பொருள் ஒட்டி முதனிற்பது கூன்.

கெடுதல் = இருக்கிற எழுத்து ஒழிதல். சூ. 154. வி. 20. அழிதல். வி. 132.

கெண்டை=ஓர்மீன். சூ. 454.

## கே

கேடு. வி. 96. 124. கெடுதல் விகாரம். சூ. 210.
கேட்டி. வி. 84.
கேண் | மின் = கேளுங்கள். ஏவற்பொருள். சூ. 370. வி. 84.
கேண் | மை=சிநேகம். வி. 27. 32. (т.) யாப். 35.
கேழ். வி. 109.
கேள்|வி=கேள்விப்பட்டது. வினு. கல்வி. வி. 79. 93. [96.]

## கை

கை = கரம். பொருள். வி. 34. 79. 93. 140. தொழிற் பெயர்விகுதி. 94. யானையின் துதிக்கை. யாப். 34.
கை | த்தல் = கசத்தல். வி. 30.
கை | த்து=கையிலுள்ளது. பொருள். ஆஸ்தி. வி. 35. 79. [வி. 93.]
கை|ந்நொடி = கையினுல் நொடித்தல். வி. 16.
கை | ம்மாறு = பிரத்தியுபகாரம். வி. 31.
கை | யல்லதன்கண் [கை + அல்லது + அன் + கண். வி. 63. 108. 125.]=உறுதியில்லாதவைகளிடத்தில்.
கை | வாயாக=நூல்நூற்குங்கை புலவன் வாயாக. சூ. 24.

## கொ

கொக்கு. சூ. 273.
கொங்கணம்=ஓர் தேசம். சூ. 273.
கொங்கு=ஓர்மரம். வி. 86.
கொச்சகம். யாப். 78. 83.
கொடாஇடம்=இடுகாடு, சூழவும் முள்ளுள்ள இடம் முதலியது. சூ. 33.
கொடி=படர்கொடி. வி. 70. 109. 121. சூ. 203. 455.
கொடிய=கொடுமையானவை. வி. 93.
கொடியை. வி. 93.
கொடு. சூ. 448.
கொடுந்தமிழ்=வழக்கமானதமிழ். (முகவுரை.)
கொடு=கொடும். வி. 121.
கொடை. வி. 96. சூ. 426. 422.
கொடைப்பொருள்= இகைப்பொருள். சூ. 298.
கொட்டி=ஓர்பூ.
கொட்டை=பஞ்சுக்கொட்டை.சூ.455.
கொணர்தல்=கொண்டுவரல். வி. 109.
கொண்டான் = புருடன். வி. 74. [95.]
கொண்டியல் புறனடை = இவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டு இவற்றின் புறத்து அடையாக வருவது. சூ. 20.
கொண்டு கூட்டுப்பொருள்கோள். சூ. 459.
கொண்டு, மூன்றன் உருபு. வி. 59. 72.
கொம்பு=மரக்கொம்பு. வி. 93. கொம்பர். வி. 17.
கொல் = அசைநிலை. வி. 95. 116. சூ. 272. 367. கொல்லன். சூ. 232.
கொல்லம்=ஓர்தேசம். சூ. 273.
கொல்|லல் = கொலைசெய்தல். வி. 82.
கொல் . வி. 96.
[சேர்ந்தாரைக் கொல்லி = நெருப்பு.]
கொழு=பெரிய. வி. 153.
கொழுநன்=புருடன். வி. 109.
கொள்கை=கருத்து. எண்ணம். சூ. 26. [வி. 94.]
கொள்வோன்=மாணுக்கன். சூ. 3. 36. [வி. 95.]
கொள்ளல்=தன்னுள்ளே கொள்ளுதல். சூ. 34. பிடித்துக்கொளல். வாங்குதல். வி. 124. சூ. 419. 426. [31.]
கொளுவுதல்=கொள்ளச்செய்தல். வி.
கொள்ளை=மிகுதி. வி. 137.
கொள்வகை = கேட்கும் அறிவின் தன்மை. சூ. 36.

## கோ

கோ=அரசன், தேவன். வி. 65. சூ. 276.
கோடல் = கொள்ளல். வி. 94. கற்றுக் கொள்ளல். பாடங்கேட்கை. சூ. 3. 40.
கோடற்பொருள் = கொடுத்த தொழிலின் செயப்படு பொருளைத் தனக்கு உரியதாக்கிக் கொள்ளுதலையுடைத்து.
கோடாய் = செவிலித்தாய். வி. 63. [கோள் + தாய். வி. 37.]
கோடி. வி. 84.
கோடு = மரக்கொம்பு. [கோட்டுப்பூ. வி. 26.] வஞ்சனை. கோணல். வி. 38. விலங்கின்கொம்பு. வி. 121.
கோட்டம்=மாறுபாடு. சூ. 36.
கோணல். சூ. 25.
கோதை = சேரன். பெண். பூமாலை. சூ. 4. 283. யாப். 33.

கோப்புடைமொழிகள் = கோக்கப்படு தலையுடைய சொற்கள். சூ. 459.
கோமான் = அரசன். வி. 81.
கோமகன் = அரசர் குமாரன். வி. 84. [வி. 152.]
கோலுதல் = சூழ்ந்திடல். சிற. பா. 13.
கோல் = தடி. துலாக்கோல். மரக்கொம்பு. யாப். 68. வி. 153. [390.
கோவலர் = கோபாலர். இடையர். சூ.
கோள் = கொள்ளல். கோட்பாடு. வி. 140. உதாரணம். சூ. 9. [வி. 96.]
கோளாளன் = மனத்துள் கொள்ளவல்ல அறிவாளன். சூ. 37.
கோறல் = கொல்லல். வி. 94.
கோறி. வி. 84.

## கௌ

கௌ = கவ்வல். பற்றல். வி. 23.

## ங

ங. சூ. 106.
ஙனம் = இடம். தன்மை. [சூ. 106. தனித்துவராது.]

## ச

சங்கம் = சங்கு. வி. 23.
சடப்பொருள் = சரீரப்பொருள். உயிரல்லாதபொருள். சூ. 382.
சண்பகம் = ஓர்மரம். வி. 11.
சதை = தசை. வி. 41.
சநகை = ஓர்ஊர். சிற. பா. 20.
சந்தனம் = ஓர்மரம். 32.
சந்தி = நிலைமொழி வருமொழி சந்தித்தலால் உண்டாகிய தோன்றல் திரிதல் கெடுதல் சந்தி. சூ. 133. வி. 21. 22.
சம். வி. 123. (உ.)
சம்பந்தப்பொருள். வி. 62.
சர்ச்சனை = எட்டுறுகளில் ஒன்று. சூ. 386.
சலம் = நீர். நிடக்கை. வி. 70.
சழக்கென = ஒலிக்குறிப்பு. வி. 124.
சனகன் = ஓர் அரசன். வி. 123.
சன்மதி = ஓர்முனி. சிற. பா. 20.

## சா

சா. வி. 82. சூ. 169.
சாகாடு = வண்டில். வி. 208.
சாண். சூ. 211.
சாதல் = இறத்தல். வி. 82. 143. கெடுதல். சூ. 169.
சாதி = அந்தணர்முதலிய நால்வகைச் சாதிகளால் வருபெயர். குலம். சூ. 211. 276. 436. [283. 284.
சாத்தன் = வைரவன். எருதின்பெயர். சூ.
சாம். வி. 87.
சாம்பல், சாம்பர் = நீறு. வி. 17.
சாயுமுகரம் = குற்றியலுகரம். சூ. 107.
சாரியை = பகுதி விகுதிகளைச் சார்ந்து இசைந்து நிற்பது சாரியை. சூ. 133. வி. 108. (விகுதிமுதலிய புணர்ப்பைச் சார்ந்து ஆண்டைக்கியைந்து நிற்றலிற் சாரியை.)
சாரியையுருபுகள் = அன் ஆன் முதலிய சாரியையுருபுகள். சூ. 243. 244. வி. 108.
சார் = ஏழன் உருபு. வி. 63.
சார்தல் = சேர்தல். வி. 93. சூ. 40. 246.
சார்பு = புடைநூல். சூ. 58.
ஆகுபவு. வி. 60.
சார்பெழுத்து = உயிரையு மெய்யையுஞ் சார்ந்துவருவது. சூ. 58. 61. 150. வி. 11.
சால = மிக. வி. 33. [120.] சூ. 272. 388.
சாறுதல் = நிறைதல். வி. 74.
சால்பு = அறிவு. மேம்பாடு. வி. 113.
சாவ. சூ. 169.
சாவகம் = ஓர்தேசம். சூ. 273.
சானகி = சீதை. வி. 123. ணா.)
சான்று = சாட்சி. உதாரணம். (முதலு
சான்றோர் = (அறிவால்) நிறைந்தோர். வி. 111. 142. [சால். வி. 95.]

## சி

சிங்களம் = ஓர்தேசம், இலங்கையின் தென்பங்கு. சூ. 273.
சிதல் = கறையான். சூ. 379.
சிதைதல் = கெடல். வி. 90.
சித்திரவணி. வி. 197.
சித்திரம் = எழுதிய சித்திரம். சூ. 40. 55.
சித்திரித்தல். வி. 76. சித்திரஞ்செய்தல்.
சித்துப்பொருள் = ஆத்துமப்பொருள். உயிராகியபொருள். சூ. 376.
சிந்தை = கருத்து. நினைப்பு. வி. 79. [சூ. 147.]
சில. சூ. 170.
சிலம்பி = சிலந்திப்பூச்சி. வி. 34.
சிலம்பு = பாதத்தின் அணி. வி. 81.
சிலம்புதல் = சத்தித்தல். சூ. 391.

சிலிர்த்தல்=புளகிதமாதல். மயிர்பொடித்தல். வி. 79.
சிலை = வில். வி. 26. 93. கல். வி. 123. ஓசை. சூ. 391. [சூ. 147.]
சிலை|த்தல்=சத்தித்தல். வி. 391.
சில்வழி=சிலவிடம். சூ. 207.
சிவணல் = பொருந்தல். வி. 28. 109.
சிற|த்தல்=விசேஷித்தல். சூ. 36. சீர்த்திபெறுதல். சூ. 18. 338.
சிற|ப்பு=உயர்வு. மேன்மை. வி. 59. 82. சூ. 73. 129. 276. 355. 357. 434. இடைப்பொருள் ஒன்று. சூ. 353.
சிற|ப்பு|ப்பாயிரம் = ஆக்கியோன் முதலிய பதினொருவகையும் உடையது. சூ. 2. 47. 48.
சிற|ப்பு|ப்பெயர் = ஒருபொருளை விசேஷித்துக் காட்டுவது. வி. 48.
சிற|ப்பெழுத்து = ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்து. சூ. 274.
சிற|ப்பு|விதி=விசேஷிக்கும் விதி.
சிறு. வி. 121. 124.
சிறு|பான்மை = அருகல்விதி. ஒரோவிடத்து, அரிதாய். வி. 112. [சிறு + பால் (வி. 121.) + மை. வி. 94.]
சிறை = புடை. பக்கம். சூ. 8. இறகு. சூ. 391. காவல். வி. 81.
சிற். சூ. 170.
சிற்|றின்பம். வி. 121. [39.
சினத்தன்=கோபத்தை யுடையவன். சூ.
சின|த்தல்=கோபித்தல். வி. 90. [76.]
சினம்=கோபம். வி. 35. 96.
சினை=உறுப்பு. அவயவம். சூ. 282. 315. 316. 388.
சினை|ப்பெயர் = சினையைப் பற்றிவரும் பெயர். சூ. 132. 282. [277.
சினை|ப்பொருள்=உறுப்புப்பொருள். சூ.
சினை|முதற்|பெயர்=சினையையும் முதலையும் பற்றிவரும் பெயர். சூ. 282.
சினை|யாகு|பெயர். வி. 162. சூ. 290.
சினை|வினை=அவயவத்தின் றொழிலாகிய வினை. சூ. 345.
சின்னீர = சிறியதன்மையுடையன. வி. 35. [சிறு + நீர் + அ. வி. 93. 121.]

## சீ

சீதம்=தமிழ்நாடுகளில் ஒன்று. சூ. 273.
சீர், குணம். குற்றம். வி. 171. சூ. 32.
சீர்மை=நல்லசீர். வி. 59. கனமாயிருப்பது. [எட்டேறில் ஒன்று. சூ. 386.]
சீயகங்கன்=ஓர் அரசன். சிற. பா. 16.
சீறடி. வி. 121.
சீறுதல்=கோபித்தல். வி. 82. 89.
சீற்றம்=கோபம். வி. 93.
சீனம்=ஓர்தேசம். சூ. 273.

## சு

சு=நல். சுய. வி. 123. (உ.)
சுட|ர்=ஒளி. வி. 31. சூரியசந்திரர்=இருசுடர். வி. 82.
சுடுதல். வி. 96.
சுட்டு=சுட்டெழுத்துகளால் வருபெயர். சூ. 235. 250. 251. 276. 279. 314. 427.
புறச்சுட்டு = மொழிப்புறத்துச் சுட்டுதல். சூ. 5.
அண்மைச்சுட்டு=சமீபச்சுட்டு.
சேய்மைச்சுட்டு=தூரச்சுட்டு.
பொதுச்சுட்டு=தூரஞ் சமீபம் இரண்டிற்கும் நடுவான சுட்டு.
சுட்டு|தல் = குறித்தல். குறித்துக்காட்டல். சூ. 366.
சுட்டெழுத்து=சுட்டிக்காட்டுகிற எழுத்து. சூ. 66. 179. வி. 5. [வி. 153.]
சும்மை. ஓசை. சூ. 391.
சுரன்=சுரம், பாலைநிலம். வி. 63. [வி. 17.]
சுரிதகம் = மடக்கியல், வாரம், வைப்பு. யாப். 79.
[குளித்தொ நீர்ச்சுழி போல நின்று சுரிந்திறுதலால் சுரிதகம்.]
சுரு|ங்க|ச்சொல்லல்=சொற்சுருங்கச் சொல்லுதல். சூ. 13.
சுரு|ங்கல். சூ. 387.
சுவேத|நீர்=சுக்கிலம். சூ. 268.
சுவை=உருசி. அறுசுவை. சூ. 175. 386. வி. 82. 137.*
(ஆறு: இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு.)
சுழ|லல்=சுற்றுதல். வி. 82.
சுற்று|தல் = சூழவருதல். வி. 63.

## சூ

சூடி=சூடினவன். சூ. 389. [19. 20.
சூத்திரம் = சூத்திரயாப்பு. சூ. 4. 18.
சூது. வி. 31. 82.

சூத்திரநிலை = சூத்திரங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கும் நிலைகள். சூ. 19.
சூலம்=சூலாயுதம். வி. 70.

## செ

செ, (செம், செந், செஞ், செங்) = செவ்விய, செவந்த. வி. 70.
செ|ங்|கோல்=அரசர் செலுத்துஞ் செம்மையானகோல். சிற. பா. 16. [வி. 121. சூ. 135. 136.] சூ. 24. [121.
செ|ஞ்|சொல் = செவ்வியசொல். [வி.
செத்து. வி. 109.
செ|ந்|தமிழ்=செந்தமிழ் நிலைத்தமொழி. சூ. 271.
செ|ந்|தமிழ்|நிலம்=பாண்டி நாடு.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியனெனுந் தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

(கருவூரின் கிழக்கு மருவூரின்மேற்கே, வைகையாற்றின்தெற்கு மருதயாற்றின் வடக்கே உள்ளசீமை.) சூ. 271. [வி. 121.]
செப்|புதல்=சொல்லல். வி. 89.
செம், (செஞ், செந்,) = செம்மையான. வி. 121.
செய|ப்படு|பொருள் = வினைமுதற்றொழிற் பயனுறுவதாகிய இரண்டாம் வேற்றுமைப்பொருள். வி. 58. சூ. 320.
செய|ப்பாட்டு|வினை=மூன்றும் வேற்றுமைக்கர்த்தாவைக்கொண்டு முடிவது. வி. 105. 121.
செயற்கை = செயல். விகாரம். விதி.
செயற்கைப்பொருள் = ஒரு பொருளை மற்றொருபொருளாகச் செய்யப்படுபொருள்.
செயற்கை|அளபெடை = பாட்டின் இசை|நிறைப்பது. சூ. 94.
செயிர் = குற்றம். வி. 80. 112.
செயும்|பொருள்=செயப்படு பொருள். சூ. 446.
செய்கை=தொழில். வி. 79.
புணர்தல், முடிதல் முதலிய செய்கைப்பட நிற்கும் செய்கைச் சூத்திரம். சூ. 20.
செய்|கை|அளபெடை = விகாரத்தால் வந்த அளபெடை. சூ. 91.
செய்|தது = வினையாலணையும் பெயர். சூ. 441.
செய்தி=செய்கை. சூ. 32.
செய்|து=செய்து என்பது முதலியவைகள் வினையெச்சவாய்பாடு. சூ. 343.
செய்|பவன்=கர்த்தா. சூ. 320.
இயற்றுதற்கருத்தா.
ஏவற்கருத்தா.
செய்|பொருள்=செய்யப்படுபொருள். சூ. 320.
செய்|யவன் = செய்யாள். இலக்குமி. சூ. 317.
செய்|யாள்=இலக்குமி. வி. 23. [வி. 93.]
செய்|யிய = அகரவீற்றுவினையெச்சவாய்பாடு. சூ. 167.
செய்|யுமெனெச்சம் வருங்காலப் பெயரெச்ச வாய்பாடு. சூ. 341. [259.
செய்|யுளிடம் கவிகளின் வழக்கம். சூ.
செய்|யுள் - பாட்டு. சூ. 120. 155. 288. 374.
செய்|யுள்|வழக்கம் கவிகளில் வழங்கும் வழக்கம்.
செய்|யுள்|விகாரம் = கவிகளில்உள்ள விகாரம். வி. 41. சூ. 155. 156.
செய்|வி|னவன்வேவல் - செய்யென்றும்ஏவலின் மேலோரேவல். வி. 103. சூ. 138.
செரு - போர். வி. 132.
செரு|க்கு அகங்காரம். வி. 72. 89.
செரு|க்கு|தல் = களித்தல். வி. 82.
செல|வு - போனகாலம். சூ. 145. [செல். வி. 91.] [34. 82.
செல்|லுதல் - போகுதல். நடத்தல். வி.
செல் = மேகம். சூ. 232.
செல்வம் = ஐசுவரியம். வி. 34. 112.
செல்வன் = செல்வத்தையுடையோன். மகன். வி. 93.
செவி - காது. வி. 89. சூ. 40.
செவியறிவு - செவியாற் சத்தத்தை யறிதல். சூ. 381.
செவிலி = தாதி. சூ. 227. [சூ. 427.
செ|வ்வனிறை = நேரான பிரதியுத்தரம்.
செ|வ்வன் - செவ்வையாக. சூ. 18.
செ|வ்வாய் = சிவந்தவாய். வி. 121. சூ. 290.

செ|வ்வி = செம்மை. தகுதி. வி. 89. 95. சூ. 45. [124.
செ|வ்வியான் = செம்மையானவன். வி. [செவ்வி + ஆன். வி. 93.] [359.
செ|வ்வெண் = செவ்விதாகிய எண். சூ.
செழு = செழுமையான. செழித்த. வி. 32. 81. [121.]
செறல் = கோபம். சூ. 420.
செறி|தல் = பொருந்தல். சூ. 71. 73. முடிதல். சூ. 345. [18.
செறி|த்தல் = அடக்கல். சேர்த்தல். சூ.
செறு|தல் = நெருக்குதல். வி. 82.
செறும்பு = ராய். சூ. 203.
சென்றுதே ய்ந்திறுதல் = செல்லச் செல்லச் செ ய்வலி பொருள்வலி இரண் டுந்தேய்ந்து முடியச்சொல்லுதல். சூ. 12.
சென்னி = சிரசு. 153.

## சே

சே = இரிடபம். வி. 23. சிவந்த. வி. 121.
சேண் = தூரம். வி. 17.
சேதாம்பல். வி. 121.
சேயிழை = நூல்நூற்கும் மடந்தை. சூ. 24. [வி. 157.]
சேய் = மகன். வி. 152. தூரம். நீளம். சூ. 388.
சேய்|மை = தூரம். சூ. 313.
சேர்|க்கை = சேர்வு. திரட்சி. வி. 17. [வி. 94.] [வி. 63.
சேர்|தல். வி. 96. சம்பந்தப்படுதல்.
சேர்|ப்பன் = கரைஆளும்நாதன். சூ. 391.
சேர்|ப்பு = கரை.
சே|வடி = சிவந்த அடி. வி. 112. [121.]
சேறல் = கெடுதல். சூ. 341. செல்லல். வி. 94.

## சை

சைலம். வி. 123.

## சொ

சொரி|தல் = பொழிதல். வி. 153.
சொல் = மொழி. வி. 43. (P.) சூ. 232. சொல்லதிகாரம். = சொல்லினது இல க்கணத்தை யுணர்த்துகிறபங்கு. சூ. 258. 259—274. [ஆகுபெயர். 162.]
"சொல் லெனப் படுவ பெயரே, வினை யென் றாய் இரண் டென்ப அறிந்திசினி னோரே; இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்று வழி மருங்கிற் றோன்றும் என்ப." (தொல்காப்.)
செங்நெற்கதிர். சூ. 453.
சொல்|லணி. வி. 196. 7.
சொல் | லாகு | பெயர். சூ. 290.
சொல் | லிசை யளபெடை = சொல்லி சையை நிறைக்கவருவது. சூ. 91.
சொற்|பொருள் = சொல்லுக்குப் பொரு ளெழுதும் உரை; விதனை, சொற்பொ ருளுரை, பதப்பொருளுரை, பதவுரை எனவும் வழங்குவர். சூ. 21.
சொற் | பொருள் | விரி | த்தல். சூ. 14.
சொற்றுக = சொல்லுவாயாக. வி. 85.
சொல்வகை (உரை) = குன்றியக்கால் எ-து குன்றிக்கால் என் விகாரப்பட் டுநின்றது என்றாற்போலச்சொற்களைக் குறித்தெழுதும் உரை. சூ. 21.

## சோ

சோணாடு = சோழநாடு. சூ. 239.
சோமன் = சந்திரன். வி. 123. [வி. 27.
சோம்பு | தல் = சோம்பலாகத்திரிதல்.
சோர்|வு = மயக்கம். வி. 74. [94.]
சோலை = வனம், பூஞ்சோலை. வி. 110.
சோழியன் = சோழதேசத்தான். சூ. 276.
சோனகம் = ஓர்தேசம். சூ. 273.

## சௌ

சௌமன். வி. 123.

## ஞ

ஞகரம். சூ. 105. 107.
ஞஃகான் = ஞகரம்.
ஞண்டு = நண்டு. வி. 17.
ஞமலி = நாய். மயில். சூ. 14. சூ. 158.

## ஞா

ஞாலம் = பூமி. வி. 35.
ஞாலுதல் = தொங்கல். சூ. 158.
ஞாற்சி = தொங்குதல். சூ. 158.

## ஞெ

ஞெள்ளன் = ஓர்நாமம். சூ. 158.

## டு

டு = ஒன்றன் படர்க்கை விகுதி. சூ. 328. ஒருமைத்தன்மை விகுதி. சூ. 331.

டும்=தன்மைப்பன்மை விகுதி. சூ. 332.

## த

தக=தகும்படியாய், தகுதியானபடி. வி. 82. [40.
தகவு=தகுதிப்பொருள். 298. தகுதி. சூ.
தகு=வி. 79. 125.
தகுதி=மூவகைத்தகுதி வழக்குச்சொல். சூ. 269.=பொறுமை. வி. 23.
தகை=தகுதி. வி. 74. [வி. 96.]
தகைமை=தன்மை. சூ. 190.
தக்கணம்=தென்னாடு. சூ. 391.
தங்கு|தல்=தரித்தல். வி. 34.
தங்கை=இளைய சகோதரி. வி. 74.
தசை. வி. 41.
தஞ்சம்=அடைக்கலம். வி. 84.
தடம்=பாதை. வி. 86.
தடி|த்தல்=வீங்கல், கனத்தல். வி. 79.
தடுமாறுளத்தன்=(ஆதிநூலின் பரப்பைக் கண்டு கற்கப்பயந்து) ஒன்றினும் நிலைக்கொள்ளாத மனதை உடையவன். சூ. 39.
தணி|தல்=ஆறுதல். வி. 91. 96. [121.]
தண் குளிர்ச்சிபொருந்திய. வி. 70. 93.
தண்டம் தண்டனை. வி. 216.
தண்டி=போஜராசன் காலத்தில் இருந்த ஓர்புலவன், இவன் அலங்காரத்தைப் பற்றியநூலைச் செய்தவன்.
தண்மை குளிர்ச்சி. (எட்டேறில் ஒன்று.) சூ. 386.
ததை|தல்=நெருங்குதல். வி. 157.
தத்தம். வி. 74.
தத்தம்பொருள் தத்தமக்குரிய பொருளை உணர்த்திவருபவை. சூ. 352. வி. 110.
தத்து|தல்=தாண்டுதல். வி. 137.
தத்தை=கிளி. சூ. 172.
தந்தம். வி. 74.
தந்திர|வுத்தி=நூனுத்தி. சூ. 15.
தந்துரை நூலிற்சொல்லிய பொருளல்லாதவற்றை அதற்குத் தந்துரைத்தல் சூ. 1.
தந்தை=தகப்பன். வி. 30. 74. 86.
தமர்=தம்முடையவர். சுற்றத்தார் வி. 14. [74. 93. 74.]
தமிழொழி|நிலம்=தமிழ்நிலம் அல்லாத நிலம். சூ. 273.
தமிழ். சூ. 225.
தமிழ்|ப்பாஷை. முகவுரை. 1.
தமிழ்|மொழி|ஆக்கம். சூ. 128.
தம். வி. 74. சூ. 244. 246. 247.
தம்மின். வி. 84.
தம்|பால்=தம்மிடம். சூ. 447. [வி. 74.]
தம்|பி. வி. 74.
தரவு=எருத்தம். [தரவுமுன் னிற்றலில் தரவு.] யாப். 79. [448.
தரு|தல்=காட்டல். சூ. 343. இதல். சூ.
தரை=பூமி. சூ. 225.
தலம்=ஸ்தலம். இடம். வி. 37.
தலை=சிரசு. வி. 61. இடம். தலம். வி. 63. சிற. பா. 1. தலைமை. வி. 81. 143.
தவ=மிக. சூ. 273. 388.
தவம்=தவசு. வி. 95.
தவழ்|தல்=பரவுதல். வி. 63.
தவளைப்|பாய்த்து இடம் விட்டுக் குதிக்கின்ற தவளையின்பாய்ச்சல். சூ. 19.
தவிர்|தல் வாராதொழிதல். சூ. 243.
தவ்|வினைதல் தகரம்வந்து புணர்தல். சூ. 229.
தவ்வை தௌவை. மூதேவி. சூ. 317.
தழு|வுதல் அங்கீகரித்தல். வி. 87. உணர்த்துதல். சூ. 374.
தழை தளிர். வி. 133. இலை. வி. 64.
தளர்தல் தளர்ந்துபோதல். வி. 90.
தளிர் தழை. வி. 30.
தளிர்|த்தல்=தளிர்விடுதல். வி. 137.
தளை பாசம். பந்தம். வி. 26. 98. யாப். 17. 22. வி. 177.
தள்ளை. சூ. 273.
தறுகணன் அஞ்சாத்தக்கவைகளை அஞ்சாதவன். சூ. 39.
தற்|கிழமைப்|பொருள்=தன்னோடொற்றுமையுடையது. வி. 62.
தற்|பவம்=ஆரியசிறப்பெழுத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டெழுத்தாலுந் தமிழிற்சிறந்து வருவது. வி. 43. (P.)
தற்பொருட்டுவினை. வி. 124.
தற்|சமம்=ஆரியத்திற்குந் தமிழுக்கும் பொதுவெழுத்தால் வருவது. வி. 43. (P.)
தற்|சுட்டளபு=தன்னைக் குறிக்கும் அளவு. சூ. 95.
தற்புகழ்தல்=தன்னைப் புகழ்ந்துகொள்ளுதல். சூ. 52.

தனம்=ஆஸ்தி. வி. 32. 86.

தனி|க்குறில்=தனித்துவருங் குற்றெழுத்து. வி. 29. சூ. 205.

தனி|க்குறில் அணைந்தஒற்று=தனித்துவருங்குறிலைச் சேர்ந்தமெய் (உ-ம்.) மண் எ-ல் ண் என்னும் மெய் ம என்னுங் குறிலைச்சேர்ந்தது.

தனிச்சொல் = விட்டிசை. தனிநிலை. யாப். 59. 65.

தனித்து = தனியே. சூ. 128.

தனி|நிலை=ஆய்தஎழுத்து. (உயிரின்கணத்திலுஞ்சேராது, மெய்யின் கணத்திலுஞ்சேராது தனியே நிற்பதால்.) (அஃகிய) தனிநிலை. சூ. 60. தனிச்சொல். யாப். 79.

தனை=அளவு. வரைக்கும். வி. 87.

தன் = தானென்பது திரிந்தது. வி. சூ. 218.

தன் குறி வழக்க மிகவெடுத்துரைத்த...—தான்புதிதாகச்சொல்லி வழங்குவதை இடமிடந்தோறும் அதிகப்பட எடுத்துச் சொல்லுதல். சூ. 14.

தன்முகம்=தனக்கெதிர்முகம். தன்னிடத்தில். சூ. 303.

தன்மேம்பாட்டுரை அணி. வி. 211.

தன்மை = யான்முதலிய தன்மைப்பெயர். வி. 54. 72. சூ. 282. 285. 324. 330.

தத்துவம்=இயல்பு. வி. 25.

தன்மைஅணி. வி. 203.

தன்மைச்சொல்=சொல்வோன் றன்னைக்குறிக்குஞ் சொல். வி. 54.

தன்மைப்பன்மை = தன்மைப்பெயரில் அநேகம். வி. 54.

தன்மைப் பன்மை வினைமுற்று = தன்னொடுசேர்ந்த பலர்பால் முற்றுவினை. வி. 77.

தன்மைப் பொருள்=தன்மைஇடப்பொருள். வி. 54. [102.

தன்வினை=தன்கர்த்தாவின் தொழில். வி.

தன்னின முடித்தல் = ஒன்றைச் சொல்லுமிடத்து அதற்கினமானதையும் அதனொடு முடித்தல். சூ. 14.

## தா

தாக்கு=பாய்தல். போர். வி. 121.

தாங்கல்=பொறுத்தல். வி. 17. 84.

தாது=பூந்தாது. வி. 110.
எழுவகைத்தாதுக்கள். சூ. 268.

தாப்பிசை. சூ. 457. (தாம்பு+இசை.)
(ஊஞ்சல் போல் இடைநிலைச் சொல் இருமருங்குஞ் செல்வது.)

தாப்பு=ஊஞ்சல்; தாம்புஎன்பதின்விகாரம். சூ. 457. (தாம்புக்கயிறு.)

தாமரை=கமலம். வி. 23. 162.

தாம். வி. 74. சூ. 247.

தாய்=அன்னை. வி. 72. [தாவி?]

தாஅனுட்டி|த்தனுது|நிறுப்பு=தானொருபொருளையெடுத்துநாட்டி அதனைவருமிடந்தோறும் நிறுத்துதல். சூ. 11.

தாரை=துளி. வி. 153.

தார்=மாலை. வி. 23. 32. 93. 157.

தா|வுதல்=தாண்டல். வி. 95.

தாள் = பாதம். அடி. சரணம். வி. 38. 41. 95.

தாழிசை=இடைநிலைப்பாட்டு. யாப். 54.

தாழ். சூ. 225.

தானம் = ஸ்தானம். நால்வகைப்பிறப்பிடம். சூ. 72. வி. 18. (ı.) இசை. வி. 113.

தானி = தானத்தையுடைய ஆகுபெயர். 290.

தானெடுத்து|மொழி|தல்=தான் பழையசூத்திரத்தை எடுத்துச் சொல்லுதல். சூ. 14.

தானை=சேனை. வி. 93.

தான். வி. 74. சூ. 247.

## தி

திகை|த்தல்=நடுநடுங்கல். வி. 79.

திங்கள்=சந்திரன். வி. 37.

திசா=திசை. வி. 82. [சூ. 147.]

திசை = திக்கு. திசைச்சொல். சூ. 270. ஏழன்உருபு. வி. 63.

திசை|ச்சொல். சூ. 273.
கொடுந்தமிழ் மொழியாகியும் அந்நிய மொழியாகியும் வருவது.

திசைப்|பெயர்கள். வி. 160.

திட்|பம் = சொல்வலி பொருள்வலி. சூ. 18.

திணி=பலன். சூ. 276.

திணை = குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், என ஐந்துநிலம். சூ. 276. 434.
உயர்திணை அஃறிணையாகிய இரண்டு. சூ. 416.

திண்|ணியர்=வலிமையுடையர். வி. 137.

திண்|மை=கனமாயிருப்பது. எட்டீேல் ஒன்று. 368. பெரிய பாரஞ்செய்து, தன்மேலே நெருங்கினவைகளாற் கலங்காதுவலிமை. சூ. 27.
திரள் = கூட்டம். சூ. 58. திரட்சியென்னும் பெயர். சூ. 203.
திரி|சொல் = இயல்பில்லாமற் றிரியுஞ்சொல். சூ. 270. 272. வி. 43.
திரி|தல்=மாறுதல். வி. 20. சூ. 89. 93. 154. 158. 271.
விகாரப்படுதல். சூ. 136.
வேறுபடுதல். வி. 95. (அ.)
திரிபினுக்கம்=ஒன்றுதிரிந் தொன்றுதல். சூ. 300. (திரிபினலாகிய ஆக்கம்.)
திரி|பு=ஒவ்வாமை. சூ. 8. வேறுபாடு. சூ. 88.
திரிதல், மாறுதல். சூ. 303.
திரி|யாது திரிசொறபோலாகாமை. சூ. 2 .
திரு=செல்வம். வி. 31. 87.
திரிகுதல் முறுக்குதல். வி. 93.
திரு|ந்து|தல் செம்மையாகுதல். சிற. பா. 16. [வி. 87.]
திரு|வள்ளுவன். வி. 162.
திரு|வாசகம். வி. 162.
திலை அலை. வி. 37. 79. 153. திலைச்சிலை. வி. 37. வி. 69. (ப.) [363.
தில் தில்லென்னும் இடைச்சொல். சூ.
திறம் தன்மை. சூ. 46.
திற|ம்பு|தல்=மாறுபடல். வி. 91. 112.
திறல்=வலி. சிற. பா. 14.
திறன்=கடன். சூ. 461. வரலாறு. சூ. 3.

## தீ

தீ-தீங்கு. தீமையான. வி. 38. தீத்திப்பு
தீ|ங்கு இனிமை. வி. 84. தீமை.
தீ|து-தீயது=தீமையையுடையது. வி. 32. 93.
தீ|மை|வளம்-அறியாமையின் மிகுதி. சூ. 25.
தீ|ம்|புனல்=இனிமையான ஆறு. வி. 27. [தீமையான. வி. 121. சூ. 136.]
தீப. வி. 93.
தீர்க்க|சந்தி=வடமொழிச்சந்தியிலொன்று. வி. 42.
தீர்|க்கும்=நீக்கும். சூ. 25.
தீ|வளி=சுழற்|காற்று. 124. [தீமையான. வி. 121.]
தீன்=உணவு. வி. 96.
தீரு|தல்=நீங்குதல். வி. 93.

## து

து=புசி அனுபோகி. (ஏவல்.) சூ. 158. விகுதி. சூ. 140. 279.
ஒன்றன்படர்க்கை விகுதி. சூ. 328.
ஒருமைத்தன்மை விகுதி. சூ. 331.
துகள்=குற்றம். வி. 37.
தூசி. வி. 70.
துகில்=வஸ்திரம். 34.
துகிலிகை. சூ. 156.
துஞ்சு|தல் துஞ்சல். நித்திரைசெய்தல். உறங்கல். சாதல். சூ. 167. 335. 385.
துணிதல்-நிர்மாணித்தல். வி. 143.
துணிநர் அறிவிற்பொருளுவார். சூ. 206. [வி. 95.]
துணிபுவினை. வி. 125. (ங.)
துணிவு துணிதல். சூ. 11. 21.
நிர்மாணம், மதுளிவு. சூ. 381.
துணிவுப்பொருள் நிச்சயப்பொருள்.
துணிபுவினை. வி. 121.
துணி (வுனை) சந்தேகப்பட நின்ற விடத்து இதற்கு இதுவே பொருளெனத் துணிந்தெழுதும் உரை. சூ. 21.
துணை உதவி. வி. 23. 60. 70. அளவு. வி. 76.
போல். வி. 109.
துணைமொழி தொடர்ந்துவருவது.
துணைவினை. வி. 121.
துப்பு. வி. 87.
துப்|புதல் உண்ணல். அநுபவித்தல். வி. 87.
தும் தன்மைப் பன்மைவிகுதி. சூ. 332.
தும்|பி வண்டின்பேதம. சூ. 380.
துபம் துன்பம். வி. 35. 80. 155.
துயில்லல் - நித்திரைசெய்தல். வி. 155.
துயில்வோன் - மிகத் தூங்குவோன். சூ. 39.
துய|த்தல், அநுபவித்தல். வி. 79. உண்டல். சூ. 385.
துர|த்தல் = எழுப்புதல். சூ. 74. 388.
துர் (துற், துன்) கெட்ட. வி. 123. (உ.)
துவை|த்தல்-வாத்தியம் வாசித்தல். ஒலித்தல். சூ. 391.

துவ் | வுதல்=அநுபவித்தல். வி. 86.
துழாய்=துளசி. வி. 93.
துள|க்கலாகா = நிலை அசைக்கப்படாத நிலை. சூ. 28.
துள | ங்கல் = அசைதல். வி. 79. 90.
துளி. வி. 61.
துறத்தல்=விட்டுநீங்குதல். வி. 93.
துற | வறம்=நீத்தோர் தர்மம். [துறத்தல் =விட்டு நீங்கல். வி. 94.]
துறை=வழி. நூல். சூ. 52.=நீர்த்துறை, ஆறு. வி. 23. 43.
துன்|ஞர்=பகைவர். சிற. பா. 11. வி. 95.
துன் | னுதல்=சேர்தல். வி. 95. 206.

## தூ

தூக்கு=செய் ... 3. 172.
தூக்குதல்=நி ... 3.
போல. வி.
தூண்டில்=து
தூய்மை=பரி ... வி. 96.]
தூர்=தூர்வை, ...
தூர் | த்தல்=நிறைத்தல். வி. 70. 79. 84.

## தெ

தெங்கு=தென்னமரம். வி. 161.
தெங்கங்காய்=தேங்காய். சூ. 187.
தெண், தெள்=தெளிவான. வி. 37.
தெய்ய=இடைச்சொல். சூ. 368. இசைநிறை. வி. 115.
தெய்வம்=திவ்வியமுள்ளது. வி. 84. வழிபடுகடவுள். சூ. 36.
தெய்வங்கொள்கை = கடவுள்வழிபாடு. சூ. 26.
தெரிநிலை = இடைப்பொருளுள் ஒன்று. சூ. 353. 355. 357. (தெரிந்த வழி நிற்றலால் தெரிநிலை.)
தெரிநிலைவினை=காலந்தெரிய நின்ற வினை. வி. 98. சூ. 320.
தெரிநிலை | வினைமுற்றாலணையும் | பெயர்ப் | பகுபதம் = காலங் காட்டுதலுடனே வேற்றுமை யேற்றுவருவது. வி. 95.
தெரியல்=மாலை. வி. 93. 109.
தெரிவரும் = காண்கிறதற் கரிதாகிய. சூ. 27. [வி. 153. 121.]
தெருளல்=தெளிதல். வி. 95.
தெலுங்கம்=தெலுங்குதேசம். அந்திரம். சூ. 273.

தெவ்=பகை. சூ. 236.
தெவ்விர்=பகைவர். வி. 211. [77.]
தெளிதல்=மெய்யுணர்தல். வி. 40.
தெளிவெய்தல்=துணிவுண்டாதல். சூ. 433.
தெளிவோர் = நூலோதித் தெளிதற்குரியமாணுக்கர். சூ. 461.
தெள் | ளல்=தெளிவாதல். வி. 89.
தெள், தென்=தெளிவான. வி. 37.
தென் | பாண்டி = கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்று. சூ. 273.
தென்=தென்றிசை. வி. 84. 160.

## தே

தேசிகம்=திசைச்சொல்.
தேம்=தேசம். சூ. 276.
ஏழன் உருபு. வி. 63.
இடம். சூ. 303.
இனிமை, [தேன். சூ. 214.] வி. 93. 152.
தேய்தல்=குறைதல். வி. 32.
தேரு | தல் = தெளிதல். ஆராய்தல். வி. 70. 95.
தேற்றப் | பொருள்=நிச்சயப்பொருள். வி. 111. [354.
தேற் | றம்=தெளிவு. நிச்சயம். சூ. 353.
தேற்றவினை. வி. 125.
தேர்=இரதம். வி. 72.
தேன்=மது. வி. 154. சூ. 214.

## தை

தையல்=பெண். சூ. 277.

## தொ

தொக|ா|நிலை. சூ. 415. வி. 151. [வி. 91.]
தொகு|த்தல்=எழுத்தாயினுஞ் சாரியையாயினுங் குறைத்துச் சுருக்குதல். வி. 41. சூ. 155.
விரிந்துகிடந்ததைத் தொகுத்து முடித்தல். வி. 79. சூ. 50.
தொகு|த்துச்|சுட்டல் = பலவற்றையுந் தொகையாக்கிச் சொல்லுதல். சூ. 14.
தொகுத் | துணா = வேற்றுமை சாரியை முதலிய உறுப்புகளைத் தொகுத்தெழுதும் உணா, இதைப் பொழிப்புணாயென்றும் வழங்குவர். சூ. 21.
தொகை = உருபு மறைதல், தொகைக் குறிப்புச்சொல். சூ. 269.

பலவற்றையுந் தொகுத்துக் கூறுந்தொகைச் சூத்திரம். சூ. 20.
மறைந்துநிற்பவை. சூ. 403.
தொகை|க்குறிப்பு=தொகுத்துக் குறிக்குங் குறிப்பு. சூ. 269.
தொகை|ச்சூத்திரம் = காரியங்களைத் தொகுத்துக்கூறுவது.
தொகை|ஆறு. சூ. 403. வி. 151.
தொகை|நிலை. சூ. 402. வி. 151.
தொகை|ப்பொருள் = தொகைநிலைத் தொடர்பொருள். சூ. 411.
தொகை|விரி = தொகுத்தும் விரித்தும் முடித்தல். சூ. 50.
தொட|க்கம்=ஆதி. (தொடு.) என்றற்றொடக்கத்து என்று சொல்வது போலவரும்.
தொடர். வி. 126. [11. 94.
தொடர்|வை=தொடர்பு, சிநேகம். வி.
தொடர்|ச்சொற்புணர்தல் = ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சொல்லுமைச் சேர்த்துவைத்தல். சூ. 11.
தொடர்தரல்=தொடர்தல். வி. 121.
தொடர்|தல்=இற்றெழுத்திற்கு அயலெழுத்தாகத் தொடர்தல். வி. 109. சூ. 91. இரண்டுமுதலியவாகத் தொடர்ந்துவருதல். சூ. 128.
தொடர்|பு=செய்யுள். சூ. 173. ஐக்கியம். வி. 94.
தொடர்|மொழி. வி. 150. சூ. 259. 260.
தொடி = வளை. வி. 96. [பைந்தொடி. வி. 121. 157.]
தொடுத்தல் = கட்டல். அம்புகளைகாணின்மேல் தொடுத்தல். வி. 19.
தொடை = மோனைமுதலிய தொடை. யாப். 32. வி. 181.
தொய்தல்=தொடுதல். வி. 37.
தொல்லை=பழமை. சூ. 98. துன்பம். வி. 96.
தொல்லோர் = முன்னோர். வி. 145. [93.]
தொல்=பழமை. வி. 60.
தொழில்=உவமை. வி. 204.
தொழில்=வினை. செயல். வி. 312.
தொழிற்|பெயர்=வினைப்பெயர். சூ. 217. 286. வி. 155. [256.
தொழின்|மொழி = வினைச்சொல். சூ.
தொழு|தல்= பணிதல். சூ. 385. வழிபஞ்செய்தல். வி. 82.
தொறும். வி. 110.

தொன்|முறை = தொல் + முறை = பழமையானமுறை. சூ. 290.
தொன்று|தொட்டு = பூர்வம் முதற்கொண்டு. சூ. 290.
தொன்|னூல் = பழமையான நூல். சூ. 39.

## தோ

தோகை = மயில். வி. 23. 162.
தோட்ட [பகுதி தோடு. வி. 82. (எ.) தோண்டின.]
தோய்|தல்=கலத்தல். வி. 37.
தோரை = சரமணிக்கோர்வை. சூ. 91.
தோழி = தோழமையுடையவள். சூ. 277. [வி. 96.] வி. 96. (ம.)
தோள் = புயம். வி. 60. புயத்தால்வருபெயர். சூ. 276.
தோறும். வி. 110. [95.
தோற்றம் = உருவம், பார்வை. வி. 86. நெடுஞ்சூரம் தோன்றுகின்ற் உயரம். சூ. 28.
தோற்று|தல் = வெளிப்படுத்துதல். சூ. 22. 52.
தோன்றல் = விளங்கல். சூ. 52. 342. 387. பிறத்தல். வி. 61. ஓர்விகாரம்: மெய்யாயினும் உயிராயினும் சாரியையாயினும் உயிர்மெய்யாயினும் உண்டாதல். சூ. 154. வி 20. இராசா. சூ. 276.
தோன்று|எழுவாய் முதலாம் வேற்றுமைத்தொகை. [வி. 91.]

## தௌ

தௌவை = தவ்வை. மூதேவி. 317.

## ந

நகு|தல் = சிரித்தல், நகைத்தல். வி. 76. 79.
நகுநர் = நகைத்தோர். வி. 76. [72.]
நகை = சிரிப்பு. நகைத்தல். வி. 79. [வி. 96.]
நகை|த்தல்=சிரித்தல்.
நக்கு. [நகு. வி. 82. (கு.)] சூ. 317.
நங்கை = பெண்ணிற்சிறந்தாள். [வி. 47.] சூ. 277.
நஞ்சு = விஷம். வி. 32.
நடி|த்தல் = கூத்தாடல். வி. 120.
நடுங்|கல். சூ. 387.
நடு|தல் = பயிர் ஆக்கல். வி. 82.

நடு | நிலை = தராசுமுள்ளு ஒருபுறத்துஞ் சாயாமல் நடுவாக நிற்பது, அதுபோல, மாணுக்கன் அறிவுசிறிதாகில் பெரிதாகவும் பெரிதாகில் சிறிதாகவும் உணர்த்தப்புகாமையும், ஒருவனிடத்தில் விருப்பாகவும், ஒருவனிடத்தில் வெறுப்பாகவும், உணர்த்தப்புகாமையுமாம். சூ. 29.
நடு | வன்மை = நடுவு + அன்மை = நீதியல்லாதது. வி. 95.
நடுவு = நீதி. வி. 81.
நட்டல் = சிநேகஞ்செய்தல். வி. 33. 188. [நள். 76.]
நட்பு = சிநேகம் [நள் + பு. வி. 96.] வி. 26. 33.
நடை = வழக்கம்.
நணியது = சமீபமுள்ளது. வி. 40.
நண்டு = ஞெண்டு. கற்கடகம். வி. 17.
நண்பு = நட்பு. வி. 212.
நண்ணல் = கிட்டல், உண்டாதல். வி. 89. சூ. 210.
நந்து = சங்கு. 378. [74.
நம்பி = ஆணிற்சிறந்தவன். சூ. 276. [வி.
நம். வி. 72.
நயத்தல் = விரும்புதல். வி. 33.
நயம் = நியாயம். தகுதி. சூ. 383.
நரகர் = நரகவாசிகள். சூ. 261. 381.
நல | ம். வி. 96.
நலி | தலோசை = கலந்தவோசை. சூ. 88.
நலி | தல் = வருந்திக்கூறுதல். சூ. 88.
நல் | கு | தல் = அளித்தல். வி. 73. 152.
நல்கூர்ந்தார் = தரித்திரர். வி. 213.
நல்லாள் = பெண். [வி. 93.]
நல் | வினம் = நல்லோர் உறவு. வி. 76.
நவின் | றோர்க்கினிமை = படித்தவருக்கு இன்பந்தருதல். சூ. 13.
நவை = குற்றம். வி. 95. 213.
நளன் = ஓரரசன்பெயர். வி. 93.
நறு, நறவம் = நறவு = நல்லவாசனை. வி. 63. 79. 93. 109.
நனி = மிக. வி. 35 சூ. 37. 41. 86. 272. 388. பெரும்பால். சூ. 207.
நனை = அரும்பு. வி. 114.
நன் = நன்றாக. சூ. 26. 96.
நன்காடு. சூ. 267. (நல்ல.)
நன்கு. வி. 96.
நன்மை. வி. 96.

நன்மொழிபுணர்த்தல் = நல்ல சொற்களைச் சேர்த்துவைத்தல். சூ. 13.
நன்றி = உபகாரம். வி. 86. 95. 96.
நன்று = நன்மையானது. வி. 33. 93.

## நா

நாகன் = ஓர்நாமம். சூ. 158.
நா = நாக்கு. வி. 82. சூ. 74. 376.
நாகம் = கிருஷ்ணசர்ப்பம். வி. 32. [317.
நாகு = இளமை, இள மரம். வி. 93. 94.
நாடு | தல் = தேடுதல். வி. 70. 72. 212.
நாட் | டம் = கண். சூ. 376.
நாட் | டல் = தாபித்தல். சூ. 11.
நாணு | தல் = வெட்குதல். வி. 95.
நாதன் = ஆண்டவன். வி. 95.
நாமம் = படர்க்கைப்பெயர்ச்சொல். சூ. 125. 265. பயம். வி. 93. 157.
நாமுடி = நாக்கு நுனி. 80.
நாயகம் = சிரேட்டம். வி. 152.
நாயகன் = ஆண்டவன். வி. 95.
நாய் = சூ. 231.
